விலை 10.00

Registered as a Newspaper at G.P.O.

THAMILTHANTHI தமிழ்த்தந்தி

# தமிழ்த்தந்தி

உண்மையாய்.. உரிமையாய்.. உணர்வாய்..

www.facebook.com/thamilthanthi

Follow@thamilthanthi

பக்கங்கள்: 32

விளம்பரங்கள்
வாழ்த்துகள்
மற்றும் இதர வணிக தொடர்பாடலுக்கு:
Tel: 0114 - 369411
Fax: 0114 - 641294
e-mail: thamilthanthi@gmail.com

தமிழ் 07 தந்தி 02 ஞாயிற்றுக்கிழமை 09.12.2018 Sunday 09th December 2018 e-mail: thamilthanthi@gmail.com www.thamilthanthi.com

# தெற்கில் ஜனநாயகத்திற்கு போராடும் கூட்டமைப்பு தமிழர்களின் ஜனநாயகத்திற்கும் போராடுமா?



## கொந்தளிக்கும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

தெற்கில் தாங்கள் ஜனநாயகத்திற்காக போராடுவதாகக் காட்டிக் கொள்ளும் கூட்டமைப்பினர் வட, கிழக்கில் தங்களுடைய சொந்த மக்கள் வாழும் பிரதேசங்களில் அவர்களுடைய ஜனநாயகத்தை மறுக்கின்ற சூழ்நிலை காணப்படுகின்றது.

இவ்வாறு தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் யாழ்.நாவற்குழியில் நடைபெற்ற மரம் நாட்டும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

வெளிநாட்டு சக்திகளின் எடுபிடிகளாக செயற்பட்டுக் கொண்டிருக்கும் கூட்டமைப்பினர், அந்த வெளிநாட்டு சக்திகள் தெற்கில் எப்படிப் பேச வேண்டும் என்று கூறியதற்கிணங்க தமிழ் மக்களுக்கு ஜனநாயகம் வேண்டும் என்று கூறிக்கொண்டு, வட,கிழக்கிலே ஈபிடிபி மற்றும் ஸ்ரீல.சு.கட்சிகளுடன் சேர்ந்து கொண்டு தங்களுக்கு வாக்களித்த தமிழ் மக்களுடைய ஜனநாயக உரிமைகளை முற்று முழுதாக மறுக்கும் நிலைமையை ஏற்படுத்துவதை இன்று காணக்கூடியதாக இருக்கின்றது.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

# எங்களின் போராட்டம் கூட்டமைப்புக்கு வியாபாரம்



### தாயகத்தில் கையளித்தும் கடத்தப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்ட சங்கத்தின் தலைவி ஜெயவனிதா குமுறல்

**நுளம்புக் கடியிலும், கொட்டும் மழையிலும் தொடரும் எங்களின் போராட்டம்**

**எங்களின் பிள்ளைகளை வைத்து பிழைப்பு நடத்தும் கூட்டமைப்பு**

எங்களின் உணர்ச்சிப் போராட்டம் கூட்டமைப்பினருக்கு வியாபாரம் போல் ஆகிவிட்டது. எங்களின் போராட்டத்தை தங்களின் சுய நல அரசியல் இருப்புக்காகப் பயன்படுத்துவதில் வெற்றி கண்டுள்ளார்களே தவிர எங்களுக்கு எந்தவிதமான ஆக்கபூர்வமான தீர்வுகளையும் பெற்றுத் தரவில்லை.

02 ஆம் பக்கம் பார்க்க

# எங்களுக்கு இழைக்கப்படும் அநீதிக்கு தமிழ்அரசியல்வாதிகளும் உடந்தை!

5000 பேருக்குரிய நியமனங்கள் நேர்முகத் தேர்வின் புள்ளி அடிப்படையில் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அமைச்சினால் வழங்கப்பட்டது.

அடுத்தடுத்து நியமனங்கள் விரைவில் வழங்கப்படும் என்று தெரிவித்திருந்தாலும் அது தொடர்பான முன்னகர்வுகள் எதனையும் கடந்த அரசாங்கம் மேற்கொண்டதாகத் தெரியவில்லை.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத் தலைவர் தமிழ்த்தந்திக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

தற்பொழுது நாட்டில் அரசியல் ஸ்திரமற்ற நிலை காணப்படுகின்றது. ஆகவே எங்கள் பிரச்சினைகள் சம்பந்தமாக எந்தவித நகர்வுகளும் இடம்பெறுவதாகத் தெரியவில்லை.

எங்களின் தொழில்உரிமை கோரிய போராட்டம் தொடர்ச்சியாக ஒரு வீரியத்துடன்

02 ஆம் பக்கம் பார்க்க

**மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்க தலைவர் எஸ்.சிவகாந்தன்**



# திருமலையில் 10 ஏக்கர் காணி இராணுவத்தால் விடுவிப்பு

திருகோணமலை மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினர் வசமுள்ள 10 ஏக்கர் காணியை அதன் உரிமையாளர்களிடமே கையளிக்கவுள்ளதாக இலங்கை இராணுவம் தெரிவித்துள்ளது.

வடக்கு, கிழக்கில் பாதுகாப்பு படையினர் வசமிருந்த 70ஆயிரம் ஏக்கர் காணி இதுவரையில் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதனைத் தவிர தனியாருக்குச் சொந்தமான ஆயிரத்து 500 ஏக்கர் காணி இராணுவத்தினர்

02 ஆம் பக்கம் பார்க்க

# மன்னார் புதைகுழியிலிருந்து மீட்கப்படும் எச்சங்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்களதா?

மன்னார் சதோச மனிதப் புதைகுழியிலிருந்து 250 க்கும் மேற்பட்ட மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ள நிலையிலும் அது குறித்து அனைத்துத் தரப்பினரும் அக்கறையின்றி இருப்பதாக மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் எஸ்.சிவகரன் கவலை வெளியிட்டுள்ளார்.

சதோச மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டுள்ள காணியில் 1986 ஆம் ஆண்டு முதல் 1987 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட பலர் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட நிலையில் புதைக்கப்பட்டிருக்கலாம் என்றும் மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் எஸ்.சிவகரன் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.



கோப்புப்படம்

02 ஆம் பக்கம் பார்க்க

# நாட்டின் நலன்கருதியே அரசியல் ரீதியாக ஜனாதிபதி சில முடிவுகளை எடுக்க நேரிட்டது

### வன்னி மாவட்டபாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் கூறுகிறார்

ஆளும் கட்சியில் எங்களுடைய அமைச்சர்கள் பலமாகத்தான் இருந்தார்கள். இருந்தாலும் மக்களுக்கான வேலைத்திட்டங்கள் எதுவும் நடக்கவில்லை. ஜனாதிபதி மக்களின் நன்மைக்காகவும் நாட்டின் நன்மைக்காகவும் அரசியல் ரீதியாக சில முடிவுகளை எடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தார்.

இவ்வாறு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தெரிவித்தார்.

வவுனியா பாவற்குளத்தில் தாய்சேய் பராமரிப்பு நிலையத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. அந்நிகழ்விலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;



இரண்டு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இந்த தாய் சேய் பராமரிப்பு நிலையம் நிர்மாணிக்கப்படவுள்ளது. இந்நதப் பிரதேசத்தில் உள்ள தாய்மார்களின் நலனுக்காக இது நிர்மாணிக்கப்படுகின்றது.

இந்த நாட்டினுடைய ஜனாதிபதி அரசியல் ரீதியாக சில முடிவுகளை எடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. சில முடிவுகள் எடுக்கும்போது ஆரம்பத்தில் சில பாரதூரமான நிலைமைகள் காணப்பட்டாலும் இறுதியில் அது நன்றாகவே முடியும்.

புதிய பிரதமரைத் தெரிவு செய்தது, பாராளுமன்றத்தைக் கலைத்து தேர்தலுக்கு வழி

02 ஆம் பக்கம் பார்க்க

# இன்று மழை பெய்யும்

வங்காள விரிகுடாவில் ஏற்பட்ட குறைந்த அழுத்தப் பிரதேசம் இலங்கைக்கு தென்கிழக்காக தொடர்ந்தும் நிலை கொண்டுள்ளது.

கிழக்கு, ஊவா, மத்திய மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலும் பல தடவைகள் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது



சப்ரகமுவ மாகாணத்திலும் களுத்துறை, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

ஊவா மாகாணத்திலும் குருநாகல் மாவட்டத்திலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 கிலோ மீற்றர்

02 ஆம் பக்கம் பார்க்க

# ஐ.தே.க.வே எமது பொது எதிரி



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்து உருவாக்கப்படுகின்ற கூட்டணியூடாக முன்னோக்கிச் செல்ல எதிர்பார்த்துள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் செயலாளர் பேராசிரியர் ரோஹன லக்ஷ்மன் பியதாச கூறியுள்ளார்.

கட்சியின் மத்திய செயற்குழு கூட்டத்தின் பின்னர் ஊடகங்களிடம் பேசும் போது

02 ஆம் பக்கம் பார்க்க

# இலங்கையின் அரசியல் நெருக்கடிகள் தொடர்பில் பிரித்தானியா அதீத அக்கறை

இலங்கையின் அரசியல் நெருக்கடிகள் தொடர்பில் உன்னிப்பாக அவதானித்து வருவதாக தெரிவித்துள்ள பிரித்தானியா, மனித உரிமைகள், சட்டத்தின் ஆட்சி மற்றும் நல்லாட்சி ஆகியன பாதுகாக்கப்பட வேண்டிய தன் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளது.

பிரித்தானிய வெளிவிவகார மற்றும் பொதுநலவாய பணியகத்தின் மனித உரிமைகள் தொடர்பில்

02 ஆம் பக்கம் பார்க்க

# உதவித் திட்டங்களில் ஒதுக்கப்படும் முன்னாள் போராளிகள்

நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் வசிக்கும் முன்னாள் போராளிகள் மற்றும் போராளிகளுள் மாற்றுத் திறனாளிகள் என்போர் அனைத்து உதவித் திட்டங்களிலிருந்தும் கைவிடப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது;

இவ் வருட ஆரம்பத்திலிருந்து நானாட்டான் பிரதேச செயலகம் மற்றும் ஜனாதிபதி செயலக இணைப்பாளர்களுடன் இரண்டு தடவைகளுக்கும் மேற்பட்ட கலந்துரையாடல்களை முன்னாள் போராளிகள் மேற்கொண்டிருந்தனர்.

அதனைத் தொடர்ந்து தற்போதுவரை அதிகாரிகளினால் முன்னாள் போராளிகள் மற்றும் போராளிகளின் மாற்றுத்திறனாளிகள் ஆகியோருக்கு அவர்களின் தேவைகளைக் கருதி பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட போதும் இன்று வரை எந்தவித உதவிகளும் வழங்கப்படவில்லை.

நானாட்டான் பிரதேசத்தில் மட்டும் 60இற்கும் மேற்பட்ட ஆண் மற்றும் பெண் முன்னாள் போராளிகளும் 15இற்கும் மேற்பட்ட அவயவங்களை இழந்த முன்னாள் போராளிகளும் வாழ்ந்து வருகின்றனர்.

தினமும் கூலி வேலைக்குச்

02 ஆம் பக்கம் பார்க்க

# இலவச சீருடைதுணி விநியோகம் இல்லை

### மாணவர்கள் பாதிப்பு



கிளிநொச்சி மாவட்டத்தில் 81 பாடசாலைகளில் சுமார் 32755 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர் இவர்களின் அரைவாசிக்கு மேற்பட்டவர்கள் வறிமைக் கோட்டிற்கு உட்பட்டவர்கள்.

இந்த மாணவர்கள் ஒவ்வொரு

02 ஆம் பக்கம் பார்க்க

# இரணைமடு குளத்தின் 5 வான்கதவுகள் திறக்கப்பட்டது



கிளிநொச்சி இரணைமடு குளத்தின் 5 வான்கதவுகள் திறந்து வைக்கப்பட்டது. குறித்த வான்கதவுகள் பிரதி நீர்பாசன பணிப்பாளர் பொறியியலாளர் சுதாகரன் அவர்களின் கண்காணிப்பில் திறந்து வைக்கப்பட்டது. குளத்தின் மேல் பகுதியிலிருந்து வரும் அதிகளவான நீரை வெளியேற்றவும், எதிர்வரும் நாட்களில் கிடைக்க இருக்கும் மழை வீழ்ச்சியினால் வெள்ள அனர்த்தம் ஏற்படுவதை தடுக்கம் நோக்குடனும் இவ்வாறு கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எனினும் வான் கதவுகள் திறந்து விடப்பட்டமையால் தாழ்நிலபகுதியில் எவ்வித பாரியளவிலான பாதிபபுக்களும் ஏற்படாது எனவும், தாம் தொடர்ந்தும் கண்காணிப்பில் உள்ளதாகவும் இதன் போது அவர் தெரிவித்தார்.


# தம்புள்ளவில் கோரவிபத்து!

குருணாகல் - தம்புள்ளை பிரதான வீதியில் கலேவலை, கனாதன பிரதேசத்தில் நேற்றுக் காலை திருகோணமலையில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்துக் கொண்டிருந்த இ.பே.ச பஸ் ஒன்றும், கொள்கலன் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

கொள்கலன் வீதியை விட்டு விலகி அருகில் இருந்த கடை ஒன்றில் மோதியுள்ளதுடன், விபத்தில் மூன்று பேர் காயமடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். பஸ்ஸின் சாரதி உள்ளிட்ட பஸ்ஸில் பயணித்த இரண்டு பயணிகளும் இவ்வாறு காயமடைந்துள்ளனர்.

பஸ் அதிக வேகமாக பயணித்துள்ளதாகவும், மழை காரணமாக வீதி சறுக்கியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இரண்டு சாரதிகளும் கைது செய்யப்பட்டுள்ளதுடன், கலேவலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.





## சிறுவர் உரிமை மீறல் தொடர்பில் 8000 முறைப்பாடுகள் பதிவு

வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் சிறுவர் உரிமை மீறப்பட்டுள்ளமை தொடர்பில் சுமார் 8000 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

## இரத்த தானம் செய்யுமாறு தேசிய இரத்த வங்கி மக்களிடம் கோரிக்கை

நாட்டில் இரத்த தான முகாம்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாக தேசிய இரத்த வங்கி தெரிவித்துள்ளது.

இதனால் இரத்த வங்கியின் வைப்பிலுள்ள குருதியின் அளவு குறைவடைந்துள்ளதாக தேசிய இரத்த வங்கியின் சிரேஷ்ட அதிகாரியொருவர் குறிப்பிட்டார்.

மாதாந்தம் சுமார் 75 இரத்த முகாம்கள் கடந்த காலங்களில் ஏற்பாடு செய்யப்பட்ட போதிலும், தற்போது 55 முகாம்கள் வரை குறைவடைந்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனால் பிரதேசத்திலுள்ள இரத்த வங்கிக்கு சென்று இரத்த தானம் செய்யுமாறு தேசிய இரத்த வங்கி மக்களை கேட்டுக்கொண்டுள்ளது.

நாடு முழுவதும் 106 இரத்த வங்கிகள் இயங்குவதாக தேசிய இரத்த வங்கி மேலும் தெரிவித்தது.

# கூட்டமைப்பின் தீர்மானம் விரைவில்!

ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில், எதிர்வரும் 12ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும் பிரேரணை ஆதரவு வழங்குவது குறித்தான தீர்மானத்தை, எதிர்வரும் 11ஆம் திகதி இரவு அல்லது 12ஆம் திகதி காலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுக்கும் என, நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

# கூட்டமைப்பின் சுயநல செயற்பாடு மக்களை ஏமாற்றத்திற்குள்ளாக்கும்

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி மீண்டும் ஆட்சி அமைப்பதற்கு ஆதரவு வழங்க தமிழ் தேசியக் கூட்டமைப்பு முன்வந்தமைக்கு தமிழர் தரப்பிலிருந்து தொடர்ந்தும் கடும் எதிர்ப்புக்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவிற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு எந்தவொரு நிபந்தனையும் இன்றி ஆதரவு வழங்குவதன் ஊடாக சிங்கள மக்கள் மத்தியில் தமிழ் மக்கள் தொடர்பில் மேலும் இனவாதத்தை தூண்டும் என மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் எஸ்.சிவகரன் அச்சம் வெளியிட்டுள்ளார்.

இராஜதந்திர ரீதியில் தமது செயற்பாடுகளை முன்னெடுத்திருக்க வேண்டிய தமிழ் தேசியக் கூட்டமைப்பின் இந்த நடவடிக்கைகள் தான்தோன்றித்தனமாக செயற்பாடுகள் என ஐ.பி.சி. தமிழுக்கு வழங்கிய விசேட செவ்வியில் மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் சிவகரன் குற்றம்சாட்டியுள்ளார்.

ஸ்ரீலங்காவில் கடந்த ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் புதிய பிரதமராக மஹிந்த ராஜபக்ச நியமிக்கப்பட்டதை தொடர்ந்து நாட்டில் வெடித்த அரசியல் குழப்பம் தொடர்ந்தும் நீடித்து வருகின்றது.

ஜனாதிபதியின் அதிரடி நடவடிக்கையை ஏற்றுக்கொள்ள மறுத்து வரும் ஐக்கிய தேசிய முன்னணிஇ ஜே.வி.பி. மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகள் மஹிந்த மற்றும் அவரது அரசாங்கத்திற்கு எதிராக நவம்பர் 14 மற்றும் 16 ஆம் திகதிகளில் நம்பிக்கையில்லாத் தீர்மானங்களையும் நாடாளுமன்றத்தில் நினைவேற்றியுள்ளன.

இந்தநிலையில் டிசெம்பர் 3 ஆம் திகதி மஹிந்த ராஜபக்ச பிரதமராக பதவி வகிப்பதற்கும்இ அவரது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்களாக பதவி வகிப்பதற்கும் மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்தது.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்னை பலம் உடைய ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவை பிரதமராக நியமிக்குமாறு கோரி தமிழ் தேசியக் கூட்டமைப்பு 14 நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையெழுத்துக்களுடன் ஜனாதிபதிக்கு கடிதமொன்றையும் கடந்தவாரம் அனுப்பி வைத்துள்ளது. தமிழ் தேசியக் கூட்டமைப்பு எந்தவொரு முன் நிபந்தனையும் இன்றி ரணில் விக்ரமசிங்கவிற்கு ஆதரவு வழங்குகின்றமைக்கு தமிழ் அரசியல் கட்சிகள்இ சிவில் அமைப்புக்கள் மற்றும் அரசியல் ஆய்வாளர்கள் கடும் கண்டனத்தை வெளியிட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் முன் நிபந்தனை இன்றி ரணில் விக்ரமசிங்கவிற்கு ஆதரவு வழங்கி தமிழ் தேசியக் கூட்டமைப்பு மீண்டும் ஒரு வரலாற்று தவறினை இழைத்துள்ளதாகவும் சுரேஷ் பிறேமச்சந்திரன் கடந்த 30 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் குற்றம் சாடியிருந்தார்.

ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவிற்கு எந்தவொரு நிபந்தனையும் இன்றி தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்க முன்வந்தமையின் பின்னணியில் வல்லரசு நாடுகள் காணப்படுவதாக தெரிவித்த தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்இ இதன் மூலம் மக்களுக்காக பேரம் பேசும் சக்தியை கூட்டமைப்பு இழந்துள்ளதாக ஐ.பி.சி. தமிழுக்கு வழங்கிய விசேட செவ்வியில் குற்றம் சாட்டியிருந்தார்.

எனினும் தற்போதைய அரசியல் குழப்பத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பானது நடு நிலை வகிப்பது மஹிந்த ராஜபக்சவிற்கு துணை போனதாகவே அமையும் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன், வவுனியாவில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஒரு கட்சிக்கு சார்பாக செயற்படாது இரு தரப்பினருடனும் கலந்துரையாடி இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முயற்சிக்க வேண்டும் என மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் எஸ்.சிவகரன் வலியுறுத்தியுள்ளார்.

## எங்களுக்கு...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது. அந்த வகையில் இது தொடர்பாக தமிழ் தேசிய கூட்டமைப்பு எந்தவிதமான தீர்க்கமான முடிவுகளையோ அல்லது எங்களுக்கு ஆதரவான எந்தஒரு நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

நாங்கள் எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் ஐயாவிடம் எங்களின் கோரிக்கைகளை முன்வைத்திருந்தோம். அப்பொழுது அவர் எங்களுக்கு, தமிழ் இளைஞர் யுவதிகளுக்குரிய குறிப்பாக வடக்குகிழக்கிலுள்ள வேலையற்ற பட்டதாரிகளுக்குரிய வேலைவாய்ப்பை ஒவ்வொரு அமைச்சிலிருந்தும் தன்னால் பெற்றுக் கொடுக்க முடியும் என்றும், அவ்வாறு தொழில் வாய்ப்பை பெற்றுக் கொடுத்தால், எங்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு பாதிக்கப்படும் என்ற விடயத்தை என் முன்னிலையில் தெரியப்படுத்தியிருந்தார்.

ஆனால் அதன்பிற்பாடு அவர்களூடாக நிதிகளைப் பெற்று அபிவிருத்தி செய்கின்ற போதிலும் எங்கள் வேலையற்ற பட்டதாரிகள் சம்பந்தமாக எந்த ஒரு கரிசனையும் கொள்ளவில்லை என்பதே வெளிப்படையான உண்மை.

## இலவச...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

வருடமும் பாடசாலை சீருடைக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற இலவச சீருடைத்துணிகளை நம்பியே இருக்கின்றனர். இந்த நிலையில் இவ்வருடத்திற்கான இலவச சீருடைத்துணிகள் வழங்கப்படாமையினால் புதிய சீருடைகளை தைத்துக்கொள்வதில் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

வழமையாக இலவச சீருடைத் துணிகள் வழங்கப்பட்டாலும் பெரும்பாலான மாணவர்கள் புதிய சீருடைகளை தைத்துக்கொள்வதற்று கூட பணம் இன்றி சிரமப்படுகின்ற நிலையில் இவ்வருடம் இதுவரைக்கும் சீருடைத்துணிகளே வழங்க்கப்படவில்லை எப்போது வழங்க்கப்படும் என்றும் எந்தவிதமான தகவல்களும் கிடைக்கப்பெறவில்லை என கல்வித்திணைக்கள அதிகாரிகளும் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் இலவச சீருடை வழங்க்கப்படாமைக்கு எதிரிப்புத் தெரிவித்து கிளிநொச்சி நகரின் பல பகுதிகளிலும் சுவரொட்டிகள் ஓட்டபடப்பட்டுள்ளன.

## இலங்கையின்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

அவதானம் செலுத்த வேண்டிய, 30 நாடுகள் தொடர்பிலான 2018ஆம் ஆண்டுக்கான மனித உரிமைகள் நிலைமைகள் குறித்த, இடைக்கால அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரித்தானிய மனித உரிமைகளுக்கான இராஜாங்க அமைச்சர் அஹமட், பிரித்தானிய அரசாங்கத்திற்கு இந்த அறிக்கையை சமர்ப்பித்துள்ளதோடு, அறிக்கையின் முழுமையான பிரதி, பிரித்தானிய அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலும் வெளியாகியுள்ளது.

ஏழு உப தலைப்புகளுடன் வெளியாகியுள்ள இந்த அறிக்கையில், 'மனித உரிமைகளின் பாதுகாவலர்கள்' என்ற உபதலைப்பில் ஸ்ரீலங்கா தொடர்பிலான விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

'ஸ்ரீலங்காவின் நிலைமைகளை பிரித்தானியா உன்னிப்பாக அவதானித்து வருகிறது. மனித உரிமைகள் பாதுகாவலர்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற பலரது அக்கறையையும் நாம் அறிவோம்' என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

'மனித உரிமைகள், சட்டவாட்சி, நல்லாட்சி என்பன பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியம் தொடர்பில் நாம் அனைத்து அரசியல் தலைவர்களுடனும் பேசியுள்ளோம்' எனவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

'சிவில் சமூக பிரதிநிதிகளுடனும், அனைத்து சர்வதேச பங்காளிகளுடனும், நாம் நெருக்கமான தொடர்பில் இருக்கின்றோம். தேவை ஏற்பட்டால், சூழ்நிலைக்கு ஏற்ப பதிலளிக்கவும் நாம் தயாராக இருக்கின்றோம்' எனவும் பிரித்தானிய மனித உரிமைகளுக்கான இராஜாங்க அமைச்சர் அஹமட், சமர்ப்பித்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## உதவி...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

செல்லும் இவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு நானாட்டான் பிரதேச செயலகம் தவறிவிட்டது. இதே சமயத்தில் வறட்சி நிவாரணம், வெள்ள நிவாரணம் தந்திருந்தால் கூட பெரிய உதவியாக இவர்களுக்கு இருந்திருக்கும்.

பிரதேச செயலகங்களுக்கு ஒதுக்கப்பட்ட கம்பரெலிய திட்டத்தில் கூட உதவித்திட்டங்கள் எதுவும் வழங்கப்படாது தாம் ஒதுக்கப்பட்டதாக முன்னாள் போராளிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

## மன்னார்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

மன்னார் மனித புதைகுழி அகழ்வுப் பணி 113 வது நாளாக டிசெம்பர் 7 ஆம் திகதியான வெள்ளிக்கிழமையும் இடம்பெற்றது.

இதன்போது எந்தவொரு மனித எச்சங்களும் அப்புறப்படுத்தப்படாத நிலையில் மனித புதைகுழியானது மேலும் ஆழப்படுத்தப்படும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

112 ஆவது நாளான டிசம்பர் 6 ஆம் திகதியான வியாழக்கிழமை இரண்டு கால்களும் இரும்பு கம்பியால் இறுக கட்டப்பட்ட நிலையில் இரண்டு வித்திய சமான மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டமை மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை தோற்றுவித்துள்ளது.

இதுவரை நாட்களும் சதோச மனித புதைகுழி தொடர்பாக மாறுபட்ட கருத்துக்கள் காணப்பட்ட போதும் குறித்த மனித புதைகுழியில் காணப்படும் மனித எச்சங்கள் காணாமல் ஆக்கப்பட்ட தங்கள் உறவுகளாக இருக்களாம் என காணமல் போன உறவுகளின் பெற்றோர் அச்சம் வெளியிட்டு வந்தனர்.

இந்த நிலையில் டிசெம்பர் ஆறாம் திகதி கண்டு பிடிக்கப்பட்ட இரும்பு கம்பியால் கட்டப்பட்ட மனித எச்சம் மேலும் சந்தேகத்தை வலுப்படுத்தியுள்ளது.

இந்த வாரத்தில் மனித புதைகுழியில் இருந்து பெண் ஒருவரின் மோதிரம் ஒன்றும் அடையாளம் காணப்பட்டதுடன் தொடர்சியாக சந்தேகத்திற்கு இடமான மனித எச்சங்கள் மற்றும் தடைய பொருட்களும் மீட்க்கப்பட்டு வருகின்றன.

இதுவரை மன்னார் மனித புதைகுழியில் இருந்து 266 முழு மனித எச்சங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதுடன் 260 மனித எலும்புக்கூடுகள் அப்புறப்படுத்தப்பட்டு நீதிமன்ற பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் தள்ளாடி இராணுவ முகாமிற்கும் மன்னார் நகர மத்தியில் வர்த்தக நிலையங்கள் சூழ்ந்தும் காணப்படும் மனித புதைகுழியானது ஒரு ஆர்ச்சரியமானது என மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் எஸ்.சிவகரன் தெரிவித்துள்ளார்.

திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழி அகழ்வு பணிகள் எவ்வாறு கைவிடப்பட்டதோ அதேபோன்ற ஒரு நிலை மீண்டும் ஏற்படக் கூடாது என தெரிவிக்கும் சிவகரன் சர்வதேச நாடுகள் இது தொடர்பில் கரிசனை கொள்ள வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

## இன்று...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

வரை அதிகரித்த வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக்கூடும்.

மத்திய, சப்ரகமுவ, மற்றும் மேல் மாகாணங்களில் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டம் காணப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக் கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொது மக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

## ஐ.தே.க.வே...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

அவர் இதனைக் கூறியுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மத்திய செயற்குழு கூட்டம் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்றது.

இதன்போது மேலும் கருத்துரைத்த அவர், ஐக்கிய தேசிய கட்சியே தமது பொது எதிரி என்று கூறினார்.

அதேவேளை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஒருபோதும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்கு சவாலாக அமையாது என்றும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் செயலாளர் பேராசிரியர் ரோஹன லக்ஷ்மன் பியதாச கூறியுள்ளார்.

## நாட்டின்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

செய்தது மற்றும் இந்த நல்லாட்சி அரசாங்கம் பாரிய ஊழலை சந்தித்தது. அந்த 100 நாள் திட்டத்தில் அதற்கு சரியான முறையில் தீர்வு காண கடந்த அரசாங்கத்தினால் முடியாமல் இருந்தது.

ஆகையால்தான் இவ்வாறான ஒரு முடிவை ஜனாதிபதி எடுத்திருந்தார். எதிர்காலத்தில் என்ன நடந்தாலும் இலங்கையின் சட்ட வரைபுக்குட்பட்ட ஒரு நல்ல முடிவை ஜனாதிபதி எடுப்பார் என எங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

தற்போது முகநூல் மற்றும் இணையத்தளங்கள் ஊடாக எனக்க எதிராக பொய்யான குற்றச்சாட்டுகள் பரப்பப்பட்டு வருகின்றன. அதாவது நான் இம் மாவட்டத்தில் அபிவிருத்தியை குழப்பி வருகின்றேன் என்று பொய்ப்பிரச்சாரம் செய்கின்றார்கள். மீள்குடியேற்ற செயலணி தொடர்பில் ஒரு பிரச்சினை இருந்தது. அதைப்பற்றி நான் சொல்லித்தான் அவர்களுக்கே தெரியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## திருமலையில்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

வசமுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அந்தக் காணிகளையும் மீண்டும் உரிமையாளர்களிடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எங்களின்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

இவ்வாறு வவுனியா காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவி ஜெயவனிதா தமிழ்த்தந்திக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

எங்களின் போராட்டத்தை கூட்டமைப்பினர் கண்டுகொள்ளவில்லை. மாறாக அதை தங்களின் சுயநல அரசியலுக்கான விற்பனைப் பொருளாகவே பார்க்கின்றனர். எங்களின் போராட்டத்திற்கு எந்தவிதமான தீர்வும் உள்நாட்டில் கிடைக்காதபடியால் நாங்கள் அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளையே நம்பியுள்ளோம்.

உள்ளூர் அரசியல்வாதிகளால் நாங்கள் மிகவும் ஏமாற்றப்பட்டுள்ளோம். எங்களின் வலிகள் அவர்களுக்குப் புரியாது. அவர்கள் தங்கள் குடும்பத்தினருடன் சந்தோஷமாகவே இருக்கின்றார்கள். இழப்பின் வலி அவர்களுக்குத் தெரியாது. வெளிநாட்டு அதிகாரிகள் எங்களுடன் வந்து கதைத்துள்ளார்கள். எங்களின் போராட்டத்தைப் பார்த்தபின்பு எங்களுக்கு கூடிய விரைவில் நல்ல தீர்வைப் பெற்றுத் தருவதற்கு தங்கள் நாட்டில் அழுத்தம் கொடுப்பதாகக் கூறியுள்ளார்கள். இது எதிர்வரும் மார்ச்சில் மனித உரிமை பேரவையில் எதிரொலிக்கும் என்று நம்புகின்றோம்.

தெருவில் போராடும் எங்களுக்கு மட்டுதான் பெற்ற பிள்ளைகளின் அருமை தெரியும். ஆகவே இவர்களை அரசியல் அரங்கில் இருந்து முற்றாக அகற்ற வேண்டும். மாறி மாறி வருகின்ற சிங்கள அரசியல் தலைமைகளை நாங்கள் நம்பவில்லை. தொடர்ந்தும் தமிழ் மக்களை ஏமாற்றுகின்ற கூட்டமைப்பு எங்களுக்கு வேண்டாம் என்றும் கூறிகொள்கின்றோம்.

எங்களை பகடைக்காய்களாக எங்கள் அரசியல்வாதிகள் பயன்படுத்துகின்றனர். எங்களின் பிரச்சினைகள் தீர்ந்தால் அவர்களின் அரசியல் வியாபாரம் கெட்டுப்போகும். அதற்குப் பயந்தே எங்கள் பிரச்சினையைத் தீர்க்காமல் இருக்கின்றார்கள். எங்களை நாடி நாங்கள் எப்படியிருக்கின்றோம், 600 நாட்களைக் கடந்தும் போராடிக்கொண்டிருக்கின்றோமே என்று அவர்கள் சிறிதளவு கூட அனுதாபப்படாமல் ரணிலைக் காப்பாற்றுவதிலேயே குறியாக இருக்கின்றார்கள்.

இரண்டு வருடங்களை நெருங்கிக் கொண்டிருக்கின்றது எங்களின் போராட்டம். விரைவில் எங்களுக்கு நல்ல தீர்வு ஒன்று கிடைக்க வேண்டும். அமெரிக்க ஐரோப்பிய நாடுகள் எங்களுக்கு நல்ல தீர்வைப் பெற்றுத் தரவேண்டும் என்று நாங்கள் நம்புகின்றோம்.

எங்களின் பிரச்சினையைத் தீர்த்தால் கூட்டமைப்பினருக்கு அரசியல் செய்வதற்கு ஒன்றுமில்லை. எங்களால்தான் அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இன்று எங்களின் பிள்ளைகள் எவ்வளவோ சீரழிவுப் பட்டுக் கொண்டிருக்கின்றனர். ஆனால் அவர்களின் பிள்ளைகள் அப்படி வாழவில்லை. அவர்களில் ஒருவரின் பிள்ளை இப்படி காணாமல் போயிருந்தால் இன்று இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டிருக்கும்.

யுத்த காலத்திலும் சரி, இன்றும் சரி அவர்கள் தங்கள் குடும்பத்தினருடன் சந்தோஷமாகத்தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. மாறாக எங்களை பகடைக்காயாகத்தான் அவர்கள் பார்க்கின்றனர்.

நாங்கள் எவ்வளவோ கஷ்டத்தின் மத்தியில்தான் எங்கள் பிள்ளைகளுக்காக இந்தப் போராட்டத்தை மேற்கொண்டுள்ளோம். கடும் மழை, வெயில் என்பவற்றிற்கு மத்தியில் எங்களின் போராட்டம் தொடர்கின்றது. மழை காலம் ஆரம்பித்துள்ளதால் நுளம்புகளின் பெருக்கம் அதிகமாயுள்ளது. அவற்றின் கடியினால் நாங்கள் மிகவும் துன்பப்படுகின்றோம். வீதியில் செல்லும் வாகனங்களின் புகை, தூசு என்பவற்றால் நாங்கள் பல துன்பங்களை பெற்றாலும் எங்களின் பிள்ளைகளுக்கு ஒரு நீதி கிடைக்க வேண்டுமென்றுதான் நாங்கள் தொடர்ந்தும் போராடிக்கொண்டிருக்கின்றோம்.

கிடைக்கும்.

## சப்ரகமுவ மாகாண புதிய பிரதான செயலாளராக டீ.எம்.மாலணி

**இரத்தினபுரி நிருபர்**

சப்ரகமுவ மாகாண புதிய பிரதான செயலாளராக டீ.எம்.மாலணி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி புதிய செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள டீ.எம்.மாலணி கசப்ரகமுவ மாகாண சபையில் அமைந்துள்ள பிரதான செயலாளர் அலுவலகத்தில் தமது கடமைகளை பொறுப்பேற்றார்.

மேற்படி புதிய செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள டீ.எம்.மாலணி சப்ரகமுவ மாகாண சபடியின் முதலாவது பெண் பிரதான செயலாளராவார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சப்ரகமுவ மாகாண புதிய பிரதான செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள டீ.எம்.மாலணி பலாங்கொடை மொரஹெல கணிஷ்ட வித்தியாலயம் மற்றும் நிவித்திகல சுமண வித்தியாலயம், பலாங்கொடை புத்தஜயந்தி வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கல்வி கற்று ஸ்ரீ ஜயவர் தனபுர பல்கலைகழகத்தில் பட்டதாரி பட்டம் உட்பட பல பட்டங்களை பெற்றுள்ளார்.

இவர் பதுளை மாவட்டத்தின் உதவி காணி ஆணையாளராகவும், ஊவா மாகாணத்தின் நன்னடத்தைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைகள் திணைக்களத்தின் ஆணையாளராகவும் கடமையாற்றியுள்ளதோடு 1993ஆம் ஆண்டு முதல் சப்ரகமுவ மாகாண சபை செயலாளராக பல வருட காலம் சேவையாற்றியதோடு,



சப்ரகமுவ மாகாண நன்னடத்தைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைகள் திணைக்களத்தின் ஆணையாளராகவும் மற்றும் சப்ரகமுவ மாகாண சமூக நலன்புரி, நன்னடத்தைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு. கிராமிய அபிவிருத்தி, கிராமியக் கைத்தொழில் அமைச்சின் செயலாளராகவும் கடமையாற்றிய டீ.எம்.மாலனி கடந்த புதன்கிழமை(5) முதல் சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளராக தமது கடமைகளை பொறுப்பேற்றுள்ளார்.

இதேவேளை சப்ரகமுவ மாகாண ஆளுநரின் செயலாளராக ஹேரத்.பி.குலரத்னவும், சப்ரகமுவ மாகாண சமூக நலன்புரி, நன்னடத்தைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு. கிராமிய அபிவிருத்தி, கிராமியக் கைத்தொழில் அமைச்சின் புதிய செயலாளராக ருக்மணி ஆரியரத்தவும் கடமைகளை பொறுப்பேற்றனர்.

## வைத்திய நிபுணர்கள் கொண்ட குழுவினரினால் இலவசமான வைத்திய சேவை

**சீலாமுனை நிருபர்**

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ பேரவை மற்றும் அட்டாளைச்சேனை வை.எம்.எம்.ஏ கிளை இணைந்து நடாத்தும் மாபெரும் இலவச வைத்திய முகாமும், வைத்தியப்பிரிசோதனையும் அட்டாளைச்சேனை கோணாவத்தை அந்நூர் மகா வித்தியாலயத்தில் அட்டாளைச்சேனை வை.எம்.எம்.ஏ தலைவர் எம்.ஐ.எம்.றியால் அதிபர் தலைமையில்நடைபெற்றது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த முகத்தாடை மற்றும் வாய்ப்புற்று வைத்திய நிபுணர் வைத்தியர் பீ.அனுஷன் மதுஷங்க, கண் வைத்திய நிபுணர் வைத்தியர்வருண விஜயசிறிவர்த்தண, பொது வைத்திய நிபுணர் வைத்தியர் கே.அருல்மொழி, பற்சத்திரசிகிச்சை வைத்தியர்களான கே.முரளிதரன், கே.கிருசாந்திணி, கே.மேகநாதன்,ரீ.கேதீசன், பீ.துஷிதா, எம்.வி.அப்துல் வாஜித், அட்டாளைச்சேனை பிரதேச வைத்தியசாலையின் வைத்தியப் பொறுப்பதிகாரி வைத்தியர் எஸ்.எம்.முனாஸ்தீன்,அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.எல். இஸ்மாயில் உள்ளிட்ட வைத்தியர்கள் அடங்கிய குழாமினரும், உத்தியோகத்தர்களும் வருகை மக்களுக் குமுற்றிலும் இலவசமான வைத்திய சிகிச்சைகளையும், ஆலோசணைகளையும் வழங்கி வைத்தனர்.

இதில் வாய்ப்புற்று, முகத்தாடை, கண் பரிசோதனை, பொது வைத்திய பரிசோதனை, பல் வைத்தியப் பரிசோதனைகளான பல் பிடுங்குதல், பல் அடைத்தல், பல் சுத்தம் செய்தல்,கிளிப் போடுதல் போன்ற சிகிச்சைகளுடன் தொற்றா நோய்கள் தொடர்பான சிகிச்சைகள், சீனி பரிசோதனை உள்ளிட்ட ஏனைய உடற் பரிசோதனைகளும்; மேற்கொள்ளப்பட்டது.

இந்த மாபெரும் இலவச வைத்திய முகாமில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், அரச



உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்கள் என கலந்துகொண்டுபயன் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

இந்த இலவச வைத்திய முகாமை நடாத்தி வைக்க முற்றிலும் முன்னின்று செயற்பட்ட மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த முகத்தாடை மற்றும் வாய்ப்புற்றுவைத்திய நிபுணர் வைத்தியர் பீ.அனுஷன் மதுஷங்க, கண் வைத்திய நிபுணர் வைத்தியர் வருண விஜயசிறிவர்த்தண ஆகியோருக்கு அட்டாளைச்சேனை வை.எம்.எம்.ஏ தலைவர்எம்.ஐ.எம்.றியால் அதிபர் ஞாபகச் சின்னங்களை வழங்கி கௌரவித்தார்.

## கப்பல்துறை பிரதேசத்தில் வீடுகள் கையளிப்பு

**கந்தளாய் நிருபர்**

கந்தளாய் ரெக்டோ நிறுவனத்தின் அனுசரணையில் வீடுகள் இன்றி வாழும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு அமைக்கப்பட்ட நிரந்தரமான வீடுகள் உரிய பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வு நடைபெற்றது.



ரெக்டோ நிறுவனத்தின் தலைவர் ஜே.எம்.அஸார், தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எஸ்.எம்.பாயீஸ் கலந்து கொண்டார்.

அதே வேளை இந்நிகழ்வில் விஷேட அதிதியாக மூதூர் பிரதேச சபையின் உறுப்பினர் ஏ.எஸ்.எம்.தாணீசும் கலந்து கொண்டு அமைக்கப்பட்ட வீடுகளைளை பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டது.

மேலும் இந்நிகழ்வின் போது பல பிரமுகர்களும் மற்றும் பிரதேச பொது மக்களும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

## சம்பள அதிகரிப்புக்கோரி இரத்தினபுரியில் தோட்டத்தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்



**இரத்தினபுரி நிருபர்**

1000 ரூபாய் சம்பள அதிகரிப்பைகோரி இரத்தினபுரி மாவட்டத்தின் கிரியெல்ல கலத்துர தோட்ட மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மேற்படி தோட்டத் தொழிலாளர்கள் மடபத்தர தோட்டப் பிரிவிலிருந்து கிரியெல்ல இடங்கொடயில் அமைந்துள்ள கலத்துர தேயிலை தொழிற்சாலை மற்றும் கலத்துர இறப்பர் தொழிற்சாலையை நோக்கி ஊர்வலமாக வருகை தந்து அதன் முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

மேற்படி ஆர்ப்பாட்டத்தில் அயகம பிரதேச சபையின் ஐ.தே.க உறுப்பினர் செட்டியார் மற்றும் அயகம பிரதேச சபையின் ஜே.வீ.பி. உறுப்பினர் விக்ரமநாயக்க மற்றும் அனைத்து தொழிற்சங்கங்களின் தோட்டத் தலைவர்கள் உட்பட பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

## ஜனநாயகத்தை வலியுறுத்தி மட்டக்களப்பில் இந்தப் பேரணி

**சீலாமுனை நிருபர்**

ஜனநாயகத்தை வலியுறுத்தும் குரல் எனும் தொனிப் பொருளில் றைஸ் ஸ்ரீலங்கா, இலங்கை மெதடிஸ்த்த திருஅவையின் வடக்கு கிழக்கு மறை மாவட்டம் என்பன



இணைந்து ஜனநாயகத்தை வலியுறுத்தி மட்டக்களப்பில் இந்தப் பேரணி இடம்பெற்றது.

மட்டக்களப்பு நகரின், காந்திப்பூங்காவுக்கு முன்னால் இடம்பெற்ற ஜனநாயகத்தை வலியுறுத்தும் குரல் பேரணியில் சமயப் பிரமுகர்கள் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

ஜனநாயகத்தை வலியுறுத்துவதுடன், நிலையான அமைதியையும் நிரந்தரமான சமாதானத்தையும் ஏற்படுத்த வேண்டுமென, இதன்போது வலியுறுத்தப்பட்டன.

தாய் நாட்டின் நற்பெயரையும் ஜனநாயகத்தையும் கீழ் மட்டத்திற்கு கொண்டுவந்த வன்முறை அரசியல் கலசாராத்தினையும் வன்மையாக கண்டிப்பதாகவும் பேரணியில் கலந்து கொண்டோர் தெரிவித்தனர்.

இந்தப் பேரணியில் கலந்து கொண்டோர், இலங்கையின் நாடாளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பில், வரையறைகளுக்கு அப்பால் நடந்து கொண்டவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகளை எடுக்கமாறும் இதன் போது தெரிவித்து கையொப்பங்களையும் வைத்தனர்.

## அச்சுவேலி வெள்ளப்பாதிப்பிற்கு நிரந்தரத்தீர்வையே பெற முயற்சிக்கின்றோம்

அச்சுவேலியில் வெள்ளப்பாதிப்புக்கு முகங்கொடுத்துள்ள மக்கள் மீது கூடிய கவனம் செலுத்தப்பட்டு எதிர்வருங் காலப்பகுதியில் அவர்களுக்கான நிரந்தரத்தீர்வுகள் வழங்கப்படவேண்டும் என்பதில் பிரதேச சபை அக்கறையாக ஏனைய திணைக்களங்களுடன் கருத்துப்பரிமாறி வருவதாக வலிகாமம் கிழக்கு (கோப்பாய்) பிரதேச சபைத்தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

மழைநீரை கடலுக்குள் சென்று விடாது நிலப்பகுதியில் தேக்குவதன் வாயிலாக நிலத்தடி நீரையும் நிலங்கள் உவரடைவதையும் தடுக்கும் நோக்கில் தொண்டமனாறு தடுப்பு அணை மீளமைக்கப்பட்டது. இது மீளத்திருத்தி அமைக்கப்பட்டதன் பின்னர் வலிகாமம் கிழக்கின் தாழ்வான நிலப்பகுதிகளைக்கொண்ட அச்சுவேலி வடக்கு, கரதடி ஒழுங்கை போன்றவற்றில் வெள்ளத்தின் தாக்கம் ஏற்பட்டுள்ளது. அச்சுவேலி - தொண்டமனாறு வீதியில் ஒரு பகுதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. இந் நிலையில் இவ் தடுப்பு அணையின் கதவுகளைத் திறந்து நீரை வெளியேற்ற வேண்டும் என பாதிக்கப்படும் மக்கள் பிரதேச சபையினை அணுகுகின்றனர். எனினும்; இக் கதவுகளைத் திறப்பது பற்றி விஞ்ஞான ரீதியில் ஆராய்ந்து முடிவெடுக்கவேண்டிய வகிபாகம் நீர்ப்பாசனத்தினைக்களத்திற்கே உள்ளது.

எமது நீர்வளத்தினையும் மண் வளத்தினையும் பாதுகாக்கும் நோக்கிலேயே நீரை வெளியேற்றும் கதவுகள் திறக்கப்படவில்லை. இவ் வருடமே குறித்த தொண்டமனாறு நீர்த்தடுப்புக் கதவுகள் திருத்தியமைக்கப்பட்டு முடிவடைந்த நிலையில் இவ் வருடம் பிரதேசங்களில் இனங்காணப்படும் வெள்ளப்பிரச்சினை போன்றவற்றுக்கு அடுத்த ஆண்டில் முன்னுரிமை அடிப்படையில் நிலையான தீர்வுத்திட்டங்களை கொண்ட கட்டுமானங்களை மேற்கொள்வதற்காக இப் பிரச்சினையுடன் சார்ந்த திணைக்களங்கள் முற்சியில் இறங்கியுள்ளன. தற்போது எதிர்கொண்டுள்ள வெள்ளப்பிரச்சினை போன்றன எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமைகள் ஏற்படா வண்ணம் நிலைமையினை ஆராய்வதற்காக களமாகவும் தீர்வுக்கான அடிப்படையாகவும் அமைந்துள்ளன.

சில இடங்களில் மண் அணைகள் அமைக்கப்பட்டு குடியிருப்புக்களினுள் வெள்ளம் புகாது தடுக்கவேண்டியுள்ளது. அதுபோல் வீதிகள் வெள்ளத்தில் மூழ்காது வீதிகள் உயர்த்தவேண்டிய தேவைகளும் இனங்காணப்பட்டுள்ளன.



அச்சுவேலி - தொண்டமனாறு வீதி வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உட்பட்பட்டது. இவ்வீதியில் தற்போது வெள்ளத்தினால் ஏற்பட்டுள்ள பிரச்சினை தொடர்பிலும் உரிய திணைக்களத்தின் கவனத்திற்குக் கொண்டு வரவுள்ளோம்.

இவ்வாறு வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத்தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

## சம்பள உயர்வு கோரி தொழிலாளர்கள் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்

**க.கிஷாந்தன்**

நாட்டின் பொருளாதாரத்திற்கு முதுகெழும்பாக திகழும் பெருந்தோட்டதுறை சார்ந்த தொழிலாளர்களுக்கு ஏன் ஆயிரம் ரூபாவை வழங்க முடியாது என கேள்வி எழுப்பியுள்ள



கொட்டகலை பெருந்தோட்ட கம்பனியின் கீழ் இயங்கும் கொட்டகலை ஸ்டோனிகிளிப் தோட்ட தொழிலாளர்கள் முதலாளிமார் சம்மேளனத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

சுமார் 100ற்கும் அதிகமான தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து ஸ்டோனிகிளிப் தேயிலை தொழிற்சாலைக்கு முன்பாக முன்னெடுக்கப்பட்ட அமைதியான கவனயீர்ப்பு போராட்டத்தில், எதிர்ப்பு வாசகங்களை எழுதிய சுலோகங்களையும் ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

தொடர்ந்து போராட்டத்தில் ஈடுப்படுவது எங்களுக்கு பயனில்லை என தெரிவித்த தொழிலாளர்கள் நியாயமான சம்பளத்தை பெற்றுக் கொடுக்காவிட்டால் தேயிலை தொழிற்சாலையிலிருந்து விற்பனைக்காக அனுப்பப்படுகின்ற தேயிலை தூளை தொழிற்சாலையிலிருந்து தடுக்கப்போவதாகவும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

எனவே தொழிலாளர்களின் உழைப்பை சுரண்டி சுகபோக வாழ்க்கையை நடத்தும் கம்பனிகாரர்கள் இன்றைய வாழ்வாதாரத்தினை நினைவில் வைத்துக் கொண்டு அடுத்த கட்ட பேச்சுவார்த்தையை இறுதி பேச்சுவார்த்தையாக முன்னிருத்தி ஆயிரம் ரூபாய் சம்பள உயர்வை வழங்க வேண்டும் என அழுத்தமான கோரிக்கையையும் முன்வைத்தனர்.

## அம்பாறை மாவட்டத்தில் 79.2 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது

**மீனோடைக்கட்டு நிருபர்**

அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில் பிரதேசத்தில், 79.2 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதென பொத்துவில் வானிலை அவதான நிலையப் பொறுப்பதிகாரி எம்.ஐ.ஏ.நயிம் தெரிவித்தார்.

சாகாமம்குளம் பகுதியில் 78 மில்லிமீற்றரும், தீகவாபி பிரதேசத்தில் 66 மில்லிமீற்றரும் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது என்றும் மாலை வேளையில் பலத்த காற்றுடன்கூடிய மழை பெய்வதால் கடல் கொந்தளிப்பாக இருக்குமென்றும் தெரிவித்த அவர், மீனவர்கள் கடலுக்குச் செல்லாமல் இருந்ததாக அவர் கூறினார்.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தில், காலை 8 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில், 64.2 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சிப் பதிவாகியுள்ளதென, வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

இதனால், மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகளில், மழை நீர் தேங்கியுள்ளது என்றும் இதனால், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.



## ‘பவர் ஸ்டாரை’ காணவில்லை!



நடிகர் பவர் ஸ்டார் சீனிவாசன் மாயமானதாக அவரது மனைவி காவல் நிலையத்தில் புகார் தெரிவித்தார். புகார் தெரிவித்த சில மணி நேரத்தில் அவர் ஊட்டியில் இருப்பது தெரியவந்தது. இதைத் தொடர்ந்து புகார் திரும்ப பெறப்பட்டுள்ளது.


‘கண்ணா லட்டு திங்க ஆசையா’ திரைப்படம் மூலம் தமிழ் சினிமாவில் பிரபலமானவர் நகைச்சுவை நடிகர் சீனிவாசன் என்ற ‘பவர் ஸ்டார்’ சீனிவாசன். இவர் அதற்கு முன்பு லத்திகா என்னும் திரைப்படத்தை தயாரித்து நடித்திருந்தார். ‘கோலி சோடா’ உள்ளிட்ட படங்களிலும் நடித்திருந்தார். கடன் பெற்றுத் தருவதாகக் கூறி மோசடியில் ஈடுபட்டதாக சென்னை மற்றும் டெல்லி போலீஸாரால் ஏற்கெனவே கைது செய்யப்பட்டுள்ளார். பவர் ஸ்டார் சீனிவாசன் மீது மேலும் சில பண மோசடி வழக்குகள் உள்ளதாக கூறப்படுகிறது. இவர் அண்ணா நகரில் குடும்பத்துடன் வசித்து வருகிறார்.

இந்நிலையில், இவரைக் காணவில்லை என மனைவி ஜூலி அண்ணாநகர் காவல் நிலையத்தில் புகார் தெரிவித்தார். அவர் கடத்தப்பட்டிருக்கலாம் என்ற அச்சம் ஏற்பட்டது. இதுதொடர்பாக அண்ணாநகர் போலீஸார் வழக்குப் பதிந்து தேடுதல் பணியில் ஈடுபட்டனர். இந்நிலையில் அவர், ஊட்டியில் இருப்பதாகத் தகவல் கிடைத்தது. இதைத் தொடர்ந்து சில மணி நேரத்தில் புகார் வாபஸ் பெறப்பட்டுள்ளது.

இதன் பின்னணி குறித்து போலீஸார் கூறும்போது, ‘வீட்டில் யாரிடமும் சொல்லாமால் திடீரென பவர் ஸ்டார் சீனிவாசன் ஊட்டிக்குச் சென்றுள்ளார். விசாரணையை தொடங்கிய சில மணி நேரத்தில் அவர் இருக்கும் இடம் தெரிந்து விட்டது.

அதைத் தொடர்ந்து அவரது மனைவி புகாரை திரும்ப பெற்றுக் கொண்டார்’ என்றனர்.

## இணையத்தை கலக்கும் கழுதையின் பாட்டு



குயில் பாடும், கழுதை பாடுமா? பாடும்... மகாராஷ்டிராவில் உள்ள ஒரு பெண் கழுதை பாடுகிறது. அதுதான் இப்போது இணைய தளத்தில் கலக்கிக் கொண்டிருக்கிறது.

மகாராஷ்டிர மாநிலம் புனேவின் சாலையில் பெண் கழுதை ஒன்று குட்டி போட்டது.

ஆனால், குட்டி இறந்துவிட்டது.

அந்த சோகத்திலும் உடல்நல பாதிப்பிலும் நிற்க கூட முடியாமல் இருந்தது அந்தக் கழுதை. அரசு சாரா தன்னார்வ தொண்டு நிறுவனம் ‘ரெஸ்க்’ அறக்கட்டளையின் தகவல் தொடர்பு குழுவைச் சேர்ந்த டீனா மோகன் தாஸ் அதைப் பார்த்து மிகவும் வேதனை அடைந்தார். உடனடியாக ரெஸ்க் அறக்கட்டளைக்குத் தகவல் தெரிவித்தார்.

## பாஜகவை கண்டு அஞ்சுகிறார் மம்தா!

பாஜகவுக்கு பெருகிவரும் மக்கள் செல்வாக்கை கண்டு மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி அஞ்சுவதாக அக்கட்சியின் தேசியத் தலைவர் அமித் ஷா விமர்சித்துள்ளார்.

மேற்கு வங்கத்தில் பாஜக சார்பில் மூன்று இடங்களில் ரத யாத்திரை நடைபெறுவதாக இருந்தது. ஆனால், இதற்கு மேற்கு வங்க அரசு அனுமதி அளிக்க வில்லை. இதனை எதிர்த்து பாஜக தாக்கல் செய்த மனுவை நேற்று முன்தினம் விசாரித்த கொல்கத்தா உயர் நீதிமன்றம், மேற்கு வங்க அரசின் நிலைப்பாட்டுக்கு ஆதரவாக தீர்ப்பளித்தது.

இந்த உத்தரவுக்கு எதிராக கொல்கத்தா உயர் நீதிமன்றத்தின் இரு நீதிபதிகள் அடங்கிய அமர்வு முன்பு பாஜக சார்பில் மேல்முறையீடு மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக டெல்லியில் செய்தியாளர்களிடம் அமித் ஷா கூறியதாவது:

மேற்கு வங்கம் மட்டுமின்றி நாடு முழுவதும் உள்ள பெரும்பாலான மாநிலங்களில் பாஜகவுக்கு மக்கள் ஆதரவு பெருகி வருகிறது. எனவே, பாஜகவை கண்டு திரிணமூல் காங்கிரஸாரும், அதன் தலைவர் மம்தா பானர்ஜியும் பயப்படுகிறார்கள். இது இயல்பானதுதான். இந்த அச்சத்தின் காரணமாகவே, மேற்கு வங்கத்தில் பாஜக ரத யாத்திரைக்கு மம்தா பானர்ஜி அனுமதி வழங்கவில்லை. இவ்வாறு அமித் ஷா தெரிவித்தார்.

## சபரிமலையில் கூட்டம் அதிகரிப்பு; போலீஸ் கெடுபிடி குறைந்தது!



சபரிமலை:சபரிமலையில் பக்தர் கூட்டம் அதிகரித்து வருகிறது. நிறுத்தி வைக்கப் பட்டிருந்த அப்பம் தயாரிப்பு மீண்டும் தொடங்கி உள்ளது.

அனைத்து வயது பெண்களும் சபரிமலை செல்லலாம் என்ற உச்சநீதி மன்ற தீர்ப்பால் சபரிமலை போராட்டக்களமானது. அரசு 144 தடை உத்தரவு பிறப்பித்தது.பக்தர்கள் கூட்ட மாக பஜனை நடத்தவும், பா.ஜ., ஆர்.எஸ்.எஸ். அமைப்புகளை சேர்ந்த தலைவர்கள் தரிசனம் நடத்தவும் தடை விதிக்கப்பட்டது.

இத்தகைய பிரச் னைகளால் இந்த ஆண்டு மண்டல சீசன் தொடக்கம் முதல் பக்தர்கள் கூட்டம் மிக குறைவாகஇருந்தது.

வருமானம்மூன்றில் ஒரு பங்காக குறைந்தது. கெடுபிடி குறைந்ததுகேரள உயர்நீதி மன்றம் மூன்று கண்காணிப்புக்குழுவை நியமித்ததோடு, போலீ சாரை கடுமையாக விமர்சித்தது. இதனால் சன்னி தானத்தில் போலீசாரின் கெடுபிடி குறைந்துள்ளது.

லத்தி, கவசம் போன்றவற்றுடன் உள்ள போலீசாரை காண முடியவில்லை. இரவில் பஜனை நடத்து பவர்களை வளைத்து கைது செய்யவில்லை. தேவையில்லாமல் கூட்டமாக நின்று பரபரப்பு ஏற்படுத்தவில்லை. போராட்டக்காரர்களும் தங்கள் வேகத்தை குறைத்துள்ளனர். இதன் காரணமாக 5 நாட்களாக சபரிமலையில் கூட்டம் அதிகரித்து வருகிறது. வருமானம் அதிகரித்ததோடு, பிரசாத விற்பனையும் உயர்ந்துள்ளது. நிறுத்தி வைக்கப் பட்டிருந்த அப்பம் தயாரிப்பு நேற்று முன்தினம் இரவில் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது.

மண்டல கால கூட்டத்தை காண முடிகிறது. சபரிமலை பகுதியில் 144 தடை உத்தரவு முடிகிறது. இது நீட்டிக்கப்படுமா என்பது பற்றி தகவல்கள் இல்லை.

## சோனியாவை சந்திக்க முக ஸ்டாலின் டெல்லி பயணம்



சென்னை அண்ணா அறிவாலயத்தில் கருணாநிதியின் சிலை திறப்பு விழா வருகிற 16-ந்தேதி மாலை 5 மணிக்கு நடைபெறுகிறது.

திமுக தலைவர் முக ஸ்டாலின் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் பாராளுமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியாகாந்தி கலந்து கொண்டு கருணாநிதி சிலையை திறந்து வைக்கிறார்.

விழாவில் ஆந்திர முதல்-மந்திரி சந்திரபாபுநாயுடு, கேரள முதல்-மந்திரி பினராய் விஜயன், புதுச்சேரி முதல்-மந்திரி நாராயணசாமி ஆகியோர் கலந்து கொண்டு பேசுகிறார்கள். இதைத் தொடர்ந்து அன்று மாலை ராயப்பேட்டை ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது. இதில் தலைவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகின்றனர்.

இந்த நிகழ்ச்சிக்கான அழைப்பிதழை சோனியா காந்தியிடம் நேரில் வழங்குவதற்காக மு.க.ஸ்டாலின் சென்னையில் இருந்து விமானம் மூலம் டெல்லி செல்கிறார்.

சோனியாகாந்தியை அவரது இல்லத்தில் சந்தித்து சிலை திறப்பு விழாவுக்கான அழைப்பிதழை வழங்குகிறார்.

இதைத் தொடர்ந்து 10-ந் தேதி மதியம் நடைபெறும் எதிர்க்கட்சி தலைவர்கள் கூட்டத்தில் முக ஸ்டாலின் பங்கேற்று அங்கு வரும் தலைவர்களுக்கும் கருணாநிதி சிலை திறப்பு விழாவுக்கான அழைப்பிதழை வழங்குகிறார்.

## சசிகலாவை கோர்ட்டில் ஆஜர்படுத்த உத்தரவு




அந்நியச்செலாவணி முறைகேட்டு வழக்கில் விசாரணைக்காக வரும் 13 ம் தேதி எழும்பூர் கோர்ட்டில் சசிகலாவை ஆஜர்படுத்த நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

சொத்துக்குவிப்பு வழக்கில் சிறைத்தண்டனை பெற்று வரும் சசிகலா பெங்களூரு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

அவர் தண்டனை பெறும் முன்னர் தனியார் தொலைக்காட்சி நிறுவனத்திற்கு வெளிநாட்டில் இருந்து உபகரணங்கள் வாங்கியதில் முறைகேடு நடந்திருப்பதாக 4 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த வழக்கில் மறு குற்றச்சாட்டு பதிவு செய்ய வேண்டியுள்ளது. இதனால் வரும் 13 ம் தேதி சசிகலாவை கோர்ட்டில் ஆஜர்படுத்த வேண்டும் என கோர்ட் உத்தரவிட்டுள்ளது.இந்த உத்தரவை பெங்களூரு சிறைத்துறை அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் உறவினர்கள் வீடுகளில் நடந்த வருமான வரி சோதனை தொடர்பாக வருமான வரி துறை அதிகாரிகளும் விசாரணை நடத்த சிறைத்துறையிடம் அனுமதி கேட்டிருந்தனர். இதற்கான அனுமதியையும் சிறைத்துறை வழங்கி இருக்கிறது. இதுவும் 13 ம் தேதியே அனுமதிக்கப்பட்டுள்ளது.

## ‘இருண்ட பக்கத்திற்கு’ செயற்கைக்கோளை அனுப்பியது சீனா



நிலவில் ரோபோவை நிலைநிறுத்தி ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் வகையிலான தனது முதல் திட்டத்தை சீனா வெற்றிகரமாக விண்ணில் ஏவியுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இதுவரை பூமியை நோக்கி காணப்படாத நிலவின் மற்றொரு மூலையாக கருதப்படும் வோன் கர்மான் என்னும் பகுதியில் சாங் இ-4 என்னும் இந்த செயற்கைக்கோள் தரையிறங்கும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

சீனாவிலுள்ள ஷிசாங் விண்வெளி நிலையத்திலிருந்து லோங் மார்ச் 3பி என்னும் ராக்கெட்டில் இந்த ரோபோ நிலவை நோக்கி செலுத்தப்பட்டது.

இந்த முயற்சியின் மூலம் நிலவிலுள்ள பாறைகள், மண் ஆகியவற்றை பூமிக்கு கொண்டுவந்து மேலதிக ஆராய்ச்சிகளை செய்வதற்கு சீனா திட்டமிட்டுள்ளது.

ஜனவரி மாதத்தின் தொடக்க பகுதி வரை இந்த செயற்கைக்கோள் நிலவில் தரையிறங்காது. ஆனால், குறிப்பிட்ட காலம் முடிவுசெய்யப்பட்ட பிறகு செயற்கைகோள் நிலவின் வேறொரு மூலையிலுள்ள கரடு முரடான பகுதியில் தரையிறங்கும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

பல பில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் சூரியனின் குறுங்கோள்களில் ஒன்று நிலவில் தெற்கு அரைக்கோளத்திலுள்ள அய்ட்கன் பேசின் மோதியதால் அங்கு பெரும் பள்ளம் உண்டானது. எனவே, நிலவு குறித்த ஆராய்ச்சிகள் தொடங்கிய காலத்திலிருந்தே வோன் கர்மான் என்னும் இந்த இடத்தில் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு பல்வேறு நாடுகளின் விஞ்ஞானிகள் ஆர்வம் காட்டி வருகிறார்கள்.

தற்போது சீனாவினால் ஏவப்பட்டுள்ள செயற்கைக்கோள் இதுவரை ஆராய்ச்சிகளே மேற்கொள்ளப்படாத நிலவின் தென் துருவப் பகுதியின் புவியியல் அமைப்பு குறித்த தகவல்களை சேமிப்பதோடு அங்கிருந்து பாறை துண்டுகள், மண் மாதிரிகளை பூமிக்கு கொண்டுவரும்.

Tidal locking அல்லது ஓதப் பூட்டல் என்ற விளைவின் காரணமாக நம்மால் நிலவின் ஒரு பகுதியை மட்டுமே பார்க்க முடிகிறது. ஏனெனில், நிலவை சுற்றி வருவதற்கு எடுத்துக் கொள்ளும் அதே காலத்தை தன்னைத்தானே சுற்றி வருவதற்கும் நிலவு எடுத்துக்கொள்கிறது.

பொதுவாக நிலவின் ‘இருண்ட பக்கம்’ என்றழைக்கப்படும் இந்த இடத்திலும் சூரிய வெளிச்சம் காணப்பட்டாலும், பூமியிலிருந்து இந்த இடத்தை பார்க்க முடியாது என்பதால்தான் இதை அவ்வாறு அழைக்கின்றனர்.

### நிலவில் விதைப் பரிசோதனை

பூமியின் தொலைதூரத்தில் ரேடியோ அலைகளை அடிப்படையாக கொண்ட தொலை நோக்கிகளை நிலவின் தென் துருவத்தில் அமைப்பதற்கான பூர்வாங்க பணிகளையும் இந்த செயற்கைக்கோள் மேற்கொள்ளும்.

அதுமட்டுமின்றி, நிலவில் உயிரியல் பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக உருளைக்கிழங்கு, அரபிடோப்சிஸ் ஆகியவற்றின் விதைகள் மூன்று கிலோ கொண்ட கொள்கலனில் கொண்டு செல்லப்பட்டுள்ளன. ‘லூனார் மினி பயோஸ்பியர்’ என்று பெயரிடப்பட்டுள்ள இந்த உபகரணத்தை 28 சீன பல்கலைக்கழகங்கள் இணைந்து உருவாக்கியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## தன்பாலின நண்பருடன் சேர்ந்து வாழ மனைவியை கணவர் கொன்றது அம்பலம்

தன்பாலின நண்பருடன் சேர்ந்து வாழ, இந்திய வம்சாவளி மனைவியை கணவரே கொலை செய்தது அம்பலமாகி உள்ளது. இதுதொடர்பான வழக்கில் கணவர் குற்றவாளி என்று லண்டன் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இங்கிலாந்தின் வடக்குப் பகுதியில் உள்ள மிட்டில்ஸ்பரோ பகுதியில் வசித்தவர் ஜெசிகா படேல் (34). இவரது கணவர் மிதேஷ் படேல் (37). இருவரும் சேர்ந்து அதே பகுதியில் மருந்துக் கடை நடத்தி வந்தனர்.

கடந்த மே மாதம் 14-ம் தேதி ஜெசிகா படேல் வீட்டில் பலத்த காயங்களுடன் மர்மமான முறையில் இறந்து கிடந்தார். (மான்செஸ்டர் பல்கலைக் கழகத்தில் படிக்கும் போது மிதேஷ் படேலை சந்தித்துள்ளார் ஜெசிகா. பின்னர் இருவரும் திருமணம் செய்து கொண்டுள்ளனர்.

இதுகுறித்து போலீஸார் வழக்குப் பதிவு செய்து கணவர் மிதேஷ் படேலிடம் தீவிர விசாரணை நடத்தினர். அப்போது கொலையை தான் செய்யவில்லை என்று அவர் திட்டவட்டமாக மறுத்தார். தான் வீட்டுக்கு வந்த போது, மனைவியின் கைகள் டேப்பால் கட்டப்பட்டிருந்தது. அவரை கொலை செய்து கொள்ளை அடிக்கப்பட்டிருந்தது என்று தெரிவித்தார். ஆனால் போலீஸார் நடத்திய தீவிர விசா ரணையில் பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாகின.

தன்பாலின சேர்க்கையாளர்கள் பயன்படுத்தும் ‘ஆப்’பை மிதேஷ் பதிவிறக்கம் செய்துள்ளார். அதன் மூலம் டாக்டர் அமித் படேல் என்பவர் பழக்கமாகி உள்ளார். இருவரும் தன்பாலின சேர்க்கை யாளர்களாக பழகி உள்ளனர். அதன்பின், மனைவியைக் கொன்று விட்டு சந்தோஷமாக வாழ வேண் டும் என்று மிதேஷ் திட்டமிட்டுள்ளார்.

அதற்காக இணையதளங்களில் பல விஷயங்களை மிதேஷ் தொடர்ந்து தேடி வந்துள்ளார். குறிப்பாக என் மனைவியை கொலை செய்ய வேண்டும், அதிக இன்சுலின், என் மனைவியை கொல்லும் வழி, என்னுடன் வேறு யாரையாவது சேர்த்து கொள்ள வேண்டுமா? பிரிட்டனில் கூலிப் படையை ஏற்பாடு செய்யலாமா என பல கேள்விகளுக்கு இணைய தளத்தில் பதில் தேடியிருக்கிறார்.

ஜெசிகா படேல் பெயரில் 20 லட்சம் பவுண்ட் இன்சூரன்ஸ் பாலிசி உள்ளது. அந்தப் பணத்தை பெற்றுக் கொண்டு, தனது தன்பாலின நண்பர் அமித் படேலுடன் ஆஸ்திரேலியாவில் குடியேற மிதேஷ் திட்டமிட்டதும் கண்டுபிடிக்கப்பட்டது. அத்துடன் கடந்த 2015-ம் ஆண்டு, ‘அவளுடைய நாட்கள் குறிக்கப்பட்டு விட்டன’ என்று அமித் படேலிடம் மிதேஷ் கூறியிருக்கிறார்.

இந்த வழக்கு விசாரணை கடந்த மாதம் தொடங்கியது. அப்போது, மிதேஷ் படேலுக்கு எதிராக சேகரித்த அனைத்து ஆதாரங்களை யும் போலீஸார் தாக்கல் செய்தனர். அனைத்து ஆதாரங்களையும் ஆராய்ந்து பார்த்த டெஸ்ஸைட் கிரவுன் நீதிமன்ற நீதிபதி ஜேம்ஸ் கோஸ், இந்த வழக்கில் கணவர் மிதேஷ் குற்றம் புரிந்ததற்கான முகாந்திரம் இருப்பதாகக் கருதி வழக்கை ஜூரியிடம் ஒப்படைத்தார். அப்போது நீதிபதி ஜேம்ஸ் கூறும்போது, ‘இந்த வழக்கில் மனைவிக்கு கணவர் உண்மையாக நடந்து கொள்ளவில்லை. மனைவியை திட்டமிட்டு ஏமாற்றி இருக்கிறார். அவர் குற்றவாளி என்பது நிரூபணமானால் அதிகபட்ச தண்டனையாக ஆயுள் தண்டனை வழங்க சட்டத்தில் இடமுள்ளது’ என்று பரிந்துரைத்தார்.

அதன்பின், இந்த வழக்கை 3 பெண்கள், 3 ஆண்கள் அடங்கிய ஜூரி குழு தொடர்ந்து விசாரித்து வந்தது. இந்த வழக்கு விசாரணை முடிந்து நேற்று முன்தினம் தீர்ப்பளிக்கப்பட்டது. அப்போது, 3 மணி நேரம் தீவிர ஆலோசனை செய்த ஜூரி குழுவினர், மிதேஷ் குற்றவாளி என்று அறிவித்தனர். இவருக்கான தண்டனை விவரம் விரைவில் வெளியிடப்படும்.

## கடல் நீர்மட்டம் தாறுமாறாக அதிகரிக்கக் காரணம் இயற்கையா?

கடந்த 25 ஆண்டுகளாக உலகில் கடல் நீர் மட்டம் தாறுமாறாக அதிகரித்து வருவதற்குக் காரணம் இயற்கையல்ல மனிதச் செயல்பாடுகளினால் மாற்றமடைந்த பருவநிலைகளே என்று புதிய ஆய்வு ஒன்று நெற்றியில் அடிக்குமாறு ஆதாரப்பூர்வமாகத் தெரிவித்துள்ளது.

நேஷனல் அகாதெமி ஆஃப் சயன்ஸஸ் என்ற இதழில் இந்த ஆய்வின் கண்டுபிடிப்புகள் வெளியாகியுள்ளன. புவி வெப்பமடைதலுக்குக் காரணமான மனித உற்பத்தி, மற்றும் பல சீரழிவு நடவடிக்கைகளினால் கடல் நீர்மட்டம் சராசரியாக உயரும் விகிதத்தைக் காட்டிலும் அதிகமாக உயர்ந்து வருகிறது, இந்த நிலை தொடரவே செய்யும் என்று எச்சரித்துள்ளது.

அமெரிக்காவில் உள்ல சுற்றுச்சூழல் மற்றும் வளிமண்டல் ஆய்வு தேசிய மையத்தின் (மீஇஅகீ) ஜான் ஃபாஸுல்லோ கூறும்போது, பிராந்திய கடல் நீர் மட்ட அதிகரிப்பின் வகைமாதிரிகளில் பருவநிலை மாற்றம் பெரிய தாக்கம் ஏற்படுத்துகிறது என்று தெரியும் அதே சமயத்தில் இது எதிர்கால பருவநிலை மாற்றத்தையும் பெரிய அளவில் தூண்டிவிடும் என்றே கூற முடியும்.

இந்த நூற்றாண்டின் சராசரியைக் காட்டிலும் கடல் நீர்மட்டம் மேலும் 2 -3 அடி கூடுதலாக உயரும் என்று கணிக்கப்பட்டுள்ளது, ஆனால் பிராந்தியவாரியாக இதில் ஏற்படும் மாற்றங்கள் கடற்கரை பகுதி மக்களுக்கு மிக முக்கியமனது, அவர்கள் எதற்கும் தயாராக இருக்க வேண்டும் என்று எச்சரிக்கிறார்,

கடந்த காலத்தில் முன்னறிவிப்பாளர்கள் உலக அளவில் கடல் நீர்மட்ட அதிகரிப்பு விகிதத்தை நம்பியிருக்க வேண்டியிருந்தது அதனால் ஆண்டுக்கு 3 மிமீ வரை கடல் நீர்மட்டம் உயரும் மேலும் உயரும் என்று கூறிவந்தனர், ஆனால் இப்போடு சாட்டிலைட் பயன்பாட்டினால் அதன் பிராந்திய கடல் பகுதிகளின் கூடுதல் தாக்கமும் தெரியவந்துள்ளது.

புதிய உத்திகள், உயர் தொழில்நுட்பம் மூலம் மேற்கொள்ளப்படும் கணிப்பில் 1993ம் ஆண்டு முதல் கடல் நீரமட்ட உயர்வை ஆய்வு செய்கின்றனர், இடில் கடல் மேற்பரப்பு உயரங்கள் பற்றிய ஆய்வும், கணக்கீடும் அடங்கும்.

அதாவது உலக அளவில் சராசரி கடல் நீர்மட்ட அதிகரிப்பு மற்றும் சில பிராந்திய கடல் நீர்மட்ட அதிகரிப்பு அந்த சராசரியிலிருந்து எப்படி மாறுபட்டு உயருகிறது என்பதையும் இந்த ஆய்வு சுத்தமாக வரைபட மாதிரியாக்கியுள்ளது.மேலும் வானிலை மாற்றத்தினால் ஏற்படும் பிராந்திய கடல்நீர்மட்ட உயர்வு சில சமயங்களில் இயற்கை சுழற்சியினால் ஏற்படும் தாக்கங்களைப் போல்செய்தல் போன்று இருக்கும்.

## தன்பாலின ஈர்ப்பு கவலை அளிக்கிறது: போப் பிரான்சிஸ்

தன்பாலின ஈர்ப்பு கவலை அளிப்பதாக உள்ளது என்று போப் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து நேர்காணல் ஒன்றில் போப் பிரான்சிஸ் கூறும்போது, தன்பாலின ஈர்ப்பு மிகுந்த கவலைக்குரியதாக மாறி வருகிறது. இந்தக் காலத்தில் தன்பாலின ஈர்ப்பு என்பது நவீனத்தின் அடையாளம் ஆகி விட்டது. இது தேவாலயங்களைப் பாதிக்கிறது. அவர்கள் தேவாலயத்தில் இரட்டை வாழ்க்கை வாழ வேண்டாம்.

தேவாலயத்துக்குள் நுழையும் மதகுருமார்கள் பிரம்மச்சரியத்தின் மீதான உறுதி மொழியை தீவிரமாக கடைப்பிடிக்க வேண்டும். அவர்கள் மனதளவிலும், உணர்வளவிலும் பக்குவம் அடைந்தவர்களாக இருக்க வேண்டும்.

மதகுருமார்களைத் தேர்ந்தெடுக்கும் தேவலாயத்தின் நிர்வாகம் இதில் கவனமாக செயல்பட வேண்டும். தன்பாலின ஈர்ப்பு கொண்டவர்களை தேவாலயப் பணிகளுக்கு பயன்படுத்த வேண்டாம். இது பெண் குருமார்களுக்கும் பொருந்தும் என்றார்.

தேவாலயங்களைப் பொறுத்தவரை தன்பாலின ஈர்ப்பு என்பது பாவத்துக்குரிய செயல் என்று கூறப்பட்டது. பின் 2013 ஆம் ஆண்டு, இதில் எனக்கு உடன்பாடு இல்லை என்று கூறிய போப் பிரான்சிஸ் , ‘ஒரு நபர் தன்பாலின ஈர்ப்பு கொண்டவராக இருந்தால் அவரைது பாத்திரத்தைப் பற்றி தீர்மானிக்க நான் யார்’ என்று கூறியிருந்தார்.

இந்நிலையில் தேவலாயங்களில் உள்ள தன்பாலின உறவுகள் குறித்து தற்போது தனது வருத்தத்தைத் தெரிவித்துள்ளார்.

தமிழ்த்தந்தி
ஞாயிற்றுக்கிழமை 09.12.2018
இல. 146,டோசன் வீதி, கொழும்பு2
தொலைபேசி: 0114369412 பக்ஸ்: 0114641294
மின்னஞ்சல்: thamilthanthi@gmail.com

# இலங்கையின் அரசியல் சவால்கள்

கடந்த ஒக்ரோபர் 26ந் திகதி இலங்கையின் புதிய பிரதமராக மகிந்த ராஜபக்ச பதவியேற்றார். இதனைத் தொடர்ந்து உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இலங்கையின் அரசியல் நிலவரம் மீண்டும் ஒரு பேசுபொருளாகிவிட்டது. இதன் அர்த்தம் இலங்கை ஏதோ அமைதியான சுபீட்சம் நிறைந்த நாடாக இருந்தது. ஆனால் சடுதியாக நிகழ்ந்த அரசியல் சூறாவளியால் எல்லாம் தலைகீழாகி விட்டது என்றாகிவிடாது. இலங்கையைக் கொதிநிலையில் வைத்திருக்க வேண்டுமென்ற சூழ்ச்சித்திட்டங்கள் தொடர்ச்சியாக பேணப்பட்டு வருகின்றன என்பதையே இன்றைய நிலைமைகள் தெளிவாகக் காட்டுகின்றன. ஏறத்தாழ 30 ஆண்டுகாலம் உள்நாட்டு யுத்தம் நிகழ்ந்த காலத்தில் இலங்கையின்பால் இருந்த கவனம், 2009 ஆம் இலங்கையின் உள்நாட்டு யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக மறையத் தொடங்கியிருந்தது என்றே பலரும் எண்ணியிருந்தனர். ஆனால் உண்மை அப்படியானதல்ல. ஏனெனில் இலங்கையில் பயங்கரவாதத்தை விதைத்தவர்கள், பயங்கரவாதம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் ஓய்ந்திருக்கமாட்டார்கள் என்பதையே இலங்கையில் தொடர்ச்சியாக நடந்தேறும் நிகழ்வுகள் காட்டி வந்துள்ளன, காட்டி வருகின்றன. 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில், உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்த மகிந்த தலைமையிலான அரசு தோற்கடிக்கப்பட வேண்டுமென்று செய்யப்பட்ட பல்வேறு வகைப்பட்ட சக்திகளின் முனைப்புகளும், அத்தேர்தலில் மகிந்த தோற்கடிக்கப்பட்ட பின்னர் இலங்கையில் மீண்டும் 'ஜனநாயகம்' மலர்ந்து விட்டதாக சோடிக்கப்பட்டதும், இலங்கை மக்கள் தங்கள் அடிமைச்சங்கிலிகளை உடைக்க இன்னும் வெகுதூரம் பயணிக்க வேண்டும் என்பதையே தெளிவாகக் காட்டியிருந்தன. மகிந்த தலைமையிலான அரசினை அகற்ற அரும்பாடுபட்ட பல்வேறு வகைப்பட்ட சக்திகளே, இப்போதும் இலங்கையில் ஏதோ 'ஜனநாயகம்' செத்துவிட்டதாகப் பிதற்றித் திரிகின்றனர். இலங்கையில் எதிர்காலத்தில் இடம்பெறவிருந்த பெரியதொரு சதி முயற்சி முளையில் கிள்ளி எறியப்பட்டுள்ளது என்பதை உலக வரலாற்றினை நுண்ணியமாக ஆராய்பவர்களாலேயே பகுத்தறிய முடியும். சுருக்கமாகக் கூறுவதாயின், நவீன தாராளமயவாதத்தின் தென்னமெரிக்க பரிசோதனை என்றழைக்கப்படும், 1973 செப்டம்பர் மாதம் 11ந் திகதி சிலி நாட்டில் நடந்த ஆட்சிக்கவிழ்ப்பு மாதிரியான நிகழ்வு இலங்கையில் தவிர்க்கப்பட்டுள்ளது என்பதை உறுதியாகவே சொல்ல முடியும். ரஷ்சியப் புரட்சியின் நூற்றாண்டு நிடிடிவாக எழுதப்பட்ட, 'புரட்சியும் எதிர்ப்புரட்சியும் 1917-2017' (Revolution and Counter-revolution, 1917–2017) என்ற கட்டுரையில் மன்த்லி ரிவ்யூவின் (Monthly Review) ஆசிரியரான பேராசிரியர் John Bellamy Foster சிலிப்புரட்சி தோற்கடிக்கப்பட்ட விதம் தொடர்பாக பின்வருமாறு கூறுகின்றார்: '1970இல் சிலியில் பொப்புலர் யூனிட்டி (Popular Unity) அரசின் தலைவராக ஜனநாயகபூர்வமாக தேர்ந்தெடுக்கப்பட்ட சால்வடார் அலெண்டே (Salvador Allende) சிலியில் சோஷலிசத்தை கொண்டுவருவதாக அறிவித்தார். அதன் முதற்கட்டமாக, அந்நாட்டின் பெரு நிறுவனங்களில் முதலீடு செய்திருந்த அமெரிக்க பெருநிறுவனங்களின் சொத்துக்களை அந்த அரசு தேசியமயமாக்கியது. 1970-ல் மார்க்சிய-சோஷலிச சார்பு இதழான மன்த்லி ரிவ்யூவின் வெளியீட்டாளர்களான ஹேரி மக்டாப் (Harry Magdoff), போல் ஸ்வீசி (Paul Sweezy) ஆகியோரை அதிபர் அலெண்டே தனது அரசின் துவக்க விழாவிற்கு அழைத்திருந்தார். மக்டாப் மற்றும் ஸ்வீசி அலெண்டேயின் நீண்ட நாள் நண்பர்களாவர். துவக்கவிழா நிகழ்ச்சியில், அமெரிக்காவிற்கும் சிலி இராணுவத்திற்கும் உள்ள தொடர்பு, அதனால் ஏற்படக் கூடிய அபாயம், இதன் தொடர்ச்சியாக வாஷிங்டனால் ஏற்பாடு செய்யப்படும் ஆட்சிக் கவிழ்ப்பிற்கான வாய்ப்புகள் அதிகமாக இருப்பதாக அவர்கள் அலெண்டேவை எச்சரித்தார்கள். தற்போதுள்ள உலக ஒழுங்கிற்கு குந்தகம் ஏற்பட்டால், ஏகாதிபத்தியம் எத்தகைய சட்டங்களையும் மதிக்காது எனவும் மக்டாப்பும் ஸ்வீசியும் எச்சரித்தனர். உண்மையிலேயே மூன்றாண்டுகளுக்குப் பின்னர், 1973 ஆம் ஆண்டு ஜெனரல் ஒகஸ்ரோ பினோசெ (Augusto Pinochet) மூலம் அலெண்டேவும் ஆயிரக் கணக்கானோரும் உயிரிழந்து, இரத்த வெள்ளத்தில் சிலியின் ஆட்சி கைப்பற்றப்பட்டது. இவையனைத்தும் உணர்த்தும் வரலாறு, புரட்சிகள் உருவானாலும் கூட, அவை எதிர்ப்புரட்சியை எதிர்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்படும் என்பதாகும்.

உண்மையிலேயே கடந்த நூற்றாண்டின் புரட்சியையும் எதிர்ப்புரட்சியையும் மதிப்பீடு செய்யும்போது எதிர்ப்புரட்சியின் வலிமையையும் வீரியத்தையும் மிகுந்த அழுத்தத்துடனேயே மதிப்பீடு செய்ய வேண்டும். போராட்டங்களையும் தவறுகளையும் விரிவான வரலாற்று இயங்கியல் அடிப்படையில் பார்க்க வேண்டும்' இலங்கையில் சிறுபான்மை அரசொன்றினை அமைத்துள்ள ஐக்கிய சுதந்திர மக்கள் கூட்டமைப்பினையோ அல்லது மைத்திரி, மகிந்த போன்றவர்களையோ சிலியின் 'பொப்புலர் யூனிட்' மற்றும் சால்வடார் அலெண்டேயுடன் முழுமையாக ஒப்பிட முடியாது. ஏன் சிலியின் நிலைமைகளும் இலங்கையின் நிலைமைகளும் கூட வெவ்வேறானவை. ஆனால் 'மக்டாப்' மற்றும் 'ஸ்வீசி'யின் எச்சரிக்கைகளை பொருட்படுத்தமால் விட்டதால் சிலிக்கு நேர்ந்த விபரீதத்தை இலங்கை மாத்திரமல்ல, ஒவ்வொரு மூன்றாமுலக நாடுகளும் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். ஜனாதிபதி மைத்திரியையும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபயவையும் தீர்த்துக்கட்டும் முயற்சி அம்பலத்திற்கு வந்ததென்பது ஓர் எச்சரிக்கையே. இதனை ஐக்கிய சுதந்திர மக்கள் கூட்டமைப்பினரும் மற்றும் மைத்திரியும் மகிந்தாவும் சரியாகக் கணக்கில் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றே தோன்றுகின்றது. அமெரிக்கா, கனடா, பிரித்தானியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியமும் அவர்களது உள்ர் ஏஜெண்டுகளும் தமிழ் தேசியக்கூட்டமைப்பு, மக்கள் விடுதலை முன்னணி, முஸ்லீம் காங்கிரஸ் போன்ற கட்சிகளும் சேர்ந்து, ரணில் விக்கிரமசிங்காவை பதவிக்குக் கொண்டுவர எடுக்கும் பிரயத்தனங்களை நோக்குமிடத்து, அவர்களின் சதித்திட்டம், அதாவது மைத்திரியையும் ராஜபக்ச குடும்பத்தினைரையும் கொன்றுதள்ளி, இலங்கையில் நீண்டகாலத்திற்கு நவீன தாராளமயவாதத்திற்கு ஏதுவாக சர்வாதிகார ஆட்சியொன்றினை நிறுவும் எண்ணம், மயிரிழையில் நழுவவிடப் பட்டுள்ளது போன்றே தோன்றுகின்றது. அதனால் தற்போதைய சிறுபான்மை அரசும் இலங்கை மக்களும் 'எதிரி எங்களை விடவும் பலமானவன்' என்ற எண்ணத்துடனேயே தொடர்ச்சியாகச் செயற்பட வேண்டும்.



# அதிகார மோதலால் மக்களுக்கு என்ன இலாபம்?



இலங்கையில் ஜனநாயகத்தைக் காப்பாற்ற, எவ்வளவு போராட்டங்கள்.

இதுவே 'இலங்கை அரசியலின் அதியுன்னத அறம்சார்ந்த போராட்டம்' என வரலாற்றில் எழுதிவிடுவார்கள் போல் தோன்றுகிறது.



இவர்கள், அதிகார மோதல் பற்றி விலாவாரியாகப் பேசுகிறார்கள். அரசியல் யாப்பிலுள்ள சரத்துக்களின் உப பிரிவுகள் உட்பிரிவுகள் குறித்தெல்லாம் ஆழமாகவும் அகலமாகவும் பேசுகிறார்கள்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறைமையைக் கொண்டு வந்த கட்சி இப்போது படும்பாடு சொல்லிமாளாது.



இந்த அதிபர் முறைமையானது, நாடாளுமன்றின் அதிகாரத்தை மட்டுப்படுத்தும் ஏகபோக உரிமையைக் கொண்டது என்பதனை ஜெயவர்தனாவும் அறிவார் ரணிலும் புரிந்து கொள்வார்.

தாங்கள் உருவாக்கிய ஆப்பில், இவர்களே மாட்டிக் கொண்ட துன்பியல் நிகழ்வு தற்போது நடந்து கொண்டிருக்கிறது.



மகாசனங்கள் இம் மோதலை வேடிக்கை பார்ப்பதை புரிந்து கொள்ளாத அதிகாரவாசிகள், கட்சி அபிமானிகளை ஒன்றுதிரட்டி தினமொரு போராட்டம் செய்கிறார்கள்.

ஆனாலும் மக்களும் தங்கள் அடிப்படை உரிமைக்காக, இதே அதிகாராவாசிகளுக்கு எதிராக தொடர் போராட்டங்களை முன்னெடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

மக்கள் போராட்டங்களில், அதிகாரத்திற்காகப் போராடும் ஜனநாயகவாதிகளைக் காணவில்லை.

1000 ரூபா சம்பள உயர்வு கோரி, மலையக தமிழ் தோட்ட தொழிலாளர்கள் பல்வேறு பிரதேசங்களில் மக்கள்திரள் போராட்டங்களில் ஈடுபடுகிறார்கள்.

வீழ்ச்சியடையும் ரூபாவின் பெறுமதியை உயர்த்தி நிமிர்த்துவதற்கும், இந்த உழைக்கும் 'மாமனிதர்கள்' ஈட்டித்தரும் அமெரிக்க டொலர்களே உதவுகிறது.

இவர்களின் உழைப்பினை நம்பியே அனைத்துலக நாணய நிதியமும் , உலக வங்கியும், சர்வதேச கடன்முறி முதலீட்டாளர்களும், பெருமளவு டொலர்களை கடனடிப்படையில் அள்ளிக் கொடுக்கிறார்கள்.

அவர்களுக்கு மீளச் செலுத்தும் முதலும் வட்டியும், இம் மக்களின் உழைப்பினால் உருவானது.

**மக்கள் ஜனநாயகத்திற்காக போராடுவதாகக் கூறுவோரை, மக்கள் போராட்டங்களில் காணவில்லை.**

நடைபெறும் நாற்காலிச் சண்டைக்கு என்னதான் ஜனநாயகம் முலாம் பூசினாலும், 'அதிகாரம் மக்களுக்கானது' என்பதை ஏற்றுக் கொள்ளாதவரை, இவர்களிடமிருந்து மக்கள் விலகியிருப்பார்கள்.

வடக்கு கிழக்கிலும் இதே நிலைதான்.

ஒற்றையாட்சிக்கு உட்பட்ட மாகாணசபை அதிகாரங்களில் உள்ள, காணி காவல்துறை உரிமைகளைக்கூட நல்லாட்சி அரசாங்கங்கள் வழங்கவில்லை.

அரசியல் யாப்பிலுள்ள காணி காவல்துறை சட்டங்களை நிறைவேற்றவிடாமல் தடுக்கும் அரசிற்கு எதிராக, தற்போது ரணிலின் 'மீள்' வருகைக்காக ஆவேசமாகப் போராடும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு ஒரு வழக்கையும் போடவில்லை.

**இதயச்சந்திரன்**

**காணாமல் போகடிக்கப்பட்ட மக்களின் உறவுகள் முன்னெடுக்கும் போராட்டங்களிலும், இந்த தீவிர தமிழ்த்தேசிய தலைவர்களைக் காணவில்லை.**

நீண்டகாலமாக சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளைவிட, ரணில் மீண்டும் ஆட்சிக் கட்டிலில் அமர வேண்டும் என்பதையே தமது இலட்சியமாகக் கொண்டு கூட்டமைப்பு தொழிற்படுவது போலுள்ளது.

தமிழ் மக்களின் உரிமைகளை மீட்க நாடாளுமன்றம் செல்வதாகச் சொல்லி மக்களின் வாக்குகளை பெற்ற கூட்டமைப்பினர், பெரும்பான்மையின கட்சிகளுக்கிடையே நடக்கும் கதிரைச் சண்டையில் ஒரு தரப்பினர் சார்பில் அணிவகுத்து நிற்பது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

ஜனநாயகம் மறுக்கப்பட்ட தேசியஇனத்தின் உரிமைக்குரலாக இருப்பதை விடுத்து, ஒடுக்கும் அரச தரப்புகளில் எவரிடம் ஜனநாயகம் இல்லை என்கிற விவாதங்களில் ஈடுபடுவதற்கு மக்கள் இவர்களைஅனுப்பவில்லை.

கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் கூட்டமைப்பு எதிர்கொண்ட பின்னடைவுகளும், சபை அதிகாரங்களைக் கைப்பற்ற ஏனைய கட்சிகளோடு ஏற்படுத்திய நசிவுப்போக்குகளும், ஒருவகையான தளம்பல்நிலையை உருவாக்கியிருந்தது.

இத்தகைய வீழ்ச்சியிலிருந்து மீண்டெழ முயலும்போது, முன்னாள் முதல்வர் விக்கினேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணி அரசியல் களத்தில் இறங்கியது.

ஆனந்த சங்கரியின் கூட்டணியில் போட்டியிட்ட, ஒரு காலத்தில் கூட்டமைப்பின் பேச்சாளராகவிருந்த சுரேஷ் பிரேமச்சந்திரனும் முதல் துண்டைப்போட்டு அவரோடு இணைவதாக விடுத்த அறிவித்தல்கூட்டமைப்பிற்குள் மேலும் அதிர்வுகளை ஏற்படுத்தியது.

இவ்வாறாக அரசியல் இருப்பின் சரிவு நிலையை கூட்டமைப்பு எதிர்கொண்ட போது, மகிந்த இராஜபக்ச மீண்டும் பிரதமர் நாற்காலி என்கிற முருங்கை மரத்தில் ஏறுகிறார். கொழும்பு அதிகாரமையத்தில் ஏற்பட்ட மோதலில் ரணில் பக்கம் சாய்ந்த கூட்டமைப்பு, மகிந்த ராஜபக்சவின் வருகையை பலத்த விமர்சனத்தோடு எதிர்க்கிறது.

தமிழ் மக்கள் மத்தியில் இழந்த ஆதரவினை மீளப்பெறுவதற்கு, இந்த மகிந்த எதிர்ப்பினை கூட்டமைப்பின் தலைவர்கள் கையிலெடுத்தார்கள் என்று நம்பலாம்.

மகிந்த- பொன்சேக்கா, மகிந்த- மைத்திரி



அதிகார மோதலில், மகிந்தவிற்கு எதிராகவே தமிழ் பேசும் மக்களின் கூட்டு உளவியல் செயற்பட்டது என்கிற யதார்த்தத்தை கூட்டமைப்பு உணர்ந்துள்ளது.

ஆகவே தமிழ்த் தேசிய அரசியலில் தமக்கெதிராக புதிதாக உருவாகப்போகும் பலமான அணியினை எதிர்கொள்வதற்கு, மக்களின் மகிந்த எதிர்ப்பு நிலையினை தமதாக்கும் கருமத்தைசிரமேற்கொள்வதே ஒரே தெரிவென்று கூட்டமைப்பு கருதுகிறதென நம்பலாம்.

இருதரப்பிலும் ஜனநாயகத்திற்காகப் போராடுவதாகக் கூறும் கட்சிகள், அது கூட்டமைப்போ ரணிலோ, தற்போதைய சூழ்நிலையில் தேர்தலொன்றினை எதிர்கொள்ள விரும்பவில்லைபோல் தெரிகிறது.

'சதிக்கு எதிராகவே மகிந்தாவை எதிர்க்கிறோம்' என்கிற ஜேவிபியும், 'ரணிலை ஜனாதிபதியாக்குவோம்' என்று கூறியவாறு பிரதமர் நாற்காலியை குறிவைக்கும் சஜித் பிரேமதாசாவும், கோமா நிலையில்செயலற்று இருக்கும் அரச இயந்திரம் இயங்கினால் போதும் என்று கருதுகிறார்கள்.

சிறுபான்மைத் தேசிய இனங்களின் ஆதரவில்லாமல் மகிந்த அணியினரில் எவரும், ஜனாதிபதியாகிவிட முடியாது என்பதனை புரிந்து கொள்ளும் சஜித், அந்த வாய்ப்பு தமக்கே கிடைக்கும் என்று நம்புகிறார்.

ஆனாலும் இந்தக் கொழும்பு அரசியலிற்கும் மக்களிற்கும் எந்த சம்பந்தமும் இல்லையென்பதே நிஜம்.

பிரான்சில் நாட்டில், எரிபொருள் மற்றும் அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றத்திற்கு எதிராக 'மஞ்சள் மேலங்கி' அணிந்தவாறு இளையோர்கள் போராடுகிறார்கள். அந்த அரசும் மக்களின்போராட்டத்தினை எதிர்கொள்ள முடியாமல், விலை அதிகரிப்பினை தள்ளிப் போடுகிறது.

இலங்கையிலோ, புள்ளடி போட்ட மக்கள் தமது அடிப்படை வாழ்வாதார உரிமைகளுக்காகப் போராடும் போது, மக்களின் பிரதிநிதிகளோ அம் மக்களிடமிருந்து அந்நியமாகி ஆளுகின்றவர்க்கமாகிவிடுகிறார்கள்.

இதற்கு தாராண்மைவாத ஜனநாயகம், யதார்த்தவாத அரசியல், திறந்த பொருளாதாரம் என்று என்னென்னமோ மொழிகளை புகுத்திவிடுகிறார்கள். இவையெல்லாம் மக்கள் அதிகாரம் என்கிறபெருவெளிக்கு அப்பால் நிற்கும் அதிகாரவாசிகளின் சுயநல மொழி என்பதை எப்போது மக்கள் புரிந்து கொள்வார்கள்?.





# எல்லா அதிகாரமும் ஜனாதிபதியிடம்

## என்ன செய்தாலும் யாரும் கேட்க முடியாது!

இலங்கையில் கடந்த ஒக்டோபர் 26 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் ஏற்படுத்தப்பட்ட ஆட்சி மாற்றமானது நாட்டில் பல்வேறு பிரச்சனைகளை நாளாந்தம் உருவாக்கிக் கொண்டிருக்கின்றது. நல்லாட்சி அரசாங்கத்தை கலைத்து, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினை பிரதமராக நியமித்த கையுடன் ஜனாதிபதியின் செயற்பாடுகள் அரசியல் அமைப்பினை மீறி இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.



அந்த வகையில் ஜனாதிபதியினால் குறுகிய காலத்தினுள் அதாவது ஒரு மாதத்திற்குள்ளே ஐந்து வர்த்தமானி அறிவித்தல்களை விடுத்து பாரிய அரசியல் மாற்றங்களை ஏற்படுத்தியிருந்தார். ரணில் விக்கிமைசிங்கவை பிரதமர் பதிவியிலிருந்து அகற்றுதல், மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமித்தல், புதிய அமைச்சரவையை அமைத்தல், பாராளுமன்றத்தை ஒத்திவைத்தல், மற்றும் பாராளுமன்றத்தை கலைத்தல் ஆகிய வர்த்தமானி அறிவித்தல்களை ஜனாதிபதி அடுத்தடுத்து வெளியி;ட்டு பாரிய யாரும் எதிர்பாராத அரசியல் மாற்றங்களை ஏற்படுத்தியிருந்தார்.

அரசியல் மாற்றங்கள் என்று சொல்வதிலும் பார்க்க, இன்றைய இலங்கை அரசியல நிலவரப்படி அரசியல் குழப்ப நிலையே காணப்படுகின்றது. தொடர்ச்சியாக ஐக்கிய தேசிய முன்னணி, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மற்றும் மக்கள் விடுதலை முன்னணி ஆகிய கட்சிகள், ஜனாதிபதி



யின் தீர்மானங்களுகக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்திருந்தனர்.

அந்த வழக்குகளின் பிரகாரம், ஜனாதிபதி அரசியல் அமைப்பிற்கு முரணான வகையில் செயற்பட்டு பாராளுமன்றத்தினைக் கலைத்துள்ளார் என்ற அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணை ஏழு நீதியரசர்கள் கொண்ட குழாம முன்னிலையில் கடந்த ஏழாம் திகதி இடம்பெற்றது. அதன் போது காரசாரமான வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்ற நிலையில் தீர்ப்பு எதிர்வரும் வார நாட்களில் அறிவிக்கப்படும் என்று உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபாலவின் செயற்பாடுகள் அனைத்தும் அரசியல் அமைப்பிற்கு விரோதமானவை என்ற அடிப்படையில் பல்வேறு வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றுவரும் நிலையில், ஐக்கிய தேசிய முன்னணியினால் உச்சநீதிமன்றத்தில் முன்னாள் பிரமதர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது அமைச்சரவையை இரத்து செய்யக் கோரும் வழங்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நிலையில், மஹிந்த ராஜபகஷவின் அமைச்சரவைக்கு நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த நிலையில் உள்நாட்டிலும் சரி ,வெளிநாட்டிலும் சரி இன்று நம்பிக்கைத் துறையாக நீதித்துறை விளங்குகின்றது. ஜனநாயகத்திற்கு விரோத செயற்பாடுகள், மனித உரிமை மீறல்கள் என்பனவற்றிற்கு வகை சொல்லும் பொறுப்பில் இன்று நீதித்துறை உள்ளது. ஏற்கனவே நாட்டில் சட்டத்துறை, நிறைவேற்றுத்துறை ஆகியவற்றில் மக்கள் நம்பிக்கையிழந்துள்ள நிலையில் எஞ்சியிருக்கும் நம்பிக்கையாக நீதித்துறை விளங்குகின்றது.

**பண்டாரவன்னியன்**

நாட்டில் 2015 ஆம் ஆண்டு ஜனநாயம் தோற்றுவிக்கப்பட்டது எனத் தெரிவித்துவந்த ஜனாதிபதி மைத்திரிபால நீதித்துறையின் சுதந்திரத்திற்கு தடைகளை ஏற்படுத்தாது அதன் செயற்பாடுகளை சுதந்திரமாக அமையவிட வேண்டும். தான் எடுத்த முடிவு தான் சரி என்ற கோணத்தில் கௌரவப் பிரச்சனையாகப் பார்க்கால் நாட்டு மக்களின் நலனில் அக்கறை கொண்டு அரசியல் ஸ்திரத்தனமையினை ஏற்படுத்துவதற்கான வழிமுறைகளை நீதித்துறையின் ஊடாக ஜனாதிபதி மேற்கொள்ள வேண்டும்.


ஏற்கனவே நாட்டில் ஏற்பட்டுள்ள ஸ்திரமற்ற தன்மை காரணமாக பொருளாதார பிரச்சனைகள் தலைதூக்க ஆரம்பித்துள்ளன. மக்களின் அன்றாட வாழ்க்கைச் செலவு அதிகரிக்கத் தொடங்ஞீகியுள்ளது. வெளிநாட்டு முதலீடுகள் குறைவடைந்துள்ளன.

உல்லாசப்பயணத்துறை வீழ்ச்சியடையத் தொடங்கியுள்ளது. ஏற்றுமதி வர்த்தகம் பாதிப்படைந்துள்ளது. உலக வர்த்தகத்தில் ஏற்பட்டுள்ள தளம்பல் நிலையினால் இலங்கையில் அமெரிக்க டொலருக்கு எதிரான மதிப்பு அதிகரித்துவருகின்றது. இத்தகைய பிரச்சனைகளுடன் இலங்கைக்கு வெளிநாடுகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீளச்செலுத்துவதற்கான வரையறைகளை சர்வதேச நாடுகளும் அமைப்புக்களும் நெருக்கிவருகின்றன. மேலும் சர்வதேச நன்கொடைகள் நிறுத்தப்பட்டு வருகின்றன. கடன் வழங்கல் நிறுத்தப்பட்டுவருகின்றது.

உண்மையில் இலங்கையின் ஏற்பட்டுள்ள அதிகார போட்டியினால் நாட்டின் பொருளாதாரம் அதளபாதாளத்தை நோக்கி சென்றுகொண்டிருக்கின்றது. நாட்டிற்கு வரவேண்டிய அன்னியச் செலவானி கிடைக்காது போகுகின்ற போது அது நாட்டுமக்களின் கழுத்தையே நெரிக்கும்.

உழைக்கும் மக்கள் சுரண்டப்படுவார்கள், மேலும் அரச உத்தியோகத்தர்களுக்கான சம்பளப் பிரச்சனை தலைதூக்கும் இவ்வாறு இலங்கை மீள்முடியாத பிரச்சனையின் வீழ்ந்து கொண்டிருக்கின்றது. அடுத்த வருடத்திற்கான வரவுசெலவுத்திட்டம் கார்த்திகை மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு மார்கழி மாதம் நிறைவேற்றப்பட்டால் தான் அடுத்த வருடத்திற்கான செலவுகள், உற்பத்திகளை மேற்கொள்ள முடியும். ஆனால் இன்று வரை அடுத்த வருடத்திற்கான வரவுசெலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படவில்லை. இந்த நிலையில் மேலும் பொருளாதார நெருக்கடிக்குள் இலங்கையர்கள் சிக்கப் போகிறார்கள்.

இதேவேளை நாட்டில் சட்டம் ஒழுங்கு சீரழிந்துவருகின்றது. அண்மையில் பொலிஸார் மீது மட்டக்களப்பில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்துள்ளது. பேருவளையில் பெருந்தொகையான போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது. யாழில் வன்முறைகள் மீண்டும் தலைதூக்கியுள்ளது. இவ்வாறு நாடு சமூக சீரழிவுகளை எதிர்நோக்கிவருகின்றது.



இவற்றிற்கு எல்லாம் காரணம் இந்த அரசியல் குழப்பங்களே. தற்போது நாட்டில் அமைச்சரவை இல்லை. அமைச்சர்கள் இல்லை. எல்லாவித அதிகாரமும் ஜனாதிபதியின் கையில் உள்ளது. தீர்க்கப்படாத பிரச்சனைகளுக்கு தீர்வு வழங்கலாம். முன்னைய ஆட்சியாளர்களுக்கு எதிராக பல்வேறு இலஞ்ச ஊழல் சாற்றுதல்கள் இருக்கின்றன. அவற்றிற்குத் தீர்வு காணலாம். தமது நடவடிக்கைகு ரணில் விக்கிரமசிங்க தடையாக இருந்ததாக தெரிவித்து வந்த ஜனாதிபதி மைத்திரி தற்போது யாரும் தடை ஏற்படுத்தாத நிலையில் அதிகாரங்களை அனுபவித்து வருகின்றார்.

ஆகவே தடைப்பட்ட, தடை ஏற்படுத்தப்பட்ட, மக்களுக்கு நன்மை பயக்கும் காரியங்களை முன்வந்து அமுல்ப்படுத்தலலாம். குற்றவாளிகளை தண்டிக்கலாம். தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கலாம். காணாமல் போனோர் விடயத்தில் நடவடிக்கை எடுக்கலாம். அபிவிருத்திகளை விரிவுபடுத்தலாம், புதிய அரசியல் அமைப்பிற்கான வேலைகளை துரித்தப்படுத்தலாம். இவ்வாறு பல விடயங்களை மேற்கொள்ளலாம். யாரும் தடை ஏற்படுத்தாத நிலையில் அவற்றினை செய்யாது விடுத்து மற்றவர்களை குறைகூறாமல் காத்திரமான நடவடிக்களை ஜனாதிபதி எடுத்து நாட்டு மக்களை ஆபத்தில் இருந்து காப்பாற்ற வேண்டும்.

மக்களின் ஜனநாயகத்தையும் உரிமைகளையும் சுதந்திரங்களையும் காப்பாற்றுவதற்கு தனது உயிரைக் கூட கொடுக்கத் தயார் என்று கூறிய ஜனாதிபதி குறைந்த பட்சம் மக்களின் வாழ்க்கையையாவது காப்பாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசியல்வாதிகளின் அதிகார போட்டிக்கு முற்றுப்புள்ளி வைத்து பாராளுமன்ற ஜனநாயகத்தையும் மக்களின் ஆணையினையும் கௌரவிக்கும் வகையில் தற்துணிவுடன் ஜனாதிபதி நடவடிக்கை எடுத்து தேர்தல் காலங்களில் நாட்டு மக்களுக்கு கொடுத்த நம்பிக்கையை நிறைவேற்ற வேண்டும் என்பதே சகல தரப்பினரின் எதிர்பார்ப்பாகும்.

நாட்டில் ஏற்படுத்தியுள்ள அரசியல் குழப்பத்திற்கு உரிய தீர்வினை ஜனாதிபதி காணாது போவாராயின் இலங்கை அரசியல் வரலாற்றில் கறைபடிந்த அரசியல் வரலாற்றினை மைத்திரிபால சிரிசேன பெறுவார் என்பது திண்ணம். நீண்ட கால அரசியல் அனுபவத்தினையும் பல ஜனாதிபதிகளுடன் பணியாற்றிய அனுபவங்களையும் கொண்டுள்ள மைத்திரிபால சிறிசேன தனது அரசியல் வாழ்க்கையில் ஏற்படப்போகும் கறையினை தடுப்பாரா பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.



# யார் இந்த சிவில் சமூகம்?

இலங்கையில் ஏதாவது நல்ல விடயங்கள் நடக்கும் போதெல்லாம் அதை சில அரசியல்வாதிகள் மட்டும் எதிர்ப்பதில்லை. மதவாதிகளும் எதிர்ப்பார்கள். இந்த மதவாதிகள் அநேகமாக உள்ளுர் தயாரிப்பாகவே இருப்பார்கள். இவர்களது கவலை எல்லாம் தங்களது மதம், மொழி, கலாச்சாரம் எல்லாம் பறிபோகிறது என்பதாகத்தான் இருக்கும். தமது நாட்டின் வளங்களை ஆட்சியில் இருப்பவர்கள் அந்நிய நாடுகளுக்குத் தாரை வார்ப்பதையோ, அந்நிய கலாச்சார ஊடுருவல் நடப்பதையோ இவர்கள் பார்க்கமாட்டார்கள். இவர்கள் தமது எதிரிகளை எப்பொழுதும் சக இனத்தவரிடையிலேயே தேடிக் கொண்டிருப்பார்கள்.

இவர்களைத் தவிர கடந்த சில தசாப்தங்களாக இன்னொரு தரப்பினரும் ஏதாவது நல்ல விடயங்கள் நடந்தால் அதை நாகரீகமான முறையில் எதிர்ப்பதற்கெனறு உருவாக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் தம்மை சிவில் சமூகம் (Civil Society) என பெருந்தன்மையோடு அழைத்துக் கொள்வார்கள். இவர்களில் கொஞ்சம் கீழ்மட்டத்தவர்கள் தங்களை பிரஜைகள் குழு (Citizens Committee) என்று அழைப்பதுமுண்டு.

இந்த சிவில் சமூகம் இப்பொழுது சற்று விரிவாக்கம் பெற்று சிவில் மற்றும் கல்விசார் சமூகம் (Civil and Academic Society) என்று தனது பெயரைச் சூடிக் கொண்டிருக்கிறது.

இந்தப் பேர்வழிகளைப் பற்றி ஆராய்ந்து பார்த்தால் பெரும்பாலோர் அநாமதேயங்களாகவும் சமூகத்துடன் எவ்வித தொடர்புகளும் அற்றவர்களாகவும் இருப்பார்கள். ஆனால் இவர்களது பெயருக்கு ஒரு கனதியைக் கொடுப்பதற்காக பெயருக்கு முன்னால் கலாநிதி (ஈணூ) என்றோ அல்லது மதப் பெரியார் என்பதைக் குறிக்கும் அடைமொழியோ இருக்கும். இவர்களில் சிலர் ஆங்கில ஊடகங்களில் அவ்வப்போது கடினமான சொற்களைப் பயன்படுத்தி விளங்க முடியாத கட்டுரைகளையும் எழுதுவார்கள்.

அதுதவிர, சிலர் ஏதாவது வெளிநாட்டுத் தொடர்புடன் அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றை ஆரம்பித்து, சிலரை வேலைக்கமர்த்தி, சமூக பொருளாதார கலாச்சார ஆய்வுகளையும் மேற்கொள்வார்கள். இந்த ஆய்வுகள் எதற்காக மேற்கொள்ளப்படுகின்றன என்ற கேள்விக்கு தெளிவான பதில் இருக்காது. ஆனால் இந்த ஆய்வுகளில் பெறப்படும் தரவுகளை இலங்கை அரசாங்கமோ அல்லது இலங்கையில் ஆக்கபூர்வமான செயல்பாடுகளைச் செய்பவர்களோ பயன்படுத்துவதாகத் தெரியவில்லை.

ஆனால் இந்த ஆய்வுகளை பல நோக்கங்களுடன் செயல்படும் சர்வதேச நிறுவனங்கள் பல்வேறு நாடுகளில் மேற்கொள்ளும் தமது வேலைகளுக்கு உதவியாகப் பயன்படுத்திக் கொள்கின்றன. சில நாடுகளில் அரசாங்கங்களை வீழ்த்துவதற்கும் நிறுவுவதற்கும் கூட இந்த ஆய்வுகள் பயன்பட்டிருக்கின்றன.

அண்மையில் இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்ப நிலைகளின் போது சில சிவில் சமூக அமைப்புகள் தலைகாட்டியிருக்கின்றன. இவர்களது தலைகாட்டல் ஒரு சீர்வரிசையில் அமைந்திருக்கின்றன.

அந்த வரிசையில் பதவி நீக்கப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சி, அதனுடைய கூட்டாளிக் கட்சிகள், அவைக்குச் சார்பான பொது அமைப்புகள், மேற்கத்தைய நாடுகள் என்பனவற்றுடன் இந்த சிவில் சமூகமும் சேர்ந்துள்ளது. இவர்களுடைய பிரதான கோசங்களாக அரசியல் அமைப்பு மீறப்பட்டுள்ளது, ஜனநாயகம் குழிதோண்டிப் புதைக்கப்பட்டுள்ளது, மீண்டும் எதேச்சாதிகார ஆட்சி நிறுவப்பட்டுள்ளது என்பன இருக்கின்றன.

இந்த பொது அமைப்புகளில் சில 1978இல் ஜே.ஆர்.ஜெயவர்த்தன நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையைக் கொண்ட இன்று நடைமுறையில் உள்ள எதேச்சாதிகார அரசியல் அமைப்பைக் கொண்டு வந்தபோது அதற்கெதிராக போர்க் கொடி தூக்கியவை. இப்பொழுது அந்த அரசியல் அமைப்பு மீறப்பட்டுள்ளது என அந்த அரசியல் அமைப்பை ஜனநாயக ரீதியானது எனக்காட்ட முயல்கின்றனர்.

அதுமட்டுமின்றி, தற்போதைய ஆட்சிக் கலைப்பை அரசியல் சாசனத்தையும் ஜனநாயகத்தையும் மீறிய செயல் என கூப்பாடு போடுபவர்கள், 2015 ஜனவரி 8இல் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியானதும், 162 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் பிரதமர் தி.மு.ஜெயரத்ன தலைமையில் ஆட்சியில் இருந்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தை நீக்கிவிட்டு, வெறுமனே 47 உறுப்பினர்களுடன் இருந்த ஐ.தே.கட்சி தலைவரான ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக்கியதையோ அல்லது பிரதம நீதியரசர் மொகான பீரிசை நாடாளுமன்றத்தில் தீர்மானம் எதுவும் நிறைவேற்றாமல் பதவி நீக்கியதையோ அல்லது உள்ளுராட்சி சபைத் தேர்தல்களை நடத்தாமல் மூன்றாண்டுகள் இழுத்ததடித்ததையோ அல்லது மாகாண சபைகளுக்குத் தேர்தல் நடத்தாமல் இருப்பதையோ, ஏன் அரசியல் சாசனத்தையும் ஜனநாயகத்தையும் மீறிய செயலாக இவர்களால் பார்க்க முடியவில்லை. இந்த இடத்தில் இவர்களது பக்கச்சார்பற்ற நிலை எங்கே ஓடி ஒளிந்து கொண்டுள்ளது?

அத்துடன் ரணில் விக்கிரமசிங்கவைப் பதவி நீக்கம் செய்ததைத் கண்டித்து சிவில் சமூகம் சார்பில் கையெழுத்திட்ட இந்தப் பெருந்தகைகளின் கடந்தகால வரலாறு, அரசியல் பின்னணி என்பனவற்றையும் ஆராய்ந்து பார்த்தால் மேலும் பல விடயங்களை அறிந்து கொள்ளலாம்.

இந்த கையெழுத்துப் பட்டியலில் சில தமிழ்ப் பெயர்களும் இருக்கின்றன. அவர்களின் கடந்தகால வரலாறும் சில உண்மைகளைக் கூறும். அதில் சிலர் தமிழ் மக்கள் 30 வருடப் போரில்

13 ஆம் பக்கம் பார்க்க....

# இலங்கையும் எதிர்கொள்ளவுள்ள சவால்களும்

சரணியா சுப்ரமணியம்
B.A (Hons)
பேராதனை பல்கலைக்கழகம்

இரண்டு பிரதமரில் தொடங்கிய நாட்டின் அண்மைக்கால பிரச்சினை இரு அமைச்சர்கள் இரண்டு அவை முதல்வர்கள் என்று தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. இந்நிலையில் நிறைவேற்று அதிகாரத்தை ஒழிக்கப்போவதாக ஆட்சிக்கு வந்த மைத்திரிபால சிறிசேன இப்போது அதே நிறைவேற்று அதிகாரத்தின் அடிமையாகவே மாறியிருக்கின்றார். என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் தோன்றியுள்ளது. அரசியல் அமைப்பு சட்டத்தின்படி ஜனாதிபதிக்கு கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களைவிடவும் மேலாக அவர் அதிகாரங்களை பயன்படுத்துகின்றார் என்பதே பொதுவான குற்றச்சாட்டாக அமைந்துள்ளது. அதனால் பாராளுமன்றத்தினை கலைக்கவும் கூட அவர் தயங்கப்போவதில்லையென்பதையும் உணரமுடிகின்றது. அதற்கு அதிகாரம் இல்லையென்ற போதும் ஏதோஏதோ காரணங்களைச் சொல்லி அதனையும் அவர் செய்ய தவறப்போவதில்லை. இந்நிலையில் அரச துறைகள் யாருக்கு கட்டுப்பட்டு நடப்பது அடுத்து ஆட்சியில் மாற்றங்கள் நிகழ்ந்தால் தாம் பந்தாடப்படும் நிலையேற்படுமோ என்ற கவலையும் கலக்கமும் முக்கியமான அரச நிர்வாக பிரிவுகளில் உயர்பதவி உள்ளவர்களுடன் காணப்படுகின்றது. அந்தவகையில் பொலிஸ்மா அதிபர் தற்போது பாராளுமன்ற செயலாளரும்கூட தாம் ஜனாதிபதியின் வர்த்தமானி கட்டளைப்படியே நடக்கப்பபோவதாகவும் சபாநாயகரின் உத்தரவினை செயற்படுத்த முடியாதெனவும் கைவிரித்திருக்கின்றார். அரச துறையில் உள்ளவர்கள் தாம் யார் சொற்படி நடக்கவேண்டுமென்று சட்டக்கோவைகளை புரட்டிப்பார்த்து செயற்பட வேண்டிய நிலைக்கு உள்ளாகியுள்ளனர். அரசியலில் எப்படியும் மாற்றங்கள் நிகழலாம். என்பதனால் அவர்கள் குழப்பத்தில் ஆழ்ந்துள்ளனர். இந்த அரசியல் குழப்பங்கள் சர்வதேச அளவில் இலங்கை மீதான கருசனைகளையும்

> **மகிந்த ராஜபக்ஷவை பிரதமராகக் கொண்ட ஓர் அரசாங்கம் நீடிக்குமானால் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாக கையாளப்பட்ட பாதுகாப்பு மறுசீரமைப்புத் திட்டங்கள் அனைத்தும் தடம்புரளும் நிலையேற்படலாமென புத்திஜீவிகள் குறிப்பிடுகின்றனர். அத்துடன் எல்லாமே மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு செல்லப்பட்டாலும் ஆச்சரியமில்லை**

அதிகரிக்கச் செய்துள்ளது. இந்தக்குழப்பங்களுக்கு தீர்வு எட்டப்பட்டாலும்கூட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் இனி எதிர்வரும் காலங்களில் சர்வதேச சமுகத்தின் முன்பாக கௌரவத்துடன் போய்நிற்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது என்றே அரசியல் அவதானிகள் குறிப்பிடுகின்றனர். அத்துடன் முப்படைகளின் தளபதியாக நிறைவேற்று அதிகாரம் உள்ள ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் நாட்களில் கடுமையா சவால்களை சந்திக்கும் நிலையேற்டலாம் என அரசியல் வட்டராங்கள் குறிப்பிடுகின்றனர்.



பாராளுமன்றத்தில் எந்ததரப்பு வெற்றி பெற்றாலும் அது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நெருக்கடிக்குள் தள்ளும் ஏன்னெனில் அதற்கு பொறுப்புக்கூறவேண்டிய நிலையில் அவரே இருக்கின்றார். இந்த அரசியல் குழப்பங்கள் நாட்டில் இராணுவ தலையீடுகளுக்கு வழிவகுக்கலாம் என்ற சந்தேகங்கள் ஆரம்பத்தில் பலராலும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. ஆனால் இராணுவ தளபதி லெப் ஜெனரல் மகே சேனநாயக்க இது அரசியல் ரீதயாக தீர்க்கப்படவேண்டிய பிரச்சினையென்றும் இதில் இராணுவம் தலையிடாது என்றும் கூறியிருந்தார். மகிந்த ராஜபக்சவை பிரதமராக முன்னிறுத்திய ஜனாதிபதியின் முயற்சி சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்டால் பாதுகாப்பு கட்டமைப்புக்களில் மீண்டும் மாற்றங்கள் நிகழ்வதற்கு மாத்திரமின்றி சிக்கல்களையும் சந்திக்கும் நிலையேற்படும் எனவும் அரசியல் ஆய்வாளர்கள் கூறிவருகின்றனர். 2005ம் ஆண்டுக்கு பின்னர் பாதுகாப்பு கட்டமைப்புக்களில் பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டன. ஐநா மற்றும் சர்வதேச தரப்புக்களின் அறிவுரைக்கமைய பாதுகாப்பு மறுசீரமைப்பு திட்டங்கள் ஓரளவுக்கு நடைமுறைப்படுத்தப்பட்டன. ஆனால் மகிந்த ராஜபக்சவை பிரதமராக கொண்ட ஓர் அரசாங்கம் நீடிக்குமானால் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாக கையாளப்பட்ட பாதுகாப்பு மறுசீரமைப்பு திட்டங்கள் அனைத்தும் தடம்புரளும் நிலையேற்படலாமென புத்திஜீவிகள் குறிப்பிடுகின்றனர்.

அத்துடன் எல்லாமே மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு செல்லப்பட்டாலும் ஆச்சரியமில்லை. ஏனென்றால் இந்த பாதுகாப்பு மறுசீரமைப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போது மகிந்த தரப்பின் நிழல்பாதுகாப்பு அமைச்சரான கோத்தபாய ராஜபக்ச அதனை கடுமையாக விமர்சித்து வந்தார். எனவே தற்போதைய பாதுகாப்பு மறுசீரமைப்பு திட்டங்களை தொடர்ந்து முன்னெடுக்க முடியாத நிலை ஜனாதிபதிக்கு ஏற்றபடலாம் எனவும் அவர்கள் சுட்டிகாட்டுகின்றனர். அதைவிட 2015 தொடக்கம் 2018காலப்பகுதியில் கடைப்பிடிக்கப்பட்ட ஒட்டுமொத்த பாதுகாப்பு கொள்கையுமே மறுசீரமைக்கப்படுவதற்கும் வாய்ப்புக்கள் உள்ளன. ரணில் மைத்திரி அரசாங்கத்தில் வடக்கு, கிழக்கில் இராணுவம் குறைக்கப்பட்டு முகாம்களுக்கு முடக்கி வைக்கப்பட்டது. அந்த நிலை மாற்றப்பட்டு மீண்டும் இராணுவத்தினர் வெளியில் தாரளமாக நடமாடுவதற்கும் மேலும் தடைகள் குவிக்கப்படுவதற்கும் சாத்தியகள் உள்ளன. அதற்கு தேவையான புறச்சூழலை அரசாங்கமே ஏற்படுத்தி கொடுக்கும். மனித உரிமைகள் மற்றும் குற்றச்செயல்களுடன் தொடர்புபட்ட படையினருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்திருந்த ரணில் மைத்திரி அரசாங்கம் அதனை நிறைவேற்றவில்லை. ஆனால் குற்றச்சாட்டுகளுக்கு இலக்காகிய படையினரை ஓரமாக ஒதுக்கிவைத்திருந்தது. மகிந்த ராஜபக்ச ஆட்சி உறுதி செய்யப்பட்டால் அவர்கள் முன்னரங்கிற்கு கொண்டுவரப்படுவார்கள். இறுதிப்போரில் பங்கெடுத்த அதிகாரிகள் முக்கிய பதவிகளில் அமர்த்தப்படும் வாய்ப்புக்கள் அதிகம். இறுதிப்போரில் இடம்பெற்ற போர்க்குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் என்று சர்வதேச அளவில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் சிலரும் பதவியில் அமரும் நிலையேற்படும். இப்படியான நிலையில் மகிந்த ராஜபக்ச ஆட்சி உறுதிசெய்யப்படும் சந்தர்ப்பத்தில் சர்வதேச சமூகத்திற்கும் இலங்கைக்கும் இடையில் பாதுகாப்பு விவகாரங்களிலும் மனித உரிமை விவகாரங்களிலும் பாரியதொரு இடைவெளியேற்படும். ஏற்கனவே ஐநா அமைதிப்படைக்கு இலங்கைப்படையினரை அனுப்பும்

14 ஆம் பக்கம் பார்க்க....



எமது நாட்டைப்பொறுத்தவரை அரசியல் நெருக்கடி நிலைமைகளின் போது அல்லதுஆட்சி அமைக்கும் சந்தர்ப்பங்களின் போது சிறுபான்மை கட்சிகளின் ஆதரவினை கோரிநிற்கும் ஜனநாயகப் பண்புகள் நிலவிய காலம் மருத்துவிட்டது. என்று தான் கூறவேண்டியுள்ளது ஏனென்றால் இப்போது ஆதரவினை பெற்றுக்கொள்வதென்றால் அமைச்

சமுகங்களைச் சேர்ந்தவர்கள் இதனால் பரிபாகம் செய்துவருவதாக மக்கள் கூறிவருகின்றனர். இந்நிலை மாறுவதற்கு குறித்த பிரதிநிதிகள்முதலில் சந்தர்ப்பவாத அரசியல் சூழ்நிலையைவிட்டு வெளியில்வர வேண்டுமென மக்கள் கோரிக்கைவிடுகிக்கின்றனர். தமது சமூககத்திற்கு என்னதேவை என்பதனை இவர்கள் உணர்ந்திருந்தாலும் அதை எவ்வாறு பெற்றுக்கொள்வது என்பது குறித்து வர்


ஒருதொகையை முன்வைப்பதும் கம்பனிகள் அதனை நிராகரிப்பதும் அரசியல்வாதிகள் வெளியில்வந்து ஊடகங்களுக்கு மறுதலையாக கருத்துக்களை வெளியிடுவதும் வழமையானதொன்றாக மாறியுள்ளது. கூட்டு ஒப்பந்தத்திற்கு வெளியில் இருக்கும் தொழிற்ச ங்கங்கள் மக்களை திரட்டி போராட்டம் செய்

அரசியல் வரப்பிரசாதங்கள் காலத்திற்கு காலம் மாற்றமடையும் என்பதால் மலையக கட்சிகள் தொழில்சங்க கட்டமைப்பை ஸ்திரமாக்குவதில் அதீத ஆர்வம் காட்டுகின்றன. இவ்



# தொழிற்சங்கங்களுக்கு சந்தா!
# கம்பனிகளுக்கு உழைப்பு!
# அரசுக்கு வாக்கு!
# எங்களுக்கு...?

சுப்பதவிகள் அதற்கு அப்பால் பட்ட பேரங்கள், சலுகைகள் அதை தீர்மானித்துவிடுகின்றன. இதன் காரணமாகவே எமது நாட்டில் பல சந்தர்பங்களில் தோன்றியுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதென்பது சிக்கலாகவே போய்விட்டது. அந்தவகையில், மலையகத்தைப் பொறுத்தவரையில் 1994ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் இடம்பெற்ற பாராளுமன்ற



தேர்தலில் வெற்றிபெற்றதன் பின்னர் சந்திரிக்கா அம்மையாரின் அரசாங்கம் உருவாக காரணமாக விருந்த ஒரே சிறுபான்மை பிரதிநிதியாக அமரர் சந்திரசேகரன் விளங்குகிறார். இவர் வைத்த கோரிக்கையின் பிரகாரமே தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு என்பது உருவாக்கப்பட்டு தொழிலாளர்களுக்கு தனிவீட்டுத்திட்டம் உதயமானது. ஆனால் இன்று நிலைமை தலைகீழாகிவிட்டது. மலையக பெருந்தோட்ட மக்களுக்கு என்ன தேவை என்பதனைவிட தமக்கு என்ன முக்கியமோ அவை பெற்றுக்கொள்ளவே மலையக பிரதிநிதிகள் முயல்கின்றனர். இவர்கள் அம்மக்களின் பலவீனத்தை நன்றாக புரிந்துகொள்ளும் பேரினவாத தேசிய கட்சிகளும் தமக்குத்தேவையான அதிகாரங்களை நிலைநாட்ட இந்தப்பிரதிநிதிகளை பயன்படுத்தும் பேரம்பேசும் அரசியல் கலாசாரத்திற்கு வித்திட்டுள்ளனர். தமது சலுகைகளுக்காகவும் அரசியல் இருப்புக்காகவும் இவ்வாறு செயற்படுவதானது. தம்மை தெரிவு செய்த மக்களை அவர்களுக்கு தெரியாமலேயே விற்பதற்கும் காட்டிக்கொடுப்பதற்கும் சமனாகும். அதிகார பரப்பினரிடத்தில் சமுகம் சார்ந்த நிபந்தனைகளையும் கோரிக்கைகளையும் முன்வைத்து அதன்மூலம் உரிமைகளைப் பெற்றுக்கொடுக்கும் வண்ணம் கட்டியெழுப்பப்பட்டுவந்த மலையக அரசியல் கலாசாரம் தற்போது சலுகை மட்டும் சந்தர்ப்பவாத அரசியலால் சீரழிந்து வருகின்றது.

தொழிலாளர்களின் சம்பள விவவாகரத்தில் மலைய பிரதிநிதிகள் நடந்துகொள்ளும் போக்கைப் பார்த்தாலே இதன் நிதர்சனத்தை அறிந்து கொள்ளலாம். பிரதமர் பதவியில் மாற்றம் ஏற்பட்டவுடன், கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்துஇடும் இரண்டு தொழில்சங்க பிரதிநிதிகளுக்கு அமைச்சுப்பதவிகள் கிடைத்தன. இந்த பதவிகளால் தொழில்சங்ககங்களின் கோரிக்கைகளுக்கு இரண்டைப்பலம் கிடைக்கும் என்று குறித்த தரப்பினரால் அறிவிக்கப்பட்டது. அது தொடர்பாக பேச்சுக்களும் முன்னெடுக்கப்பட்டன. ஆனால் நாட்கள்தான் நகர்ந்தனவே ஒழிய இதற்கு தீர்க்கமான முடிவுகளை அரசாங்க தரப்பிலிருந்து பெறமுடியவில்லை.

மலையக மக்களைப்பொறுத்தவரை போராட்டங்களுக்கு அப்பால்பட்டு அரசியல் நெருக்கடி நிலைகளில் சமயோசிதமாக செயற்படுவதன் மூலமே சில உரிமைகளை கேட்டு பெறவேண்டிய நிலைமை உள்ளது. அதை பற்பல சந்தர்ப்பங்களில் கடந்த காலங்களில் அமர்களான சௌமியமூர்த்தி தொண்டமான் மற்றும் சந்திரசேகரம் ஆகியோர் முன்னெடுத்தனர். ஆனால் அந்த பாரம்பரியத்தில் வந்த இக்கால பிரதிநிதிகள் தமது சுயநலம்சார்ந்து செயற்படுகின்றனரா? என்ற கேள்வி தற்பொழுது எழுந்துள்ளது. இதன்மூலம் பேரினவாத சக்திகள் தமது தேவைக்கு மாத்திரம் இவர்களைப் பயன்படுத்திவிட்டு பின்னர் எறிந்துவிடும் நிலைமைகளே எதிர்காலத்தில் உருவாகப்போகின்றன. இதற்குப் பிரதான காரணமே மலையகப்பிரதிநிதிகள் தமக்கிடையே ஒற்றுமையை பேணதாகும் என மலையகவாழ் புத்திஜீவிகள், மலையக பிரதிநிதிகளை குற்றஞ்சாட்டுகின்றனர்.

மலையக சமுகத்திற்கு யார் என்னென்ன செய்தார்கள் என்பதனை பட்டியியல் இட்டு காட்சிப்படுத்துவது தற்போதைய தேவையல்ல. தேயிலைத்தொழிலில் கடந்த 150வருடங்களாக ஈடுபட்டுவரும் தொழிலாளர்களுக்கு இதுவரை நியாயமான சம்பவம் இல்லையென்ற வரலாற்று செய்தியே இச்சமுகத்திற்கு கிடைத்த ஏனைய சலுகைகளையும் உரிமைகளையும் மறக்கச் செய்து விடுகின்றது. என்பது இந்தச்தொழில்சங்க தலைமைகளுக்கு புரியவில்லையா? என்பதே மக்களின் கேள்வியாக எழுந்துள்ளது. சில பிரதிநிதிகளின் செயற்பாடுகளால் குறித்த சமுகத்தினைச் சேர்ந்த புத்திஜீவிகள், கல்வி சமுகத்தினைச்சேர்ந்தவர்கள் இளைஞர் யுவதிகள் ஆகிய ஏனைய

**தமது சலுகைகளுக்காகவும் அரசியல் இருப்புக்காகவும் இவ்வாறு செயற்படுவதானது, தம்மைத் தெரிவு செய்த மக்களை அவர்களுக்குத் தெரியாமலேயே விற்பதற்கும் காட்டிக் கொடுப்பதற்கும் சமனாகும். அதிகாரப் பரப்பினரிடத்தில் சமூகம் சார்ந்த நிபந்தனைகளையும் கோரிக்கைகளையும் முன்வைத்து அதன் மூலம் உரிமைகளைப் பெற்றுக் கொடுக்கும் வண்ணம் கட்டியெழுப்பப்பட்டு வந்த மலையக அரசியல் கலாசாரம் தற்போது சலுகை மட்டும் சந்தர்ப்பவாத அரசியலால் சீரழிந்து வருகின்றது**

கள் இன்னும் பாடம்கற்க வேண்டியவர்களாகவே உள்ளனர். அதுவரை அடிப்படைச்சம்பளம் 1000ரூபாய் என்பதும் எட்டாக்கனியாகவே இருக்கப்போகின்றதோ என்ற அச்சமும் எழாமல் இல்லை.

கூட்டுஒப்பந்த பேச்சு வார்த்தையும் மக்களின் வேதனப்போராட்டமும் ஒருசேர பேசுபொருளாகி உள்ள இன்றைய நிலையில் வழமையான நடைமுறைகளுக்கு அப்பால் சென்று இதனை ஆராய வேண்டியுள்ளது. அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ள தொழில்சங்க கட்டமைப்பும் சுரண்டல் போக்குடைய கம்பனிகளின் சுயஇலாப நோக்கமும் மக்களை இன்று நடுநிலைக்கு கொண்டுவந்துள்ளது. மக்களை அடமானம் வைத்து அவர்கள் உழைப்ப உறிஞ்ச கம்பனிகளிடம் கையளிக்கும் வேலையை தொழிற்சங்கங்கள் செய்து வருகின்றது. அதற்கு மக்களின் சந்தாப்பணம் செலவுக்கு வழங்கப்படுகின்றது. கூட்டுஒப்பந்த பேச்சுவார்த்தையில் தொழிற்சங்க தரப்பினர்



## நக்கீரர்

வதும் சட்டத்தின் வழியில் அதனை நிராகரிக்க கோருவதையும் இன்று காணக்ககூடியதாகவுள்ளது. இவ்விரண்டு போராட்ட முறைகளும் மக்களை நம்பியே முன்னெடுக்கப்படுகின்றன. தமது மக்கள் செல்வாக்கை வெளிப்படுத்தவும் வாக்கு வாக்கியை ஸ்திரப்படுத்தமையுமே மக்களை காட்சிப்பொருளாக்கி அதற்கு போராட்ட வடிவம் கெர்டுத்துள்ளனர்.

உலக நாகரீக வளர்ச்சி போக்கில் மக்கள் போராட்டமானது. முக்கிய இடத்தினைப் பிடிக்கின்றது. எனினும் மக்களை நாகரீகமற்ற முறையில் அரசியல் நோக்கங்களுக்காக வீதிக்கு அழைப்பது தவிர்க்கப்பட வேண்டும். குறிப்பாக மக்கள் தமது சொந்தப்பணத்தில் சம்பளபோராட்டங்களை முன்னெடுக்க பெருநகரங்களுக்கு செல்கின்றனர். அன்றையதினம் அவர்களின் ஊதியமும் இல்லாமல் போகின்றது. எனவே இதுபொருளாதாரத்தில் நேரடியாக தாக்கத்தினைச் செலுத்துகின்றது. கடந்த கூட்டு ஒப்பந்தம் காலாவதியாகி புதிய ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு ஒருவருடம் வரை தாமதம் ஏற்பட்டது. இக்காலப்பகுதியில் வேலைநிறுத்தம் வீதிப்போராட்டம், கவனயீர்ப்பு போராட்டங்கள் என மக்கள் சந்தித்த இன்னல்கள் சொல்லில் அடங்காது, இறுதியாக நிலுவைப்பணத்திற்கு என்ன நடந்தென்றே தெரியவில்லை. மக்கள் போராட்டத்திற்கு கிடைத்த வெற்றி என்று ஒன்றுமே இல்லை. சொற்ப சம்பள அதிகரிப்பிற்காக மக்கள் வேலைக்கு செல்லாது, அதன் பின்வந்த காலங்களை மிகுந்த சிரமத்துடனேயே கழித்தனர். மக்களை பணயமாக வைத்து சம்பளப்போராட்டம் நடாத்திய எந்தவொரு அரசியல், தொழில்சங்க வாதிகளுக்கும் எவ்வித நட்டமும் இல்லை. இழப்பெல்லாம் மக்களுக்குதான் குறிப்பாக சில பெருந்தோட்ட கம்பனிகள் குறிப்பிட்ட வேலை நாட்களில் மக்கள் தொழில்களுக்கு சமுமளிக்கவில்லையென்றால் அவர்களுக்கான கொடுப்பனவில் உள்ள சலுகைகளை இல்லாமல் செய்கின்றன. எனவே சம்பளம் கேட்போய் சம்பளம் இழந்த கதையாகவே மலையக மக்களின் நிலை தள்ளப்பட்டிருக்கின்றது. தொழிற்சங்களுக்கு சந்தாவும் கம்பனிகளுக்கு உழைப்பும் அரசுக்கு வாக்குகளும் கொடுக்கும் மலையக மக்கள் தமது சொந்த வருமானத்தினை இழந்து தாமே வீதியில் இறங்கி போராட வேண்டிய தேவைதான் என்ன? நியாயமான வேதனம் கிடைக்கவில்லையென்பதற்காக எந்தவொரு தொழிற்சங்கமும், இதுவரை கூட்டு ஒப்பந்த முறையை நிராகரித்தாக வரலாறு இல்லை. மக்களுக்கு ஒருமுகத்தையும் கம்பனிகளுக்கு பிறிதொரு முகத்தையும் இறுதியாக ஊடகங்களுக்கு வேறு முகங்களையும் காண்பிக்கின்றது.

வாறு பலமான தொழிற்சங்கம் கையில் இருந்தால் பதவிகள் கிடைக்காவிட்டாலும் கூட வயிற்றுப் பிழைப்பு நடத்தலாம் என்பதால் சந்தாவுக்காக கட்சிகள் தொழிற்சங்கம் என்ற வருமான மார்க்கத்தை தேர்ந்தெடுக்கின்றன. இதற்காக மலையக மக்கள் எல்லா காலத்திலும் ஏமாறுவார்கள் என நினைப்பது அபத்தம். மக்களின் உரிமைகளை போராடி பெற்றுக்கொடுக்கத்தான் தொழிற்சங்கமும் அரசியல் பிரதிநிதிகளும் தேவைப்படுகின்றன. மாறாக மக்களை விற்று அதன்மூலம் பிளைப்பு நடத்துவதற்கல்ல. இதுவரை மக்களை வீதிக்கு அழைக்காமல் சட்டரீதியாக சம்பளப்பிரச்சினையை அணுகிய எந்தவொரு தொழிற்சங்கமும் அடையாளம் காணப்படவில்லை. அவ்வாறு நடந்தால் தமக்கான சலுகைகள் இல்லாதுபோகுமென அரசியல்வாதிகளுக்கு நன்றாகவே தெரியும். மக்கள் உண்ணாவிரதம் இருப்பதும், வேலைநிறுத்தம் செய்வதும் பின்னர் அதனை அரசியல்வாதிகள் தமக்கு சாதகமான களமாக பயன்படுத்தி கொள்வதும் வழமையாக அரங்கேறுகின்றன. மக்களுக்காக தமது சுபபோகங்களையும், வரப்பிரசாதங்களையும் இழக்கும் நிலையில், எந்தவோர் அரசியல்வாதியும் இல்லையென்பதுவே நிதர்சனமாகும். கூட்டு ஒப்பந்தத்தில் காணப்படும் வெளிப்படை தன்மை இன்மையும் கைச்சாத்திடும் தொழிற்சங்களின் அரசியல் இலாபங்களும் இன்று இம்முறைமையின்மேல் விமர்சனங்களை முன்வைக்க சாதகமான காரணிகளாகவிருக்கின்றன. மாற்று முறைமையையொன்றை கொண்டுவருவதுகுறித்து இன்று சிந்திக்கவேண்டியுள்ளது. பெருந்தோட்ட பிராந்திய அபிவிருத்தி அதிகாரசபையின் உருவாக்கம் மற்றும் பெருந்தோட்ட அமைச்சு ஆகியவற்றின் பங்களிப்புடன் நியாயமான சம்பள சூத்திரம் ஒன்றும் முன்வைக்கப்பட வேண்டும். சம்பளப்போராட்டத்தினை மக்களுக்கும், கம்பனிக்கும் இடையிலான விடயமாக மட்டுப்படுத்தாது, அரசாங்கத்தின் தலையீட்டை கோரும் அழுத்தங்களை அரசியல் கட்சிகளும் சிவில் அமைப்புக்களும் முன்னெடுக்க வேண்டும். நாட்டில் ஏற்றுமதி வருமானத்தின் கணிசமான பகுதியை நிரப்பும் பயிரான தேயிலையை பாதுகாப்பதும், அபிவிருத்தி செய்வதும் அரசாங்கத்தின் பொறுப்பு எனவே உற்பத்தியாளர்களின் நலனில் பாராமுகமாக இருப்பதை தவிர்த்து உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். அந்தவகையில் மலைய மக்களின் சம்பளபோராட்டத்திற்கு எதிர்வரும் நாட்களில் மலையக ஆசிரியர்கள் வர்த்தகர்கள் சிவில்சமுகத்தினர். உட்பட மலையவாழ் புத்திஜீவிகள் அனைவரும் இணைந்து கைகோர்க்க வேண்டும். சாத்தியமான பொருளாதாரப்பின்னணியை உருவாக்குவதற்கு அனைவரும் தத்தமது தளங்களில் இருந்து குரல் கொடுக்க வேண்டும் என்பதே மலையக உறவுகளுக்காக எமதுநாட்டின் முதுகெலும்புகளுக்காக நாம் செய்யும் நன்றிக்கடனாகும்.

# அடையாள அரசியலில் இலங்கை

**கலாநிதி சு.சிவரெத்தினம்**

**பகுதி 07**

சென்ற இதழில் தமிழ்த் தலைவர்கள் தமக்குக்கிடைத்த கணிசமான பிரதிநிதித்துவத்தை சரியானமுறையில் பயன்படுத்தாதது பற்றியும் 'கண்டிய தேசிய அசெம்பிளி' முன்வைத்த இலங்கைக்கு ஒரு சமஷ்டி அரசு உருவாக்கப்பட வேண்டும் என்ற கொள்கையை ஆதரிக்காதது பற்றியும் டொனமூர் பிரேரித்த சர்வசன வாக்குரிமையினையும் எதிர்த்தமை பற்றிக் குறிப்பிட்டிருந்தேன்.

இவற்றை மேலும் விரிவாக நோக்குகின்ற போதுதான் தமிழ்த் தலைவர்களின் 'சைவமும் தமிழும்' என்ற கருத்து நிலையின் செயற்பாட்டு நிலையினை விளங்கிக் கொள்ளமுடியும். மானிங் அரசியல் அமைப்பில் இருந்த குறைபாடுகளை நீக்கி இலங்கைக்குப் பொருத்தமான ஓர் அரசியல் அமைப்பினை உருவாக்கும் பொருட்டு 1927ம் ஆண்டு இலங்கைக்கு வருகை தந்த டொனமூர்க் குழுவினர். இரண்டு முக்கிய சிபார்சுகளை முன்வைத்தனர்.

1. கல்வித் தகமை, வருமானம் என்பவற்றின் அடிப்படையில் வழங்கப்பட்ட வாக்குரிமையினை நீக்கி 21 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் வாக்குரிமை.

2. சட்ட நிருபண சபையில் இருந்து வந்த இனவாரி பிரதிநிதித்துவத்தினை நீக்கி அதற்குப் பதிலாக பிரதேச வாரிப் பிரதிநிதித்துவம்.

இவை இரண்டும் ஒன்றோடொன்று இணைந்த வகையிலே சிபார்ச்சு செய்யப்பட்டன. அதாவது சிங்களத் தலைவர்களும் தமிழ் தலைவர்களும் பொறுப்பு வாய்ந்த ஆட்சியைக் கோரினார்கள். இந்தப் பொறுப்பில் மக்களும் பங்குபற்ற வேண்டுமாக இருந்தால் சர்வசன வாக்குரிமையும் பிரதேச வாரிப் பிரதிநிதித்துவமும் இன்றியமையாததாக இருக்க வேண்டும் என டொனமூர்க் குழுவினர் கருதினார்கள். ஆனால் தமிழ்த் தலைவர்களோ இதனை தமது நலன் சார்ந்து அணுகினர். இராமநாதனும் மற்றும் பல பழமைபேண்வாதிகளும் (செல்லத்துரை, சிறிபத்மநாதன், ஆர்.தம்பிமுத்து இதற்கு புறநடையானவர்கள்) வெள்ளாளரல்லாத சாதியினருக்கும் பெண்களுக்கும் வாக்குரிமை அளிப்பது கும்பலாட்சி( ஆழடிசரடந) க்கு இடம் கொடுக்கும் ஒரு பாரிய பிழையென்று நம்பினர். வாதிட்டனர். சிறப்பாக இராமநாதனோ, அவ்வாறு வாக்குரிமை வழங்குவது இந்து வாழ்க்கை முறைக்குப் பழிகேடு விளைவிப்பது என்று கருதினார் (மேற்கோள் கா.சிவத்தம்பி) ஏ.ஈ.குணசிங்காவினைத் தவிர வேறெந்தத் தலைவர்களும் சர்வசன வாக்குரிமை வேண்டுமென்று வாதிடவில்லை.

இலங்கையின் இந்த நிலை டொனமூர் குழுவினரை அச்சமடைய வைத்திருக்கின்றது. இதனை பின்வருமாறு அவர்கள் அறிக்கை செய்தனர். பொறுப்புவாய்ந்த அரசாங்க அதிகாரத்தைக் கொடுத்தல், அதிகாரத்தில் உள்ளவர் மற்றை மக்களுடைய நலன்களைத்தாம் பாதுகாப்பர் என்னும் வாக்குறுதியின்றி சிலரோராட்சிகையில் முழுவதிகாரத்தையும் விடுவதற்கொப்பாகும். மேன்மை தங்கிய அரசரின் அரசாங்கம் இலங்கையிலுள்ள செல்வர், கற்றறிவுள்ளோர் ஆகியோர்க்கு மட்டும் அரசாங்கமன்றி, மக்கள் தொகையில் பெரும்பாலோராயமைந்த நாட்டவர், கூலிகள், எளியவர், யாவருக்கும் பாதுகாப்பாயுள்ளதென்பதை நாங்கள் இங்கு எடுத்துக் கூறவேண்டியதில்லை. பிற்கூறிய ஏழை மக்களின் நலன் யாவற்றையும் முன்கூறிய வகுப்பினரின் கட்டில்லாத அதிகாரத்தில் விட்டு விடுவது நம்பிக்கைப் பொறுப்பற்ற முறையாகும். ஆயினும் வாக்குரிமையை விரிவடைய ஒத்துக் கொள்ளாது, முழுப் பொறுப்பு வாய்ந்த அரசாங்கத்திற்கு உரிமைகொண்டாடியவர்கள், மேற்கூறிய விடயத்தின் இயல்பினை நன்கறியாதவர்களாகத் தோன்றவில்லை

பிரதானமாக, வடமாகாணத்திலும் கீழ் மாகாணத்திலும் காணப்படும் தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் நிலை எமக்கு மிகுந்த கவலையையும் பதற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது. அவர்கட்கென எவ்வகையான ஒரு பிரதிநிதித்துவத்தையேனும் ஏற்படுத்துதல் வேண்டுமோ என்பது பற்றியே நாம் இங்கு ஆராய்தல் வேண்டும். நாம் காட்டிய பொதுக்காரணங்களைத் தவிர்த்தாலும், அம்மக்கட்கு வாக்குரிமை அளிக்கப்படுதலும், அவர்கட்குச் சமமான போதிய கல்வி வாய்ப்புக்கள் அளிக்கப்படுதலுமே அவர்களின் நிலையைச் சீர்திருத்துவதற்கான வழிகள் என்று நாம் கருதுகிறோம். (தொனமூர் அறிக்கை)

எனவே இங்கு எமது சுதந்திரப் போராட்ட தலைவர்களை விட எம்மை பொருளாதார ரீதியாகச் சுரண்டி ஆட்சி செய்த காலனித்துவ வாதிகள் மக்களின் அரசியல் சுதந்திரத்தையும் சமூகவிடுதலையையும் கூடுதலாக நேசித்துள்ளார்கள் எனலாம். இது போன்றதொரு நேசிப்பை யாழ்ப்பாண மாணவ காங்கிரசிடமும் காணக்கூடியதாக இருக்கின்றது. 1924ம் ஆண்டு இடம் பெற்ற அவர்களின் முதலாவது மகாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் சைவமும் தமிழும் என்ற கருத்துநிலைக்கு நேர்மாறான மக்கள்நிலைப்பட்டவையாக இருந்தன. குறிப்பாக தற்போது நாட்டில் நிலவிவரும் சாதி வேறுபாடுகள் தேசத்தின் முன்னேற்றத்திற்குத் தடையென இக்காங்கிரஸ் கருதுகிறதென்றும், நம்மிடையே இருந்து தீண்டாமை என்னும் காயத்தை இயன்றளவு அகற்றுவதற்கு காங்கிரஸ் அங்கத்தவர் முயல்வாரென்றும் தென்னிலங்கையில் தமிழும் வட இலங்கையில் சிங்களமும் படிப்பிப்பதற்கான நடவடிக்கைகளை விரைவாக காங்கிரஸ் எடுக்க வேண்டும் என்பன போன்ற தீர்மானங்கள் மக்கள் நிலைப்பட்டவையாகவும் தூரநோக்குடையவையாகவும் இருந்தன. துரதிஸ்ட்டவசமாக இவ்வாறான சிந்தனைத்தளங்களைக் கொண்டவர்களை மேலாதிக்க சமூகமும் அரசும் கவனத்தில் கொள்ளவில்லை.

1920ம் ஆண்டில் மானிங்கினால் அறிமுகப்படுத்தப்பட்ட இனவாரிப் பிரதிநிதித்துவத்தினை பிரித்தானியரின் பிரித்தாளும் நடவடிக்கை இது என பல அரசியல் அறிஞர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர். குறிப்பாக பேராசிரியர் கே.எம்.டி சில்வா பின்வருமாறு கூறுகின்றார். இலங்கையில் பிரித்தானியரின் ஆட்சிக்கு எதிராக முளைத்த சகிக்க முடியாத ஒரு சவால் என இலங்கைத் தேசிய காங்கிரஸைக் கருதிய மனிங், பயங்கரமான ஒரு எதிரியை முறியடிக்கும் பாணியில், ஈவிரக்கமற்ற முறையில் அதற்கு முட்டுக்கட்டை போடுவதற்கான முயற்சியில் ஈடுபட்டார். இலங்கையின் பல் இனச் சமூகத்தில் காணப்பட்ட இன வேறுபாடுகளையும் பதட்டநிலைமைகளையும் மிகச் சாதுரியமாக வேண்டுமென்றே பயன்படுத்தி இம்முயற்சியில் அவர் வெற்றி பெற்றார் எனக் கூறலாம். உண்மையாகவே இலங்கையின் அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களில் ஏற்பட்ட பிரச்சினைகளை அவர் கையாண்ட விதம் பிரித்தாளும் கொள்கையை நடைமுறைப் படுத்த வழிகாட்டும் பாடநெறி நூலாகக் கொள்ளத்தக்கது (மேற்கோள் சுசில் சிறவர்த்தனா)

இவ்வாறு பிரித்தாளும் தந்திரங்கள் பற்றி சிலாகித்தப் பேசுவோர் இவ்வாறு பிரித்தாள்வதற்கு அடிப்படையாக அமையும் அந்த அடையாளங்கள் பற்றி மௌனம் காக்கின்றனர். அல்லது அவற்றை மூடி மறைக்க முற்படுகின்றனர். உயர் வர்க்கத்தினரின் வர்க்க குணாம்சத்தினை நிரந்தரமான இன ஒற்றுமைகளாக கற்பிதம் செய்து கொள்கின்றனர். உதாரணத்திற்கு 1915ம் ஆண்டு இடம் பெற்ற கலவரத்தினை அடக்குவதற்கு பிரித்தானியர் கையாண்ட கொடுமையான அடக்குமுறைக்கு எதிராக குரல் கொடுக்கவும் சிறையிடப்பட்டிருந்த சிங்களத் தலைவர்களை மீட்பதற்காக சேர்.பொன். இராமநாதன் உலக யுத்த அச்சத்துக்கும் மத்தியில் பிரித்தானியா சென்று அரசிடம் தமது பக்க நியாயங்களை எடுத்துக் கூறி விடுதலை பெற்றுக் கொடுத்ததும், அந்த மகிழ்ச்சியின் வெளிப்பாடாக அவரை பல்லக்கில் தூக்கியதும், இதற்குப் பிரதியுபகாரமாக சேர்.பொன் அருணாசலம் அவர்களை தேசிய காங்கிரஸின் தலைவராக்கியமையும் நிரந்தர ஒற்றுமையின் வெளிப்பாடாகக் காண்கின்றனர். இந்த ஒற்றுமையினை மனிங் சீர்குலைத்துவிட்டதாக முடிவுசெய்கின்றனர். இவ்வாறான பார்வையும் முடிவும் சமூக வரலாற்று நிலைக் கண்ணோட்டத்தில் தவறானதாகும். இலங்கையில் காலாகாலமாக வர்க்க ஒற்றுமையினை விட இன அடையாளமும் சாதி அடையாளமுமே வன்மமாகத் தொழிற்பட்டு வந்துள்ளதைக் காணலாம். பொதுவான விடயங்களில் சிலவேளைகளில் வர்க்க ஒற்றுமையை வெளிப்படுத்தினாலும் அடிப்படையாக இருப்பது இன, சாதி அடையாளங்களேயாகும். தொழிற்சங்கத் தலைவர் ஏ.ஈ.குணசிங்கா கூட இறுதியில் வர்க்க ஒற்றுமையினைப் புறந்தள்ளி இன அடையாளத்துக்குள்ளே சரணாகதிரடைந்தமை பற்றி கடந்த பகுதிகளில் குறிப்பிட்டிருந்தேன்.

எனவே மனிங் இல்லாத ஒன்றைக் கண்டுபிடித்து எம்மை பிரித்தாண்டார் என்பன போன்ற வாதங்கள் எமது சமூக நிலைமையினைப் புரிந்து கொள்ளாமல் வைக்கப்படுவது எனலாம்.

மனிங்கினால் அறிமுகப்படுத்தப்பட்ட இனவாரிப் பிரதிநிதித்துவத்தினையே டொனமூர் மாற்றி பிரதேச வாரிப் பிரதிநிதித்துவத்தினை அறிமுகப்படுத்தினார். டொனமூர் இதனைப் பிரேரித்த போது சிறுபான்மையினத்தினரும் கண்டிச் சிங்களவர்களும் தமக்கு இனவாரிப் பிரதிநிதித்துவமே தேவையென வாதாடினர். கண்டிச் சிங்களவாகள், கண்டி மாகாணங்களுக்கு சுயாட்சியே தேவையென்ற கோரிக்கையினை முன்வைத்தனர்.

டொனமூர் குழுவினர் இவ்விரு கோரிக்கைகளையும் நிராகரித்தனர். இனவாரிப் பிரதிநிதித்துவம் இனங்களைப் பிரித்தாளும் இயல்புடையது என்றும், எல்லோர் பொது நலனையும் பேணாது குறிப்பிட்டவர்களின் நலனை மாத்திரம் இது பேணுவதால் ஜனநாயகத் தன்மையற்றது என்றும் இதுவரை பிரதிநிதித்துவத்தினைப் பெற்றிராத சாதி, சமயப் பிரிவினர் மற்றும் தனிப்பட்ட இயல்புகளைப்பாதுகாக்க விரும்புவோர் என்போரும் தங்களுக்கான பிரதிநிதித்துவத்தினைக் கோரும் போது சட்டசபை அங்கத்தவர்கள் அதிகரிப்பர். அத்துடன் இவ்வாறு பிரதிநிதித்துவம் வழங்கினால் வேறுபாடுகள் அழியாது வளர்வதற்கான சூழலே உருவாகும். எனவே வேறுபாடுகளை அழிப்பதற்கான வழி இனவாரிப் பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்வதேயாகும் எனக் கூறி நிராகரித்தனர்.

**தொடரும்**



# என்ன செய்யப் போகின்றன முஸ்லிம் தலைமைகள்?

தந்திமகன்

நாடு அரசியல்ரீதியாக தள்ளாடிச் செல்கிறது. யார் பிரதமர், யார் அமைச்சர்கள் என்று எவருமே இல்லை எல்லாம் நானே என்கிற வகையில் அதிகாரம் ஓரிடத்தில் குவிந்துள்ளது. பாராளுமன்ற அதிகாரத்திற்கும், நிறைவேற்று அதிகாரத்திற்கும் இடையில் யார் யாரை வெல்வது என்பதில் குதியோட்டடும் இன்றைய அரசியல் சூழ்நிலையில் தன் மக்களுக்காக எதனைச் செய்யப்போகிறோம் என்பதில் எதற்காக இவருடன் இணைந்திருக்கிறோம் என்று வெளிப்படையாகவே கூறிவரும் தமிழ்த்தலைமைகள் ஒருபுறம் பெரும்பான்மையினராக இருந்தும் சிறுபான்மையினரின் அனுசரணையின்றி ஆட்சியமைத்தால் இக்கதிதான் நடக்கும் என்பதை நாட்டின் பெரும்பான்மையினருக்கு உணர்த்திக்கொண்டிருக்கும் பேரினவாதத் தலைமைகள் ஒருபுறம், இரண்டுக்கும் பொதுவானவர்கள் என்பதையெல்லாம் மறந்து தாம் இல்லை என்றால் யாரும் ஆட்சியமைக்க முடியாது என்பதை மார்தட்டிக் கொண்டு பேசிவரும் முஸ்லிம் தலைமைகள் அமைதியாக இருக்க வேண்டுமா? அல்லது நிறைவேற்றதிகாரமும், நாட்டு மக்களும் நிராகரிக்கின்ற அரசியல் தலைமைகளின் பின்னால் கட்டுண்டு கிடப்பதற்கான தேவை என்ன என்பதை முஸ்லிம் தலைமைகள் இன்றைய அரசியல் சூழ்நிலையில் அந்த மக்களுக்கு கூறவேண்டிய கடமைப்பாடு தோன்றியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

நிறைவேற்று அதிகாரத்திற்கு உட்பட்ட அரசியல் யாப்பின் அடிப்படையில் பாராளுமன்றத்திற்ன அதி;காரம் போராடும் நிலையில் அதன் பரிதாபகரமான காட்சிகள் கடந்த சில வாரங்களாக ஏற்பட்டிருக்கின்றன. இதனை யார் முடிவுக்குக் கொண்டுவருவார் என்பதில் யாருக்குமே தெரியாத நிலையில் காணப்படுகிறதா என்கிற கேள்விகளும் பொதுமக்களால் பார்க்கப்படுவதையும் நோக்க வேண்டியிருக்கிறது. பாராளுமன்றத்தினும் மிளகாய் தூள் வீசி, பொல்லடி, சொல்லடி என்ற பலவற்றைக் கூறிக் கொண்டு போகும்போது முஸ்லிம்களால் மாத்திரமன்றி சமயத்தை மதிக்கின்ற ஒவ்வொரு மனிதர்களுக்குள்ளும் இருக்கின்ற சமயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்ற இறைவேதங்கள் புனிதமான நூல்களும் பாராளுமன்றத்திற்குள் வீசப்பட்ட சம்பவம் காணொளியாக வலம் வருவதைப் பார்க்கின்றபோது மிகவும் கவலையாக இருக்கிறது. இதுசம்பந்தமாக அதன் உள்ளே இருக்கின்ற முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள், முஸ்லிம்களின் வாக்குகளைக் கொண்டு பாராளுமன்றம் வந்தவர்கள் ஆட்சேபனை யாவது தெரிவிக்கவில்லை என்கிற கவலையும் மக்கள் மத்தியில் பேசப்படுகின்ற ஒரு விடயமாகும். பாராளுமன்றத்தில் தனக்கு மிளகாய் தூள் தாக்குதல் நடத்தப்பட்டமை குறித்து ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் காமினி ஜயவிக்கிர

> **முஸ்லிம் தலைமைகள் யாரை ஆதரிக்க வேண்டும் என்பதில் அந்த மக்களின் கருத்தினையும் அறிய வேண்டியும் இருக்கிறது. அதாவது ஒரு அணிக்கு மாத்திரம் கடுமையான அழுத்தங்களை கொடுக்க வேண்டிய அவசியம் ஒன்றும் இல்லாதபோது ஏன் முஸ்லிம் தலைமைகள் ஒரு பக்கத்திற்கு சாய்ந்து கொண்டு ஆதரவு தெரிவிக்க வேண்டும் என்கிற கேள்விகளும் மக்கள் மத்தியில் எழுகின்றது**

பெரேரா பொலிசாரிடம் முறைப்பாடு செய்யச்சென்றார். இதன்போதே பாராளுமன்றத்தில் தூக்கிவீசப்பட்டது புனித குர்ஆன் எனவும் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எதுவாக இருந்தபோதிலும் தனது சமூகத்தின் ஒட்டுமொத்த பிரதிநிதிகளாகவே பாராளுமன்றத்தில் ஒவ்வொரு உறுப்பினர்களும் காணப்படுகின்றனர். இந்நிலையில் மக்களுக்கு அதாவது வாக்களித்த மக்களுக்கு பொறுப்புக்கூற வேண்டியது அந்தந்த உறுப்பினர்களின் நிலையாகும். அது நடைபெறுகின்றதா என்றால்கூட முஸ்லிம்களைப் பொறுத்தளவில் அது குறைவாகவே இருக்கிறது. இன்னும்மொறு விடயத்தையும் நாம் பார்க்க வேண்டியிருக்கிறது. முஸ்லிம் தலைமைகள் யாரை ஆதரிக்க வேண்டும் என்பதில் அந்த மக்களின் கருத்தினையும் அறியவேண்டியும் இருக்கிறது.



அதாவது ஒரு அணிக்கு மாத்திரம் கடுமையான ஒத்தனங்களைக் கொடுக்க வேண்டிய அவசியம் ஒன்றும் இல்லாதபோது ஏன் முஸ்லிம் தலைமைகள் ஒரு பக்கத்திற்கு சாய்ந்து கொண்டு ஆதரவு தெரிவிக்க வேண்டும் என்கிற கேள்விகளை மக்கள் கேட்கிறார்கள்.

உண்மையில் நாம் மேலே கூறியபோல வடக்கையும் கிழக்கையும் தற்காலிகமாவது இணைத்துத் தாருங்கள் என்று ஐக்கியதேசியக் கட்சியிடம் தமிழர் தரப்பு கேட்கும் அளவுக்கு இல்லாவிட்டாலும் பரவாயில்லை இலங்கையில் வாழும் முஸ்லிம்களுக்குள்ள பிரச்சினைகள் தொடர்பாகக்கூட பேசாது முழுமயான ஆதரவினை வழங்கும் நோக்கம்தான் என்ன என்பதையும் அறியவேண்டியிருப்பதாக மக்கள் பேசிக்கொள்வதையும் நாம் அறியக்கூடியதாக இருக்கிறது. அதேவேளை, இன்றைய அரசியல் குழப்பங்களுக்குள் அகப்படாமல் கட்சிகள் குறிப்பாக முஸ்லிம்களிடம் செல்வாக்குப் பெற்ற இரண்டு கட்சிகளும் ஒன்றாகியிருக்கின்றன. இந்த சூழ்நிலையை நன்கு பயன்படுத்தி குறிப்பாக கிழக்கில் அதிலும் குறிப்பாக அம்பாரையை மையப்படுத்திய பிரச்சினைகள் எவ்வளவோ காணப்படுகின்றன. அவற்றினையாவது வெற்றிகொள்ள போட்டியில் இருக்கின்ற பெரும்பான்மைக் கட்சித் தலைமைகளிடம் பேசி தனது ஆதரவினை வழங்கியிருக்கலாம் என மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால் நடைபெறவில்லை.

அம்பாரை மாவட்டத்தைப் பொறுத்தளவில் கல்முனைப் பிரதேசத்தில் தமிழர் முஸ்லிம்கள் ஒற்றுமையாக வாழ்ந்து வந்திருந்தாலும் அவ்வப்போது முரண்பாடுகள் ஏற்பட்டன. இன்னும் அவை நீறுபூத்த நெருப்பாகவே இன்றும் காணப்படுகின்றது.

அதனைத் தீர்க்கும் வகையி;ல் சாய்ந்தமரு பிரதேச சபைக் கோரிக்கை, கல்முனை தமிழர் பிரதேச சபை என்பனவற்றையாவது கொஞ்சம் மேலெடுத்து தீர்வினை பொற்றுக்கொள்வதற்குரிய ஏற்பாடுகளையாவது முன்னகர்த்தியிருக்கலாம் என்கிறார்கள் கல்முனை பிரதேச மக்கள். சாய்ந்தமருது தனியான பிரதேச சபையை பெற்றுத் தருமாறுவேண்டிய முன்னாள் பிரதமர்களான ரணில் விக்கிரமசிங்க அவர்கள் தேர்தல் மேடையொன்றில் நேரடியாக வருகைதந்தும் கூறியிருந்தார்.

மகிந்த ஆட்சியில் முன்னாள் அமைச்சர் அதாஉல்லா ஊடாக சரியான சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டிருந்ததாக கூறப்பட்ட போதிலும் அவரும் செய்யவில்லை, இவரும் செய்யவில்லை. அடிப்பட்டது மக்களே ஆகும். இது இன்னும் தீர்க்கப்படாமலே இருக்கிறது என்பதை இந்தச் சந்த்ர்ப்பத்திலாவது நிறைவேற்ற ஒரு கைகொடுத்திருக்கலாம். அரசியலில் பகைமையும், உறவும் நீடிப்பதில்லை என்பார்கள். இதனைப் பெற்றுக்கொடுத்தாவது சாய்ந்தமருது மக்களோடு உரிமை பாராட்டியிருக்கலாம். இரு பிரதான முஸ்லிம் கட்சிகளும் இணைந்திருப்பதால் வாய்ப்பாக இருந்த சந்தர்ப்பம் நழுவிவிட்டது என்பதனால் அடுத்த தேர்தலில் இந்தக் கட்சிகள் எவ்வாறு காய்நகர்த்தப்போகிறார்கள் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டியிருக்கிறது.

ரணில் அவர்களின் ஆட்சியை இரவோடு இரவாக மாற்றியமைத்த ஜனாதிபதி அவர்களின் நிலைப்பாடு பற்றியும், பிரதமராக நியமிக்கப்பட்ட மஹிந்த அவர்களை ஏற்றுக்கொண்டு கட்சித்தாவல்கள் செய்வார்களோ என்று மக்கள் எதிர்பார்த்தபோது முஸ்லிம் தலைமைகள் இரண்டரக்கலந்து புனித மக்கா சென்று ஒற்றுமைப்பட்டு இதற்கு ஒரு முடிவுகட்ட வேண்டும் என்கிற நிலைப்பாட்டுடன் நாடு வந்த வேளையில் அறிக்கையொன்றை வெளியிட்ட முஸ்லிம் கட்சிகளின் தலைமைகள் இவ்வாறு தெரிவித்திருந்தன.

அதாவது, மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பது தமக்கு பாதிப்பையே ஏற்படுத்தும். புதிய ஆட்சி மாற்றத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. இதுவொரு சட்டவிரோதமான செயற்பாடு என்ற நிலைப்பாட்டிலேயே நாங்கள் தொடர்ந்தும் இருந்து வருகிறோம்.

14 ஆம் பக்கம் பார்க்க....

# அம்பாறை மாவட்ட மக்களின் காணிப்பிரச்சினை எந்த அரசியல்வாதியின் காதுகளிலும் விழவில்லையா?

அம்பாறை மாவட்டம் மூவினங்களும் வாழும் ஒரு மாவட்டம். இருப்பினும் முஸ்லிம்களைப் பெரும்பான்மையாக கொண்டிருக்கின்ற ஒரேயொரு மாவட்டம் இதுவென்றும் கூறலாம். இந்நிலையில் அந்த மக்களின் இருப்பிடத்தை காவுகொள்ளச் செய்கின்ற பல்வேறு யுக்திகள் பல்வேறு காலகட்டங்களில் பேரினவாதிகளினாலும், பேரினவாத அரசியல் தலைமைகளினாலும் ஏற்படுத்தப்பட்டு இன்று தமிழ்பேசும் முஸ்லிம்கள் மாத்திரமன்றி தமிழர்களினதும் வாழ்வியலை கேள்விக்குறிக்குள்ளாக்கும் வகையில் காணி பிரச்சினை மிகவும் உக்கிரமான ஒரு கட்டத்தில் காணப்படுகின்றன என்பதை அம்பாறை மாவட்டத்தினை மையப்படுத்தி கடந்தகாலங்களில் முஸ்லிம் தலைமைகளிடம் காணிகளை ஆளுகின்ற அரசோடு ஒட்டி உறவாடுகின்றவர்களிடம் பாராளுமன்றம் வரையும் சென்றும், போராட்டங்கள் பல நடாத்தியும் இதுவரையிலும் எவ்விதமான தீர்வுகள் எட்டப்பாடத நிலையில் காணி உரிமைக்கான அம்பாறை மாவட்ட செயலணியினர் கடந்த சில நாட்களுக்கு முன்னர் ஊடகவியலாளர் மாநாடொன்றை நடாத்தி அதில் வெளியிடப்பட்ட கருத்துக்களையே மேற்கூறிய விடயங்களாக அவர்களால் முன்வைக்கப்பட்டிருந்தன.

தொகுப்பு : எஸ்.எல். மன்சூர்

உண்மையில் இன்றைய சூழலில் தமிழ் முஸ்லிம்கள் அம்பாறை மாவட்டத்தில் கடந்த பல ஆண்டுகளாக புட்டும் தேங்காய்ப்பூவும் போல வாழ்ந்து வந்த நிலையில் அரசியல் வங்குரோத்தினை மக்கள் மத்தியில் விதைத்து இனங்களைப் பிரித்தாளும் தந்திரத்தைக் கையாண்டு இவர்களை பிரித்தார்கள். அந்தப் பிரிப்பின் அடையாளங்களாக இன்றும் சில அசட்டலான பிரதேச வாதிகள் இரு இனங்களையும் பிரித்து அதற்குள் குளிர்காய முற்பட்டதன் விளைவே இன்று அம்பாறை மாவட்டம் சிங்கள பேரினத்தின் கைகளில் சிக்கித் தவிப்பதை கண்கூடாகப் பார்க்க வேண்டியிருக்கிறது.

இதற்கு அரசியல்வாதிகள் முக்கியஸ்தர்களாக இருந்தார் என்பதையும் வரலாறு கற்றுத் தந்திருக்கிறது. முஸ்லிம்களின் காணிகள் இன்று பேரினவாதிகளால் கையகப்படுத்தப்பட்டு யுத்தம் என்கிற பேரில் செல்லமுடியாததன் விளைவாக எழுந்த காணிப்பிரச்சினையை தன்னால் காடுவெட்டி கஷ்டப்பட்டு களணியாக்கிய வயல் நிலங்கள் வனப் பிரதேசங்களாக மாற்றப்பட்ட வரலாற்றை என்னவென்று கூறுவது. முஸ்லிம் தமிழர்களுடைய காணிகள் அடாத்தாக பல வருடங்களாக யுத்தத்தை காரணியாக்கி பெரும்பான்மையினர் தொடர்ச்சியாக வேளாண்மை செய்து வருகின்றனர். சீனித் தொழிற்சாலை என்கிற பெயரில் பலநூற்றுக்கணக்கான ஏக்கர்காணிகள் விடுதலைப் பெற வேண்டிய கட்டாயத்திற்குள் தள்ளப்பட்டுள்ளதை யாரிடம் கூறுவது என்று தெரியாமல் போராட்டம் போராட்டம் என்று காலம் தள்ளுகின்ற அம்பாரை மாவட்ட காணிக்கான உரிமையாளர்களின் செயலணியினர் மீண்டும் ஒருமுறை இன்றைய அரசியல் சிக்கலான ஒரு சூழ்நிலையில் முஸ்லிம் தலைமைள் இதனை ஒரு சாட்டாக வைத்து உரிமையைப் பெற்றுதரவேண்டும் என்பதை எதிர்பார்க்கின்றார்கள்.

ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த காணி உரிமைக்கான அம்பாரை மாவட்டச் செயலணியினர் இவ்வாறு கூறியிருந்தனர். மேலும், அம்பாரை மாவட்டத்தில் திட்டமிட்டு ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளில் ஒரு ஏக்கர் காணியைக்கூட கடந்த நல்லாட்சியில் ஒட்டிக்கொண்டிருந்த முஸ்லம் மற்றும் தலைமைகள் மீட்டுக்கொடுக்காமலே ஆட்சி மறைந்துவிட்டது என இந்த அமைப்பினர் விசனம் தெரிவித்தனர். காணி உரிமைக்கான செயலணி கடந்த இரண்டரை வருடங்களாக காணி உரிமை மறுக்கப்பட்ட நலிவுற்ற மக்களின் உரிமைக்குரலாக தேசிய மட்டத்தில் ஒலிக்கச் செய்து வருகின்றது. குறிப்பாக இதனை யாரும் கண்டுகொண்டதாகவும் தெரியவில்லை. அவ்வப்போது தேவை ஏற்படுகின்றபோது மாத்திரம் காதுகொடுத்து கேட்டுவிட்டு மறந்துவிடும் அரசியல்வாதிகளுக்கு எதிர்வரும் தேர்தலின்போது அதற்கான பாடம் கற்பிக்கப்படும் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும், வன விலங்கு மற்றும் தொல்பொருள் இலாகாக்களின் பெயரில் காலத்தி;ற்குக் காலம் திட்டமிட்டு வெளியிடப்பட்ட வர்த்தமானிகளை பயன்படுத்தியும், திட்டமிட்ட அபிவிருத்தி என்கிற போர்வையில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காகவும் அப்பாவி ஏழை விவசாயிகள் விவசாயம் செய்துவந்த காணிகளையும், குடியிருப்பு காணிகளையும் அபகரித்துள்ளது. அதற்கும் மேலாக பேரினவாத நில அபகரிப்பாளர்கள் அடாவடித்தனமான காணி பறிப்புக்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுவரும் இனவதா யுக்திகளை பயன்படுத்தியும் ஆக்கிரமிப்புக்களை மேற்கொண்டு வருவதையும் முறையாக ஆவணப்படுத்தியிருக்கின்றோம். இதனை பல அரசியல் தலைமைகளிடமும் காண்பித்திருந்தபோதிலும் நிலையான தீர்வுகள் எட்டப்படாத நிலையிலேயே இத்தகை ஊடகவியலாளர் ஒன்றுகூடலை நடாத்தி இதனை வெளியிட வேண்டிய கட்டாயச் சூழலுக்குள் தள்ளப்பட்டுள்ளதை மிகக் கவலையுடன் தெரிவிக்க விரும்புவதாக அந்த அமைப்பின் தலைவர் கைறுதீன் தெரிவித்தார்.

மேலும் அங்கு கருத்துரைத்த அதன் அமைப்பாளர்கள், உறுப்பினர்கள் இவ்வாறு தெரிவித்தனர். அதாவது, இக்காணிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பொறுப்பான அரசாங்க அதிகாரிகள் தங்களால் எவ்விதமான முன்னகர்வுகளையும் எடுக்க முடியாது எனக் கைவிரிக்கின்றனர். இதற்கு பிரதானமான காரணமாக அமைவது நாங்கள் இந்நாட்டின் சிறுபான்மையினர் என்பதேயாகும். சிறுபான்மையினத்தினைக் குறிவைத்து மேற்கொள்ளப்படுகின்ற இக்காணி ஆக்கிரமிப்புக்கள் அனைத்தும் தேசிய அரசியலின் திட்டமிட்டதொரு நிகழ்ச்சி நிரலின் பிரதான பங்காகவே எம்மால் பார்க்கப்படுகின்றது. இக்காணிப் பிரச்சினைகளுக்கான நிரந்தரத் தீர்வாக பாதிக்கப்பட்ட மக்கள் நீதியான அரசியல்வாதிகளின் முன்னால் அரசியல் தீர்வினைக் கோரி அணிதிரண்டபோது இவற்றினை தாங்கள் பொறுப்பேற்று தீர்த்து வைப்பதாக கூறியவர்கள் எதுவுமே செய்யமுடியாதவர்களாக மாறியிருக்கின்றனர். இந்தச் சமூகத்தின் பிரச்சினைகளை தீர்க்க வேண்டியவர்கள் பொறுப்புக் கூறவேண்டியவர்கள் எமது அரசியல் தலைமைகள் கடந்த நல்லாட்சியில் நல்லவற்றை மேற்கொள்வார்கள் என்று நம்பியிருந்த வேளை அவர்கள் கூட்டு மொத்தமாக இந்தச் சமூகத்தை ஏமாற்றியவர்களாகவே நாம் கருதவேண்டியிருக்கிறது.

தற்போது தேசிய கட்சிகளுக்கிடையிலான பனிப்போர் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நீயா? நானா? என்கிறபோட்டியில் அதிகாரத்தை முழுமைப்படுத்தும் வகையில் சிறுபான்மைக் கட்சிகள் முன்னிலை வகிக்கின்றன. அந்த முன்னிலையிலாவது எமது சமூகத்திற்குரிய தீர்வுகளை முன்வைக்காமல், சமூகத்தின் குரல்களை கேட்காமல் ஆதரவு என்கிறபேரில் நாடகமாடுவதைப் பார்க்கின்றபோது மிகவும் கவலையாக இருக்கிறது. தமிழ்த்தலைமைகள் வடக்கின் தீர்வினை முன்னிலைப்படுத்தி கேட்கின்றபோது வழங்கப்படும் என்கிற உறுதிமொழிகளைப் போன்று ஏன் கிழக்கில் வாழும் குறிப்பாக அம்பாரை மாவட்டத்தில் கடந்த காலங்களில் ஏற்பட்ட காணி இழப்புக்களை மீட்டெடுக்கின்ற ஒப்பந்தங்களை மேற்கொள்ளாது வெறும் ஆதரவு என்கிற கோஷத்தை மட்டும் கூறிக்கொண்டிருப்பதால் முஸ்;லிம் சமூகத்திற்கு எவ்விதமான நன்மையும் கிடைக்கப்போவதில்லை என்பதையும் நாம் இவ்விடத்தில் கூறிக்கொள்கின்றோம். தங்களுடைய அதிகாரம் கையில் இருக்கி;ன்றபோதாவது இதனை மேற்கொள்ளவில்லை என்றால் எப்போது இந்தச் சமூகம் விடுதலை பெறுவது என்பதை நாம் அரசியல் தலைமைகளிடம் கேட்க விளைகின்றோம்.

எவ்வாறாகினும் நாம் இலங்கையர் என்பதில் பெருமகிழ்வுறுகின்றோம். நாம் விவசாயிகள் என்று சொல்வதில் பெருமகிழ்கின்றோம். இங்கு பிறந்த நாம் சுதந்திரமாக வாழவேண்டும் என்பதற்காக எமது நிலம் எமது வாழ்க்கை எமது நிலத்தினை அபிவிருத்தி செய்வதன் ஊடாக எமக்கவும், எமது தேசத்தின் உற்பத்திக்காவும் பாடுபடுவதே எமது இலக்கு. இம்மனோநிலையினை தவிடுபொடியாக்கி இனரீதியாக, மதரீதியாக ஒடுக்குமுறைக்குள்ளாக்கி எமது நிலங்களை பறித்து வாழ்வாதாரத்தினை முடக்கி எம்மை வறுமையாளர்களாக அழகு பார்ப்பதில் அரசுக்கு என்ன இலாபம் என்பதையும் இச்சந்தர்ப்பத்தில் கேட்கின்றோம். எமக்குத் தெரிந்ததெல்லாம் விவசாயம்தான். எமது ஜனாதிபதி அவர்கள் கூட விவசாயத்திற்கு முன்னிலை கொடுத்தே வருகின்றார். அவ்வாறான நிலையில் எமது காணிகளை எம்மிடம்

14 ஆம் பக்கம் பார்க்க....



# இலங்கையின் அரசியல் தீர்வுக்கு பிடிவாதங்கள் ஒருபோதும் தீர்வாக அமையாது

உலக நாடுகளை எடுத்துக் கொண்டால் அரசியல் பிரச்சினைகள் என்பது இல்லாத புதிய விடயமல்ல. அது ஏதோ ஒரு வகையில் இருந்து கொண்டுதான் இருக்கின்றன. அரசாங்கம் என்று ஒன்று இருக்கும்போது அதற்கு சாதகமாகவும், பாதகமாகவும் கருத்துக்கள் இருக்கதான் செய்யும். ஆனால் அது எந்த விதத்திலும் மக்களையோ அல்லது வாக்காளர்களையோ பாதிப்பனவாக அமைந்து விடக்கூடாது என்பதே முக்கியமான விடயமாகும்.

ஒவ்வொரு நாடுகளிலும் அரசியல் பிரச்சினைகள் ஒவ்வொரு விதமாக இருக்கின்றன. அவ்வாற இருந்தாலும் அவை ஏதோ ஒரு வகையில் தீர்வின் அடிப்படையில் அல்லது விட்டுக் கொடுப்பின் அடிப்படையில் சீர் செய்யப்பட்டு வருவதையும் நாம் காணக்கூடியதாக உள்ளது. ஆனால் இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்களும் அதன் குழப்ப நிலைமைகளம் ஒருவகையான புதுவித தோற்றம் பெற்று நாட்டையும், நாட்டு மக்களையும் பாரிய பாதிப்புக்குள் உள்ளாக்கி இருப்பதுதான் வியக்கத்தக்க ஒரு சம்பவமாகும்.

**சத்தார் எம் ஜாவித்**

குறிப்பாக இந்த நாட்டில் ஏற்படுத்தப்பட்ட அரசியல் மாற்றமானது கடந்த இரண்டு மாத காலமாக பலவாறான விமர்சனங்களுக்கு உள்ளாகி இருக்கின்றது. இதன் காணரமாக இலங்கையின் அரசியல் மற்றும் பொருளாதார விடயங்களில் பாரிய பின்னடைவுகளை ஏற்படுத்தி இருப்பதாக அரசியல் ஆய்வாளர்கள் கவலை தெரிவிப்பதுடன். ஒரு சில அரசியல் வாதிகளுக்கு இடையில் ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு இல்லாத் தன்மைகளும் அவர்களின் சுயகௌரவமும் அவர்கள் தமது அரசியல் இருப்புக்களைத் தக்க வைத்துக் கொள்வதற்காக மேற்கொண்டுள்ள நகர்வுகள் இந்த நாட்டின் முழு மக்களுக்கும் பாரியதொரு பிரச்சினையாகவே உருவெடுத்துள்ளது.




இலங்கையின் அரசியல் வரலாற்றில் என்றுமில்லாதவாறு தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சியில் அவரால் ஏற்படுத்தப்பட்ட மாற்றம் பலரது விமர்சனங்களுக்கு உள்ளாகி இருப்பதுடன் பாராளுமன்றத்திலும் கூட அடிதடியில் முடிந்துள்ளது. இன்று ஒருவருக்கொருவர் முறண்பாடுகளுடன் நோக்கும் சந்தர்ப்பத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றது. இவர்கள் தமக்குள் ஒற்றுமையற்று ஒருவரை ஒருவர் குறைகளைக் கூறிக் கொண்டு தத்தமது அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லும் கைங்கரியங்களில் ஈடுபட்டு வரும் சந்தர்ப்பங்களையே காண முடிகின்றது.

இலங்கையின் அரசியலமைப்பில் ஆட்சியதிகாரங்கள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதனை தெளிவாக குறிப்பிட்டுள்ள நிலையில் ஒருசில அரசியல்வாதிகள் மற்றவர்களின் உணர்வுகளையும், நிலைமைகளையும் புரிந்து கொள்ளாது தமது அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுப்பதால் இன்று அவர்களுக்கு வாக்களித்த மக்கள் நடுவீதியில் இறங்கிப்போராட வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் காணப்படுகின்றனர். மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் முதலில் மக்களின் கருத்துக்களுக்கும், அவர்களின் அபிலாசைகளுக்கும் மதிப்பளித்து முன்னுரிமை கொடுக்கப்படல் வேண்டும். ஆனால் இதுவிடயத்தில் ஒருவருமே மக்களின் பக்கத்திலிருந்து சிந்திப்பதில்லை.

இவ்வாறான குழப்ப நிலையில் ஒவ்வொருவரும் தாம்தாம் நினைத்த வகையில் இந்த நாட்டின் அரசியல் சட்டதிட்டங்களை பூரணமான அறிவின்றி தாம் சொல்லதுதான் சரியென்று கூறுவதும், நான் இப்படிச் செய்தேன், நீ இப்படிச் செய்தாய் என்ற வியாக்கியானங்களில் இருக்கின்றார்களே தவிர மக்களின் நலன்களில் சிறிதளவும் கரிசனை காட்டுவதாகவோ அல்லது அவர்கள் சார்பாக தீர்வுகளை பெற்றுக் கொடுக்கவோ முயற்சிகள் இல்லாது செயற்படுகின்றனர் என்பதே யதார்த்தமான உண்மையாகும்.

இன்று அரசியல் தலைமைகளும், அரசியல் வாதிகளும் சொல்வதையெல்லாம் மக்கள் நம்புவதாக இல்லை. அவர்கள் தொடர்ந்தும் மக்களை ஏமாற்றி வருவதுடன் அவர்கள் தமது பிரச்சினைகளை முன்வைப்பதாக இருக்கின்றனரேதவிர மக்களின் பிரச்சினைகளை கண்டு கொள்ளாது இருக்கின்றனர். இலங்கையின் அரசியல் விடயங்களை எடுத்துக் கொண்டால். இலங்கைக்கு என அரசியல் யாப்பு ஒன்று உள்ளது. அதன் பிரகாரமே ஆட்சியாளர்கள் செல்ல வேண்டுமே தவிர அதற்கு மாற்றமாக செல்ல முடியாது என்பதனை தற்போது மக்கள் நீதிமன்றத் தீர்ப்புக்களினூடாக கண்டு கொள்ள முடிகின்றது.




குறிப்பாக கடந்த ஒக்டோபர் மாதம் 26ஆம் திகதிவரை இருந்த அரசாங்கத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலைத்துள்ளமையின் பிரதிபலிப்புக்கள் இன்று இந்த நாட்டில் ஒரு அரசாங்கம் இல்லை என்பதனை படம்போட்டுக் காட்டியுள்ளது. ஜனாதிபதி எடுத்த முடிவு முற்றிலும் பிழடியானதொரு முடிவு என்பதனை இன்று நாட்டில் உள்ள அனைத்து எதிர்க்கட்சிகளும் குற்றஞ்சாட்டி வருவதுடன். அதற்கு எதிராக சத்தியாக் கிரகங்கள், எதிர்பு ஆர்ப்பாட்டங்கள், பேரணிகளை நாத்தி வருவதுடன் தொடராக ஊடகங்கள் மூலம் கடுமையான விமர்சனங்களையும்கூட முன்வைத்து வருகின்றனர்.

இவ்வாறான நிலைமைகள் நாளுக்கு நாள் இந்த நாட்டின் ஜனநாயக இறைமைகளும் அதன் விழுமியங்களும் பாரிய சவாலான விடயமாகவே மாறிவருகின்றது. இதன் காரணமாக மக்கள் பாரிய குழப்ப நிலையில் இருப்பதுடன் என்ன செய்வதென்று தெரியாது அங்கலாய்த்துக் கொண்டிருக்கின்றனர். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சரியென்று கூறும் விடயங்கள் எதிர்த்தரப்பு மத்தியில் முற்றிலும் பிழையான விடயமாகவே இருக்கின்றது என்ற வாதப் பிரதிவாதங்களுக்கு மத்தியில் ஒட்டு மொத்த மக்கள் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டிய இடமாக பாராளுமன்றம் திகழ்வதால் பிரச்சினைகள் இன்றி சுமுகமாக தீர்வு காணவேண்டிய விடயத்தினை ஒரு தனிமதன் அல்லது தனிப்பட்ட குழு மாற்ற நினைப்பது அல்லது மாற்றங்களை ஏற்படுத்துவது பாராளுமன்ற ஜனநாயகத்திற்கு ஏற்ற விடயமாக இல்லை என்பதே மக்களின் கருத்துக்களாகும்.

இந்த நிலையில் அரசியல் நெருக்கடிகளுக்கு சிறந்த தீர்வுகள் என்ன? என்பதனைச் சிந்திக்க வேண்டும். அரசியல் மாற்றங்களை எந்த அடிப்படையில் முன்னெடுத்தச் செல்ல வேண்டும்? அதற்கான சிறந்த வழிமுறைகள் என்ன என்பதனையும் கண்டறிந்து செயற்பட்டிருந்தால் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் ஸ்திரத் தன்மைகளை இல்லாது செய்திருக்கலாம். ஆனால் ஜனாதிபதி மக்களால் வேண்டாம் என்று ஒதுக்கியவர்களை தனது திடீர் நடவடிக்கையால்; மீண்டும் ஆட்சிக்குள் உள்வாங்கியமையே இன்றுள்ள பாரிய பிரச்சினைகள் என்றவாதம் முன்வைக்கப்பட்டுள்ளது. இதன் தாக்கம் இன்று சர்வதேசம் வரை பூதாகாரமாகி சர்வதேச நாடுகள் தமது கண்டனங்களைத் தெரிவிக்கும் அளவிற்கு பிரச்சினையாகி விட்டது எனலாம்.

முள்ளை முள்ளால் எடுக்க வேண்டும் என்பார்கள். அதேபோல் அரசியல் ரீதியான பிரச்சினைகளை பாராளுமன்றம் மூலம் எடுக்கும்போது அதனை மக்களும் ஏற்றுக் கொள்வர். ஆனால் இது விடயத்தில் ஒருசில அரசியல் வாதிகளின் சூழ்ச்சிகள் முழு மக்களின் அபிலாசைகளையும் மழுங்கடிக்க வைத்து விட்டதாகவே நோக்க வேண்டியுள்ளது. இந்தக் கலங்கத்தைப் போக்க வேண்டும், நாட்டில் நல்லதொரு ஆட்சியமைய வேண்டும் என்பதற்காக இன்று ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி ஒருபுறமும் மறுபுறம் மஹிந்த மற்றும் மைத்திரி தலைமையிலான கட்சியினரும் போராட்டங்களை எதிரும் புதிருமாக நடாத்தி வருகின்றனர்.

இந்தச் செயற்பாடுகளை மக்களும், சர்வதேசமும் வேடிக்கை பார்ப்பதுடன் நாடு பாரிய பின்னடைவுக்குள் சென்று கொண்டிருப்பதையும். மக்களின் தேவைகளை துடைக்க வேண்டியவர்கள் அதனைச் செய்ய முடியாது தடுமாறிக் கொண்டிருப்பதையும் நாம் காணமுடிகின்றது. எது எவ்வாறாக இருந்தாலும் நாட்டின் அரசியல் ஸ்திரத் தன்மைக்கு உடநடியான தீர்வினைக் காண வேண்டிய அவசியமும், அவசரமும் தற்போது ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக ஒவ்வொரு வருடமும் நவம்பர் மாதத்தில் மேற்கொள்ள வேண்டிய வரவு செலவுத்திட்டங்கள் இன்று தயாரிக்கப்படாது இருப்பதும் அதன் மூலம் அபிவிருத்திகளுக்கும் ஏனைய விடயங்களுக்கும் தேவைப்படும் நிதிகளை பெற்றுக் கொள்ள முடியாத நிலைமைகள் ஆபத்தான விடயங்களாகவே இருக்கின்றது. அத்துடன் நாளாந்தம் மக்களுக்கு ஏற்படும் பல்வேறுபட்ட பிரச்சினைகளை யாரிடம் முறையிடுவது? யார் மூலம் நிவர்த்தி செய்வது? போன்ற செயற்பாடுகளுக்கு யார் பொறுப்பு என்பதெல்லாம் இந்த நாட்டின் பொருளாதார பின்னடைவுக்கான விடயங்களாகவே நோக்க வேண்டியுள்ளது. இன்று மலையக தோட்டத் தொழிலாளர்கள் தமது ஆயிரம் ரூபா சம்பள விடயமாக தொடராக தமது வேலைப் பகிஷ்கரிப்புக்களை மேற்கொணடு வருகின்றனர். இதையெல்லாம் எதிர்கொள்ள இன்று எவருமெ இல்லாத நிலைமைகளைப் பார்க்கும்போது மக்கள் அரசியல் வாதிகளால் கைவிடப்பட்டு அநாதைகளாக இருக்கின்றனர் என்பதனையே கோடிட்டுக்காட்டுகின்றது.




இலங்கை ஒரு ஜனநாயக நாடு என்பதன் அடிப்படையில் எந்த விதமான அரசியல் தீர்வோ அல்லது அரசியல் மாற்றங்களோ மேற்கொள்ளப்பட வேண்டுமானால் அவை இலங்கையின் அரசியலமைப்பு மற்றும் ஜனநாயக விதிமுறைகளுக்கு அமைவாகவே மேற்கொள்ளப்பட வேண்டுமே தவிர யாரும் தத்தமது தனிப்பட்ட நிக்ழச்சி நிரல்களுக்கு அமைவாக மேற்கொள்ள முடியாது என்பதே அணைவரதும் பொதுவான கருத்துக்களாகும். இந்த நடைமுறைகளுக்கு மாற்றமான முறையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்போது அவை ஈற்றில் நீதிமன்றங்களின் தீர்ப்புக்களை நாடிச் செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமைகளே ஏற்படும். அவ்வாறனதொரு நிலைமைகளே இன்று இலங்கையின் அரசியல் நெருக்கடிகளுக்கு ஏற்பட்டுள்ளது எனலாம்.

இன்று சர்வதேச நாடுகளை எடுத்துக் கொண்டால் அங்கும் பலவாறான அரசியல் பிரச்சினைகள், அரசியல் மாற்றங்கள் ஏற்படுவதை காண முடிகின்றது. இவ்வாறான நிலையில் ஆட்சியாளர்களாக இருக்கட்டும், அரசியல் வாதிகளாக இருக்கட்டும், அமைச்சர்களாக இருக்கட்டும் ஏன் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருக்கட்டும் தமக்கு எதிராக நெருக்கடிகள் ஏற்படும்போது அவர்கள் மற்றவர்களிடம் தமது பொறுப்புக்களைக் கொடுத்து விட்டு அல்லது அவற்றைக் கொண்டு செல்லக்கூடியவர்களிடம் அல்லது ஆற்றல் உள்ள இளம் தரப்பினரிடம் கொடுத்து விட்டு புத்திசாலித்தனமாக சென்று விடுகின்றனர்.

உண்மையில் மேற்படிச் செயற்பாடுகள் அந்த நாடுகளின் சிறந்த அரசியல் செயற்பாடுகளுக்கு உகந்த முன்னுதாரணங்களாகவே இருக்கின்றன. ஆனால் இலங்கையின் அரசியலை எடுத்தக் கொண்டால் மேற்படி விடயங்கள் என்பது காணல் நீரான விடயங்களாகும். பிரச்சினைகள் ஏற்படும்போது அதனைத் தீர்க்க நடவடிக்கைகள் எடுப்பதுமில்லை, அவற்றில் இருந்து விடுபடுவதுமில்லை. விட்டுக் கொடுக்க விரும்பவதுமில்லை. இந்த நிலைமைகளே இந்த நாட்டின் அரசியல் பிரச்சினைகளுக்கு முக்கிய காணங்களாகவும் இருக்கின்றன.

ஆட்சியில் இருப்பவர்கள் யாராக இருந்தாலும் முதலில் மக்களின் நலன்களை கவனத்திற் கொண்டும் ஜனநாயக விழுமியங்களை முன் உதாரணங்களாக கொண்டும் செயற்பட வேண்டும். ஒன்றையுமே செய்ய முடியாது பிடிவாதங்களுடன் செயற்படுவதும், விதண்டாவாதங்கள் பேசிக் கொண்டு காலத்தைக் கழிப்பதும், விட்டுக் கொடுக்காது சர்வாதிகாரம் பேனுவதும் அவ்வளவு ஆக்கபூர்வமான விடயங்களாக அமையாது.

எனவே அரசியல் நெருக்கடிகள் ஏற்படும் போது அதற்கான அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது மக்களின் விருப்பு, வெறுப்புக்களை கவனத்திற் கொண்டு நாட்டின் பொருளாதாரத்திற்கு பங்கம் ஏற்படாத வகையில் சிறந்த தீர்மானங்களை மேற்கொண்டு செயற்பட வேண்டுமேதவிர பிடிவாதங்களுடனும், குரோதங்களுடனும் முன்னெடுத்துச் செல்லப்படும் எந்தச் செயற்பாடுகளும் வெற்றியளிக்காது என்பதே யதார்த்தமான உண்மைகளாகும்.

# குப்பை அரசியலால் குழம்பிப்போயுள்ள இலங்கை!

முனையூரான்

இலங்கை நாட்டில் கடந்த ஒக்டோபர் 26ல் நடைபெற்ற புதிய பிரதமர் நியமனத்தினைத் தொடர்ந்து, இன்றுவரை நாளுக்கு நாள் புதிய புதிய பிரச்சினைகள் உருவாகிக்கொண்டே வருகின்றன. நாட்டில் உள்ள மக்களும் சஞ்சலபோக்குடனே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். நீதிமன்றமும் தடை உத்தரவினை வழங்கிக்கொண்டே இருக்கின்றது. நாட்டின் தலைவரும், தான் எடுத்த முடிவில் இருந்து மாறப்போவதில்லை என்பதனை வலியுறுத்தும் வகையில், எவ்வகையிலும் ரணில் விக்ரமசிங்கவை பிரதமராக அரியணையமர்த்தப் போவதில்லையென்று கூறிக்கொண்டிருக்கின்றார். சர்வதேச நாடுகளும் இலங்கை



நாட்டில், 2015ல் இருந்து 2018 ஒக்டோபர் 26வரைக்குமான காலப்பகுதியில் இருந்ததுபோன்றதான அரசியல் ஜனநாயகம் மீள்கட்டியெழுப்பப்பட வேண்டும் என்பதனையும் வலியுறுத்தி வருகின்றனர். ஆனாலும் அரசியல் குழப்பநிலை நாட்டிலே தொடர்ந்து கொண்டே செல்கின்றது.

புதிய பிரதமரை தொடர்ச்சியாக தக்கவைத்துக்கொள்ள வேண்டுமென ஒருசாரர் கூறிநிற்கின்ற அதேவேளை இரண்டு மேற்பட்ட தடவைகள் ரணில்விக்ரமசிங்கவிற்கு பெரும்பான்மை அந்தஸ்து சபையிலே கிடைக்கப்பெற்றும் அதனை ஜனாதிபதி இன்னமும் ஏற்றுக்கொள்ளாத தன்மையும் நடந்தேறியிருக்கின்றது. அதேநேரம் ரணில் விக்ரமசிங்கவை ஜனாதிபதி இன்றைவரை விமர்சனம் செய்து வருகின்ற செய்திகளும் வெளிவந்துகொண்டே இருக்கின்றன. நாட்டினது அரசியல் கட்சிகளின் தலைமைகளை மைத்திரிபாலசிறிசேன சந்தித்து வருகின்ற போதும் அவற்றின் ஊடாக தீர்க்கமான முடிவுகளும் எட்டவில்லையென்பதும் நாளாந்த செய்திகளாகின்றன. நாட்டினது பாராளுமன்றத்தின் சபாநாயகருக்கு வாழ்த்து தெரிவித்து நாட்டின் பல்வேறு இடங்களில் சுவரொட்டிகளும், மகிந்த ராஜபக்சவிற்கு ஆதரவு தெரிவித்து பேரணிகளும் இடம்பெறுகின்ற அதேவேளை மைத்திரி - மகிந்த ஆகியோருக்கு எதிராகவும் சுவரொட்டிகள் ஒட்டுப்பட்டும் உள்ளன. இந்நிலையில் வெளிநாட்டு தூதுவர்களின் நிலைப்பாடு, இலங்கை நிர்வாக நடவடிக்கைகளின் ஏற்பாடு, ஊடகங்களின் பக்கச்சார்பான செயற்பாடு தொடர்பில் இக்கட்டுரை ஆராய்கின்றது.

வெளிநாட்டு இராஜதந்திரிகளை போட்டிக்கு ஏட்டியாக ஜனாதிபதி தரப்பினரும், ரணில்விக்ரமசிங்க தரப்பினரும் சந்தித்து வருகின்ற சூழலில், அரசியல் ஜனநாயகம் இலங்கை நாட்டிலே நிலைநாட்டப்படுவதுடன், சட்டரீதியான அரசினையே தாம் ஏற்றுக்கொள்ளப் போவதாகவும் இராஜதந்திரிகள் கூறிவருகின்றனர். குறிப்பாக இலங்கைக்கான அமெரிக்காவின் புதிய தூதுவர் அலைனா டெப்பிலிட்ஸ் அண்மையில் கருத்துக்கூறுகின்ற போது, இலங்கையில் தற்போது காணப்படும் அரசியல் நெருக்கடியால் மிக மோசமான பொருளாதார சமூக விளைவுகள் ஏற்படலாம். சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையும் பாதிக்கப்படலாம். இதன் காரணமாக இலங்கையின் அரசியல் தலைவர்கள் தற்போதைய நெருக்கடிக்கு உடனடியாக தீர்வு காண வேண்டும். இந்த அரசியல் மோதலில் யார் வெற்றிபெறவேண்டும் என்பது குறித்து நாங்கள் அக்கறை கொண்டிருக்கவில்லை. அரசியல் மோதலில் யார் பக்கமும் நாங்கள் நிற்கவில்லை. அரசமைப்பு நடைமுறைகளை மதிக்கும், வெளிப்படையான, சட்டபூர்வமான அரசாங்கத்தை உருவாக்கும் முடிவையே நாங்கள் எதிர்பார்க்கின்றோம். நாங்கள் இலங்கையின் அரசியல் தலைமைத்துவத்தையும் ஜனாதிபதி சிறிசேனவையும் தற்போதைய அரசியல் நெருக்கடிக்கு பொறுப்புணர்வுடன் தீர்வை காணுமாறு கோரியுள்ளோம். இதன் மூலம் இலங்கையில் அரசமைப்பினால் ஆணைவழங்கப்பட்ட அரசாங்கம் ஆட்சி செய்கின்றது, ஜனநாயக ஸ்தாபனங்கள் மதிக்கப்படுகின்றன என்பது தெளிவாகும் எனக் குறிப்பிட்டிருந்தார்.


இலங்கை நாட்டில் நீடிக்கும் ஜனநாயகமற்ற அரசியல் சூழலினால், சர்வதேச நாடுகள் இலங்கை தொடர்பில் நம்பிக்கையற்றுள்ளமையுடன், இலங்கை நாட்டிற்கு உதவிகளை வழங்குவதிலும்

**சர்வதேச நாடுகளின் நன்மதிப்பு இலங்கை தொடர்பில் குறைவடைந்து வருகின்ற அதேவேளை, இலங்கை நாட்டு மக்களும் அரசு தொடர்பில் நம்பிக்கையிழந்து வருகின்றனர். குறிப்பாக பாடசாலை மாணவர்களுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ள நிலையிலும் 2019ஆம் ஆண்டிற்கான சீருடைக்கான கொடுப்பனவுகளோ அல்லது சீருடைத் துணிகளோ மாணவர்களுக்கு வழங்கப்படவில்லை. இதனால் மாணவர்கள் ஏமாற்றத்தினைச் சந்தித்துள்ளதுடன், எப்போது கிடைக்கப்பெறும் என்பது தொடர்பில் இதுவரை தீர்க்கமான முடிவுகளும் அறிவிக்கப்படவில்லை**

பின்னிற்கின்றனர். இதனால் இலங்கை நாடு பொருளாதார ரீதியான நெருக்கடிகளை சந்திக்கநேரிடும். நாட்டில் ஏற்பட்ட அரசியல் குழப்ப நிலைக்கு உடனடியாக தீர்வு காணப்படாது இழுத்தடிப்பு செய்யப்பட்டு வருகின்றமையே, இலங்கை குறித்து சர்வதேச நாடுகள் நம்பிக்கையீனம் கொள்வதற்கு காரணமாகியுள்ளதுடன், தொடர்ச்சியாக நல்லிணக்கமுயற்சி கைகூடுமா? என்ற சந்தேகத்தினையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் கூட்டத்தொடர் எதிர்வரும் 2019 மார்ச் மாதம் கூடயிருக்கின்றது. நாட்டினது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 2015ல் ஜனாதிபதியாக அரியணையேறிதனைத் தொடர்ந்து நல்லிணக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய ஜனாதிபதி என்ற பெயரினை நாட்டிலும், நாட்டிற்கு வெளியேயும் பெற்றிருந்தார். இந்நன்மதிப்பின் விளைவினால்தான் இலங்கை குறித்து ஐநாவினால் கூறப்பட்ட விடயத்திற்கு இரண்டு வருடகால அவகாசத்தினை இலங்கை அரசு வேண்டியிருந்தபோது, அதற்கான கால அவகாசத்தினை ஐநாவும் வழங்கியிருந்தது. ஆனாலும் அவ்வாக்குறுதிகள் இன்னமும் நிறைவேற்றப்படாத நிலையில், அவை நிறைவேற்றப்படுமா? என்ற சந்தேகத்தினையும் தற்கால அரசியல் குழப்ப நிலை ஏற்படுத்தியிருக்கின்றது. இந்நிலையில்தான், அண்மையில் தமிழர்களுக்கான பிரித்தானிய அனைத்துக் கட்சி பாராளுமன்றக்குழு பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் மார்க் பீல்டிடம் கோரிக்கை விடுக்கின்ற போது, இலங்கை வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவது குறித்து மேலும் அழுத்தம் பிரயோகிப்பட வேண்டும். தற்போது நிலவி வரும் அரசியல் சிக்கல் நிலை தொடர்பில் இலங்கை மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கையின் இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானத்தினை நடைமுறைப்படுத்துவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. எனவே இவ்விடயம் தொடர்பிலும் எதிர்வரும் 2019ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெறவுள்ள மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரின் போது மேலும் அழுத்தம் பிரயோகிக்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளனர். இச்சந்திப்பு தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் மார்க் பீல்ட் தனது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிடுகையில், இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் சிக்கல் நிலை தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. அனைத்துக் கட்சிகளும் அரசியலமைப்பின்படி செயற்பட வேண்டும் என்பதையே மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றோம். அத்தோடு ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவது தொடர்பில் தொடர்ச்சியாக அழுத்தம் வழங்குவோம் என்று குறிப்பிட்டுள்ளார். இதன்மூலம் சர்வதேச நாடுகள் இலங்கை தொடர்பில் ஒரே கொள்கையைப் பேணிவருகின்ற அதேவேளை உடனடியாக அரசியல் ஜனநாயகம் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதனை விரும்புகின்றனர் என்பது தெளிவாகின்றது.

சர்வதேச நாடுகளின் நன்மதிப்பு இலங்கை தொடர்பில் குறைவடைந்து வருகின்ற அதேவேளை, இலங்கை நாட்டு மக்களும் அரசு தொடர்பில் நம்பிக்கையிழந்து வருகின்றனர். குறிப்பாக பாடசாலை மாணவர்களுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ள நிலையிலும் 2019ம் ஆண்டிற்கான சீருடைக்கான கொடுப்பனவுகளோ? அல்லது சீருடைத்துணிகளோ மாணவர்களுக்கு வழங்கப்படவில்லை. இதனால் மாணவர்கள் ஏமாற்றத்தினைச் சந்தித்துள்ளதுடன், எப்போது கிடைக்கப்பெறும் என்பது தொடர்பில் இதுவரை தீர்க்கமான முடிவுகளும் அறிவிக்கப்படவில்லை. நாட்டில் எவ்வாறான அரசியல் குழப்பநிலை உருவாகினாலும் நாட்டினது நிர்வாக நடவடிக்கைகள், அபிவிருத்திகள் குழப்பமுறக்கூடாது. அவ்வாறு நாட்டினது நிர்வாகத்தில் குழப்பங்கள் இடம்பெறுமாகவிருந்தால் முழுநாடே குழப்பநிலையைச் சந்திக்கும். வரவு, செலவுத்திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய நாட்டில், வரவு, செலவு திட்டங்கள் தொடர்பிலான பேச்சுக்கள் இல்லாத நிலையில் நாடு வேறுதிசையில் சென்று கொண்டிருக்கின்றது. ஆனாலும் நிர்வாக நடவடிக்கைகளுக்கு தேவையான அனைத்து நிதிகளும் ஒதுக்கப்படவேண்டியது அவசியமாகின்றது. இல்லையாயின் நிர்வாக நடவடிக்கைகள் முடங்கும் நிலை உருவாகலாம். இந்நிலையில்தான் ஜனாதிபதி அண்மையில் அனைத்து நிர்வாகத் தலைவர்களையும் சந்தித்து உரையாடியிருந்தார். இதன்போது, நாட்டின் தற்போதைய அரசியல் அமைதியின்மையை ஒரு பிரச்சினையாகக் கருதாது பொதுமக்களுக்கான சேவைகளையும் அபிவிருத்தி செயற்திட்டங்களையும் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்ல அதிகாரிகள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். மக்களின் நலன்கருதி தனது வழிகாட்டலில் ஜனாதிபதி செயலகத்தின் கீழ் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள சகல விசேட கருத்திட்டங்களும் 2019ஆம் ஆண்டில் புதிய உத்வேகத்துடனும் வலுவுடனும் நடைமுறைப்படுத்தப்படுவதற்கான திட்டங்களை தயாரிக்க வேண்டும். வறுமையை இல்லாதொழிப்பதற்காக ஜனாதிபதி செயலகத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள முதன்மை செயற்திட்டமான கிராமசக்தி மக்கள் இயக்கத்தின் செயற்பாடுகளையும் எதிர்வரும் வருடம் வலுவுடன் நடைமுறைப்படுத்த பணிப்புரை வழங்கிய ஜனாதிபதி, மாவட்ட மட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள கிராமசக்தி ஒருங்கிணைப்பாளர்கள் தமது கடமைகளை உரியவாறு நிறைவேற்ற வேண்டியதன் முக்கியத்துவத்தையும் தெளிவுபடுத்தினார். மாவட்ட மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள அபிவிருத்தி செயற்திட்டங்களின் முன்னேற்றம் இதன்போது மீளாய்வு செய்யப்பட்டதுடன், வடக்கு, கிழக்கு அபிவிருத்திக்காக நியமிக்கப்பட்டுள்ள விசேட ஜனாதிபதி செயலணி தனது செயற்பாடுகளை வெற்



றிகரமாக முன்னெடுத்துச் செல்வதுடன், குறுகிய காலத்திற்குள் அடைந்துள்ள அதன் முன்னேற்றம் தொடர்பில் ஜனாதிபதி இதன்போது மகிழ்ச்சி தெரிவித்தார். இதன்பொருட்டு நாட்டின் நிர்வாக நடவடிக்கைகளை முறையாக கொண்டுசெல்ல வேண்டுமென ஜனாதிபதி விரும்பிநிற்கின்ற தன்மை புலப்படுவதுடன், தற்போதைய நிலையில் ஜனாதிபதியின் பணிப்புரையை மாத்திரமே ஏற்று வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டியவர்களாக அதிகாரிகள் உள்ளனர். இவ்வாறான சூழலில் புதிய ஆட்சி அரங்கேறுகின்ற போது, அதிகாரிகள் பழிவாங்கப்படுவதற்கும் சந்தர்ப்பம் இல்லாமல் இல்லை. அதேவேளை நாடு குழப்படையமால் இருப்பதற்கு அரச அதிகாரிகளுக்கான தேவைகளைப்பெற்றுக்கொடுத்து முறையாக திட்டங்களை நடைமுறைப்படுத்துதற்கு வழிகாட்டுவதே ஜனாதிபதியின் முக்கிய செயலாகவும் அமையவேண்டியுள்ளது.

நாட்டில் குழப்பங்கள், அனர்த்தங்கள் நடைபெறுகின்ற போது, நடுநிலையாக நின்று உண்மையைத் தன்மையை கொடுக்க வேண்டியது ஊடகங்களின் கடமையுமாகும். அவ்வாறில்லாது, உண்மைக்குப் புறப்பான தகவல்களை மக்களுக்கு வழங்குகின்ற போது, மக்களும் பிழையான முடிவுகளே எடுப்பதற்கு வாய்ப்புள்ளது. இன்றைய அரசியல் குழப்ப நிலையில் அரச ஊடகங்கள் நாட்டில் ஒருபக்கச்சார்பாகவே இயங்கின்றன என்றதான குற்றச்சாட்டும் இல்லாமல் இல்லை. குறிப்பாக அரசுக்கு ஆதரவாக அரச ஊடகங்கள் இயங்குகின்றன. என்ற குற்றச்சாட்டுக்களும் உள்ளதுடன், அரச ஊடகங்களை நசுக்குகின்ற, தாக்குகின்ற செயற்பாடுகளும் கடந்த காலங்களில் இடம்பெற்றுள்ளன. இந்நிலையில்தான் பாராளுமன்றத்தின் நடப்பு விவகாரங்களை நாட்டு மக்கள் அறியவேண்டும். அதற்காக அனைத்து மக்களும் பாராளுமன்றத்திற்கு செல்ல முடியாது. வீட்டில் இருந்தே பாராளுமன்ற செயற்பாடுகளை அவதானிப்பதற்கு சபை அமர்வின்போது நேரடி ஒளிபரப்புக்கள் கடந்த காலங்களில் செய்யப்பட்டன. ஆனால் அண்மைக்காலங்களாக அரச ஊடகங்களில் நேரடியாக ஒளிபரப்பபடுவதில்லை. இந்நிலையில்தான் அண்மையில், இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் தலைவரிடமும் ஊடக அமைச்சின் செயலாளரிடமும் அரச ஊடகங்கள் பக்கச்சார்பான விதத்தில் செயற்படுவது குறித்த தனது கவலையை சபாநாயகர் கருஜெயசூரிய வெளியிட்டிருந்தார். அரச ஊடகங்கள் பக்கச்சார்பான முறையில் செயற்படுகின்றன என பாராளுமன்றத்தில் கரிசனை வெளியிடப்பட்டதை தொடர்ந்தே சபாநாயகர் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுதாபனத்தின் தலைவர் சோமாரட்ண திசநாயக்க ஊடக அமைச்சின் செயலாளர் சுனில் ஹெட்டியாராச்சி ஆகியோரை அழைத்து பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளார். பாராளுமன்ற அமர்வுகளை நேரடி ஒலிபரப்பு செய்வது ஏன் இடைநிறுத்தப்பட்டது என்பதை அறிவதற்காகவே சபாநாயகர் இரு அதிகாரிகளையும் அழைத்து பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார் என சபாநாயகர் அலுவலகம் தெரிவி;த்துள்ளது. நாடு நெருக்கடியான சூழலில் உள்ள நிலையில் ஊடக நிறுவனங்கள் பொறுப்புணர்வுடன் செயற்படவேண்டியதன் அவசியத்தை சபாநாயகர் சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கை ஷரூபாவாஹினி கூட்டுத்தாபனம், இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம், ஐடின் மற்றும் ஏஎன்சில் பத்திரிகைகள் போன்றவற்றின் நடவடிக்கைகள் பாராளுமன்றத்திற்கு கவலையை ஏற்படுத்தியுள்ளதாக சபாநாயகர் தெரிவித்துள்ளார். இதேவேளை சபாநாயகருடனான இன்றைய சந்திப்பில் கருத்து வெளியிட்டுள்ள ஊடக அமைச்சி;ன் செயலாளர் இந்த விடயங்கள் குறித்து உடனடி கவனம் செலுத்துவதாகவும் அரச ஊடகங்களிற்கு அறிவுறுத்தலொன்றை விடுப்பதாகவும் தெரிவித்துள்ளார். இதேவேளை பாராளுமன்ற அமர்வுகளை நேரடி ஒலிபரப்பு செய்யும் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டமை குறித்து இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் தலைவர் கவலை வெளியிட்டுள்ளதுடன் நிலைமை கூடிய விரைவில் சரிசெய்யப்படும் என தெரிவித்திருந்தார்.

இலங்கை நாட்டின் அரசியல் குழப்பநிலைகள் காரணமாக, சர்வதேசத்தின் நிலைப்பாடு மோசமடைந்து செல்கின்ற அதேவேளை, நாட்டின் நிர்வாகச்செயற்பாடுகளையும் பங்கமின்றி கொண்டு செல்ல வேண்டியதும், நாட்டின் அரச ஊடகங்களை பக்கச்சார்பின்றி வழிநடத்தி கொண்டு செல்லவேண்டியதும் நாட்டின் தலைவரின் கடமையாகும். இவை சரிசெய்யபடாத நிலையில் நாட்டில் குழப்பநிலை அதிகரிக்கலாம். நாட்டின் நல்லிணக்கத்தினையும், அமைதியினையும் நிலைநாட்ட வேண்டியது. நாட்டின் தலைவரின் தலையாய கடமையுமாகும். இதுவே மக்களின் பெருவிருப்புமாகும்.

# மத்திய கிழக்கு நாடுகளில் பணிபுரியும் இளவயதினரின்



# மாரடைப்பு மர்ம மரணங்கள்

## அதிர வைக்கும் பின்னணி!

சமீபகாலமாக மத்தியகிழக்கு நாடுகளில் பணிபுரியும் இளவயதினர் மாரடைப்பினால் மரணித்த எண்ணிக்கைகள் அதிகரித்துள்ளமை தெரியவருகிறது.

இதன் மர்ம பின்னணியை சற்று பின்னோக்கிப் பார்ப்போம்.

2016ஆம் ஆண்டின் கணக்கெடுப்பு படி மத்திய கிழக்கு நாடுகளில் இலங்கையைச் சேர்ந்த 1.1 மில்லியன் பேர் பணிபுரிகின்றனர்.

வருடம் ஒன்றுக்கு இலங்கையைச் சேர்ந்த 600 வேலையாட்கள் மத்திய கிழக்கு நாடுகளில் மரணிக்கின்றனர்.

அதாவது சராசரியாக நாளொன்றுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட மரணங்கள்.

இம் மரணங்களுக்கு பிரதான காரணம் மாரடைப்பு இதற்கு அடுத்த நிலையில்தான் விபத்துகள் அது தொழில் ரீதியான தாகவும், வீதி விபத்துகளாகவும் அமைகின்றன.

இம்மரணங்கள் தொடர்பாக நடத்தப்பட்ட மருத்துவ ஆய்வு ஒன்றில் 2002ல் நான்கு மாத காலப்பகுதியில் இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட 86 உடல்களை பரிசோதித்தபோது:-

அதில் 42 விபத்துகள் ஆகவும் ஏனைய 44 மாரடைப்பு என்றும் பைல் மூடப்பட்டது. அந்த 44இல் 31 மருத்துவ காரணங்கள் ஆகும். 10 இயற்கை மரணமாகவும் 3 மருத்துவ சான்றிதழ் இன்றியும் பெறப்பட்டது.

2012ஆம் ஆண்டுக்குரிய தகவலின்படி தினந்தோறும் ஒரு இலங்கையர் மரணிப்பதும் அதில் 75% பெண்களாகவும் அவர்கள் 30 வயதிலும் குறைந்தவர்களாகவும் காணப்பட்டனர். பெரும்பாலானோரின் மரணத்திற்கு காரணமாக மாரடைப்பு என்பது குறிப்பிடப்பட்டிருந்தது.

இலங்கைக்கு கொண்டுவரப்படும் உடல்களில் பெரும்பாலானவற்றில் முக்கியமான உறுப்புகள் காணப்படுவதில்லை. பொதுவாக மத்திய கிழக்கு நாடுகளில் செய்யப்படும் பிரதேச பரிசோதனையின் பின்னர் பதப்படுத்தலின்போது மிக முக்கியமான அங்கங்கள் அகற்றப்படுகின்றன அல்லது காணாமல் ஆகின்றன. இவற்றால் மேலதிக விசாரணைகள் செய்து வீட்டுப்பணிப் பெண்களின் இறப்புக்கான சரியான காரணத்தைக் கண்டுபிடிப்பது மர்மமாகவே உள்ளது. மேலதிக விசாரணை செய்வது என்றால் அதற்குரிய செலவினத்தை இலங்கை அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதே நேரம் முஸ்லிம்களின் மரண சடங்குகள் விரைவாக மேட்கொள்ள வேண்டும் என்பதால் அவை பெரும்பாலும் மரணித்த நாடுகளிலேயே அடக்கம் செய்யப்படுகின்றன.

இவற்றுள் இலங்கையில் பெண்களுக்கான சராசரி ஆயுள் காலம் 79 வருடங்கள் ஆகும்.

இது பெண்களின் நிலை. பெண்கள் பொதுவாக வீட்டுப்பணிப்பெண்களில்களின் என்ற ரீதியில் தனியாகவே வீடுகளில் வசித்து வருவதால் அவர்களின் மரண வரலாறு புரியாத புதிராகவே உள்ளது.

**சி திவியா**

ஆண்களைப் பொறுத்தவரையில் அவர்கள் விடுதிகளில் மேலும் சிலருடன் தங்குவதால் அவருடைய மரணம் பற்றிய ஓரளவு தகவல்களை பெறக்கூடியதாக உள்ளது. சமீபகாலமாக இலங்கை ஆண்களின் இறப்பு வீதம் அதிகரித்து வருகிறது. இதக்கு சமீபத்திய ஆண்டுகளில் பெண்கள் செல்வதட்கு அதிக கட்டுப்பாடுகள், அதிகளவு ஆண்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்கின்றமை , கட்டார் போன்ற நாடுகளுக்கு உலக கிண்ண மைதான கட்டுமான பணிகளுக்கு அதிக ஆண்கள் தேவைப்படுகின்றமை என்பவற்றை குறிப்பிடலாம்.

ஆண் மரணங்களில் சிலர் நெஞ்சுவலி என்று சொல்லி வைத்தியசாலையில் அனுமதித்து மரணித்தாலும் பெரும்பாலான மரணங்கள் இரவில் சாதாரணமாக தூங்கச் சென்று காலையில் எழும்பாமல் மரணித்த நிலையில் இருப்பதையே காட்டுகிறது. இதன் காரணம் மர்மமாக இருந்தாலும் இயற்கை மரணம், ஹார்ட் அட்டாக், என்பவையே அதிகமான பிரேத பரிசோதனை அறிக்கைகள் கூறுகின்றன.

பொதுவாக இவற்றை தூக்க நிலையில் ஏற்படும் என்று சொல்லலாம். பல மருத்துவ ஆய்வுகளின் படி வெளிநாடுகளில் கடமை புரியும் குறைந்த வாழ்க்கைத்தரம் கொண்ட ஆசியவைச் சேர்ந்த ஆண்களுக்கு இது ஏற்படுகிறது.

நிகழ்த்தப்பட்ட ஒரு ஆய்வின்படி மரணித்தவர்களின் நண்பர்களின் பொதுவான கூற்று மாலை நேரம் எங்களுடன் நன்றாக பேசிக்கொண்டிருந்தார், இரவுச்சாப்பாடு ஒன்றாகவே சாப்பிட்டோம், ஒன்றாகவே தூங்கினோம் ஆனால் காலையில் அவர் எழும்பவில்லை மரணித்து விட்டார்.

பொதுவாக இம்மரணங்கள் அதிகமாக மரணிப்பவர்கள் நேபாளிகள். சமீபகாலமாக கட்டாரில் இடம்பெற்றுவரும் உலக கிண்ண உதைபந்தாட்ட மைதான தயாரிப்புகளில் ஈடுபடும் நேபாளிகள், இந்தியர்கள் பலர் உயிரிழந்தது உலகையே அதிர்ச்சிக்குள்ளாக்கியது. இம்மரணங்களுக்கு நேரடியான மற்றும் மறைமுகமான பல காரணிகள் உள்ளது.

நேபாளிகளின் மரணங்கள் தொடர்பாக நேபாள அரசாங்கத்தின் அறிக்கைப்படி கட்டுமான பணிகளில் அதிக நேரம் வெயிலில் வேலை செய்தல், காற்றோட்டம் இல்லாத அறைகளில் நெரிசலுடன் வசித்தல், சுத்தமான நீர், ஒழுங்கான உணவு இன்மை, மன அழுத்தம் போன்றவை காரணமாக அமைகின்றது.

.

### அதிக வேலைச்சுமை

பொதுவாக கட்டுமான பணிகளுக்கு குறைந்த சம்பளத்தில் நேபாளிகள் நியமிக்கப்படுகிறார்கள். . எமது நாடு போன்றல்லாது நேபாளிகள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு வரும் போது பெரும் தொகை பணத்தை செலுத்திவிட்டு வர வேண்டும். இலங்கையர்கள் கூட ஒப்பந்த காலம் முடியாமல் நினைத்த மாதிரி நாட்டுக்குத் திரும்பி செல்ல முடியாது. இதனால் நாள் ஒன்றுக்கு பல மணி நேரங்கள் வேலை வாங்கப்படுகிறார்கள். அதாவது நவீனகால அடிமைகளாக நடத்தப்படுகிறார்கள். மருத்துவ ஆய்வுகளின் படி வாரம் ஒன்றுக்கு 55 மணி நேரங்களுக்கு மேல் வேலை செய்தால் இருதய பாதிப்பு ஏற்படுகிறது அது பின்னாட்களில் மரணத்தை ஏற்படுத்தலாம்.

### உடற்பயிற்சி இன்மை

பொதுவாக தொடர்ந்து உட்கார்ந்த நிலையிலேயே உள்ளவர்கள் வேலை நேரம் முடிவடைந்ததும் உடற்பயிற்சி செய்வதும் இல்லை. அதிகமாக சமூக வலைத்தளங்களில் காலம் கழிகிறது. இதனால் உடல் நிறை அதிகரித்தல் மற்றும் சீனி, பிரஷர் போன்ற தொற்றா நோய்கள் ஏற்படுகின்றன.

### உணவு பழக்கவழக்கம்

சரியான நேரத்திற்கு உணவு உட்கொள்ளாமல், உணவு உட்கொள்ளும்போதும் அதிக கலோரி கொண்ட உணவுகளை உட்கொள்வதால் உடலில் காபோவைதரேற்று அதிகரித்து அதன் மூலம் நீரிழிவு நோய், இதயத்துக்கான இரத்தக் குழாய்களில் அடைப்பு ஏற்பட்டு மாரடைப்பு உண்டாகிறது.

### மன அழுத்தம்

மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்படும் மரணங்களுக்கு மிக முக்கிய காரணிகளில் ஒன்று. வீட்டில் இருப்போர் வெளிநாடு சென்றுவிட்டால் மாதம் மாதம் பணம் வரும் என்று நினைக்கின்றனர். ஆனால் அந்த பணத்துக்காக பிணமாக உழைப்பவர்கள் தங்கள் கவலைகளை வெளியே சொல்வதில்லை.

இரவு பகல் தூக்கம் இன்றி வேலை. வீடு பற்றிய கவலை. இது பொதுவாக திருமணம் முடித்து குழந்தைகள் உள்ளவர்களுக்கு ஏற்படுகிறது. தன் மனைவியின் பிரசவத்துக்கு கூட நிற்க

முடியாமை. குழந்தைகளின் பாசத்துக்கு தவிர்த்தல். குடும்பத்தில் நிகழும் நல்லது கெட்டது போன்றவற்றில் சமூகமளிக்க முடியாமை என பட்டியல் நீண்டு செல்லும்.

சமூக வலைத்தளங்களில் அதிக நேரத்தை செலவழித்தல். வெளிநாடுகளில் இருந்து கொண்டுஉள்நாட்டு அரசியல் செய்தல். கருத்து சொல்லுதல் என்ற பேரில் ஏனையவர்களுடன்

வாக்குவாதப்பட்டுல். இதன்போது ஒருவருடன் நேரடியாக சண்டை பிடிக்கும் போது ஏற்படும் ஓமோன் மாற்றங்கள் உடலில் ஏற்படுகின்றன. சமூக வலைத்தளங்களுக்கு அடிமையாவதால் மன அழுத்தம் மேலும்

அதிகரிக்கிறது. இது நாளடைவில் இதயத்தை பாதிக்கிறது.

மன அழுத்தத்தை குறைக்க சிறந்த முறை இன்டநெட் பாவனைக்கு அடிமை ஆவதை குறைத்து தியானம்செய்தல்.

### மருத்துவ பரிசோதனைகளுக்கு உட்படாமை

மத்திய கிழக்கு நாடுகளில் மருத்துவச் செலவு மிக அதிகமாக இருப்பதால் காய்ச்சல், உடல் உபாதைகள் போன்ற நிலைமைகள் தவிர மருத்துவப் பரிசோதனைகள் செய்வதில்லை. இன்னும் சிலருக்கு வேலை பளு, கவனயீனம் காரணமாக அவற்றை செய்வதில்லை.

### தொற்றா நோய்களை கட்டுப்படுத்தாமை

சீனி, உயர் குருதி அழுத்தம் போன்ற நோய்கள் கண்டுபிடிக்கப்பட்டாலும் அவற்றை கட்டுப்படுத்த தவறிவிடுகிறார்கள். இதற்கு முக்கிய காரணம் இயந்திர வாழ்க்கை, கவனயீனம், இதனால் தமது

நோய் நிலைமையை அறிவதற்கும் அவற்றுக்கான மருந்துகளை செய்வதற்கும் தவறிவிடுகின்றனர்.

இதுவே சொந்த வீடாக இருந்தால் தான் கவனஈனமாக இருந்தாலும் தன்னைச் சுற்றியிருக்கும்

உறவுகளின் நிர்பந்தத்தால் மருத்துவ சோதனைகளுக்கு உட்படுகின்றனர்.

உண்மையில் சீனி (சக்கரை) நோயானது இருதய செயலிழப்புக்கு மிக முக்கிய காரணம். அதேபோல் உயர் குருதி அழுத்தமானது இதயத்திற்கு அதிக வேலைச் சுமையை ஏற்படுத்தி செயலிழக்கச் செய்கிறது. சீனி, பிரஷர் இரண்டுமே நாட்பட்ட சிறுநீரக செயலிழப்புக்கு மிக முக்கிய காரணிகள்.

### உடல் நிறை அதிகரித்தல்

உடற்பயிற்சியின்மை, உணவு பழக்க வழக்கம், மன அழுத்தம் போன்ற காரணங்களால் உடல்நிறை அதிகரிக்கிறது. அதிகரித்த உடல் நிறையானது மாரடைப்புக்கு இட்டு செல்லும் வாய்ப்புகள் அதிகம்.

### புகைத்தல்

இதை விளக்க வேண்டிய அவசியமில்லை.

### உடனடி மருத்துவ சேவை பெறாமை

பலருக்கு மாரடைப்பின் ஆரம்ப அறிகுறியாக நெஞ்சு வலி ஏற்பட்டாலும் அதனை சாதாரணமாக நினைத்து சில வலிநிவாரணிகளை எடுத்துக் கொண்டு கவனிக்காது விடுகின்றனர். இது உண்மையில் மாரடைப்பின் ஆரம்ப அறிகுறி . உயிரை காப்பாற்றுவதற்குரிய சிறந்த நேரம் அதனை தவறவிடுவது மரணத்தையே கொண்டு சேர்க்கும்.

நேபாளிகளின் மரணத்திற்கு காரணமாக கருதப்படும் சன நெரிசல் மிக்க காற்றோட்டம் குறைந்த அறைகள், போஷாக்கின்மை, சுகாதாரமற்ற பழக்கவழக்கங்கள் போன்ற பல காரணங்களும் இதில் அடங்குகின்றன.

வெளிநாடு சென்றுவிட்டால் பணப் பிரச்சினை தீர்ந்துவிடும் என்று இங்குள்ளோர் எண்ணுகிறோம். ஆனால் அங்கு அவர்கள் படும் சொல்லொனாத் துயரங்களை சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் தவிக்கின்றனர்.

ஒருவரது மரணத்துக்கு உலகமே கண்ணீர் வடிக்கிறது. ஆனால் மத்திய கிழக்கு நாடுகளில் அடிப்படை வசதிகள் இன்றி நவீனகால அடிமைகளாய் கசக்கி பிழியப்பட்டு பலர்களின் உடல்கள் கூட உறவினர்களை வந்தடைவதில்லை. இது தான் இன்றைய நிலை.

---

## யார்..

06 ஆம் பக்கத் தொடர்ச்சி

அல்லலுற்றபோது வெளிநாடுகளில் சுகபோகமாக வாழ்ந்தவர்கள், சிலர் வெளிநாட்டுப் பணத்தில் அரச சார்பற்ற நிறுவனங்களை நடத்தியவர்கள். சிலர் புலம்பெயர் நாடுகளில் புலிகளின் பினாமிகளாகச் செயற்பட்டவர்கள்.

இவர்களில் சிலர் 2009இல் போர் முடிவுற்றதும் பல்வேறு வேலைத்திட்டங்களுடனும் பணபலத்துடனும் இலங்கையில் குடியேறியவர்கள். அதுவரை ஆள்பாதி ஆடைபாதியாக இருந்தவர்கள் 2015இல் இலங்கையில் ரணில் தலைமையில் ஒரு வலதுசாரி அரசு அமைந்ததும் இனிமேல் இலங்கைதான் தமது சொர்க்கம் என நினைத்து புதிதாக வீடு மனைகளைக் கட்டி வாழ ஆரம்பித்தவர்கள்.

அவர்களில் சிலர் மக்களைத் திசைதிருப்புவதற்காக இடதுசாரி வேடங்களில் செயற்படுகின்றனர். உதாரணமாக, கடந்த பெப்ருவரியில் நடந்த உள்ளூராட்சித் தேர்தலின் போது பிற்போக்கான தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு மாற்றான ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வெற்றியைத் தடுப்பதற்காக சுயேட்சைக் குழுக்கள் என்ற பெயரில் சில குழுக்களை உருவாக்கி அவற்றைத் தேர்தலில் போட்டியிட வைத்து தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வெற்றி வாய்ப்பை உறுதிப்படுத்தியவர்கள். எனவே பேசும் வார்த்தைகளை விட இவர்களது செய்கைகளை அவதானித்தால் இப்படியானவர்களின் நோக்கங்களை இனங்காண முடியும்.

ஆனால் இந்த சிவில் சமூகம் என்ன தான் பிரயத்தனங்களில் ஈடுபட்டாலும் மக்கள்தான் வரலாற்றைத் தீர்மானிக்கப் போகின்ற சக்திகள். கண்ணுக்குத் தெரியாத நூல்களால் இயக்கப்படுகின்ற இந்த 'நண்பர்களை' விட கண்ணுக்கு தெரிந்த எதிரியையும் நம்பலாம் என்பதில் மக்களுக்கு அனுபவம் உண்டு.

# எம்.ஜி.ஆர்.மறைவு; ஜெயலலிதா மறைவு – அ.தி.மு.க.வில் என்ன வேறுபாடு?



**1987** டிசம்பர் 24-ம் தேதி நள்ளிரவில் அன்றைய முதல்வர் எம்.ஜி.ஆர் மறைந்தார். அதற்குப் பிறகு தமிழக அரசியல் களத்திலும், அ.தி.மு.க. -வின் மீதும் எழுப்பப்பட்ட மிகப்பெரிய கேள்வி கட்சிக்கு அடுத்த தலைமை யார் அல்லது யாருக்குப் பின்னால் இனி அ.தி.மு.க என்பதுதான். இதே கேள்வி மீண்டும் 2016 டிசம்பர் 5-ம் தேதி இரவு முன்னாள் முதல்வர் ஜெயலலிதா இறந்த பின்னரும் எழுப்பப்பட்டது. ஜெ. மறைவுச் செய்தியை டிசம்பர் 4, 2016 இரவில் அப்போலோ மருத்துவமனை அதிகாரபூர்வமாக அறிவித்தபோது, ஒட்டுமொத்த தமிழகமும் சோகத்தில் ஆழ்ந்தது. இனி அ.தி.மு.க. என்னாகுமோ என்ற கேள்வி ஒருபுறம் கட்சிக்காரர்களிடையே எழுந்ததையும் மறுக்க முடியாது. அந்தக் கேள்விக்கான விடையைத் தேடுவதிலேயே நகர்ந்துள்ளது கடந்த இரண்டாண்டு கால தமிழக அரசியல்.

எம்.ஜி.ஆரின் இறப்புக்குப் பின்னர் ஜெயலலிதா மட்டுமல்லாமல், அ.தி.மு.க. வில் ஏராளமான தலைவர்கள் வரிசைகட்டி நின்றனர். திராவிட இயக்கப் போராட்டங்களின் மூலம் அரசியலுக்கு வந்து அண்ணாவின் தம்பியாக செல்வாக்கு பெற்று. பேச்சு, எழுத்து, அரசியல் என அனைத்திலும் ஆளுமை பொருந்திய நெடுஞ்செழியன் அப்போது முன்னணியில் இருந்தார். எம்.ஜி.ஆர் தி.மு.க-விலிருந்து வெளியேறி தனிக்கட்சி தொடங்கியதிலிருந்து அவருடனேயே பயணித்து கட்சியின் வளர்ச்சிக்குப் பெரிதும் உழைத்த ஆர்.எம்.வீரப்பன் மற்றும் எம்.ஜி.ஆரின் மனைவி வி.என். ஜானகி எனப் பலரும் கட்சித் தலைமைப் பதவியை ஏற்க விரும்பினர். அவர்களை எல்லாம் பின்னுக்குத் தள்ளி, தனக்கு மக்கள் மத்தியில் இருந்த செல்வாக்காலும், 1989-ம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலில் தன் அணியைச் சேர்ந்தவர்களின் வெற்றியாலும் பின்னாளில் அ.தி.மு.க. -வின் பொதுச்செயலாளராகப் பொறுப்பேற்று இறுதிவரை அந்தப் பதவியில் இருந்தார் ஜெயலலிதா.

எம்.ஜி.ஆர் மறைவைத் தொடர்ந்து, அ.தி.மு.க. பிளவை எதிர்கொண்டு அதிமுக (ஜா) அணி , அதிமுக(ஜெ) அணி என இருகட்சிகளாகச் செயல்பட்டதை நினைவுகூர வேண்டும். ஆட்சியை எம்.ஜி.ஆர் விட்டுச் சென்றபோது, ஜானகிக்கு ஆதரவாக இருந்தது 90 எம்.எல்.ஏ-க்கள், ஜெயலலிதாவுக்கு ஆதரவாக இருந்தது 29 எம்.எல்.ஏ-க்கள் மட்டுமே. ஜானகி முதல்வராகப் பதவி ஏற்ற பிறகு மூன்று வாரத்துக்குள் சட்டசபையில் பெரும்பான்மையை நிரூபிக்கச் சொன்னார் ஆளுநர். தி.மு.க. ஆதரவளிக்க மறுத்துவிட்டது. அப்போது பிரதமராக இருந்த ராஜீவ் காந்தியை ஜெயலலிதா சந்தித்துப் பேசிய பிறகு காங்கிரஸ் கட்சியும் ஜானகிக்கு ஆதரவளிக்க மறுத்துவிட்டது. வெறும் 29 எம்.எல்.ஏ-க்களை மட்டும் வைத்துக்கொண்டு அப்போது ஆட்சியைக் கலைத்தார் ஜெயலலிதா.

கட்சிகள் பிளவுபட்டிருக்கும்போது பெரும்பாலும் அவற்றில் ஓர் அணிக்குத்தான் மத்தியில் ஆளுங்கட்சி ஆதரவு அளிக்கும் என்பது பொதுவான இயல்பு. ஆனால், இப்போதைய சூழ்நிலையில் எடப்பாடி, ஓ.பி.எஸ் இணைந்த அ.தி.மு.க ஓர் அணியாகவும், டி.டி.வி. தினகரன் தலைமையிலான அ.ம.மு.க. மற்றொரு அணியாகவும் செயல்பட்டுக்கொண்டிருக்கும் நிலையில், எந்தப் பிரிவுக்கு மத்திய அரசு தற்போது ஆதரவு அளிக்கிறது என்பதுதான் குழப்பமான நிலையை ஏற்படுத்துகிறது. ஏனெனில், கடந்த சில மாதங்களுக்கு முன் நடைபெற்ற குடியரசுத் தலைவர் தேர்தலில் எடப்பாடி பழனிசாமி, தினகரன் என இருவருமே பி.ஜே.பி. சார்பில் நிறுத்தப்பட்ட வேட்பாளரான ராம்நாத் கோவிந்துக்கு ஆதரவு அளித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தில் 1989-ம் ஆண்டு நடந்த சட்டமன்றத் தேர்தலில் திமுக வெற்றி பெற்று ஆட்சியமைத்தாலும் ஜானகி அணியைவிட அதிக தொகுதியில் ஜெ.தலைமையிலான அணி அதிக இடங்களைக் கைப்பற்றியதால், கட்சித்தலைமைப் பதவிக்கு வர, அது ஜெயலலிதாவுக்கு உதவிகரமாக இருந்தது.

அ.தி.மு.க. பொதுச் செயலாளராக இருந்த ஜெயலலிதாவின் இறப்புக்குப் பிறகு முக்கியமானதாகக் கருதப்பட்ட ஆர்.கே.நகர் இடைத்தேர்தலில் தினகரனுக்குச் சாதகமான சூழல் அமைந்தாலும், 'அ.தி.மு.க. எங்களுடைய கட்சி' எனச் சொல்லிவந்தவர், இப்போது அ.ம.மு.க. என்ற புதியக் கட்சியைத் தொடங்கி நடத்திக்கொண்டிருக்கிறார் அவர். நம்பிவந்த 18 எம்.எல்.ஏ-க்கள் வழக்கும் அவருக்குக் கைகொடுக்கவில்லை.

ஜெயலலிதாவின் இறப்புக்குப் பிறகு, எதிர்க்கட்சிகளும், அ.தி.மு.க-விலிருந்து பிரிந்து சென்றவர்களும் இன்னும் ஆறு மாதத்தில் இந்த ஆட்சி இருக்காது எனச் சொல்லி வந்த நிலையில், எடப்பாடி தலைமையிலான ஆட்சி இரண்டு ஆண்டுகளைக் கடந்து ஆட்சியை நகர்த்திக் கொண்டிருக்கிறது. எனினும் எத்தனை நாள்களுக்கு இந்த அரசு நீடிக்கும் என்ற கேள்வியும் எழாமல் இல்லை.

'எங்க அத்தையைப் பார்க்கக்கூட விடல' எனச் செய்தியாளர்களிடம் பேட்டி அளித்து அதன் மூலம் அரசியல் கால்பதித்த ஜெ.திபா அவருடைய கணவர் மாதவன் எல்லாம் ஆளுக்கொரு கட்சிகள் தொடங்கி. கட்சி அலுவலகங்களும் திறந்து விட்டனர். ஆனால் கட்சிகளுக்குத் தேவையான கொள்கைகளும் தொண்டர்களும் மட்டும் இன்னும் அவர்களைச் சென்று சேரவில்லை.

தினகரனின் சகோதரர் பாஸ்கரன் விளம்பரங்களின் மூலம் தான் நடிகரானதை அறிவித்ததைப் போல, தான் தொடங்கியுள்ள கட்சியையும் தமிழகம் முழுக்க விளம்பரப்படுத்திவிட்டார். சசிகலாவின் சகோதரர் திவாகரனும் தன் பங்குக்கு அவரின் மகன் ஜெயானந்தை முன்னிறுத்தி 'அண்ணா திராவிடர் கழகம்' என்ற புதிய கட்சியைத் தொடங்கினார். இனிவரும் காலங்களில் தமிழக கட்சிகளின் வரலாற்றை எழுதும்போது மன்னார்குடி கட்சிகள் என்ற புது அத்தியாயத்தையே உருவாக்க வேண்டிய அளவுக்கான சூழலை ஏற்படுத்தியுள்ளனர்.

அ.தி.மு,க-விலிருந்து இவ்வளவு கட்சிகளும், கொடிகளும் உருவான பிறகும், அந்தக் கட்சிக்குப் பின்னால் சுற்றிக் கொண்டிருக்கும் கேள்வி என்னவோ, இனி யாருக்குப் பின்னால் அ.தி.மு.க என்பதுதான். இந்தக் கேள்விக்கு விடை எப்போது கிடைக்குமோ?

# வைத்தி எப்படிப்பட்டவர்?

## அதிர்ச்சியை வெளியிடும் காடுவெட்டி குருவின் மருமகன்

**கா**டுவெட்டியே எங்களது குடும்பத்தை சாமியாகப் பார்த்தது. ஆனால், இன்று எங்களைத் துரோகியாக பார்க்க வைத்ததற்குக் காரணம் கட்சியில் உள்ள முக்கியத் தலைவர்கள்தான். ஆரம்பத்திலிருந்தே குருவின் குடும்பத்தை அழிக்க நினைத்தவர் வைத்திதான் என்று பரபரப்புத் தகவலை வெளியிட்டிருக்கிறார் குருவின் தங்கை மகனும் மருமகனுமான மனோஜ்.

வன்னியர் சங்கத் தலைவர் காடுவெட்டி குருவின் குடும்ப உறுப்பினர்கள் தற்போது பாதுகாப்பில்லாமல் தவிக்கின்றனர். தங்களைக் கிராமத்திலிருந்து அடித்து வெளியேற்றுவதாக அவர்கள் கதறுகிறார்கள். என்ன நடந்தது

முதலில் கட்சித் தலைமையை நம்ப வேண்டாம். எப்போது வேண்டுமானாலும் செல்லாக்காசாக வெளியில் அனுப்பிவிடும் என்று என் மாமாவிடம் வைத்தி அடிக்கடி சொல்லிவந்தார். அதை நான் பலமுறை கேட்டிருக்கிறேன். என் மாமாவின் நினைவேந்தல் நிகழ்ச்சிக்கு ஒரு பைசாகூட கொடுத்து உதவி செய்யாதவர்கள். ஆகவே, காடுவெட்டியார் வைத்த கடனையோ அவரது குடும்பத்தையோ காப்பாற்றும் என்று நம்பவேண்டாம். ராமதாஸ் எந்த வகையிலும் உதவி செய்யமாட்டார் என்று ஊர் நாட்டாமைகளையும் காடுவெட்டியார் குடும்பத்தினரையும் ஒன்றாகக் கூட்டி காடுவெட்டியார் பெயரில் அறக்கட்டளை தொடங்க அடித்தளமிட்டதுடன் தன்னையும் உறுப்பினராக சேர்க்கச் சொல்லி, அதற்குத் தேவையான ஆதார் அட்டை உள்ளிட்ட என்ன ஆதாரம் தேவையோ கொடுக்கிறேன் என்று கூறிய வைத்தி, பின்னர் ஓரிரு வாரங்களில் நான் வேண்டாம். காடுவெட்டியார் குடும்பம் மட்டும் இருக்கட்டும் என்று சொன்னதை சந்தர்ப்பவாதி வைத்தி மறந்துபோனது ஏன் என்று தெரியவில்லை.

இரண்டு முறை எம்.எல்.ஏ-வாக இருந்த காடுவெட்டியார் சேர்த்த சொத்து என்ன. ஒருமுறைகூட சட்டமன்ற உறுப்பினராகாத நீங்கள், சேர்த்து வைத்திருக்கும் பலகோடி சொத்துகள் என்ன என்று மக்களுக்கு நன்றாகவே தெரியும். இதைக் கொஞ்சம் கொஞ்சமாக வெளியிட இருக்கிறேன். ஏப்ரல் மாதம் 12-ல் இருந்து மே மாதம் 25-ம் தேதிவரை அப்போலோ மருத்துவமனையில் என் மாமாவுக்கு ஆன மருத்துவச் செலவுகள் அனைத்தையும் ஏற்றுக்கொண்டது அன்புமணிதான். ஆனால் வைத்தி, நீ என்ன செய்தாய். காடுவெட்டியார் பெயரைச்சொல்லி நூற்றுக்கணக்கான வன்னிய சொந்தங்களிடம் லட்சக்கணக்கில் பணம் வசூலித்துக் கொடுத்த பணத்தை அத்தனையும் எடுத்துக்கொண்டார்.

25 வருடங்களாக காடுவெட்டியாருடன் பயணித்து வந்ததாகப் பொய் சொல்லி வருகிறார். உங்களுக்கு வெக்கமாக இல்லையா. எங்களுக்குத் தெரிந்து 2005-ல் இருந்துதான் பழகி வந்தார். அதுவும்கூட அதற்கு முன்பாக காடுவெட்டியாருடன் நெருக்கமாக இருந்த பலபேரை நயவஞ்சகமாக அப்புறப்படுத்திவிட்டு அதன் பிறகுதான் காடுவெட்டியாருடன் நெருக்கமானீர் என்பதை ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். காடுவெட்டியார் பெயரைச் சொல்லி நீங்கள் எவ்வளவு பணம் வேண்டுமானாலும் வசூலிக்கலாம். ஆனால், காடுவெட்டியார் குடும்பம் மட்டும் வசூலிக்கக் கூடாது என்று உத்தரவிட என்ன தகுதி உள்ளது நன்றி கெட்ட வைத்திக்கு. திட்டமிட்டு என் மாமாவின் குடும்பத்தை அழித்தவர் வைத்தி. அவருடைய சந்தர்ப்பவாத செயலையும் காடுவெட்டியார் குடும்பத்துக்கு செய்த சூழ்ச்சி நிறைந்த வன்மத்தையும் மறக்கமாட்டோம். வைத்தி சேர்த்துள்ள சொத்துகளையும் விரைவில் வெளியிட இருக்கிறேன் என கொதித்தார்.

இந்த குற்றச்சாட்டுக் குறித்து மாநில துணைப் பொதுச் செயலர் வைத்தியிடம் கேட்டபோது, 25 வருஷமா குருவோடு நான் இருந்தவன். வேண்டுமென்றே இவர்கள் என் மீது பழிபோடுகிறார்கள். குருவை தனியாகப் பிரித்துவந்து வன்னியர் சங்கத்தை தனியாக நடத்துன்னு அவரின் குடும்பத்தினர் என்னை வற்புறுத்தினர். ஆனால், மறுத்துவிட்டேன். இந்தக் குடும்பம் என்மேல் கோபப்படுவதற்கு காரணம் இதுதான். ராமதாஸுக்கு விசுவாசமாக நடக்கனும்னு குரு சொன்னாரு. அதன்படி ராமதாஸுக்கும் குருவுக்கும் விசுவாசமாக நடந்தேன் என்று முடித்தார்.

### இலங்கையும்..

07 ஆம் பக்கத் தொடர்ச்சி

விடயத்திற்கு கடுமையான சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஐநா அறிமுகப்படுத்திய மனித உரிமைப்பதிவுகள் ஆய்வுமுறை ஐநா அமைதிப்படைக்கு பொருத்தமான இலங்கைப்படையினரை தெரிவு செய்வதில் பாரிய சவால்களையே ஏற்படுத்தியிருக்கின்றது.

மாலி இலங்கைப்படையினருக்கு பொறுப்பான அதிகாரியாகவிருந்த லெப்கேணல் அமுனுபுரவை திருப்பி அழைக்க ஐநா அண்மையில் உத்தரவிட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. இச்சந்தர்ப்பத்தில் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்த கருத்து மிக முக்கியமானது நாங்கள் ஆட்சியில் இருந்திருந்தால் இந்த விடயத்தை வேறுவழியில் கையாண்டிருப்போம் கட்டளை அதிகாரியை திருப்பி அனுப்புவதாகவிருந்தால் ஐநா அமைதிப்படையிலிருந்து ஒட்டுமொத்த இலங்கைப்படையினரையும் திருப்பி அழைத்திருப்போம் என்று கூறியிருந்தார். இப்படியான நிலைக்குள்தான் இலங்கை தள்ளப்பட்டுக்கொண்டிருக்கின்றது. ஐநாவுக்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளை இலங்கை அரசாங்கம் நிறைவேற்ற தவறும் நிலையில் சர்வதேச அளவில் இலங்கைப்படையினருக்கான அங்கீகாரங்கள் குறைந்துவிடும். 2015 - 2018 காலப்பகுதியில் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுடன் கூட்டுப்பயிற்சிகள் பாதுகாப்பு உதவிகள் என்று மிகப்பெரிய வாய்ப்புக்களை பெற்ற இலங்கைப்படைகளுக்கு இனி அந்த வாய்ப்புக்கள் கிடைப்பது அரிதாகிப்போகலாமென அரசியல் விமர்சகர்கள் கூறிவருகின்றனர். தற்போதைய அரசியல் குழப்பங்களுக்கு மீண்டும் பாராளுமன்றில் பெரும்பான்மையை நிருபித்தவர்கள் சட்டதிட்டங்களுக் அமைவாக பதவியில் அமர்த்தப்பட்டு தீர்வு காணப்படாவிடின் இலங்கை பாதுகாப்பு கட்டமைப்பு மேற்கூறியதுபோன்ற பாரிய சவால்களையும் நெருக்கடிகளையும் பாரிய மாற்றங்களையும் சந்திப்பதென்பது தவிர்க்க முடியாததொன்றாகவே அமையும்.

### முஸ்லிம்...

10 ஆம் பக்கத் தொடர்ச்சி

மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பது என்பது எமக்கு பாதிப்பையே ஏற்படுத்தும். தற்போது அரசியல் நெருக்கடி தோன்றியுள்ள நிலையில் இரு கட்சிகளுடனும் பேச்சு வார்த்தை நடாத்தி பிரச்சினையை ஒரு முடிவுக்கு வர வேண்டும். அதுமாத்திரமல்ல, பாராளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்க முயற்சிப்பவர்கள், இப்படியான கீழ்த்தரமான செயற்பாடுகளிலிருந்து தவிர்ந்து கொண்டு, ஜனநாயகத்துக்கு மதிப்பளிக்க வேண்டும்.

மேலும், பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை பெற்றுக்கொள்ளும் விடயத்தில் சட்டபூர்வமாக கட்சித் தலைவர்களுடன் இணக்கப்பாட்டுக்கு வந்து தீர்மானம் எடுப்பதாயின் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால், கட்சிகளுடன் நேரடியாக பேச்சுவார்த்தையில் ஈடுபடாமல் தற்போது ஏற்பட்டுள்ள குழப்ப நிலைக்கு சுமூகமாக தீர்வுகாண முடியாது. உரிய முறையில் நம்பகத்தன்மையுடன் பேச்சு வார்த்தையில் ஈடுபடுவதன் ஊடாகவே சரியான தீர்வை காணலாம். புதிய ஆட்சி மாற்றத்தை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது. இது சட்டவிரோதமான செயற்பாடு என்ற நிலைப்பாட்டிலேயே நாம் தொடர்ந்தும் இருந்துவருகிறோம். மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தில் முன்னைய சந்தர்ப்பங்களில் நாம் இருந்துள்ள காரணத்தினால், அவருடன் மீண்டும் ஒத்துழைக்க வேண்டும் என கூறுவது நியாயமாகாது. அது எமது கட்சிகளுக்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்தும். அதனை எங்களால் செய்ய முடியாது. அத்துடன் எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் கட்சித் தலைவரின் அனுமதியின்றி, வேறு எவருடனும் கூட்டுச் சேர்வதற்கு ஒருபோதும் இடமளிக்கப்பட மாட்டாது எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தன.

இது நல்லதொரு விடாப்பிடியான விடயமாக இருந்தாலும் நவம்பர் 26க்குப் பி;ன்னர் எவ்வளவோ மாற்றங்களும் விடயங்களும் நடைபெற்றிருந்த வேளையில் தென்கிழக்குப் பிரதேசத்தில்கூட இறக்காமத்திலுள்ள மாணிக்கமடு பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் மேற்கொள்ளப்பட்ட சிலை நிறுவல் விடத்தில்கூட இதுவரை ஒரு முடிவும் எட்டப்படவில்லை. திகண, கண்டி போன்ற பிரதேசங்களில் மகிந்த ஆட்சியில் ஏற்பட்ட களுத்துறை சம்பவத்தைவிட பல மடங்கு பெரிதான ஒரு விடயமாகவே இவ்வாண்டின் ஆரம்பத்தில் ஏற்பட்ட முஸ்லிம் விரோத செயற்பாடுகளைப் பார்க்கின்றபோது பாதிப்பு மிகமிக அதிமாக இந்த ஐக்கியதேசியக் கட்சியினது ஆட்சியில்தான் என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்வார்கள். இவ்வாறான நிலையில் மக்களின் ஆதரவு, நடுநிலையான போக்கு, சமூகம் சார்ந்த முக்கியமான கோரிக்கைகள் எதுவுமின்றி வெறுமனே நிபந்தனையற்ற ஆதரவினை ஒரு பெரும்பான்மைக் கட்சிக்கு மாத்திரம் வழங்குவது என்பது எந்தளவுக்கு முஸ்லிம்களுக்கும், முஸ்லிம் சமூகத்திற்கும் ஆதரவு கிடைக்கும் என்பதை இறைவன்தான் அறிவான்.

இலங்கையின் முஸ்லிம் அரசி;யல்வாதிகளுக்கு ஒருவிடயத்தை மட்டும் கூறலாம் என நினைக்கின்றேன். இலங்கையில் மிகப்பெரியளவிலான ஆடை அணிகலன்களை விற்பனை செய்து வருகின்ற நோலிமிட் நிறுவனத்தின் முன்மாதிரியையாவது இவர்கள் பின்பற்றுவார்களாக, பாடம்படிப்பார்களாக என்பதையும் நாம் கூறவேண்டியிருக்கிறது. 8.000 மாற்றுமத சகோதரர்களுடனும், 2.000 முஸ்லிம்களுடனும் இயங்கும் நோலிமிட் நிறுவனத்தின் பணிப்பாளர் சாதாரணமான ஒருவராகவே காணப்படுகின்றார். அவர் இந்நாட்டு முஸ்லிம்களுக்கு மாத்திரமன்றி மாற்றுமத சகோதர்களும் பயனடையும் வகையில் 8000க்கும் மேற்பட்ட இளைஞர் யுவதிகளுக்கு தொழி வழங்கியிருக்கிறார். இன்னும் என்னவோ எல்லாம் செய்து வருகின்றார். ஆனால் அரசியல் அதிகாரத்தை தன்கைகளுக்குள் வைத்திருக்கின்ற முஸ்லிம் அரசியல்வாதிகளால் ஒலுவில் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள துறைமுகத்தின் அழிவுகளை கடல் நிலைத்தை காவுகொள்ளச் செய்கின்ற துன்பதை நீக்குவார் இன்றி அந்த மக்கள் கடும் கஷ்டத்தை அனுபவிக்கின்றனர். அஷ்ரப் நகரத்தை குப்பைகள் கொட்டுகின்ற இடமாக இருப்பதன் காரணமாக யானைத் தொல்லைகள் அதிகரித்துள்ளன. காணிகள் பலவற்றை புனிதப்பிரதேசம் என்கிற வகையில் கையப்படுத்தியிருக்கின்ற பெரும்பான்மையினரிடமிருந்து எதனை ஐயா பெற்றுத்தரப்போகிறீர்கள். அக்கரைப்பற்றில் அமைந்துள்ள சுனாமி பயனாளிக்கு வழங்க வேண்டிய வீட்டை சுனாமி அடித்த கடலைக் கூட கண்ணால் பார்த்திருக்காத மக்களுக்கும் வழங்க வேண்டும் என்று கூறுவது? அதனை பார்த்துக் கொண்டிருப்பது என்பதெல்லாம் இந்த சமூகத்தின் பெயரால் வாக்கினைப் பெற்றுக்கொண்ட உறுப்பினர்களாக இருந்து சமூகத்திற்கு செய்கின்ற கைங்காரியங்கள் இதுதானா? என்பதையும் மீண்டும் ஒருமுறை நெஞ்சில் கைவைத்துப் பாருங்கள் எல்லாம் புரிந்து கொள்வீர்கள்.

### அம்பாறை...

10 ஆம் பக்கத் தொடர்ச்சி

ஒப்படைக்கோரியே இதனை மேற்கொள்கின்றோம். அதனைப் பெற்று இந்நாட்டின் உற்பத்தியில் நாமும் பங்குதாரர்களாகி நிம்மதியாக வாழ்வதற்கு வழிவகுக்கும் அல்லவா என்பதையே நாம் உங்கள் முன் கோரிக்கை விடுகின்றோம். நாம் ஒருபோதும் விலைபேசி எமது காணிகளை இழக்க தயாரில்லை என்பதையும் கூறிக்கொள்ள ஆசைப்படுகின்றோம்.

காணி உரிமைக்கான அம்பாறை மாவட்ட செயலணியானது இன மத கட்சி பேதமற்ற வகையில் மக்களுக்காக போராடி வருகின்ற ஒரு அமைப்பாகும். வறுமையில் யாரும் வாடக்கூடாது என்கிற உண்மையான மனிதத்துவத்தை நோக்கி நகர்கின்ற இந்த அமைப்பின் செயற்பாடுகளுக்கு உங்களுடைய மேலான ஒத்துழைப்பினை கோருகின்றோம். அதேவேளை திட்டமிட்ட அடிப்படையில் சுனாமியினால் கட்டப்பட்ட அக்கரைப்பற்று நுரைச்சோலை வீடுகளை கையளிக்காமல் பல வருடங்களாக இழுபறி நிலையில் காணப்படு பிரச்சினைக்கும் தீர்வினை முன்வைத்தும் இவ்வமைப்பின் மகளிர் அணியினரும் இணைந்து கருத்துக்களை வெளியிட்டனர்.

நுரைச்சோலை வீட்டுத்திட்டத்தின் பயனாளி என்கிற வகையில் கடந்த 2004ல் சுனாமியினால் பாதிக்கப்பட்டு வீடுகளை இழந்த நிலையில் இன்றுவரை கஷ்டப்பட்டு வீடின்றி வாழ்ந்து வரும் நிலையில் இச்சுனாமி வீட்டுத்திட்டத்தினை தரமுடியாமல் இழுத்தடித்துக் கொண்டு வருகின்ற அரசின் பங்காளிகளாக இருக்கின்ற முஸ்லிம் தலைமைகள் உடனடியாக விடுவித்துத் தருமாறும் இன்றை அரசியல் சூழ்நிலையில் பேரம் பேசுகின்ற சக்தி இன்று சிறுபான்மைக் கட்சிகளிடம் காணப்படுகின்றமையினால் அவர்கள் முயற்சித்தால் நிறைவேற்றலாம் எனவேதான் முஸ்லிம்களுக்காக முஸ்லி நாட்டின் உதவியுடன் கட்டப்பட்ட நுரைச்சோலை வீடுகளை தயவு செய்து வழங்கியுதவுமாறு கண்ணீர்மல்க கூறியபோது அங்கிருந்த அனைவரினதும் கண்களில் நீர் நிறைந்திருந்ததையும் மறக்க முடியாது.

எனவே, கூட்டு மொத்தமாகப் பார்க்கின்றபோது அம்பாரை மாவட்டத்தில் குறிப்பாக ஒலுவில் பிரதேசத்தில் அஷ்ரப் நகரத்தின் காணிகள், பொன்னம்வெளிக் காணிகள், புனிதப்பிரதேசத்திற்காக எடுக்கப்பட்ட காணிகள் போன்ற பல ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகள் இன்று இழந்துள்ள மக்களாகவே ஒலுவில் மக்கள் காணப்படுகின்றனர். துறைமுகம் என்கிற பேரில் கடலுக்குள் சங்கமித்துள்ள ஒலுவில் கிராமம் மேற்கில் காணிகளையும் இழந்து வரும் நிலையில் இதற்கான தீர்வுகளை இன்றைய அரசியல் சூழ்நிலையில் ஒருமுகப்படுத்தி பெற்றுக் கொடுக்க முன்வரவேண்டும் என்பதே இந்த மக்களினதும், விவசாயிகளினதும், இந்த அமைப்பினதும் தாரகையாகும். விடுவிப்பார்களா? இவைகள் மேற்கூறப்படுகின்ற தலைமைகளிடம் எந்தளவுக்கு எட்டுமோ அந்தளவுக்கு எட்டச் செய்வதில் செயலணி மும்முரமாக இருக்கிறது என்பதைத்தான் இங்கே காணமுடிகிறது. பொறுத்திருந்து பார்ப்போம்.

# வெளியுறவுக் கொள்கையில் புகழ்பெற்ற ஜனாதிபதி

ஜார்ஜ் ஹெர்பர்ட் வாக்கர் புஷ் (1924-2018). பனிப்போரின் கடைசிக் கட்டத்தில், கொந்தளிப்பான ஆண்டுகளில் அமெரிக்காவை வழிநடத்திய பெருமை கொண்ட அதிபர். 40 ஆண்டுகளுக்கு மேல் பொது வாழ்க்கையில் ஈடுபட்டவர். இரண்டாம் உலகப் போரில் பங்கேற்று பின்னாளில் அதிபரான கடைசித் தலைவர். உலக வரலாற்றின் முக்கியத் தருணங்களைத் தனது பதவிக்காலத்தில் பார்த்தவர். மனைவி பார்பரா மீது மிகுந்த அன்பு கொண்டவரான புஷ், அவர் இறந்து எட்டு மாதங்களில் மறைந்திருக்கிறார். தேசப்பற்று மிக்கவரும் பணிவான சேவகருமான ஒரு தலைவரை இழந்திருக்கிறோம் என்று முன்னாள் அதிபர் ஒபாமா குறிப்பிட்டிருக்கிறார். இந்த வார்த்தைகளுக்குத் தகுதியானவர்தான் சீனியர் புஷ்.

1924 ஜூன் 12-ல், மசாசூட்ஸ் மாகாணத்தின் மில்டன் நகரில், பிரஸ்காட் புஷ், டோரதி வாக்கர் தம்பதியரின் மகனாகப் பிறந்தவர் ஜார்ஜ் ஹெர்பர்ட் வாக்கர் புஷ். தந்தை பிரஸ்காட் அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர். கிரீன்விச் நகரில் பள்ளிப் படிப்பு. 18-வது வயதில், இரண்டாம் உலகப் போரில் பங்கேற்றார். விமான பைலட் பயிற்சி பெற்றிருந்தார் ஜார்ஜ் புஷ். அவரது விமானம் பசிபிக் பெருங்கடலில் ஜப்பான் வசமிருந்த சிச்சிஜிமா தீவின் மீது பறந்துகொண்டிருந்தபோது சுட்டுவீழ்த்தப்பட்டது. எளிதில் துவண்டுவிடாதவரான புஷ், கடலில் குதித்து நீந்தித் தப்பினார். அந்த உறுதி, பின்னாட்களில் அவரது அரசியல் வாழ்விலும் வெளிப்பட்டது.

### அரசியல் பிரவேசம்

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் டெக்சாஸ் மாநிலத்தில், எண்ணெய்த் துரப்பணக் கருவிகள் விற்பனையாளராகப் பணிபுரிந்தார். 1951-ல் எண்ணெய் எடுக்கும் நிறுவனத்தைத் தொடங்கினார். 1953-ல் ‘ஸபடா பெட்ரோலியக் கார்ப்பரேஷன்’ நிறுவனத்தைத் தொடங்கினார். தந்தையின் அரசியல் ஆர்வம் தொற்றிக்கொள்ள, குடியரசுக் கட்சியின் டெக்சாஸ் கிளைத் தலைவராக 1963-ல் பொறுப்பேற்றார். நாடாளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபையில் இரண்டு முறை உறுப்பினர், ஐநாவுக்கான அமெரிக்கப் பிரதிநிதி, சிஐஏ இயக்குநர், சீனாவுக்கான வெளியுறவுத் தொடர்பு அதிகாரி என்று பல்வேறு பதவிகள் வகித்தவர்.

1981-ல் அமெரிக்காவின் துணை அதிபரானார். அப்போது அதிபராக இருந்த ரொனால்டு ரீகனின் நம்பிக்கைக்குப் பாத்திரமானார். சிக்கலான தருணங்களில் அவர் காட்டிய உறுதியும், விசுவாசமும் அதிபர் ரீகனிடம் அவருக்கு நன்மதிப்பைப் பெற்றுத்தந்தது. 1988-ல் நடந்த அதிபர் தேர்தலின்போது அவரது பிரச்சார உரைகள் அவருக்குப் பெரும் வெற்றியைப் பெற்றுத் தந்தன. என் வார்த்தைகளைக் குறித்து வைத்துக்கொள்ளுங்கள். இனி, புதிய வரிகள் கிடையாது என்றார்.

மக்கள் அவரை அதிபராக்கினர். மார்ட்டின் வான் பியூரனுக்கு (1837) பிறகு, துணை அதிபராக இருந்து அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் இவர்தான்!

தனது பதவிக்காலத்தில் கல்வி, சுகாதாரத்துக்கு நிதி ஒதுக்கீட்டை அதிகப்படுத்தினார். இது சொந்தக் கட்சிக்குள்ளேயே சலசலப்பை ஏற்படுத்தியது. எனினும் புஷ் பின்வாங்கவில்லை. மாற்றுத்திறனாளிகள் நலன் கருதி புஷ் இயற்றிய சட்டம் உலகின் நல்வாழ்வு நாடுகள் பின்பற்றத்தக்க நல்ல முன்னுதாரணமாகும்.


### வரலாற்றுத் தருணங்கள்

உள்நாட்டு விவகாரங்களை விடவும், வெளியுறவுக் கொள்கை சார்ந்த நடவடிக்கைகளுக்காகத்தான் புஷ் அதிகம் பேசப்படுகிறார். 1989 முதல் 1993 வரையில் அமெரிக்க அதிபராக புஷ் பதவி வகித்தபோதுதான், பெர்லின் சுவர் தகர்க்கப்பட்டது.

இந்த நிகழ்வுக்கு ரொனால்டு ரீகனின் பங்களிப்பு மிக முக்கியமானது என்றாலும், இரு ஜெர்மனிகளையும் ஒரே நாடாக இணைப்பதில் பெரும் பங்காற்றியது புஷ்தான். புஷ் கொள்கைகளின் பங்களிப்பு இல்லாமல், இன்றைக்கு நான் இங்கு இந்த இடத்துக்கு வந்திருக்க முடியாது ஜி-20 உச்சி மாநாட்டில் கலந்துகொண்டிருக்கும் ஜெர்மனி அதிபர் ஏஞ்சலா மெர்க்கல் நன்றியுடன் நினைவுகூர்ந்திருக்கிறார். சோவியத் ஒன்றியம் சிதறுண்டபோது, புஷ்ஷின் செயல்பாடுகள் ரஷ்யர்களிடம் மரியாதையைப் பெற்றுத்தந்தன.

இரண்டு மிகப் பெரிய அணுசக்தி நாடுகளுக்கு இடையில் ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தையின் அவசியத்தை புஷ் நன்கு உணர்ந்திருந்தார். இரு நாடுகளுக்கு இடையிலான உறவை வலுப்படுத்த பெரும் பங்காற்றினார் என்று புஷ்ஷின் மகனும் முன்னாள் அதிபருமான ஜார்ஜ் புஷ் ஜூனியருக்கு எழுதிய கடிதத்தில் ரஷ்ய அதிபர் புதின் குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் ஒரு நம்பகமான கூட்டாளி என்று சோவியத் ஒன்றியத்தின் அப்போதைய அதிபர் மிகையீல் கோர்பச்சேவ் கூறியிருக்கிறார். 1991-ல் அணுஆயுதக் குறைப்பு ஒப்பந்தத்தில் புஷ்ஷும் கோர்பச்சேவும் கையெழுத்திட்டது குறிப்பிடத்தக்கது.



### வளைகுடாப் போர்

புஷ்ஷின் ஆட்சிக்காலத்தில் மிக முக்கியமான தருணம் என்றால், அது குவைத் மீது இராக்கின் படையெடுப்பும் அதைத் தொடர்ந்த நிகழ்வுகளும்தான். 1990-ல் கச்சா எண்ணெயை அளவுக்கு அதிகமாக உற்பத்திசெய்யும் குவைத்தின் செயல்பாடுகள் காரணமாக, இராக்கின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டிருப்பதாகக் குற்றம்சாட்டி, அந்நாட்டின் மீது படையெடுத்தார் சதாம் ஹுசைன். சவுதி அரேபியாவுக்கும் குறிவைத்தார். இதையடுத்து, வளைகுடாப் போர் மூண்டது.

32 நாடுகளைச் சேர்ந்த கூட்டுப் படையை உருவாக்கினார் புஷ். ‘ஆபரேஷன் பாலைவனப் புயல்’ என்று அழைக்கப்பட்ட அந்தப் போரில், சுமார் 4.25 லட்சம் அமெரிக்கத் துருப்புகளுடன், 1.19 லட்சம் பன்னாட்டு வீரர்களும் இணைந்து, குவைத்திலிருந்து இராக் படைகளை விரட்டியடித்தன. குவைத்தை விடுவித்த பின்னர் இராக் மீதும் தாக்குதல் நடத்த வேண்டும் என்று சில நாடாளுமன்ற உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்ட யோசனைகளைப் புறக்கணித்தார். ஆனால், அவரது மகன் ஜார்ஜ் புஷ் ஜூனியரின் ஆட்சிக்காலத்தில், இராக் பேரழிவு ஆயுதங்களை உருவாக்குகிறது; மனித உரிமை மீறல்களில் ஈடுபடுகிறது என்றெல்லாம் குற்றம்சாட்டி 2003-ல் அந்நாட்டின் மீது அமெரிக்கா போர் தொடுத்ததும், அதன் தொடர்ச்சியாக சதாம் ஹுசைன் கைது செய்யப்பட்டுத் தூக்கிலிடப்பட்டதும் மறக்க முடியாத நிகழ்வுகள்.

நிதி நிலையைச் சீராக்க வரிகளை உயர்த்தியது, வேலைவாய்ப்பின்மை அதிகரித்தது, பணப் புழக்கம் குறைந்தது உள்ளிட்ட காரணங்களால் மக்களிடம் செல்வாக்கை இழந்த புஷ், 1992 நவம்பரில் நடந்த அதிபர் தேர்தலில், ஜனநாயகக் கட்சி வேட்பாளர் பில் கிளிண்டனிடம் தோற்றார். பின்னாட்களில், பல்வேறு நலத்திட்டங்களுக்காக பில் கிளிண்டனுடன் இணைந்து பணியாற்றவும் புஷ் தயங்கவில்லை. அரசியலிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர், மேய்ன் மாநிலத்தில் அவர் மேற்கொண்ட பொதுநலச் சேவைகளுக்காக அவர் நினைவுகூரப்படுவார்!

**வ.ரங்காசாரி**

# அந்தமான் அம்பு சொல்வது என்ன?

அவர்கள் எங்கள் காடுகளுக்குள் வந்தபோது எங்களிடம் நிலங்கள் இருந்தன.

அவர்கள் கைகளில் மதப் புத்தகம் இருந்தது.

நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம் என்றார்கள்,

கண்களை மூடித் திறந்தபோது
எங்கள் கைகளில் மதப் புத்தகமும்
அவர்களிடம் எங்கள் நிலங்களும் இருந்தன…

செனகல் நாட்டு அதிபரும் கவிஞருமான லியோ போல்ட் செடார் செங்குவாரின் கவிதை இது. சமீபத்தில் அந்தமான் தீவில் கொலைக் குற்றம் செய்ததாகக் கூறப்படும் சென்டினலீஸ் இன மக்களின் செயலை இதன் பின்னணியிலிருந்தும் பார்க்கலாம். அந்தமானின் சென்டினல் தீவுக்குச் சென்ற அமெரிக்க மத போதகர் ஜான் ஆலன் சாவ், பழங்குடிகளால் அம்பு எய்து கொல்லப்பட்டார். இதன் பின்னணியில் ஏராளமான காரணங்கள் கூறப்பட்டாலும், கடந்த சில ஆண்டுகளாக வளர்ச்சித் திட்டங்கள் என்ற பெயரால் அங்கு பழங்குடிகளின் வாழ்விடங்கள் அழிக்கப்படுவதே சென்டினலீஸ் இன மக்களின் கோபத்துக்குக் காரணம் என்கிறார்கள் அந்தமான் நிலவரங்களை உற்று கவனித்துவரும் சுற்றுச்சூழல் செயற்பாட்டாளர்கள்.

ஜான் கொல்லப்பட்டபிறகு அவரது உடலை மீட்பதற்காக, படகில் சென்டினல் தீவுக்குச் சென்ற காவல்துறையினர், அங்கு கடற்கரையில் பழங்குடிகள், வில் அம்புடன் இருந்ததைப் பார்த்தவுடன் பின்வாங்கினர். சரி, கொலை செய்யும் அளவுக்கு சென்டினலீஸ் பழங்குடியினர் கொடியவர்களா? ‘சென்டினலீஸ் பழங்குடிகள் அமைதியை விரும்புபவர்கள்; யாரையும் தேடிச்சென்று தாக்குவதில்லை. அதேசமயம், அவர்களின் எல்லைக்குள் மற்றவர்கள் நுழைவதையும் அவர்கள் விரும்புவதில்லை’ என்கிறார் மூத்த மானுடவியலாளர் டி.என்.பண்டிட். இவர்தான் முதன்முதலில் 1970-களில் அந்தப் பழங்குடிகளைச் சந்தித்தவர்.

1970-ல் பண்டிட் முதல்முறையாக அங்கு சென்றபோது, எவ்வளவு முயன்றும் அவரால் சென்டினலீஸ் மக்களைத் தொடர்புகொள்ள முடியவில்லை. எப்படியாவது அவர்களின் நட்பைப் பெற வேண்டும் என்று வாழைப்பழம், தேங்காய் ஆகியவற்றை தீவில் வைத்துப் பார்த்தார் அவர். எதற்கும் அவர்கள் மசியவில்லை. இறுதியாக, தீவை விட்டு பண்டிட் கிளம்பியபோது ஒரு பன்றிக் குட்டியைத் கரையில் பரிசாக வைத்துவிட்டுச் சென்றார். அதையும் அவர்கள் கொன்று மணலில் புதைத்து, தங்களது எதிர்ப்பை உணர்த்தினர். அதன் பிறகும் அங்கு சென்று பல்வேறு முறைகளில் தன் அன்பை பண்டிட் வெளிப்படுத்திய பின்னரே சென்டினலீஸ் இறங்கிவந்தார்கள். பல ஆண்டுகள் அவர்களுடன் தொடர்பில் இருந்தார் பண்டிட்.



1990-க்குப் பிறகு அந்தப் பழங்குடிகள் வெளியுலகத் தொடர்புகளை முழுவதுமாகத் துண்டித்துவிட்டனர். 1981-ல் பிரிம்ரோஸ் என்ற கப்பல், இந்தத் தீவில் கரை தட்டியபோது, இவர்களால் கப்பலில் இருந்தவர்கள் தாக்கப்பட்டனர். 2006-ல் விபத்தால் அங்கு கரை ஒதுங்கிய இரு மீனவர்கள் கொல்லப்பட்டனர். அதன் பிறகு, இந்திய கடற்படை அந்தத் தீவின் மூன்று கி.மீ தூரக் கடல் பகுதியை, தடைசெய்யப்பட்ட பகுதியாக அறிவித்தது.

சரி, மானுடவியலாளர்களின் நன்மதிப்பைப் பெற்ற சென்டினலீஸ் பழங்குடியினர், ஏன் அந்நியர்களைத் தாக்குகிறார்கள்? காரணம், அவர்களின் கடந்த காலத் துயரங்கள். 19-ம் நூற்றாண்டின் காலனி ஆதிக்கத்துக்கு சென்டினலீஸ்களும் தப்பவில்லை. அவர்கள் பிரிட்டிஷாரால் கொத்தடிமைகளாக ஆக்கப்பட்டனர். வேட்டையாடுதல், மீன் பிடித்தல் தவிர தங்களது இயல்பிலேயே இல்லாத வேலைகளைச் செய்யத் தெரியாமல் அவர்கள் திணறியபோது, கடும் சித்ரவதைக்கு ஆளானார்கள். விடுதலைக்குப் பின்பும் இந்திய அரசு அங்கு கண்மூடித்தனமான வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தியது.

1957-ல் மத்திய அரசே வங்காளிகளையும், இலங்கை மக்களையும் குடியமர்த்தியது. அந்தமான் சிறையிலிருந்து விடுதலையானவர்களும் அங்கேயே தங்கிவிட்டனர். பழங்குடிகளின் வாழ்விடங்கள் பறிக்கப்பட்டன.

எல்லாவற்றுக்கும் மேலாக, 1990-களின் தொடக்கத்தில் தொடங்கப்பட்ட மிகப்பெரிய வளர்ச்சித் திட்டமான தேசிய நெடுஞ்சாலை - 223 ‘அந்தமான் டிரங்க் சாலை’ ஜராவா பழங்குடிகளைக் கடுமையாகப் பாதித்தது. 230 கி.மீ தொலைவுக்கு அவர்களின் வாழ்வாதாரங்கள், காடுகள், அமைதி என அத்தனையையும் குலைத்துப்போட்டது அந்தச் சாலை. அதில் அதிவேகமாகக் கடந்து சென்ற கனரக வாகனங்களையும் சுற்றுலாப் பயணிகளின் இரைச்சல்களையும் கேட்டு நடுங்கிப் போனார்கள் பழங்குடியினர். தொடர்ந்து படிப்படியாக அரசு, பழங்குடிகளுக்கு இலவசத் திட்டங்கள் உள்ளிட்ட சலுகைகளை அறிவித்து அவர்களின் வாழ்விடங்களை அழித்தது. இளம்பெண்கள் பாலியல் வன்முறைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். ஒருகட்டத்தில் சுற்றுலாப் பயணிகளை மகிழ்விக்கப் பழங்குடியினர் விலங்குகளைப்போல் காட்சிப்பொருளாக ஆக்கப்பட்டதுதான் கொடுமையின் உச்சம். 15 ஆண்டுகளுக்கு முன்பு அந்தமான் ட்ரங்க் சாலையில் போக்குவரத்துக்குத் தடை விதித்தது உச்ச நீதிமன்றம். அப்போதும் நிலைமை மாறவில்லை. இதை எல்லாம் உணர்ந்துதான், சென்டினலீஸ் இன மக்கள் தங்களை மேலும் மேலும் தனிமைப்படுத்திக் கொண்டனர். அவர்களும் எல்லை தாண்டிச் செல்வதில்லை. யாரையும் எல்லை தாண்ட அனுமதிப்பதில்லை.

ஆனால், தற்போதைய பி.ஜே.பி அரசு நிலைமையை இன்னும் மோசமாக்கிவருகிறது. 2,100 கோடி ரூபாய் செலவில் அந்தமான் டிரங்க் சாலையை விரிவாக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. ‘நான்கு லட்சமாக உள்ள சுற்றுலாப் பயணிகளின் வருகையை 12 லட்சமாக உயர்த்துவோம்’ என்று இலக்கு நிர்ணயித்துள்ளனர், வளர்ச்சித் திட்ட வல்லுநர்கள். காடுகள், நீர் நிலைகள் அழிக்கப்பட்டு, பெரும் கட்டடங்களும் தீவுகளை இணைக்கும் பிரமாண்ட பாலங்களும் அமைக்கப்படுகின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக, 29 தீவுகள் உட்பட மிகவும் பாதுகாக்கப்பட்ட பகுதிகளுக்கு வெளிநாட்டவர் செல்வதற்கு நீண்டகாலமாக இருந்த தடையை, வளர்ச்சி என்ற பெயரில் 2018 ஆகஸ்ட் மாதம் தளர்த்தியது மத்திய அரசு. அப்படி விலக்கு அளிக்கப்பட்ட தீவுகளில் வடக்கு சென்டினலும் ஒன்று. அங்குதான் ஜான் சென்றிருக்கிறார். எல்லை தாண்டியவரைக் கொன்றிருக்கிறார்கள் சென்டினலீஸ் பழங்குடியினர்.

இறுதியாக ஒன்று… வளர்ச்சித் திட்டங்களின் பெயரால் நாட்டில் இதுவரை சுமார் 85 லட்சம் பழங்குடிகள், அவர்களின் வாழ்விடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். அந்தமான் தீவுகளில் வசிக்கும் பூர்வக்குடிகளுக்கு அவ்வாறு இடம் பெயரக்கூட வேறு வாழ்விடம் இல்லை. கொலையை நியாயப்படுத்த முடியாது. அது தவறுதான். ஆனால், ஒருகாலத்தில் 5,000 பேருக்கு மேல் வசித்த சென்டினலீஸ் இனத்தில், இன்று வெறும் 90 பேர் மட்டுமே எஞ்சியுள்ளனர். அவர்கள் செய்ததின் பெயர் கொலை எனில் இன அழிப்பின் பெயர் என்ன சட்டமா?

# சோவிடம் சொன்னதை நிறைவேற்றிய ஜெயலலிதா

ஜெயலலிதா, சோ விடம் சொன்னதைப் போலவே அவருக்கு இரண்டுநாள் முன்னர் மரணமடைந்தார். ஜெயலலதா இறந்த 30 மணி நேரம் கழித்து சோவும் மரணமடைந்தார்.

ஜெயலலிதா இறப்பதற்கு சில வருடங்களுக்கு முன்பு சோ, உடல் நலக் குறைவால் அப்போலோவில் சிகிச்சை பெற்று வந்தார். அவரை நலம் விசாரிக்க அப்போலோ சென்றார் ஜெயலலிதா. அப்போது நடந்த உரையாடல் உணர்ச்சி மிகுந்தது. ‘உடல் நிலையை நன்றாகப் பார்த்துக்கொள்ளுங்கள்… நல்லா ரெஸ்ட் எடுங்க… நீங்க ரொம்ப வருஷம் வாழணும். உங்களுக்கு முன்னால நான் போயிடணும். எனக்குப் பின்னாடிதான் நீங்க போகணும்’ என சோவிடம் ஆறுதல் சொன்னார் ஜெயலலிதா.‘அப்படி எல்லாம் பேசக் கூடாது’ என்று கண்டித்தார் சோ. ஆனால், ஜெ.சொன்னதுதான் இறுதியில் நடந்தது. ஜெயலலிதா மரணமடைந்து இரண்டு நாள் கழித்து சோவும் இந்த உலகத்தை விட்டுப் பிரிந்தார்.



துக்ளக்கில் வெளிவரும் ‘கேள்வி - பதில்’ பகுதிக்கு ஒவ்வொரு புதன் கிழமையும் தவறாமல் பதில்களைக் கொடுத்துவிடுவார் சோ. வேலைகள் இருந்தால் மட்டுமே வியாழக் கிழமை வரை தள்ளிப் போகும். ஜெயலலிதா அப்போலோவில் சிகிச்சையில் இருந்தபோது சோவும் அதே மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தார். அவர் இறப்பதற்கு முன்புகூட, துக்ளக் கேள்வி-பதில்களை கொடுத்துவிட்டுத்தான் போனார். தனது மருமகள் சித்ராவை அழைத்து வாசகர் கேள்விகளுக்கு பதில்களைக் கொடுத்திருக்கிறார். துக்ளக் ஆரம்பித்த காலத்திலிருந்து கேள்வி - பதில் பகுதி கடைசி நேரத்தில் பிரிண்டுக்குப் போன வரலாறு கிடையாது. அதுதான் முதல்முறை. உடல்நலம் குன்றி வீட்டில் இருந்த காலகட்டத்தில்கூட ஒவ்வொரு இதழும் அவரின் பார்வைக்குப் போய் ஓகே ஆன பிறகுதான் பிரின்ட்டுக்கே போகும்.

அப்படித்தான் அவர் இறப்பதற்கு முன்பு வெளியான துக்ளக் இதழை ரெடி செய்துவிட்டு எடிட்டரிடம் ‘ஓகே’ வாங்க சப் எடிட்டர்கள் 2016 டிசம்பர் 4-ம் தேதி ஞாயிற்றுக் கிழமை அன்று அப்போலோ போனார்கள். அதே தினத்தில்தான் ஜெயலலிதா சீரியஸ் எனச் செய்திகள் பரவின. ‘நிறைய கெடுபிடிகள் சார்… நாங்க போராடித்தான் இங்கே வந்தோம்’ என சோவிடம் சொல்லியிருக்கிறார்கள் சப்-எடிட்டர்கள். ‘யாராவது வி.ஐ.பி-க்கள் வருகிறார்களா என்ன?’எனக் கேட்டுவிட்டுப் பக்கங்களைப் பார்த்து திருத்தங்களைச் சொல்லியிருக்கிறார் சோ. ‘கடைசி நேரத்தில் பதில்களை கொடுத்திருக்கீங்க… வழக்கம் போல இருந்தது சார்’ என சப் எடிட்டர்கள் சொல்ல,‘அப்ப இம்ப்ரூவ்மென்டே இல்லை என்கிறீர்களா?’என இரட்டை அர்த்தத்தில் கேட்டுவிட்டு, ‘சோவின் கேள்வி பதில்கள் வருவதை போஸ்டரில் போடுங்க’ எனவும் சொல்லியிருக்கிறார். ‘சோவின் கேள்வி பதில்கள்’ அதுவரை போஸ்டரில் வந்ததே கிடையாது. ‘அவ்வளவுதான் சார்… இனிமேல் என்ன இருக்கு சார்’ என்றபடியே சப் எடிட்டர்களை அனுப்பி வைத்திருக்கிறார் சோ.

‘இம்ப்ரூவ்மென்ட் இல்லையா?’என அவர் எதற்காகக் கேட்டார் எனத் தெரியவில்லை. அதன்பிறகு அவரின் உடல்நிலையில் முன்னேற்றமே இல்லாமல் போய்விட்டது. உடனே ஐ.சி.யூ-வுக்கு சோ மாற்றப்பட்டார். அதே நேரம் ஜெயலலிதாவின் உடல்நிலையும் சீரியஸ் ஆகிக் கொண்டிருந்தது. தீவிர சிகிச்சைப் பிரிவில் இரண்டு பேரின் உயிர்களும் போராடிக் கொண்டிருந்தன. ஜெயலலிதா உயிர் பிரிந்தபோது அந்தச் செய்தி சோவின் நினைவுக்குப் போய்ச் சேரவில்லை. அடுத்த 30 மணி நேரத்தில் சோவின் உயிரும் அவர் உடலைவிட்டுப் பிரிந்து போனது.

‘உங்களுக்கு முன்னாடி நான் போயிடணும்!’ என்கிற ஜெயலலிதாவின் வார்த்தைகள் சோவின்ஆன்மாவுக்குப் போய் சேர்ந்திருக்குமா?

# நியூஸி. அணி எதிர்பாரா வெற்றி 49 ஆண்டுகளுக்குப் பிறகு சாதனை




280 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் 5ம் நாளில் களமிறங்கிய பாகிஸ்தான் அணி 156 ரன்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து படுதோல்வி அடைந்ததையடுத்து நியூஸிலாந்து அணி பாகிஸ்தானை அயல் மண்ணில் 49 ஆண்டுகளுக்குப் பிறகு டெஸ்ட் தொடரில் 2-1 என்று வென்றுள்ளது.

அபுதாபியில் நடைபெற்ற டெஸ்ட்டில் முதல் இன்னிங்சில் நியூஸிலாந்து அணி 274 ரன்களை எடுக்க பாகிஸ்தான் அணி 348 ரன்கள் எடுத்து 74 ரன்கள் முன்னிலை பெற்றது. தொடர்ந்து ஆடிய நியூஸிலாந்து அணி தன் 2வது இன்னிங்சில் 60/4 என்று தடுமாறிய போது கேப்டன் கேன் வில்லியம்சன் பந்துகள் பயங்கரமாகத் திரும்பும் பிட்சில் தனது தனித்துவமான உத்தியில் மிகப்பிரமாதமான ஒரு இன்னிங்சை கட்டமைத்து 139 ரன்களை எடுக்க, அவருடன் ஹென்றி நிகோல்ஸ் தனிப்பட்ட முறையில் 126 ரன்களைக் குவிக்க இருவரும் சேர்ந்து மிக முக்கியமான 212 ரன்களை 5வது விக்கெட்டுக்குச் சேர்த்தது.

மிகநெருக்கடியான தருணத்தில் இந்த ஆண்டில் எடுகப்பட்ட இந்த 2 சதங்களும் இந்த இரட்டைச் சத கூட்டணியு நியூஸி கிரிக்கெட்டில் மட்டுமல்ல உலகம் முழுதும் பேசும். இதனையடுத்து நியூஸிலாந்து அணி 353/7 என்று டிக்ளேர் செய்து பாகிஸ்தானுக்கு 280 ரன்கள் இலக்கு நிர்ணையித்தது, பாகிஸ்தான் இலக்கை நோக்கிச் சென்றால் ரிஸ்க், அதனால் ட்ரா செய்ய வாய்ப்பிருந்தது, ஆனால் அறிமுக வீரர் வில்லியம் சோமர்வில் ஒரே ஓவரில் ஹாரிஸ் சோஹைல், ஆசாத் ஷபிக்கை வெளியேற்ற பாகிஸ்தான் மகாசரிவு உறுதி செய்யப்பட்டது. 156 ரன்களுக்குச் சுருண்டு பாகிஸ்தான் படுதோல்வி அடைந்ததோடு, அதிர்ச்சியடைந்தது, நியூஸிலாந்து அணிக்கு சற்றும் எதிர்பாரா வெற்றி கேன் வில்லியம்சின் பிரில்லியன்ஸினால் விளைந்தது.

நியூஸி. தரப்பில் டிம் சவுதி, படேல், சோமர்வில் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தி பாகிஸ்தான் வெற்றிக் கனவுக்கு குழிதோண்டினர். தனது கடைசி டெஸ்ட்டை ஆடும் மொகமது ஹபீஸ் 8 ரன்களில் சவுதியின் அழகான பந்தில் பவுல்டு ஆனார். அசார் அலி, கொலின் டி கிராண்ட் ஹோம் பந்தை எட்ஜ் செய்து வெளியேறினார்.

அறிமுக ஆஃப் பிரேக் பவுலர் வில்லியம் சோமர்வில், ஹாரிஸ் சோஹைல், ஆசாத் ஷபிக் இருவரது விளிம்புகளையும் அபாரமாகப் பிடிக்க அடுத்தடுத்த பந்துகளில் வெளியேறினர். பாபர் ஆஸமும் எல்.பி.யில் வெளியேறியிருப்பார், ஆனால் ரிவியூ அவரைக் காப்பாற்றியது. உணவு இடைவேளைக்கு முன்னதாக அஜாஸ் படேல், இமாம் உல் ஹக்கின் (22) விக்கெட்டை வீழ்த்தினார். 55/5 என்ற நிலையில் பாபர் ஆஸம், கேப்டன் சர்பராஸ் அகமட் (28) ஸ்கோரை 98க்கு உயர்த்தினர், அப்போது சர்பராஸ் அகமட் , சோமர்வில் ஆஃப் பிரேக்கை மட்டைக்கும் பேடுக்கும் இடையே விட்டு பவுல்டு ஆனார்.

பிலால் ஆசிப் (12), பாபர் ஆஸம் இணைந்து ஸ்கோரை 131க்குக் கொண்டு சென்றனர். அப்போது பிலால் ஆசிப், சவுதியின் வைடு பந்தை துரத்தி எட்ஜ் ஆகி வெளியேறினார். யாசீர் ஷாவையும் சவுதி வீழ்த்த பாபர் ஆஸம் ஒரு முனையில் போராடி 51 ரன்கள் எடுத்து கணநேர கிறுக்குத் தனத்தில் படேல் பந்தை மேலேறி வந்து வெறுப்பில் சுற்றினார் சரியாகச் சிக்கவில்லை. மிட் ஆஃபில் கேட்ச் ஆனது. கடைசியில் வெற்றிக்கான இறுதி விக்கெட்டாக ஹசன் அலி, படேலிடம் விழ, நியூஸிலாந்து வரலாற்று வெற்றிக் கொண்டாட்டம் நிறைவேறியது.

ஆட்ட நாயகனாக கேன் வில்லியம்சனும், தொடர் நாயகனாக யாசிர் ஷாவும் தேர்வு செய்யப்பட்டனர். பாகிஸ்தானால் மறக்க முடியாத, திரும்பத் திரும்ப கெட்ட சொப்பனமாக வந்து கொண்டிருக்கும் ஜீரணிக்க முடியா தொடர் தோல்வியை சந்தித்துள்ளது அந்த அணியை புரட்டிப் போடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# என் முதல் தொடரில் நான் மிக மோசமானவனாக இருந்தேன்



## மனம் திறந்த விராட் கோலி

ஃபாக்ஸ் ஸ்போர்ட்ஸ் டிவிக்காக முன்னாள் அதிரடி விக்கெட் கீப்பர் பேட்ஸ்மென் ஆடம் கில்கிறிஸ்ட் எடுத்த பேட்டியில் இந்திய அணியின் கேப்டன் விராட் கோலி மனம்திறந்து பேசினார்.

அதாவது ஸ்லெட்ஜிங், களத்தில் கோபமடைவது, ரசிகர்கள் கேலியைப் பொறுக்க முடியாமல் வினையாற்றுவது உள்ளிட்டவை பற்றிய கேள்விக்கு அவர் பதில் அளித்தார்.

விராட் கோலி கூறியதாவது:

எதுவரை என் எல்லை, எது எல்லை மீறுவது? எங்கு கோடு கிழிப்பது போன்றவை பற்றி எனக்கு நல்ல புரிதலெல்லாம் இல்லை. அப்படிப்பட்ட விஷயங்கள் குறித்து நான் வருந்துகிறேன் என்று கூறவரவில்லை, ஆனால் அவை தவறு என்று நினைக்கிறேன்.

நான் முக்கியமானதாகக் கருதும் தவறுகளைச் செய்யும் போது நான் அவற்றிலிருந்து பாடம் கற்றுக் கொள்கிறேன். ஆனால் பிறர் கருத்துக்காக நான் எப்போதும் மாற மாட்டேன், நான் நானாகவே இருக்க விரும்புகிறேன். நான் வேறொருவராக இருக்க ஒரு போதும் என்னால் முடியாது.

எனவேதான் நான் என் தவறுகளிலிருந்தே திருத்திக் கொள்கிறேன். என் தவறுகளை உணர்கிறேன், என் வாழ்க்கைப் பயணத்தில் அவற்றைத் திருத்திக் கொண்டு வருகிறேன்.

கடந்த 2 தொடர்களை விட நான் இப்போது மிகப்பெரிய அளவில் வித்தியாசமானவனாக வந்துள்ளேன். அதுவும் முதல் தொடரில் நான் மிக மோசமானவனாக இருந்தேன்.

நான் ஒருபோதும் துல்லியமாக உருவாக்கப்பட்ட பழைய கிரிக்கெட் பள்ளியைச் சேர்ந்த வார்ப்பு அல்ல , என் வழியை நான் கண்டுபிடித்துக் கொள்கிறேன். என் பயணத்தில் இதுவும் ஒன்று.

இவ்வாறு கூறினார் விராட் கோலி.

# ஐபிஎல் ஏலத்திலிருந்து கிளென் மேக்ஸ்வெல் ஏரோன் பிஞ்ச் விலகல்



இம்மாதம் நடைபெறும் ஐபிஎல் ஏலத்திருவிழாவிலிருந்து இரு ஆஸ்திரேலிய வீரர்களும் விலகியுள்ளனர். இந்திய அணியை டெஸ்ட் தொடரில் படுத்தி எடுத்த இங்கிலாந்தின் ஆல் ரவுண்டர் சாம் கரன் அடிப்படை விலை ரூ.2 கோடிக்கு தன்னை ஏலத்துக்கு அறிவித்துள்ளார். அதே போல் கடந்த சீசனில் மும்பை இந்தியன்ஸ் ஆலோசகராக இருந்த லஷித் மலிங்காவும் இம்முறை ஏலத்தில் களத்தில் குதிக்கிறார்.

மேக்ஸ்வெலை டெல்லி டேர் டெவில்ஸ் (இப்போது டெல்லி கேப்பிடல்ஸ்) அணி விடுவித்தது, ஏரோன் பிஞ்ச்சை கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி விடுவித்தது. இருவருமே பெரிய தொகைக்கு ஏலம் எடுக்கப்பட்ட வீரர்கள்.

இம்முறை ஏலத்தில் உள்ள பெரிய வீரர்களில் டேல் ஸ்டெய்ன், மெக்கல்லம், டி ஆர்க்கி ஷார்ட், கோரி ஆண்டர்சன், ஜெய்தேவ் உனாட்கட், யுவராஜ் சிங், ஷமி, அக்சர் படேல், சர்பராஸ் கான், சஹா, இஷாந்த் சர்மா உள்ளிட்டோர் உள்ளனர்.

உலகக்கோப்பை, ஆஷஸ் தொடர் என்று 2019-ம் ஆண்டின் தொடக்கம் ஆஸ்திரேலிய அணிக்கு நெருக்கடியான ஷெட்யூல் இருப்பதால் ஐபிஎல் வேண்டாம் என்று கிளென் மேக்ஸ்வெலும், ஏரோன் பிஞ்சும் முடிவெடுத்துள்ளார்கள்.

# ஆதிக்கத்தை முடித்து வைத்த லூகா மோட்ரிச்

கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக உலக கால்பந்தாட்டத்தின் தலைசிறந்த விருதான பலான் டி ஆர் என்ற ஆண்டின் சிறந்த கால்பந்து வீரருக்கான விருதில் மெஸ்ஸியும், ரொனால்டோவும் ஆதிக்கம் செலுத்தி வந்தனர். ஆனால் தற்போது குரேஷிய மிட்பீல்டர் லூகா மோட்ரிச் பலான் டி ஆர் விருதைத் தட்டிச் சென்று மெஸ்ஸி, ரொனால்டோ ஆதிக்கத்தை முடிவுக்குக் கொண்டு வந்தார்.

2018 உலகக்கோப்பைக் கால்பந்தில் குரேஷிய அணியை முதல் முறையாக இறுதிக்குக் கொண்டு வந்ததில் லூகா மோட்ரிச்சின் மின்னல்வேக ஆட்டமும் முக்கியக் கட்டத்தில் கோல்களும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தின.

33 வயதாகும் மோட்ரிச் 3வது தொடர் சாம்பியன்ஸ் லீக் பட்டத்தை வென்றார். உலகக்கோப்பை கால்பந்தில் சிறந்த வீரருக்கான தங்கப்பந்து விருதையும் லூகா மோட்ரிச் தட்டிச் சென்றது குறிப்பிடத்தக்கது.

மெஸ்ஸி, ரொனால்டோ இல்லாமல் முன்னதாக 2007-ல் பிரேசில் நட்சத்திர வீரர் காகா பலான் டி ஆர் விருதை வென்றிருக்கிறார். கிறிஸ்டியானோ ரொனால்டோ டாப் 10 வீரர்களில் 2ம் இடத்திலும் லியோனல் மெஸ்ஸி 5ம் இடத்திலும் உள்ளனர். ஆண்டியோன் க்ரீஸ்மேன் 3வது இடத்திலும் உலகக்கோப்பையில் கலக்கிய கிலியன் மபாப்பே 4ம் இடத்திலும் உள்ளனர், இருவரும் உலக சாம்பியன் பிரான்ஸ் அணியைச் சேர்ந்தவர்கள்.

# நண்பனைத் தீவிரவாதியாக்கிய போலி ஆதாரம்! - கைதான ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரரின் சகோதரர்

இலங்கை மாணவர் ஒருவரை போலி ஆவணங்கள் மூலம் போலீஸில் சிக்கவைத்த புகாரில் ஆஸ்திரேலிய அணியின் பேட்ஸ்மேன் உஸ்மான் கவாஜாவின் சகோதரர் ஆர்ஸ்லான் கவாஜா கைது செய்யப்பட்டிருக்கிறார்.

உஸ்மான் கவாஜாவின் மூத்த சகோதரரான ஆஸ்லான், நியூ சவுத்வேல்ஸ் பல்கலைக் கழகத்தில் பணியாற்றி வருகிறார். அந்தப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டப் படிப்புப் படித்துவந்த முகமது கமீர் நிஜாமுதீன் என்பவர், ஆஸ்திரேலிய முன்னாள் பிரதமர் மால்கம் டர்ன்புல் உள்ளிட்ட அரசியல் தலைவர்களைக் கொல்ல சதித்திட்டம் தீட்டியதாகக் கடந்த ஆகஸ்ட் மாதத்தில் கைது செய்யப்பட்டார். அதற்கு ஆதாரமாகப் போலீஸார், நிஜாமுதீன் எழுதியதாக நோட் புக் ஒன்றைக் கைப்பற்றியிருந்தனர். அவர் மீது தீவிரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. விசாரணையில், அந்த நோட்டில் இருந்த கையெழுத்து நிஜாமுதீனுடையது அல்ல என்பது தெரியவந்தது. இதையடுத்து, அவர் கடந்த அக்டோபர் மாதத்தில் விடுவிக்கப்பட்டார். தீவிரவாதத் தடுப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்ட நிஜாமுதீன் சுமார் ஒரு மாத காலம் சிறையில் கழித்தார்.

தன்னைத் தீவிரவாதியாகச் சித்திரித்த போலீஸார் மீது மான நஷ்ட ஈடு வழக்கு தொடரவும் நிஜாமுதீன் திட்டமிட்டிருந்தார். மேலும், பணியிடத்தில் தன் மீதான காழ்ப்பு உணர்ச்சியால் சிலர், தன்னை இதில் சிக்கவைத்திருப்பதாகவும் அவர் தொடர்ச்சியாகக் கூறி வந்தார்.

இந்தநிலையில், வழக்கு விசாரணையில் புதிய திருப்பமாக நிஜாமுதீனைப் போலி ஆவணங்கள் மூலம் சிக்கவைத்ததாக ஆஸ்திரேலிய அணியின் பேட்ஸ்மேன் உஸ்மான் கவாஜாவின் சகோதரர் ஆர்ஸ்லான் கவாஜா கைது செய்யப்பட்டிருக்கிறார். அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில், பெண் ஒருவர்பால் கொண்ட ஈர்ப்பு காரணமாக நிஜாமுதீனைச் சிக்க வைத்ததாக அவர் போலீஸாரிடம் தெரிவித்ததாகத் தகவல் வெளியாகியுள்ளது.







இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய சிட்னி நகர காவல்துறையின் துணை ஆணையர் மைக் வில்லிங், ‘நிஜாமுதீனுக்கு ஏற்பட்ட அசௌகரியத்துக்கு வருந்துகிறோம். தற்போது விசாரணை சரியான பாதையில் செல்கிறது’ என்று தெரிவித்திருக்கிறார்.

இந்தியா - ஆஸ்திரேலிய அணிகள் இடையிலான முதல் டெஸ்ட் போட்டி வரும் 6-ம் தேதி தொடங்குகிறது. இந்தத் தொடரில் உஸ்மான் கவாஜா விளையாடவுள்ள நிலையில், அவரின் சகோதரரைப் போலீஸார் கைது செய்திருப்பது ஆஸ்திரேலியாவில் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. இதுகுறித்து உஸ்மான் கவஜாவிடம் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு, ‘போலீஸ் விசாரணையில் இந்த விவகாரம் இருப்பதால், இதுகுறித்து கருத்து எதுவும் தெரிவிக்க விரும்பவில்லை’ என்றிருக்கிறார்.

# நானே ராஜா!

‘இது நாங்கள் பார்த்து வியந்த கார்ல்ஸனின் விளையாட்டு அல்ல’ என்கிறார் கிராம்னிக். 15 ஆண்டுகளை சதுரங்கத்தை ஆண்ட கேரி காஸ்ப்ரோவோ, ‘ கார்ல்ஸன் பதட்டம் அடைகிறாரோ’ என சந்தேகத்துடன் தெரிவித்தார். ஆம், இந்த டோர்னமென்ட் கார்ல்ஸனுக்கு அப்படித்தான் இருந்தது. கார்ல்ஸனுக்கு எதிராக ஆடிய ஃபேபியான கருணா வென்றிருந்தால், பாபி ஃபிஷருக்குப் பின், ஒரு அமெரிக்கர் சாம்பியன்ஷிப் கோப்பையை வென்றுவிட்டார் என பத்திரிகைகள் எழுதியிருக்கும். இந்த டோர்னமென்ட் கார்ல்ஸனுக்கு ரொம்பவும் ஸ்பெஷல். ஒரு போட்டியில் கூட தோற்காமல் கார்ல்ஸன் வென்ற முதல் டோர்னமென்ட் இது தான்.

50 மணி நேரப் போட்டி, ஒரு கைகுலுக்கலில் முடிவுக்கு வந்தது. உலகெங்கிலும் உள்ள செஸ் பிரியர்கள், யார் அடுத்த செஸ் சாம்பியன் என எதிர்பார்த்துக் காத்திருக்க, நான்காவது முறையாக சாம்பியன்ஷிப் பட்டத்தை வென்றுள்ளார் மேக்னஸ் கார்ல்ஸன்.

இந்தியாவில் செஸ் பிரபலமாகக் காரணமானவர் கிராண்ட் மாஸ்டர் விஸ்வநாதன் ஆனந்த். 2007 - 2012-ம் ஆண்டு வரை, தொடர்ந்து நான்கு முறை உலக செஸ் சாம்பியன்ஷிப் பட்டத்தை வென்ற ஆனந்த், ஐந்தாவது முறையாகவும் கண்டிப்பாக கோப்பையை வெல்வார் என்று பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது. ஏனென்றால், 2013 உலக சாம்பியன்ஷிப் போட்டிகள் நடந்தது சென்னையில்! செஸ் விளையாட்டில் 23 ஆண்டுகள் அனுபவம் பெற்ற ஆனந்தும், 23 வயதேயான நார்வேயின் மேக்னஸ் கார்ல்ஸனும் மோதினர்.

ஆனால், ‘ஹோம் கிரவுண்ட்’ஆனந்துக்கு நெருக்கடியைத் தந்தது என்பதே நிதர்சனம். தவிர, கார்ல்ஸன் - ஆனந்த் இருவருக்கும் இடையிலான ஜெனரேஷன் கேப் பெரிய விஷயமாகப் பேசப்பட்டது.‘கம்ப்யூட்டர் கேமில்’ கில்லியான கார்ல்ஸன் நேர்த்தியான ஆட்டத்தால் உலகக் கோப்பையைத் தட்டிச்சென்றார். அடுத்த ஆண்டு ரீமேட்ச். ஆனந்த் - கார்ல்ஸன் மோதிய 2014 உலக சாம்பியன்ஷிப் போட்டி ரஷ்யாவில் நடைபெற்றது. இந்த முறையும் ஆனந்துக்குத் தோல்வி. 2016-ம் ஆண்டு சாம்பியன்ஷிப் போட்டியில், இளம் வயதிலேயே கிராண்ட் மாஸ்டரான ரஷ்யாவின் செர்ஜி கர்ஜகினைத் தோற்கடித்த கார்ல்ஸன், ஹாட்ரிக் கோப்பையை அடித்து, ‘செஸ் உலகின் ராஜா’வாக உருவெடுத்தார். மூன்று முறை உலக சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது மட்டுமன்றி, செஸ் உலகில் ஜென்நூ தலைமுறையின் ஃபேவரிட் ஆனார் கார்ல்ஸன்.



2018 உலக செஸ் சாம்பியன்ஷிப் போட்டிகள் லண்டனில் நடைபெற்றன. நார்வேயின் மேக்னஸ் கார்ல்ஸனும், அமெரிக்காவின் ஃபேபியான கருணாவும் மோதினர். இந்த முறையும் கார்ல்ஸன்தான் சாம்பியன்ஷிப் பட்டத்தை வெல்வார் என்று ரசிகர்கள் கணித்திருந்தனர். 20 நாள்கள், 50 மணி நேரம் நடைபெற்ற சாம்பியன்ஷிப் போட்டிகளின் முடிவில், கார்ல்ஸன்தான் சாம்பியன்! ஆனால், வரலாற்றில் இப்படி ஒரு போட்டியைக் கண்டதில்லை என செஸ் வட்டாரத்தில் பேச்சு!

கார்ல்ஸன் - கருணா இடையே நடந்த 12 ரெகுலர் போட்டிகளும் டிராவில் முடிந்தன. 132 ஆண்டுகள் செஸ் வரலாற்றில் முதன்முறையாக, ரெகுலர் போட்டிகள் அனைத்தும் டிராவில் முடிய, டை-ப்ரேக்கர் மூலம் வெற்றியாளரைத் தீர்மானிக்க முடிவு செய்யப்பட்டது. போட்டி மேலும் விறுவிறுப்பானது. 6 - 6 புள்ளிகள் பெற்றுச் சமநிலையில் இருந்த போட்டியாளர்களுக்கு, நான்கு சுற்றுகள் கொண்ட டை-பிரேக்கர் மிக முக்கியமானது. ஃபேபியானாவும் சாதாரணமானவர் அல்ல! சாம்பியன்ஷிப் போட்டியே என்றாலும், "நான்தான் ராஜா என்ற நினைப்போடு, கூல்-ஆட்டிட்யூட் உடன் விளையாடும் கார்ல்ஸனே, ஃபேபியவின் மிரட்டலான ஆட்டத்துக்குத் திணறினார்.

ஆனால், அது நீண்ட நேரம் அது நீடிக்கவில்லை. 12-வது போட்டியின் முடிவில், வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் இருந்தும், கார்ல்ஸன் போட்டியை டிரா செய்தார். கடைசி நொடி வரை கிடைக்கும் சிறிய வாய்ப்புகளையும், யுக்தியுடன் பயன்படுத்திப் போட்டியில் வெற்றி பெறும் கார்ல்ஸனுக்கு, டிரா செய்ய அறவே பிடிக்காது. ஆனால், சாம்பியன்ஷிப்பின் முக்கியப் போட்டியில் கார்ல்ஸன் டிரா செய்ததற்கு செஸ் நிபுணர்கள் விமர்சனம் செய்தனர். ‘வெற்றி பெற வேண்டிய போட்டியை கார்ல்ஸன் டிரா செய்தது அதிர்ச்சியளிக்கிறது’ என்று செஸ் ஜாம்பவன் கேரி கேஸ்ப்ரோவ் வருத்தம் தெரிவித்தார்.

கார்ல்ஸன் மாஸ்டர் பிளானோடுதான் போட்டியை டிரா செய்தார் என்பது அப்போது யாருக்கும் புரியவில்லை. ‘ராபிட்’ முறையில் தொடங்கிய டை-பிரேக்கரின் முதல் இரண்டு சுற்றுகளிலும் கார்ல்ஸன் வெற்றி பெற்றதால், மூன்றாவது சுற்றில் கட்டாய வெற்றி என்ற டென்ஷனில் களமிறங்கினார் ஃபேபியானா. மூன்றாவது சுற்றும் கார்ல்ஸன் வசமாக, 3-0 என்ற புள்ளிக்கணக்கில் நான்காவது முறையாக உலக செஸ் சாம்பியன் ஆனார் கார்ல்ஸன்!

முதல் இரண்டு போட்டிகளையும் வென்றவுடன் கார்ல்ஸனுக்கு , மூன்றாவது போட்டியை டிரா செய்தாலே போதும் என்கிற நிலை. கருணாவுக்கோ வென்றாக வேண்டும் என்கிற பிரஷர்.

‘மொசார்ட் ஆஃப் செஸ்’ என்றழைக்கபடும் கார்ல்ஸன், க்ளாசிக்கல் செஸ் மட்டுமன்றி, ராபிட் (Rapid), ப்ளிட்ஸ் (Blitz) எனப்படும் செஸ் முறையிலும் இவர்தான் கிங்! (ராபிட், ப்ளிட்ஸ் செஸ் முறையில், நகர்தலுக்கு நேரக்கட்டுப்பாடு வழங்கப்படும்) 2018 சாம்பியன்ஷிப்பின் போது, இரு வீரர்களிடையே ‘உங்களின் ஃபேவரைட் செஸ் ப்ளேயர் யார்?’ என்ற கேள்வி கேட்ட போது, ‘பாபி ஃபிஷர்’ என ஃபேபியானா பதிலளித்தார். மேக்னஸ் கார்ல்ஸனோ, ‘மைசெல்ஃப், மூன்று நான்கு ஆண்டுகளுக்கு முன் இருந்த கார்ல்ஸன்தான் என்னுடைய ஃபேவரிட்’ என்றார் சற்றும் யோசிக்காமல்!

12 போட்டிகளும் தொடர்ந்து டிரா ஆனதில் கார்ல்ஸனுக்குத் தெரியும், இது அவருடைய ‘பெஸ்ட்’ இல்லையென்று! விடாப்பிடியான மனநிலையும், வெற்றி பெற வேண்டும் என்ற வெறியும்தான் கார்ல்ஸனின் ஸ்டைல் ஆஃப் வின்னிங். டை-பிரேக்கரில் அவரது ஆட்டம் அதை நிரூபித்தன. "இந்தப் போட்டியில் தோல்வியடைந்திருந்தால், உலகக் கோப்பை சாம்பியன்ஷிப்பில் நான் விளையாடும் கடைசிப் போட்டியாக இருந்திருக்கும் என்றார் இந்த செஸ் சாம்பியன்.

உலக செஸ் தரவரிசைப் பட்டியலில் தொடர்ந்து 8 ஆண்டுகளாக முதல் இடத்தில் உள்ள கார்ல்ஸன், இன்னொருமுறை உலக சாம்பியனாகி விட்டால், GOAT பட்டியலில் இடம்பிடிக்க வாய்ப்புள்ளது.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் (தனியார்) நிறுவனத்தின் ஜாஎல, மினுவான்கொட வீதி, 302/1/A இலக்கத்தில் அமைந்துள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டு 09.12.2018 ஞாயிற்றுக்கிழமை அன்று வெளியிடப்பட்டது.

# கல்வி வளர்ச்சியை ஏற்படுத்த புத்தாண்டில் தயாராகுங்கள்; கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எம்.கே.எம்.மன்சூர்

**சேனையூர் நிருபர்**

கிழக்கு மாகாண மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளை அதிகரிப்பதற்கு அடுத்த ஆண்டு தொடக்கம் விசேட வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்படவுள்ளதால் அதற்கேற்ப பாடசாலை அதிபர்களும் ஆசிரியர்களும் செயலாற்ற வேண்டுமென, கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எம்.கே.எம். மன்சூர் கோரிக்கை விடுத்துள்ளார்.

கிழக்கு மாகாணப் பாடசாலை மாணவர்கள் சந்திக்கின்ற பொதுப் பரீட்சைகளின் அடைவு மட்டங்களை அதிகரிக்கும் பொருட்டு, எதிர்காலத்தில் மாகாணக் கல்வித் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் குறித்து ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில் தொடர்ந்து குறிப்பிட்டுள்ள அவர், ஒரு வருடத்தில், மூன்று பொதுப் பரீட்சைகளை மாணவர்கள் சந்திக்கின்ற நிலையில், தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறே, கிழக்கு மாகாணத்தின் கல்வி வளர்ச்சி வீதத்தில் பெரும் பாதிப்பைச் செலுத்துவதாகவும் அதில் கூடுதலாகக் கவனஞ்செலுத்த வேண்டிய தேவை உணரப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

இதற்காக எதிர்வரும் 2019ஆம் ஆண்டில் இடம்பெறவுள்ள புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான முதலாவது வேலைத்திட்டமாக நிலையறி பரீட்சையொன்று, கடந்த மாதம் 28ஆம் திகதியன்று மாகாணத்தின் அனைத்துப் பாடசாலைகளிலும் நடத்தப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பரீட்சைப் பெறுபேற்றை, பாடசாலை, கோட்டம், வலயம் ஆகிய மட்டங்கள் கவனத்திற்கொண்டு அடுத்தாண்டுக்கான செயற்றிட்டத்தை அமைத்துக்கொள்ள வேண்டுமென்றும் கோரியுள்ள அவர், இந்தச் செயற்றிட்ட முறைமையை கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கும் அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமென்றும், கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் தனதறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.




# பெரிய கல்லாறு இந்து இளைஞர் மன்ற பாலர் பாடசாலையின் பரிசளிப்பு விழா

**பெரியகல்லாறு நிருபர்**



பெரியகல்லாறு இந்த இளைஞர் மன்றத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாபெரியகல்லாறு சர்வார்த்த ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தின் கணக்குப்பிள்ளைகமல்ராஜ தலைமையில் இந்து கலாசார மண்டபத்தில்நடைபெற்றது.

ஆத்மீக அதிதியாக சர்வார்த்த ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ ச.மேகானந்தக் குருக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார். பிரதம அதிதி தனதுஉரையில் பாலர் பாடசாலை ஆசிரியர்களின் அர்ப்பணிப்புடன் கூடிய கடினமான பணியை வெகுவாகப் பாராட்டிப் பேசினார். பெற்றோர் தங்கள் பிள்ளைகளை வீட்டில் வைத்து பராமரிப்பதில் பலத்த சிரமங்களை எதிர்கொள்ளுகின்றனர். ஆனால் பெற்றோர் பாலர் பாடசாலையில் பிள்ளைளளைச் சேர்த்தபின் தங்கள் கடமை முடிந்ததென இருந்துவிடுகின்றனர்.

ஐம்பதிற்கு மேற்பட்ட மாணவர்களை பாலர் பாடசாலையில் பராமரிப்பதென்பது சவாலுக்கரிய விடயம். எனவே பெற்றோர் ஆசிரியர்களுக்கு தங்களின் பூரணஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

மேற்கூறிய கருத்து யதார்த்தமானது என்பதற்கு மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் குறித்த அசிரியர்களின் சமூகப் பொறுப்பு மிக்கது என்பது இங்குசுட்டிக்காட்டத் தக்கது.

தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும். இளமையில் கல்வி சிலையில் எழுத்து என்பதெல்லாம் பெறுமதியான பொருள் பொதிந்த பொன்மொழிகள்.

இது இந்தச்சிறார்களின் எதிர்காலத்தை தீர்மானிப்பது.

இந்நிலையில் எமது கலை கலாசாரத்தை பிஞ்சு மனங்களில் பதிக்க வேண்டியபாரிய பொறுப்பும் அவர்களைச் சார்ந்து நிற்கின்றது. ஆனால் இங்கு நடைபெற்றகலை நிகழ்வுகள் அனைத்துமே (ஒரு கிகழ்வை தவிர) எமது கலை கலாசாரத்தைபிரதிபலிக்காத மிகந்த கவலை அளிக்கும் விடயமாகம்.

இன்று இளம் சமூகம் வழிதவறிச் செல்வதற்கும் ஒழுக்க மீறல்களுக்கும் அனேகமான தமிழ் சினிமா படங்கள் வழிவகுத்துக் கொடுக்கின்றன என்பதுகசப்பான உண்மையாகும்.

எனவே சிறார்களை சரியாக கையாளாவிட்டால் அவர்களின் எதிர்காலம் பாழாகி விடும். எமது பாரம்பரிய கலைகளான கும்மி,கோலாட்டம், காவடி, கரகம் மற்றும் பரதம் போன்ற கலைகளை அறியாதவர்களாகவே இவர்கள் வளர்ந்துவிடுவார்கள். அருகிவரும் எமது பாரம்பரிய கலைகளை கட்டிக்காக்க வேண்டிய பாரிய பொறுப்பும் பாலர் பாடசாலை ஆசிரியர்களிடமே தங்கியிருக்கின்றது.

இவற்றைத் தவிர்த்து சினிமா பாடல்களுக்கு மட்டும் நடன நிகழ்வகளை தயார்செய்தமையானது எற்றுக்கொள்ளத்தக்கதல்ல. ஆனால் மாணவர்களிடம் நல்ல திறமை இருக்கின்றது எனபதை அவை எடுத்ததக்காட்டவே செய்தன.

எனவே எமது பாரம்பரிய கலை நிகழ்வகளையும் அவர்களால் திறமையாகவெளிப்படுத்த முடியும். எனவே எதிர்காலத்தில் இத்தகைய தவறுகள் இடம்பெறாமல் இருப்பது அவசியமாகும்.

பொறுப்பு வாய்ந்த இந்து இளைஞர் மன்றத்தின் கீழ் இயங்கும் பாலர் பாடசாலை ஒழுங்கு செய்யும் பரிசளிப்ப விழா அதன் தரத்தை வெளிப்படுத்த வேண்டும். அது தவறவிடப்பட்டிருப்பது எதிர்காலத்தில் தவிர்க்கப்பட வேண்டும்.

நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்டிருந்த தலைவர் சமூகமளிக்கவில்லை. அழைப்பிதழும் உரியமுறைப்படி தயாரிக்கப்படவில்லை. அழைப்பிதழில் ஒளிவிழாவும் என்றுகுறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் மேடையில் அது சம்பந்தமாக எதுவுவம்இடம்பெறவில்லை. எனவே எதிர்காலத்தில் இத்தகைய குறைபாடுகள் சமூகப்பொறுப்புடன் நீக்கப்பட வேண்டும்

# சமாதான நீதவான்

**பெரியகல்லாறு நிருபர்**



பெரியநீலாவணையைச் சேர்ந்த சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை அண்மையில் கல்முனை மாவட்ட நீதிபதி ஜே.பி.பிரசாக் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிபதியாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் கல்முனை வெஸ்லி உயர்தர பாடசாலையின் பழைய மாணவராவார். களுதாவளை திருஞானசம்பந்தர்குருகுலத்தின் இயக்குனர் சபை உறுப்பிராவார். ஓய்வ பெற்ற நிருவாக உத்தியோகத்தரும். சிறந்த சமூகசேவையாளரும் எழுத்தாளருமாவார்.

*****



மட்டக்களப்பு ஆனைப்பந்தி கோயில் வீதியைச் சேர்ந்த பிரபல இளம் தொழிலதிபர் முத்துலிங்கம்துதீஸ்வரன் அண்மையில மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி த.கருணாகரன் முன்னிலையில் சமாதான நீதிவானாக் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் ஆனைப்பந்தி இந்து மகளிர் பாடசாலையில் ஆரம்ப கல்வியையும் பின்னர் மட்டகளப்பு மத்தியகல்லூரியில் உயர்கல்வியையும் பெற்றவராகும். சமூக. சமய பணிகளில் முன்னணிசெயற்பாட்டாளராக இருந்து வருகின்றார்.

ஆனைப்பந்தி சமூக நற்பணி மன்றத்தின் தலைவராகவும் ஆனைப்பந்தி விக்கினேஸ்வரா அலயசெயலாளராகவும், மண்முனை வடக்கு அரசசார்பற்ற நிறுவனங்களின் சம்மேளன சகவாழ்வு தலைவராகவும் புளியந்தீவு பல்சமய ஒன்றிய உறுப்பினராகவும் மட் பலநோக்க கூட்டுறவுச் சங்க இயக்குனர் சபை உறுப்பினராகவும் பதவி வகிக்கின்றார்.

# நிவாரணப் பொருட்கள் வழங்கி வைப்பு

**துறைநீலாவணை நிருபர்**

ஞானம் பவுண்டேஷன் நிறுவனத்தினால் போரதீவுப்பற்று செயலகப் பிரிவுக்குட்பட்ட



வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கான நிவாரணப் பொருட்கள் வழங்கும் நிகழ்வு, பிரதேச செயலாளர் இ.ராகுலநாயகி தலைமையில் அண்மையில் இடம்பெற்றது

செயலகப் பிரிவுக்குட்பட்ட சங்கர்புரம், முனைத்தீவு, பட்டாபுரம் ஆகியவற்றிலுள்ள 300 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளும் 100 குடும்பங்களுக்கு நுளம்பு வலைகளும் இருபது குடும்பங்களுக்கான 200 கூரைத்தகடுகளும் இதன் போது வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மட்டு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன், உதவி பிரதேச செயலாளர் சி.புவனேந்திரன், நிர்வாக உத்தியோகத்தர் சி.உமாபதி ஆகியோரும் இதன்போது கலந்துகொண்டனர்.

# உளவளத்துணையாளர்களுக்கு செயலமர்வு

**கல்லடி நிருபர்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் போதைப்பாவனையில் சிக்கியுள்ளவர்களை அதில் இருந்து மீட்டு சமூகத்தில் இணைக்கும் பணியை முன்னெடுக்கும் வகையில் உளவளத்துணையாளர்களுக்கான விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்ட உளநல நிலையத்தின் ஏற்பாட்டில் இந்த பயிற்சிகள் உளவளத்துணையாளர்களுக்கு வழங்கப்பட்டன.

கடந்த எட்டு தினங்களாக மயிலம்பாவெளி கிறிஸ்த மண்டபத்தில் நடைபெற்ற இந்த பயிற்சியின் நிறைவில் பயிற்சிகளைப்பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.



மட்டக்களப்பு மாவட்ட உளநல நிலையத்தின் இயக்குனர் அருட்தந்தை போல் சற்குணநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அமெரிக்காவினைச் சேர்ந்த உளவளத்துணையாளர் டாக்டர் மைக்கல் மக்னட்டி கலந்துகொண்டு பயிற்சிகளை வழங்கிவைத்தார்.

இதன்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பல்வேறு பகுதிகளிலும் இருந்து 40க்கும் மேற்பட்ட உளவளத்துணையாளர்கள் கலந்துகொண்டனர்.

இந்த பயிற்சியில் போதைப்பொருள் பாவனையில் உள்ளவர்களை அதில் இருந்து மீட்டு சமூகத்தில் நல்ல பிரஜையாக இணைத்தல் அவர்களின் செயற்பாடுகளை சமூகம் நோக்கியதாக கொண்டுசெல்லும் வகையிலான உளவள செயற்பாடுகளை மேற்கொள்ளும் வகையில் வழங்கப்பட்டுள்ளன.

# களுவாஞ்சிகுடி நியூ ஒலிம்பிக் கழகத்தின் தலைவராக ந.புருஷோத்மன் தெரிவு



52 வருட காலமாக மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிகுடி பிரதேசத்தில் கல்வி கலை விளையாட்டு சுகாதாரம் போன்ற பல்வேறு துறைகளினூடாக பிரதேச மக்களுக்கு சேவையாற்றி வரும் களுவாஞ்சிகுடி நியூ ஒலிம்பிக் விளையாட்டுக் கழகத்தின் புதிய நிர்வாகத் தெரிவு முன்னாள் கழக தலைவர் சிவஸ்ரீ.மு.அங்குசன் ஐயா தலைமையில் சீ.மூ.இராமாணிக்கம் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இதன் போது கழகத் தலைவராக ந.புருஷோத்மன் தெரிவாகியதுடன் செயலாளராக யோ.லிபியன் மற்றும் பொருளாளராக ர.பிரசன்னா ஆகியோர் தெரிவாகினர். கழகத்தின் 53வது வருட நிறைவினை அடுத்த வருடம் சிறப்பாக மேற்கொள்வது தொடர்பில் கலந்துரையாடி பல ஆக்க பூர்வமான முடிவுகள் எடுக்கப்பட்டதுடன் எதிர்வரும் காலங்களில் இப் பிரதேச மக்களுக்கு ஆற்ற வேண்டிய சமூக சேவை சார்ந்த செயற்பாடுகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டதுடன் இந் நிகழ்வில் கழகத்தின் சிரேஷ்ட உறுப்பினர்கள், கல்விமான்கள், புத்திஜீவிகள் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# மண்டபத்திற்கு அடிக்கல்

**பெரியகல்லாறு நிருபர்**

பெரியகல்லாறு சர்வார்த்த ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தில் கதிர்காமம் செல்லும் யாத்திரிகர்களுக்கான மண்டபத்திற்கானஅடிக்கல் நடும் விழா ஆலய வண்ணக்கர் தலைமையில் நடைபெற்றது. அடிக்கல்லை பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட பெரியகல்லாற்றைச் சேர்ந்த நகர அபிவிருத்தி மற்றும் மேல் மாகாண அமைச்சின்செயலாளர் பொன்னையா சுரேஸ் மற்றும் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியாவில்வரெத்தினம், கட்டட திணைக்கள பொறியியலாளர் கிருஸ்ணதாசன் ஆலய வண்ணக்கர் மூ.மன்மதராஜா ஆகியோர்அடிக்கல்லை நாட்டியமையும் குறிப்பிடத்தக்கது.

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களை ஆற்றுப்படுத்த எமது கலைக் கூடம் முன்நிற்கும்!

**பெரியகல்லாறு நிருபர்**

அழிந்துவரும் கலைகளை பாதுகாப்பதற்கும், பண்பாட்டு விழுமியங்களை பாதுகாக்கும் நூதனசாலையாகவும் எமது கலைக்கூடம் இயங்கும். அத்துடன் ஆன்மீக நூலகமாகவும் அதை வளர்த்தெடுப்பதற்கும் நாம் ஆர்வம் கொண்டுள்ளோம்.

மேற்கண்டவாறு கிழக்கு மாகாண பண்பாட்டலுவகள் திணைக்களத்தின் ஆறு இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் செட்டிபாளையம் சிவன் ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்ட கலைக்கூடத் திறப்பு விழாவிற்கு தலைமை தாங்கிப் பேசிய ஆலயத்தின் தலைவர் மு.பாலகிரஸ்ணன் தெரிவித்தார்.

மண்முனை தென் எருவில் பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரெத்தினம் பிரதம அதிதியாக கலந்து கொண்டு கலைக்கூடத்ததைத் சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்தார். ஆலய தலைவர் தொடாந்து பேசுகையில்,

அதுமட்டுமின்றி கோர யத்தத்தால் பல்வேறு பாதிப்பிற்குள்ளான மக்கள் அதன் பாதிப்பிலிருந்து இன்னமும் மீளமுடியாதவர்களாகஇருக்கின்றார்கள்.; அவர்களின் மனநிலை இன்னமும் பாதிக்கப்பட்ட நிலையிலேயே இருக்கின்றது. அவர்களை ஆற்றுப்படுத்த வேண்டியபொறுப்பு, சமூகத்தோட ஒன்றிணைந்த செயற்படும் ஆலயம்



என்ற வகையில் அதிகமாகவே இருக்கின்றது.

எனவே அவர்களை சரியான முறையில் ஆற்றுப்படுத்தவதற்கும் நாம் திட்டமிட்டுள்ளோம். அந்தவகையில் இந்த கலைக்கூடத்தை அவர்களுக்குதியானப் பயிற்சி அளிப்பதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

ஆலயம் வெறும் வணக்க ஸ்தலமாக மட்டும் செயற்படாமல் இன்றைய எமது சமூகங்களைப் பொறுத்தவரையில அவர்களின் மேம்பாட்டிற்காகஅவர்கள் எதிடகொள்ளும் சவால்களை முறியடிப்பதற்றாக அனைத்து ஆலயங்களும் ஒன்றித்து அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டிய காலகட்டத்தில் நாம் இருக்கின்றோம் என்பதை மறந்துவிடலாகாது என்றும் தெரிவித்தார்.

# கிழக்கிலங்கையின் முதலாவது மாற்றுத்திறனாளிகளுக்கான சாரணர்படை

**செட்டிபாளையம் நிருபர்**

கிழக்கிலங்கையின் முதலாவது மாற்றுத்திறனாளிகளுக்கான சாரணர் படை சத்தியப்பிரமாணம் செய்து கொண்டது.

சர்வதேச மாற்றுத்திறனாளிக் தினத்தினை முன்னிட்டு கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மாற்றுத்திறனாளிகள் சம்மேளனம், விசேட தேவையுடையோர் சார்ந்து செயற்படும் அமைப்புகள் இணைந்து மட்டக்களப்பில் பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றன.





இதன் ஒரு பகுதியாக மட்டக்களப்பு மாவட்ட சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு வை.எம்.சீ.ஏ யின் அனுசரணையில் இந்த 32பேர் கொண்ட சாரணர் படை ஆரம்பிக்கப்பட்டு சின்னஞ்சூட்டப்பட்டது.

பிரதம அதிதியாக கிழக்கு மாகாண ஆளுனர் ரோஹித போகொல்லாகம, திருமதி ரோகித்த போகொல்லாகம, விசேட அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும், மாவட்ட சாரண சங்கத் தலைவருமான மா.உதயகுமார், கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.மன்சூர், கிழக்கு மாகாண சுகாதார மற்றும் சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் ஏ.எச்.எம்.அன்சார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட சாரண ஆணையாளர் தேசகீர்த்தி விவேகானந்த பிரதீபன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், கொழும்பு சாரணர் சங்கத் தலைமையகத்திலிருந்து கே.கபில குமார, எச்.ராஜரட்ண, மட்டக்களப்பு வை.எம்.சீ.ஏ யின் தலைவர் வி.டி.தர்சன், சாரணத் தலைவர்களான எஸ்.பற்றிக், என்.அன்பு, ரி.தினேஸ், வை.எம்.சீ.ஏ.யின் சாரண ஆசிரியர்களான திருமதி கே.ஐஸ்வர்யா, எவ்.செல்வமலர், ஜெ. சிந்தியா ஆகியோரும் பங்கு கொண்டனர்.

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தில் அவர்களைக் கௌரவிக்கும் வகையிலும், சமூகததில் அவர்களுக்கும் அங்கீகாரம் வழங்கும் வகையிலும், மாற்றுத் திறனாளிகளுக்கான முதலாவது சாரணர் படை உருவாக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட சாரண ஆணையாளர் தெரிவித்தார்.

# ஏழை மாணவர்களின் கல்விக்கு உரமூட்டியாக வாழ்ந்த ஒரு மனிதன்

## அரச அதிபர் புகழாரம்

**க.விஜயரெத்தினம்**

தனது சேவைக்காலத்தில் கறைபடியாத கையுடன் தானும் வாழ்ந்து, சமூகமும் சிறப்பாக வாழ்வதற்கு வழிகாட்டியாக இருந்து ஏழை மாணவர்களின் கல்விக்கு உரமூட்டியாக வாழ்ந்த ஒரு மனிதனாக வலயக்கல்வி பணிப்பாளராக பாஸ்கரனை நான் பார்க்கின்றேன் என மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் மா.உதயகுமார் தெரிவித்தார்.

ஓய்வு பெற்றுச் செல்லவிருக்கும் மட்டக்களப்பு வலயக்கல்வி பணிப்பாளர் பாஸ்கரன் அவர்களுக்கு உடற்கல்வி ஆசிரியர்களினால் ஏற்பாடு செய்திருந்த மணி விழா மட்டக்களப்பு வின்சன்ட் பெண்கள் பாடசாலையில் நடைபெற்றது. இவ்விழாவில் அதிதியாக கலந்து கொண்டு வாழ்த்துரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

உண்மையிலையே கல்விக்கும், சமயத்திற்கும், சமூகத்திற்கும், கலைக்கும்தன்னாலான தொண்டுகளையாற்றி இப்பிரதேச மாணவர்களை ஆற்றல் மிக்க மாணவ சமூதாயமாக உருவாக்குவதற்கு தொண்டாற்றிய நல்ல ஒரு தொண்டனுக்கு இந்த மணி விழாவினை நீங்கள் எடுத்துள்ளீர்கள். இது போற்றுதற்குரிய விழாவாகும்.




# முன்னாள் போராளிகளின் வாழ்க்கையை சீர்குலைக்காதீர்கள்

எந்த சம்பவம் நடைபெறும்போதும் அதற்குள் முன்னாள் போராளிகளை இழுத்துவிடுவது சாதாரணவிடயமாக மாற்றம்பெற்றுவருவதாக தேசத்தின் வேர்கள் அமைப்பின் தலைவர் க.பிரபாகரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு பயனியர் வீதியில் உள்ள அவரது அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனை வலியுறுத்தியுள்ளார்.

முன்னாள் போராளிகளின் சமூகசெயற்பாடுகள், அவர்களின் கருத்து சுதந்திரம் என்பனவற்றை முடக்கும் வகையிலான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றதா என்று சந்தேகம் ஏற்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

வவுணதீவில் பொலிஸார் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதை தமது அமைப்பு வன்மையாக கண்டிப்பதாகவும் குறித்த படுகொலை தொடர்பில் முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு குற்றவாளிகள் வெளிப்படுத்தப்படவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து கருத்து தெரிவித்தவர் அவர்,

வவுணதீவு பொலிஸார் கொலை தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ள அஜந்தனுக்கு ஐந்து குழந்தைகள் உள்ளது. மூன்று பிள்ளைகள் கல்வி கற்கின்றனர். இறுதிக்குழந்தை பிறந்து நாற்பது நாட்களேயாகின்றது. மிகவும்




வறுமையான குடும்பம்.

குறித்த பொலிஸார் சுடப்பட்ட காலப்பகுதியில் மிகவும் வேலைப்பளுவில் அவர் இருந்திருந்தார். மனைவி வைத்தியசாலையில் அறுவைசிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். சிறுபிள்ளைகள் வீட்டில் இருந்தார்கள். அதனைத்தவிர வெள்ள நிவாரணப்பணியொன்றையும் ஆரம்பித்திருந்தார்கள். அதன் பணியிலும் ஈடுபட்டிருந்தார். அவ்வாறான வேலைப்பளுவில் இருந்தவருக்கு இவ்வாறான செயற்பாடுகளை சிந்திப்பதற்குரிய தேவையில்லை.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருந்து புனர்வாழ்வளிக்கப்பட்ட போராளிகள் நிச்சயமாக இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடமாட்டார்கள். தேசத்தின் வேர்கள் அமைப்பினை குறித்த சம்பவத்துடன் தொடர்புபடுத்தி பலர் எழுதிவருகின்றனர் .இதுமிகவும் கவலைக்குரிய விடயமாகும். தேசியத்தின் வேர்கள் அமைப்பு கிழக்கில் மக்கள் மத்தியில் செல்வாக்கு பெற்றுவரும் நிலையில் அதனை சிதைக்கும் வகையில் பலர் செயற்பட்டுவருகின்றனர்.

தேசத்தின் வேர்கள் அமைப்பு இலங்கையின் இறையாண்மையினை பாதிக்கும் வகையில் எந்த செயற்பாடுகளையும் செய்யாது. எந்தவித வன்முறை சம்பவங்களுடனும் தொடர்புபட மாட்டார்கள் என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். மக்கள் நலன் சார்ந்த செயற்பாடுகளை மட்டுமே எமது அமைப்பு மேற்கொள்ளும்.

தற்போது மத்தியில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலையினால் இவ்வாறான சம்பவங்கள் நடைபெற்றிருக்கலாம்,யுத்த காலத்தில் இப்பகுதியில் செயற்பட்டுவந்த ஆயுதக்குழுக்களின் ஆயுதங்கள் களையப்படாத நிலையில் அதில் இருந்தவர்கள் இதனை செய்திருக்கலாம். இவ்வாறு செய்துவிட்டு முன்னாள் போராளிகளை இதனுடன் தொடர்புபடுத்தி தாங்கள் தப்பித்துக் கொள்வதற்காக இதனை செய்திருக்கலாம்.இதுவே எங்களது சந்தேகமாக இருக்கின்றது.

# பாவனைக்குதவாத நிலையில் கல்லடி வேலூர் 4ஆம் குறுக்கு வீதி

**க.விஜயரெத்தினம்**

கல்லடி வேலூர் நான்காம் குறுக்கு வீதி போக்குவரத்து செய்ய முடியாதநிலையில் காணப்படுகின்றது.

மட்டக்களப்பு மாநகரசபை பகுதிக்குட்பட்ட கல்லடி வேலூர் நான்காம் குறுக்கு வீதியானது போக்குவரத்து செய்ய முடியாதநிலையில் காணப்படுகின்றது என பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றார்கள்.

தற்போது பெய்கின்ற அடைமழை காரணமாக வீதியில் மழைநீர் தேங்கி வழிந்தோட முடியாதநிலையில் காணப்படுகின்றது. இதனால் தொற்றுநோய் பரவக்கூடிய வாய்ப்புள்ளது.மக்களின் வாக்குகளை அபகரித்துச் சென்ற மக்கள் பிரதிநிதிகள் வெறும் பார்வையாளர்களாக இருக்கின்றார்களே தவிர போக்குவரத்து செய்யமுடியாத வீதியின் அவலநிலை பற்றி இதுவரையும் கவனம் செலுத்தப்படவில்லை.மழைநீர் தேங்கி இருப்பதையும்,குன்றும் குழியுமாக காணப்படும் வீதியின் அவலநிலைக்கு மக்கள் பிரதிநிதிகள் இவ்வீதியை புனரமைப்பதற்கு இதுவரையும் நடவடிக்கை எடுக்கவில்லை.



எனவே இவ்வீதியை புனரமைக்க மட்டக்களப்பு மாநகரசபை ஆணையாளர், முதல்வர், நடவடிக்கை எடுத்து கல்லடி வேலூர் நான்காம் குறுக்கு வீதியை புனரமைப்பு தரவேண்டும் என்பதுதான் இவ்வீதியில் உள்ள மக்களின் எதிர்பார்ப்பாகும்.

# முன்பள்ளி பாடசாலைகள் சிறுவர்களை நல்வழிப்படுத்தி சமூகத்துடன் இணைப்பது பாராட்டுக்குரியது

**பெரியயகல்லாறு நிருபர்**

செட்டிபாளையம் சிவன்; பாடசாலையின் ஐந்தாவது அண்டு பரிசளிப்பு விழாவில் கலந்து கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். வருட இறுதியில மிகவும்வேலைப் பழுவுடனும். மன உழைச்சலுடனும் இருக்கும் இவ்வேளையில், இவ் விழா சிறார்களின் கலை நிகழ்வுகள் எமக்கு மன இறுக்கத்தினை தளர்த்தி உள நலமகிழ்வினை ஏற்படுத்தியுள்ளது.

மேற்கண்டவாறு பாடசாலையின் அதிபர் கே.துரைராஜா தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட மண்முனை தென்எருவில் பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரெத்தினம் தெரிவித்தார். அவர் தொடர்ந்து பேசுகையில்,

இங்கு அதிபர் குறிப்பிடுகையில் இதுவரை 400க்கு மேற்பட்ட சிறார்களை நல்வழிப்படுத்தி சமூகத்தை பாடசாலையுடன் இணைத்துள்ளதாகத் தெரிவித்தார். இங்குகவனிக்க வேண்டிய விடயம் நல்வழிப் படுத்தி என்பதாகும். இதுவே முன்பள்ளி பாடசாலைகளின் அடிநாதமாக அமைய வேண்டும். அதையே இன்று எமது சமூகம்எதிர்பார்க்கின்றது. அந்தவகையில் இப்பாடசாலையின் பணி பாராட்டுக்கரியது.

எந்தப் பிள்ளையும் நல்ல பிள்ளைதான் மண்ணில் பிறக்கையிலே. அவன் நல்லவனாவதும் தீயவனாவதும் அன்னை வளர்ப்பினிலெயே. அன்னையின்வளர்ப்பிலேயே இங்கு பிள்ளை அன்னையை விட்டு சற்று விலகி இருப்பது முன்பள்ளிகளிலேயே. இங்கு ஆசிரியர்கள் அப்பிள்ளை சார்ந்து எடுக்கும் இத்தனைவிதமான ஆரோக்கியமான ஈடுபாட்டிலேயே அப்பிள்ளையின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது.

இன்றைய காலத்தின் தேவையும் அதுதான். புணிள்ளைகளின் நடத்தை சமூகத்திற்குப் பொருத்ப்பாடுடையதாக இருக்க வேண்டும். அதுவே அப்பிள்ளையின்எதிர்கால வாழ்வுக்கு இடப்படும் உரமும் ஊக்கமுமாகும்.

அறநெறி கல்வி, நுண் கலையில் உள்ள ஆர்வம் அறிவு சார்ந்த ஈடுபாடு, திறன்விருத்தி கலாசார மற்றும் விழுமியம் மீதான புரிதல் என்பன முன்பள்ளி கல்வியில்முக்கியமானமை.

உண்மையில் இவ்விழா மிகவும் பிரமாண்டமான முறையில் நேர்த்தியாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. குழந்தைகளை இந்த விடயத்திற்கு;தயார்படுத்துவதென்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல. ஆசிரியர்கள் திரைமறைவில் பட்ட வேதனைகள், கஸ்ரங்களின் வெளிப்பாடே இவ் விழா சிறப்பாகஇருக்கக் காரணமாகும்.

அதிபரின் வழி நடத்தல், பெற்றோர்களின் பங்கேற்பு, பணிப்பாளர் சபையின் காலத்தால் அழியாத முயற்சிக்கு,பிரதேச செயலாளர் என்ற வகையில்வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்

ஒரு ஆலயம் ஆன்மீக பணிகளுக்கப்பால் பல்வேறு சமூக மட்ட அமைப்பக்களை உருவாக்கி பல் தளங்களில் எமது பிரதேசகல்வி, சமூக, மேம்பாடு சார்ந்தவேலைசெய்வதனை வெகுவாகப் பாராட்டுகின்றேன்.

இவ்வாலயத்தின் கீழ் இயங்கும் சமூக நிறவனங்களின் ஊடாக சமூகப் பணிகளில் மிகவும் முக்கியமானதும், காலத்தின் தேவையாகவும் இருப்பது இவ் முன்பள்ளி பாடசாலை ஊடாக சிறுவர்களை நல்வழிப்படுத்தி சமூகத்துடன் இணைக்கும் முயற்சியாகும்.

ஐந்து தலைமறையின் வளர்ச்சி நிச்சயம் இம் மண்ணுக்கு ஒரு மாற்றத்தினை ஏற்படுத்திக் கொடுக்கும். இதன் ஊடாக இக் கிராமத்தின் மண்வாசைன மேலும்மேம்படும் என்பதில் எனக்கு எவ்வித சந்தேகமுமில்லை.

இவ்வாலாலயத்தின் சமூக மட்ட அமைப்புக்களை நிர்வகிக்கும் திருவருள் சங்கத்தின் ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாக அமையும் பணி மேலம் சிறக்கவாழ்த்துக்கள் என்று குறிப்பிட்டார்.

# திருக்கோவில் பிரதேசத்தில் வறிய குடும்பங்களுக்கு நிவாரணம் கையளிப்பு



**திருக்கோவில் நிருபர்**

கனத்தமழை தொடருமானால் சுமார் 3500க்கும் மேற்பட் குடும்பங்களுக்கு தொழில் பாதிப்படையும் அபாயம்

அம்பாறை மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக தொடர்ந்து பெய்ந்துவரும் கனமழை காரணமாக வறிய மக்களின் அன்றாட தொழில் பாதிப்படைந்தள்ளது. இதனை கருத்தில் கொண்டு அவ்வாறான தொழில் பாதிப்படைந்த அடையாளப்படுத்தப்பட்ட 250 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளது.

இவ் உலர் உணவுப் பொதிகள் திருக்கோவில் பிரதேச செயலகத்தின் ஊடாக ஞானம் பவுண்டேன் நிறுவனத்தினால் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் திருக்கோவில் பிரதேசத்தில் ஸ்ரீவள்ளிபுரத்தில் 87குடும்பங்களும், காஞ்சிரம்குடா கிராமத்தில் 65 குடும்பங்களும், நேருபுரம் கிராமத்தில் 45குடும்பங்களும் உள்பட திருக்கோவில் பிரதேசத்தில் சுமார் 250 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக குழந்தைகள் உள்ள குடும்பங்களுக்கு போர்வைகள், நுளம்பு வலை வழங்கப்பட்டுள்ளதுடன் அனைவருக்கும் குடிநீர் போத்தல்களும் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை கூரைகள் சிதைவடைந்த 30 குடும்பங்களுக்கு கூரைத் தகடுகளும் வழங்கப்பட்டுள்ளதுடன் இவ் நிவாரண உதவிகளை திருக்கோவில் பிரதேச செயலாளர் எஸ்.ஜெகராஜன், மற்றும் அனர்த்த முகைமைத்துவ பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தர் டி.தயானந்தம், கிராம சேவர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சமூர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்து கொண்டு நிவாரணப் உதவிகளை வழங்கி வைத்தனர்.

# திருக்கோவில் பிரதேசத்தில் இரவு நேரங்களில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லை

**திருக்கோவில் நிருபர்**



அம்பாறை திருக்கோவில் பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட வீதிகளில் இரவு நேரங்களில் நடமாடிய சுமார் 35க்கும் மேற்பட்ட கட்டாக்காலி மாடுகளை திருக்கோவில் பிரதேசசபையினர் பிடித்து அடைத்துள்ளனர்.

திருக்கோவில் பிரதேச வீதிகளில் தொடர்ச்சியாக மாடுகள் கட்டாக்காலியாக நடமாடுவதாகவும் இதன் காரணமாக வீதி விபத்துக்கு அதிகம் ஏற்படுவதுடன் பாதசாரிகளும் சிரமத்தை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்நிலைமைகளை திருக்கோவில் பொலிசார் மற்றும் பொது மக்கள் திருக்கோவில் பிரதேச சபையின் கவணத்திற்கு கொண்டு வந்ததை அடுத்து திருக்கோவில் பிரதேசசபையின் தவிசார் இ.வி.கமலராஜனின் ஆலோசனைக்கு அமைவாக சபையின் செயலாளர் திருமதி ஜெயந்தி வீரபத்திரனின் துரித நடவடிக்கையின் ஊடாக நேற்று இரவு வீதியில் நடமாடிய சுமார் 35 கட்டாக்காலி மாடுகளை திருக்கோவில் பிரதேச சபையின் உத்தியோகத்தர்கள் பிடித்து திருக்கோவில் பிரதேச பொது நூலகத்திற்கு முன்பாக உள்ள காணியில் அடைத்துள்ளனர்.

இவ் கட்டாக்காலி மாடுகளை உரிமையாளர்கள் விரைவாக வந்து தங்களது மாடுகளை அடையாளப்படுத்தி பெற்றுக் கொள்ளாத நிலையில் மாடுகள் அனைத்தும் கால்நடைகள் பராமரிப்பு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும், தொடர்ந்தும் இவ்வாறு மாடுகளை வீதிகளில் நடமாட விடும் உரிமையாளர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் கடுமையான சட்டநடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் பிரதேச சபை தவிசாளர் தெரிவித்துள்ளார்.

# வவுணதீவு பொலீசார் படுகொலையானது எதிர்காலத்தில் மாவீரர் நினைவேந்தல் அனுஷ்டிக்காது தடைசெய்வதற்கான சூழ்ச்சி

## முன்னாள் எம்பி. சந்திரகாந்தன் தெரிவிப்பு

**திருக்கோவில் நிருபர்**

வடக்கு, கிழக்கில் மாவீரர் நாள் அனுஷ்டிக்கப்பட்டுக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் மட்டக்களப்பு வவுணதீவு இரு பொலிசார் சுடப்பட்டு படுகொலை செய்யப்பட்டமையானது எதிர்காலத்தில் மாவீரர்களுக்கான நினைவேந்தல் நிகழ்வுகளை செய்யாது தடைசெய்வதற்கான ஒரு சூழ்ச்சியே என தமிழ் தேசிய கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

அம்பாறை திருக்கோவில் பிரதேசத்தில் அவரது இல்லத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்படி கருத்தினை தெரிவித்திருந்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

தமிழ் மக்கள் தங்களின் தாயக வீரர்களை நினைவுகூறுவது அவர்களது உரிமை இதனை யாரும் தடைசெய்ய முடியாது. அன்று ஜே.வி.பி யானது தங்களது போராளிகளின் நினைவேந்தல்களை இரகசியமான முறையில் வீடுகளில் அனுஷ்டித்தார்கள் இன்று அவர்கள் தங்களின் வீரர்களுக்கான நினைவேந்தல்களை வெளிப்படையாக அனுஷ்டித்து வருகின்றனர். அதைபோன்று தமிழ் மக்களுக்கும் உரிமை உள்ளது.

இதனை எதிர்காலத்தில் தடைசெய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படலாம். அதற்கான ஒரு செயற்பாடாகவே மட்டக்களப்பு வவுணதீவ பொலிசார் படுகொலையினையும் அதனைத் தொடர்ந்து இடம்பெற்று வருகின்ற கைதுகள் என்பன சந்தேகத்தின் அடிப்படையில் நோக்க வேண்டியுள்ளதுடன் தமிழ் மக்களுக்கு ஒரு செய்தியை கொடுத்துள்ளது.

இதனை உறுதி செய்யும் வகையில் வடமாகாண இரரணுவ கட்டளைத்தளபதி ஊடகங்கள் ஊடாக கருத்துக்களை வெளியிட்டுள்ளார். அதாவது தமிழ் மக்களே உங்களுக்கு அமைதி வேண்டுமானால் நாங்கள் அமைதியை கொடுப்போம், அல்லது சோதனைச் சாவடிகள் வேண்டுமானால் சோதனைச் சாவடிகளை ஏற்படுத்தி கொடுப்போம். இது அவருடைய கருத்தாக இருக்கலாம். ஆனால் சர்வதேசம் இன்று இலங்கையை உன்னிப்பாக அவதானித்துக் கொண்டு இருக்கின்றன.



இந்நிலையில் மக்களுக்கு அரசியல் ரீதியான கருத்துக்களை பாராளுமன்றம் தெரிவிக்கும் போது இராணுவமும் தங்களது கருத்துக்களை தெரிவிப்பதேடு தங்களை நேசிக்கக்கூடிய தாங்கள் நினைத்ததை செய்யக் கூடிய தலைவரை எதிர்பார்க்கின்றனர்.

தமிழர்களின் போராட்டங்களை அடிக்கி ஒடுக்கி விட்டதாக நினைத்து எலனமாக பார்த்தவர்கள் தமிழர்களுக்கு இனி ஒன்றும் இல்லையென நினைத்தவர்கள் இன்று 14தமிழர்களிடத்தில் வந்து ஆட்சியை பெற்றுத்தாருங்கள் காப்பாற்றுங்கோ என கெஞ்சிக் கொண்டு இருக்கின்றார்கள் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

# மட்டக்களப்பு வவுணதீவு இரு பொலிசார் படுகொலையினை கண்டித்து திருக்கோவிலில் ஆர்ப்பாட்டம்

**திருக்கோவில் நிருபர்**

நாட்டின் இன ஒற்றுமைக்கும், சமாதானத்திற்கும் பங்கம் ஏற்படுத்தி மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படுவதற்கு இடமளிக்க வேண்டாம். நாம் அமைதியாக வாழ விரும்புக்கிறோம் மட்டக்களப்பு வவுணதீவில் இரு பொலிசாரை சுட்டு படுகொலை செய்தமையை வன்மையாக கண்டித்து திருக்கோவில் பிரதேசத்தில் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

இவ் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமானது திருக்கோவில் பிரதேச சமாதானத்தை விரும்பும் மக்கள் வணிகம் எனும் அமைப்பினால் திருக்கோவில் மணிக்கூட்டு கோபுரத்திற்கு முன்பாக கண்டன ஆர்பாட்டத்தினை முன்னெடுத்ததுடன் அங்கிருந்து மோட்டார் சைக்கில்களில் இளைஞர்கள் பேரணியாக தம்பிலுவில் வரை சென்று தமது எதிர்ப்பினை காட்டியிருந்தனர்

இங்கு கலந்து கொண்ட பொது மக்கள் சமாதான சூழலை சீர்குலைக்காதே,படுகொலைகள் வேண்டாம்,பொலிசாரின் படுகொலையை கண்டிக்கின்றோம் போன்ற சுலோக அட்டைகளைகள், வெணர்கள் என்பன ஏந்த தமது எதிர்ப்பினை அமைதியான முறையில் வெளிக்காட்டி இருந்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த பொது மக்கள் இந்த நாட்டில் மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படுவதற்கு பொது மக்களாகிய நாம் இடமளிக்கப் போவதில்லை. தற்போது நாடு அமைதியான முறையில் சென்று கொண்டு இருப்பதுடன் எந்த நேரத்திலும் எங்கும் யாரும் அச்சமின்றி அடையாள அட்டைகள் இன்றி பயணிக்ககூடிய வாழக்கூடிய நிலைமைகள் காணப்படுகின்றது.

இந்நிலையில் மட்டக்களப்பு வவுணதீவில் இடம்பெற்ற இரு பொலிசாரின் படுகொலையானது மிகவும் கவலையளிக்ககூடிய, கண்டிக்ககூடிய சம்பவமாகவும் நாட்டின் அமைதிக்கு சவால் விடுப்பதாக அமைந்திருக்கின்றது. இதனை பொது மக்களாகிய நாம் வன்மையாக கண்டிப்பதுடன் நாட்டில் இவ்வாறான ஒரு சம்பவம் இனி ஒரு போதும் இடம்பெறாது இருப்பதனை அரசாங்கமும் பாதுகாப்பு தரப்பினரும் உறுதிப்படுத்த வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்

# ஓட்டமாவடி பிரதேச சபை 2019ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டம் நிறைவேற்றம்




**வாழையூர் ந.குகதர்சன்**

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபையின் 2019ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் கலந்து கொண்ட 12 பேரின் பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது.

ஓட்டமாவடி பிரதேச சபையின் 2019ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் வியாழக்கிழமை மாலை நடைபெற்ற விஷேட சபை அமர்வில் தவிசாளர் ஐ.ரீ.அஸ்மியினால் சமர்ப்பிக்கப்பட்டது.

இவ்வரவு செலவுத் திட்டமானது கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட அனைத்து பிரதேச மக்களதும் தேவைகளை முன்னுரிமைப் படுத்தியதான விஷேட வேலைத்திட்டங்கள் அடங்கி வரவு செலவுத்திட்டம் என்பதை ஏற்றுக் கொண்டு பிரதேச சபையின் உறுப்பினர்கள் 12 பேரின் பெரும்பான்மை ஆதரவுடன் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது.

இதில் ஆளும் கட்சி உறுப்பினர்களாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பாக ஏழு பேரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தமிழ் தேசிய கூட்டமைப்பு, தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பாக தலா ஒருவர் வீதம் பத்து பேரும், எதிர்கட்சி உறுப்பினர்களான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் (சுயேட்சைக்குழு) உறுப்பினர்களாக திருமதி.ஜெஸீமா, திருமதி.மாஜிதா ஆகியோரின் பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டது.

பொது நிர்வாகம், சுகாதார சேவை, பௌதீகத் திட்டமிடல், பொதுப் பயன்பாட்டுச் சேவை, குடிநீர் விநியோகம், நலன்புரிச்சேவை என்பற்றுக்கான நிதியொதுக்கீட்டுடன் விஷேட வேலைத்திட்டங்கள் அடங்கியதாக உறுப்பினர்களது முன்மொழிவுகள் பெறப்பட்டு இவ்வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தமை சிறப்பம்சமாகும்.

உயதமாகும் 2019ஆம் ஆண்டானது இப்பிரதேச மக்களுக்கு சிறந்ததாகவும் அபிவிருத்தி நிறைந்த ஆண்டாக மலர வேண்டுமென்பதும் ஓட்டமாவடி பிரதேச சபையின் மக்கள் பிரதிநிதிகளது எதிர்பார்ப்பாகும்.

ஓட்டமாவடி பிரதேச மக்களது தேவைகள், பிரதேச அபிவிருத்தி என்பவற்றை நோக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்ட சபையின் வரவு செலவுத் திட்டத்தை ஏற்றுக் கொண்டு வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு ஆதரவு வழங்கிய அனைத்து மக்கள் பிரதிநிதிகளுக்கும் விசேடமாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் (சுயேட்சைக்குழு) உறுப்பினர்களாக திருமதி. ஜெஸீமா, திருமதி.மாஜிதா ஆகியோருக்கும் தவிசாளர் ஐ.ரீ.அஸ்மி தனது நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார்.

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் (சுயேட்சைக்குழு) உறுப்பினர்களான எம்.ரீ.எம்.அன்வர், எம்.ஐ.ஹமீட் லெப்பை, எம்.ஜி.அஸீஸ் றஹீம், ஐ.எல்.பதுர்தீன், எம்.எம்.எம்.ஹனீபா, எஸ்.ஏ.அன்வர் ஆகிய ஆறு பேரும் சபை அமர்வில் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.





# 33 வருட ஆசிரியர் பணியிலிருந்து ஓய்வு



**துறைநீலாவணை நிருபர்**

களுவாஞ்சிக்குடி செயலகப் பிரிவுக்குட்பட்ட குருமண்வெளியைச் சேர்ந்த ஆசிரியை திருமதி சரஸ்வதி விநாயகமூர்த்தி தனது முப்பத்தி மூன்று வருட ஆசிரியர் பணியிலிருந்து ஓய்வுபெறுகிறார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை குருமண்வெளி சிவசக்தி மகாவித்தியாலயத்திலும் உயர் கல்வியினை மண்டூர் மகாவித்தியாலயத்தில் கற்று பேராதனிய பல்கலைக்கழகத்தில் பட்டமேற்படிப்பை பூர்த்தி செய்து கலைப்பட்டதாரியாக வெளியேறினார்.

1985 ஆம் ஆண்டு ஆசிரியர் பணியில் இணைந்து கொண்ட இவர் குருமண்வெளி சிவசக்தி மகா வித்தியாலயம், மகிளூர் சரஸ்வதி மகா வித்தியலாயம் ஆகியவற்றில் கல்விப் பணியாற்றியுள்ளார். அதிலும் அதிக காலம், தான் கற்ற பாடசாலையான குருமண்வெளி சிவசக்தியில் 27 வருடங்கள் பணிபுரிந்துள்ளார்.

குருமண்வெளிக் கிராமத்திற்கு நிறைந்த கல்விப் பணியாற்றியுள்ள சிரேஸ்ட ஆசிரியையிடம் கல்வி கற்ற பலர் இன்று அரச பணியில் உயர்ந்த சேவையில் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# சனசமூக நிலையத்தினை இயங்க வைக்குமாறு பொது அமைப்புகள் கோரிக்கை



**துறைநீலாவணை நிருபர்**

மண்முனை தென் எருவில் பற்று களுவாஞ்சிக்குடி பிரதேச செயலக சபை எல்லைக்குட்பட்ட ஓந்தாச்சிமடம் சனசமூக நிலையம், கடந்த பல வருட காலமாக எதுவிதமான செயற்பாடுகளுமின்றி பாழடைந்த நிலையில் காணப்படுவதாக சமூகமட்ட பொது அமைப்புகள் சுட்டிக்காட்டுகின்றனர் .

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

ஓந்தாச்சிமடம் வடக்கு கிராம சேவகர் பிரிவில் 1987 ஆம் ஆண்டு கட்டப்பட்டு சிறப்பாக இயங்கிய இந்நிலையம் சுனாமிக்குப் பின்னரான காலப்பகுதியிலிருந்து இயங்காத நிலையில் காணப்படுவதாக பிரதேச வாழ் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பட்டிருப்பு கல்வி வலயத்துக்குட்பட்ட ஓந்தாச்சிமடம் விநாயகர் வித்தியாலயம் உட்பட பாடசாலை மாணவர்கள், முன்பள்ளி மற்றும் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் பொதுநூலகம் இருந்தும் செயற்பாடற்ற நிலையிலிருப்பதனால் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாவதாக மாணவர்களின் பெற்றோர் வருத்தம் தெரிவிக்கின்றனர்.

பாழடைந்து புதர் மண்டி பயன்பாடற்று காணப்படும் நிலைய கட்டிடத்தினை முறையாக புனரமைத்து மீளவும் இயங்க வைக்குமாறு பொதுஅமைப்புகளும் பொது மக்களும் கோரிக்கை விடுக்கின்றனர்.

# பழுதடைந்த பாலத்தை சீர்செய்யுமாறு மக்கள் போராட்டம்

**துறைநீலாவணை நிருபர்**

மண்முனை தென் எருவில் பற்று களுவாஞ்சிக்குடி பிரதேச செயலக சபை எல்லைக்குட்பட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குரிய பட்டிருப்புப் பாலம், உடைந்த நிலையில் காணப்படுவதாக பொது அமைப்புகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

1965 ஆண்டு காலத்தில் கட்டப்பட்ட இப்பாலத்தின் அடித்தள தூண்கள் மற்றும் சுவர்கள் உடைந்து வெடிப்புற்று, கடந்த ஐந்து வருடங்களாகியும் இற்றை வரை கவனிப்பாரற்ற நிலையிலேயே கிடப்பதாக பிரதேசத்தின் சமூக மட்ட குழுக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

படுவான்கரை மற்றும் எழுவான் கரையினை இணைக்கும் இப்பாலத்திற்கு முன்னால் பாரம் குறைந்த வாகனங்கள் என்ற பதாதை பலகையிருந்தும் கனரக வாகனங்கள் பாலத்தை கடப்பதாக பொது மக்களால் சுட்டிக்காட்டப்படுகிறது.



களுவாஞ்சிக்குடி மற்றும் போரதீவுப்பற்று பிரதேச செயலகங்களை இணைக்கும் குறித்த பாலத்தினை, நாவிதன்வெளி மற்றும் பட்டிப்பளை ஆகிய பிரதேச செயலகங்களுக்குள் அமைந்திருக்கும் அரச நிறுவனங்கள் மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்கு செல்வோர் பெரும் பீதியுடனே பாலத்தை கடப்பதாக தெரியவருகிறது.

மட்டு நிறைவேற்று பொறியிலாளர் பிரிவுக்குட்பட்ட குறித்த பாலத்தினை துரித கதியில் புனரமைப்பு செய்யுமாறு சமூகமட்டக் குழுக்களும் பொதுமக்களும் கோரிக்கை விடுக்கின்றனர்.



**சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் போரதீவுப்பற்று பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மாதிரிக் கிராம வேலைத்திட்ட வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் 14 பயனாளிகளுக்கு கறவையினப் பசுக்கள், பிரதேச செயலாளர் இ.ராகுலநாயகி, உதவி பிரதேச செயலாளர் சி.புவனேந்திரன் ஆகியோரினால் பயனாளிகளுக்கு கையளிக்கப்படுவதை காணலாம்.**

**படம்: துறைநீலாவணை நிருபர்**

# மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆறாவது கிராமிய வங்கிக்கிளை திறப்பு

**அமிர்தகழி நிருபர்**

நுண்கடன் திட்டத்தினால் ஏற்படும் தற்கொலைகள் மற்றும் பாதிப்புக்களிலிருந்து பொதுமக்களைப்பாதுகாக்கும் நோக்குடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரதேசங்கள் தோறும் வாழ்வாதாரத் தொழில் விஸ்தரிப்பு கடன்களை வழங்கும் திட்டத்துடன் கிராமிய வங்கிகளின் செயற்பாடுகளை விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டுள்ள ஏறாவூர் வடக்கு- மேற்கு பல நோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் கிராமிய வங்கிக் கிளை செங்கலடியில் திறக்கப்பட்டுள்ளது.




















**உ.உதயகாந்த்**

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் மண்முனைப்பற்று ஆரையம்பதி பிரதேச செயலகமும் பிரதேச கலாசார பேரவையும் இணைந்து நடாத்திய கலாசார விழாவும், கலைஞர் கௌரவிப்பு நிகழ்வும் மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி நமசிவாயம் சத்தியானந்தி தலைமையில் நடைபெற்றது.

ஆரையம்பதி நந்தகோபன் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவிற்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமாகிய மாணிக்கம் உதயகுமார் கலந்து சிறப்பித்ததுடன், மட்டக்களப்பு மாவட்ட செயலக மேலதிக மாவட்ட செயலாளர் (காணி) திருமதி நவரூபரஞ்சனி முகுந்தன், ஆரையம்பதி மாவட்ட வைத்திய சாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் அல்மேடா, மண்முனைப்பற்று கோட்டக்கல்வி பணிப்பாளர் கே.நல்லதம்பி, மூத்த கலைஞர் மு.கணபதிப்பிள்ளை ஆகியோர் சிறப்பு அதிதிகளாக கலந்துகொண்டனர்.

இதன்போது மண்முனைப்பற்று பிரதேச செயலகத்தினால் மண்முனைப்பற்றின் சிறப்பினை வெளிப்படுத்தும் வகையில் சிகரம் என்னும் நூல் வெளியிடப்பட்டதுடன் மண்முனைப்பற்று பிரதேசத்தில் கலைத்துறை, இலக்கியதுறை மற்றும் வைத்திய துறைக்கு பங்களிப்பு செய்த ஐந்து கலைஞர்கள் அதிதிகளினால் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.




## கிழக்கு சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கும் செயற்பாடே கடற்கரை கரப்பந்தாட்ட போட்டிகள்



**கிண்ணியா நிருபர்**

கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித்த போகொல்லாகமவின் வழிகாட்டுதலின் கீழ் மாகாணத்தில் கடற்கரை கரப்பந்தாட்ட விளையாட்டினைப் பரவலாக்கும் செயற்றிட்டத்திற்கமைவாக மாகாண சுற்றுலா பயணிகள் அதிகார சபையின் அனுசரனையுடன், விளையாட்டுத்திணைக்களம் ஏற்பாடு செய்துள்ள கடற்கரை கரப்பந்து ஆளுநர் வெற்றிக்கிண்ணம் -2018 நிகழ்வு திருகோணமலை கடற்கரையில் மாவட்ட இறுதிப் போட்டிகள் மாகாண விளையாட்டு பணிப்பாளர் என்.எம்.நௌபீஸ் தலைமையில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாணத்தை உள்ளடக்கிய வகையில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் இப்போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட போட்டிகள் யாவும் மாவட்ட மட்டத்தில் நிறைவுற்றுள்ளதையடுத்து திருகோணமலை மாவட்ட இறுதி போட்டிகள் நிறைவுற்றது.

திருகோணமலை மாவட்டத்தை சேர்ந்த ஆண்கள் அணி சார்பாக 21 அணிகளும், பெண்கள் அணி சார்பாக 07 அணிகளும் பங்கு பற்றின இறுதிப் போட்டியில் ஆண்கள் அணி சார்பாக கந்தளாய்-A அணியும், பெண்கள் அணி சார்பாக திருகோணமலை - A அணியும் மாவட்ட சம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டனர்கள்.

கிழக்கு மாகாணத்தை சேர்ந்த திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட சம்பியன்களாக தெரிவு செய்யப்பட்ட அணிகள் பங்கேற்று மாகாண சம்பியன் தெரிவு செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

திருகோணணலை மாவட்ட இறுதிப் போட்டி நிகழ்வுக்கு மாகாண விளையாட்டு பணிப்பாளர் என்.எம்.நௌபீஸ், கிழக்கு மாகாண ஆளுனரின் செயலாளர் அசங்க அபேவர்தன, கிழக்கு மாகாண ஆளுனரின் ஊடகச் செயலாளர் ஹஸன் அலால்தீன், மாகாண விளையாட்டு துறை அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் தவராசா போன்றோர்கள் அதிதிகளாக கலந்து கொண்டு வெற்றிக் கிண்ணங்களை வழங்கி வைத்தனர்கள்.

கிழக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறையினையும் விளையாட்டுத்துறையினையும் மேம்படுத்தும் பொருட்டு குறித்த விளையாட்டுப்போட்டிகள் ஆரம்பிக்கப்பட்டதாகவும் மாகாணத்தில் கடற்கரை கரப் பந்து விளையாட்டை பரவலாக்கும் விசேட திட்டமாகவும் இவ்வாறான போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டதாக மாகாண விளையாட்டு பணிப்பாளர் என்.எம்.நௌபீஸ் இதன் போது தெரிவித்தார்.

## இந்நாட்டினுடைய எல்லா பிரஜைகளும் அரசியலமைப்பு விதிகளுக்கு கட்டுப்பட்டே நடந்து கொள்ள வேண்டும்

**அமிர்தகழி நிருபர்**



அரசியலமைப்பு என்பது சாதாரண மனிதனுக்கு மாத்திரமல்ல. இந்நாட்டினுடைய எல்லா பிரஜைகளுக்கும் அரசியலமைப்பு விதிகளுக்கு கட்டுப்பட்டே நடந்து கொள்ள வேண்டும் என முன்னாள் பிரதியமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவித்தார்.

ஓட்டமாவடி பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் காணியில் கம்பரெலிய திட்டத்தின் மூலம் கலாசார மண்டபத்துக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்சொன்னவாறு தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்!

ஒரு வாரத்திற்குள் நாட்டினுடைய பிரச்சனைக்கு அரசியல் தீர்வு தருவேன் என்று ஜனாதிபதி கூறியிருக்கின்றார். என்ன தீர்வை சொல்லப்போகின்றார் என்று எங்களுக்குத் தெரியாது. நீதிமன்றத்தில் இரண்டு வழக்குகள் நடந்து கொண்டிருக்கின்றது. இரண்டு வழக்கிலும் தடையுத்தரவு வழங்கப்பட்ட நிலையில், 7ம் திகதி ஒரு தீர்ப்பு எங்களுக்கு வர காத்துக் கொண்டிருக்கின்றது.

எதை எப்படிச்சொன்னாலும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு பிரதமர் பதவியைக் கொடுக்கமாட்டேன் என்று அடம்பிடித்துக் கொண்டிருக்கின்ற சிறு பிள்ளைத்தனமான ஜனாதிபதியாக நான் இவரைப் பார்க்கின்றேன்.

சிறு பிள்ளைகள் சாப்பிடுவதற்கு அடம்பிடிப்பது போன்று அரசியல் அமைப்புக்கு முரணான வகையில் அதனைப் பற்றி தெளிவான சிந்தனை இருந்தும் கூட, அரசியலமைப்புச் சட்டத்தில் தெளிவாகக் கூறப்பட்டிருந்ததாலும் கூட இவ்வாறு பிடிவாதமாக இருப்பது நாட்டு தலைமைக்கு நல்லதொரு சகுணமாக எனக்குத் தெரியவில்லை.

இந்நாட்டிலே மாத்திரமல்ல, பல உலக நாடுகளில் இவ்வாறு தலைவர்கள் இருந்தும் எப்படி பெயர் சொல்லாமல் போனார்கள் என்ற வரலாறை நாம் படித்திருக்கின்றோம். இதை எமது நாட்டின் ஜனாதிபதி மைத்திபால சிறிசேன தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

அரசியலமைப்பு என்பது சாதாரண மனிதனுக்கு மாத்திரமல்ல. இந்நாட்டினுடைய எல்லா பிரஜைகளுக்கும் அரசியலமைப்பு விதிகளுக்கு கட்டுப்பட்டே நடந்து கொள்ள வேண்டும். முட்டாள்தனமாகச் செயற்படுவதென்பது எமது நாட்டுக்கும், சர்வதேசம் எமது நாடு மீது வைத்துக் கொண்டுள்ள அளப்பரிய எதிர்பார்ப்புக்கு மோசடி செய்வதாக இருக்குமென்பது எனது கருத்தாகும்.

எனவே, எதிர்காலத்தில் வரவிருக்கின்ற ஏழு நாட்களுக்குள் இன்னும் யாரை பிரதமராக்குவார் என்று எனக்குச் சொல்ல முடியாது. ஏன் யாரிடத்திலாவது ஜனாதிபதி பதவியைக் கொடுத்து விட்டுப் போவாரா? என்று சொல்ல முடியாது. அரசியலமைப்புக்கு முரணான வகையில் செயற்பாடுகளைச் செய்வார் என நான் நினைக்கின்றேன்.

இந்நிகழ்வுகளிலிருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள அரசியல் தலைவர்கள், சிரேஷ்ட அமைச்சர்கள், சட்டவல்லுனர்கள் தெளிவான சட்டத்தையும் வழிகாட்டலையும் செய்ய வேண்டுமென்பது அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியினுடைய நிலைப்பாடு என்பதைக் கூறுகின்றோம்.

பாராளுமன்றத்திலுள்ள 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் கையொப்பமிட்டு ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக்குங்கள் என்று சொன்னாலும் நான் பிரதமராக்க மாட்டேன் என்று சொல்லும் வேடிக்கையான மனிதனை நான் இன்று தான் பார்க்கின்றேன்.

இது இந்நாட்டுக்கு ஏற்பட்டுப் போன துரதிஷ்ட வசமான விடயம். எதிர்வரும் நாட்களில் பாராளுமன்றத்தில் எத்தனை கதிரைகள் உடைபடப் போகின்றது என்பது பற்றி எனக்குத் தெரியாது.

கல்குடாப்பிரதேசத்திலிருக்கின்ற அனைவரும் கட்சி பேதங்களின்றி ஒற்றுமையாக இருங்கள் என்று உங்களுக்குச் சொல்லுகின்றேன். நீங்கள் எனக்கு வழங்கிய வாக்குறுதிக்கேற்ப உங்களுக்கு பல உதவிகளை வழங்கியுள்ளேன். எதிர்காலத்திலும் இன்னும் வழங்குவதற்கு உள்ளேன்.

ஆகையால், கட்சிகளின் பெயரைச் சொல்லிக்கொண்டு அடிபடாமல், வாக்குவாதப்படாமல் மக்கள் இருக்க வேண்டும், உங்களுக்கு நாங்கள் ஒரு சிறந்த வழிமுறையை எதிர்காலத்தில் தருவோம் என்று நினைக்கின்றேன்.

எனவே, நீங்கள் எல்லோரும் ஒற்றுமைப்பட்டு இந்த பிரதேசத்தின் அரசியல் இருப்பைத் தக்க வைத்துக் கொள்வதன் மூலம் இந்நாட்டில் அரசியல் பிரலயம் இருக்கின்ற சூழலிற்குள்ளும் 110 மில்லியன் ரூபாய் ஒதுக்கீட்டின் மூலம் கலாசார மண்டபத்திற்கு அடிக்கல் வைத்துள்ளோம் என்று சொன்னால், நீங்கள் என் மீது வைத்துள்ள நம்பிக்கை வீண் போகாமல் நாங்கள் இந்த காலகட்டத்திற்குள் இந்த இறுக்கமாக சூழலுக்குள் நாங்கள் நடாத்திக் கொண்ட அரசியல் விடயம் தான் என்றார்.

## ஓ.எல்.தின நிகழ்வும் பரிசளிப்பு விழாவும்



**சீலாமுனை நிருபர்**

ஒலுவில் அல் ஹம்றா மகாவித்தியாலயத்தில் இவ்வாண்டு கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களின் ஓ.எல் தின நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் பாடசாலை சாதாரண தரப் பிரிவின் வலயத்தலைவர் ஏ.எல்.அமான் ஆசிரியர் தலைமையில் பாடசாலை அஸ்ரப் ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் அஷ்ஷெய்க் யூ.கே.அப்துல் றஹிம் (நழீமி) பிரதம அதிதியாகவும், பிரதி அதிபர்கள், உதவி அதிபர், வலயத்தலைவர்கள், ஆசிரியர்கள் அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

இவ்வாண்டு கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சைக்கு தேற்றவுள்ள மாணவர்களினால் சேகரிக்கப்பட்ட ஒரு தொகை நிதியினை பாடசாலையின் கல்வி அபிவிருத்திக்கு செலவு செய்வதற்காக பாடசாலை அதிபரிடம் கையளிக்கபட்டது.

மேலும் இவ்வாண்டு பாடசாலையில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்காக. கிழக்கு மாகாண கல்வி தணைக்களத்தினால் நடாத்தப்பட்ட முன்னோடிப் பரீட்சையில் சகல பாடங்களிலும் அதிகூடிய திறமைச் சித்தி பெற்ற மாணவர்கள் இந்நிகழ்வின் போது அதிதிகளினால் சான்றிதழ் மற்றும் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## 17 இலட்சம் பேர் வாழ்கின்ற மக்களுக்குள் பதிவுசெய்யப்பட்ட பாரம்பரிய வைத்தியர்கள் 280 பேர் மாத்திரமே உள்ளனர்



**சீலாமுனை நிருபர்**

எல்லா மாகாணங்களையும் விட கிழக்கு மாகாணம்தான் மிகப் பெரிய பிரதேசமாகும். இங்கையின் மொத்த பரப்பில் 6 இல் 1 கிழக்கு மாகாணத்தைச் சார்ந்ததாக இருக்கின்றது. இதில் 17 இலட்சம் பேர் வாழ்ந்து வருகின்ற இந்தமாகாணத்தில் பதிவு செய்யப்பட்ட பாரம்பரிய வைத்தியர்கள் 280 பேர் மாத்திரமே உள்ளனர் என்று கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித பொகல்லாகம தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்திலுள்ள 56 பாரம்பரிய வைத்தியர்களுக்கு தலா 75 ஆயிரம் ரூபா பெறுமதியான வைத்திய உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு கிழக்கு மாகாண ஆயுர்வேத சுதேச திணைக்கள ஆணையாளர் திருமதிஆர்.ஸ்ரீதர் தலைமையில் திருகோணமலை முதலமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

மறக்கடிக்கப்பட்டு வருகின்ற பாரம்பரிய வைத்திய முறைகளை மங்கவிடாமல் அந்த வைத்திய முறைகளை ஊக்குவிக்கும் நோக்கில் உங்களுக்கு இன்று வழங்கப்படுகின்ற மருத்துவ உபகரணங்கள் மூலம் எமது மாகாணத்திலுள்ள மக்களுக்கு மிகச் சிறந்த வைத்திய சேவைகளை வழங்கி வைக்கவேண்டும் என்பதற்காகவே இந்த மருத்துவ உபகரணங்களை நாம் வழங்கி வைக்கின்றோம்.

இந்த வைத்திய உபகரணங்களைக் கொண்டு நீங்கள் செய்யப்போகின்ற விடங்களை அறிந்துகொள்வதற்கான ஒரு குழுவினர் வருவார்கள் அவ்வாறு வருகின்ற குழுவினர் மூலம் உங்களின் வைத்திய முறைகளை அளவிடும் ஒரு கணிப்பீடு ஒன்றையும் நாங்கள் நடாத்தவுள்ளோம். அது எவ்வாறாக இருக்கும் என்றால், நீங்கள் உங்களின் பிரதேசங்களில் செய்கின்ற வைத்தியங்கள், அதன் மூலம் மக்களுக்கு கிடைக்கின்ற நன்மைகள் போன்றவற்றை வைத்தே உங்களின் கணிப்பீடு இடம்பெறவுள்ளது. நீங்கள் உங்களின் அனுபவத்தின் மூலம் மக்களுக்கு வழங்குகின்ற வைத்தியங்கள் யாவும் ஒரு சேவையாகவே இடம்பெறவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

தற்போது மக்களை ஆட்டிப் படைக்கின்ற ஒரு தொற்றா நோயாக சிறுநீரக நோய் காணப்படுகின்றது. பதவி சிறி புரத்தில் 10 இற்கு ஒருவர் வீதம் இந்த நோய்த் தாக்கத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இது பெரும் கவலையைத் தருகின்ற விடயமாகவுள்ளது. இந்த நோயினை இல்லாமல் செய்வதற்கோ அல்லது இந்நோய் ஏற்படாமல் இருப்பதற்கான ஒரு யோசினையை நீங்கள் முன் வைக்கலாம்.

நாம் உண்ணுகின்ற உணவின் மூலம் ஏதாவது மூலிகைகளை கலந்து சாப்பிடக் கொடுக்கலாமா? அல்லது பதார்த்தம் மூலம் கொடுக்கலாமா? அல்லது அதற்கு வேறு ஏதாவது பாரம்பரிய வைத்திய முறைகள் இருக்கின்றனவா? என்ற யோசினைகளையும், அதுதொடர்பான வைத்திய முறைகளை சமர்ப்பித்து ஒரு விரிவான கலந்துரையாடலை நடாத்துவதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்து தருவதுடன் அதற்கு எவ்வாறான உதவிகள் தேவைப்படுகின்றதோ அதனை செய்வதற்கான சகல வசதிகளையும் நான் செய்துதர தயாராகவுள்ளேன் என்றார்.

## கடும் வரட்சியால் பாதிக்கப்பட்ட விவசாய குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கி வைப்பு

**மீனோடைக்கட்டு நிருபர்**

நிந்தவூரில் கடும் வரட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயக் குடும்பங்களிற்கு உலர் உணவு பொதிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு நிந்தவூர் பிரதேச செயலாளர் ரி.எம்.எம். அன்சார் தலைமையில் தெரிவு செய்யப்பட்ட கிராம சேவகர் பிரிவு வாரியாக வழங்கி வைக்கப்பட்டன.

அனர்த்த முகாமைத்துவ மற்றும் நீர்ப்பாசன அமைச்சினால் நடைமுறைபடுத்தப்படும் இத்திட்டமானது பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு கட்டங்கட்டமாக வழங்கி வைக்கப்படவுள்ளதுடன், இதில் 699 விவசாயக் குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை முதற்கட்டமாக இடம்பெற்ற இந்திகழ்வில் நிந்தவூர் பிரதேச செயலாளர் ரி.எம்.எம். அன்சார், கிராம உத்தியோகத்தர்களின் நிருவாக உத்தியோகத்தர் எம். சம்சுடீன், அனர்த்த முகாமைத்துவ உத்தியோகத்தர் ஐ.எம். சாறுன், விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர் யூ.எல்.எம். அஸ்ஹர் மற்றும் பிரிவுகளுக்கான கிராம சேவை உத்தியோகத்தர்களும் இதில் கலந்து கொண்டனர்.

## பாராளுமன்ற தேர்தலை எதிர்பார்த்து தமிழ் மக்கள் காத்திருக்கின்றார்கள்

**காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் இராசையா**

**கல்முனை நிருபர்**

தமிழ் மக்கள் புதிய ஒரு பாராளுமன்ற தேர்தலையே எதிர்பார்த்து காத்திருக்கின்றனர் என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளரும், காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளருமான செல்லையா இராசையா தெரிவித்தார்.

இவரின் காரைதீவு இல்லத்தில் ஊடகவியலாளர்களை சந்தித்து அரசியல் நடப்புகள் தொடர்பாக பேசிய போதே இவ்வாறு தெரிவித்தார்.

இவர் இங்கு மேலும் குறிப்பிடும் போது,

தமிழ் தேசிய கூட்டமைப்பு தமிழ் மக்களின் நலன்களை ஒதுக்கி வைத்து விட்டு ஐக்கிய தேசிய கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு பிரதமர் பதவியை மீட்டு கொடுப்பதில் மாத்திரமே மும்முரமாக இயங்குகின்றது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமராக ரணில் விக்கிரமசிங்கவும் இணைந்து நடத்திய நல்லாட்சியில் குறிப்பிடத்தக்க எந்த நன்மைகளும் எமது மக்களுக்கு பெற்று கொடுக்கப்படவே இல்லை. தமிழ் தேசிய கூட்டமைப்பு தமிழ் மக்களுக்கு தேர்தல் காலங்களில் வாக்களித்தபடி அரசியல் தீர்வை மாத்திரம் அல்ல அரசியல் கைதிகளின் விடுதலையைகூட பெற்று தரவே இல்லை. காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் உறவுகளை கண்டு பிடித்து தரவும் இல்லை. தமிழ் மக்களின் காணிகள் முழுமையாக விடுவித்து தரப்படவும் இல்லை.



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமராக மஹிந்த ராஜபக்ஸவும் இணைந்து உருவாக்கிய அரசாங்கம் முடங்கி போய் கிடக்கின்றது. எந்த வகையிலான இடைக்கால அரசாங்கம் கொண்டு வரப்பட்டாலும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றி தரப்படாது என்பது திண்ணமாகும். மாறாக தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்த்து தரப்படுவதில் முடக்க நிலைதான் காணப்படும்.

தமிழ் மக்கள் இந்த யதார்த்த நிலைமைகளை உணர்ந்து வைத்தவர்களாக புதிய பாராளுமன்ற தேர்தல் ஒன்றையே எதிர் பார்த்து காத்திருக்கின்றனர். தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்க கூடிய, தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்க்க இதய சுத்தியுடன் செயற்பட கூடிய மாற்று தமிழ் தலைமைக்கு ஆணை வழங்க தயாராகி உள்ளனர். வர கூடிய புதிய பாராளுமன்ற தேர்தல் தமிழ் மக்களின் விடியலுக்கான புதிய தொடக்க புள்ளியாக இருக்கும் என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி விசுவாசிக்கின்றது.

அரசாங்கம் என்பது மக்களுக்கானது. தமிழ் மக்கள் மாத்திரம் அன்றி இந்நாட்டு மக்கள் அனைவருமே புதிய பாராளுமன்ற தேர்தலையே எதிர்பார்த்து உள்ளனர்.

## நிந்தவூரில் டிசம்பர் 17ம் திகதி முதல் தனியார் வகுப்புகளுக்குத் தடை!

**மீனோடைக்கட்டு நிருபர்**

நிந்தவூரில் இம்மாதம் 17ம் திகதி முதல் பாடசாலை ஆரம்பிக்கும் காலம் வரை தனியார் வகுப்புகளுக்குத் தற்காலிகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நிந்தவூர் பிரதேச சபையின் தவிசாளர் எம்.ஏ.எம். தாஹிர் தலைமையில் இடம் பெற்ற நிந்தவூரிலுள்ள அனைத்து தனியார் கல்வி நிறுவன பிரதிநிதிகள் மற்றும் ஜம்மியத்துல் உலமா சபை, ஜும்மா பள்ளிவாசல் நிர்வாகிகளுடனான சந்திப்பின் போது இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதுடன் மேலும் பல விடயங்களும் முடிவெடுக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில்,

1. மாணவர்களின் டிசம்பர் விடுமுறையை ஒழுங்கு படுத்தும் விதத்தில் எதிர்வரும் 17ஆம் திகதி முதல் பாடசாலை ஆரம்பிக்கும் காலம் வரை நிந்தவூரிலுள்ள அனைத்து தனியார் கல்வி நிறுவனங்களிலும் தரம் 01 முதல் க.பொ.த (சா/த) வகுப்பு வரை உள்ள அனைத்து பாடங்களும் கட்டாயமாக நிறுத்தப்படுதல்.

2. அனைத்து தனியார் கல்வி நிறுவனங்களிலும் மலசலகூட வசதி களையும், நீர் வசதிகளையும் மாணவர்களுக்கு ஒழுங்கு செய்து கொடுத்தல்.

3. தனியார் கல்வி நிறுவனங்கள் தமது சுற்றுப்புறச் சூழலை ஒழுங்காக வைத்திருப்பதோடு மாணவிகளுக்கான பாதுகாப்பு வசதிகளையும் செய்து கொடுத்தல்.

4.பாடங்களுக்கு மாணவிகள் வருகிற போது பாடசாலை உடையிலேயே வருவதனை கட்டாயப்படுத்தல்.

இந்த முடிவுகளோடு இதனை உடனடியாக நடைமுறைப்படுத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் தவிசாளர், உதவித் தவிசாளர், பிரதேச சபை உறுப்பினர்கள், ஜம்மியத்துல் உலமா சபை , ஜூம்மா பள்ளிவாயல் நம்பிக்கையாளர் சபை பிரதிநிதிகள் உட்பட பிரதேச சபை செயலாளரும் பங்குபற்றினர்.

இதேவேளை இந்தக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை அமுல்படுத்துவதில் பொதுமக்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்வதுடன், இந்த விடயங்களைக் கண்காணிக்க சபையின் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப் படவுள்ளதாகவும் நிந்தவூர் பிரதேச சபையின் தவிசாளர் எம்.ஏ.எம். தாஹிர் மேலும் தெரிவித்தார்.

# மன்னார் மாவட்டத்தில் அடிப்படைவசதிகளற்ற நிர்க்கதி நிலையில் 150 குடும்பங்கள்

மன்னார் மாவட்டத்தில் மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஆத்திமோட்டை கூராய் சீது விநாயகர் புரம், ஆகிய கிராமங்களில் கடந்த காலங்களில் சுமார் 400இற்கும மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வந்தன.

இந்நிலையில் குறித்த கிராமங்களின் வசதிக்குறைபாடுகள் காரணமாக 250 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இப்பிரதேசங்களிலிருந்து வேறு இடங்களிற்கு இடம்பெயர்ந்து சென்றுள்ளனர்.

கடந்த கால யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்டஇப்பிரதேசத்தில் இயங்கிய ஆத்திமோட்டைப்பாடசாலை தற்போது கள்ளியடிப்பாடசாலையுடன் இணைப்புப்பாடசாலையாக இயங்கி வருகின்ற போதும்ஷகூராய் கிராமத்தில்இருக்கன்ற பாடசாலை பல்வேறு தேவைப்பாடுகள் காணப்பட்டாலும் குறைந்தளவு மாணவர்களுடனேயே இயங்கி வருகின்றது.

முன்பு எண்பது வரையான குடும்பங்கள் வாழ்ந்த ஆத்திமோட்டைக்கிராமத்தில் 13 குடும்பங்களும் 120 இற்கும் மேற்பட்ட குடுமபங்கள் வாழந்து வந்த சீது விநாயகர் புரத்தில் 36 குடும்பங்களும் 200 இற்கும மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வந்த கூராய் கிராமத்தில் 100 வரையான குடும்பங்களும் மாத்திரமே வாழ்ந்து வருகின்றன.

இந்நிலையில் இக்கிராமத்திற்கான பிரதான வீதி இன்று வரை புனரமைக்கப்படாத நிலை காணப்படுகின்றது.

இதைவிட, காட்டு யானைகளின் தொல்லை மற்றும் போக்குவரத்து வசதியின்மை மருத்துவ வசதியின்மை போன்ற பல்வேறு பிரச்சனைக்கு முகங்கொடுத்து வாழ வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக இப்பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

# வவுனியாவில் வரட்சியால் பாதிக்கப்பட்ட 21 ஆயிரத்து 461 குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை



**வவுனியா நிருபர்**

வவுனியாவில் ஏற்பட்ட வரட்சி நிலை காரணமாக 21 ஆயிரத்து 461 குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளதாகவும், அவர்களுக்கு நிவாரணத்தை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் வவுனியா மாவட்ட அரசஅதிபர் ஐ.எம்.ஹனீபா தெரிவித்துள்ளார்.

வவுனியாவின் வரட்சி நிவாரணம் வழங்கும் செயற்பாடு குறித்து கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் ஏற்பட்ட வரட்சி காரணமாக கடந்த காலத்தில் வவுனியாவும் பாதிப்படைந்தது. அந்த வகையில் வவுனியா மாவட்டத்தில் 2016 - 2017 பெரும் போகம், 2017 சிறுபோகம், 2017 - 2018 பெரும்போகம் ஆகிய மூன்று போக காலப்பகுதியிலும் தொடர்ச்சியாக வரட்சியால் பாதிக்கப்பட்ட மேட்டு நில பயிர்ச் செய்கையாளர்கள், விவசாய கூலிகள், நன்னீர் மீன்பிடிப்பாளர்கள் ஆகியோருக்கே இந் நிவாரணம் வழங்கப்படுகிறது. இவர்களுக்குரிய நிவாரணத்தை மாவட்ட அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக வழங்குகின்றது.

அந்த வகையில் வவுனியா பிரதேச செயலக பிரிவில் 10525 குடும்பங்களும், வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவில் 2765 குடும்பங்களும், வவுனியா தெற்கு பிரதேச செயலக பிரிவில் 1810 குடும்பங்களும், வெண்கல செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவில் 6361 குடும்பங்களுக்கு ஆக 21ஆயிரத்து 461 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கே இந் நிவாரணம் வழங்கப்படுகிறது.

இவை தொடர்பான விபரங்கள் பிரதேச செயலகங்கள் ஊடாக பெறப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கான நிவாரணத்தை தொடர்ந்துபெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, குறித்த பயனாளிகள் மாத வருமானம் 20 ஆயிரம் ரூபாய்க்கு உட்பட்டதாகவும், பயிர்செய்கை அழிவுக்கு காப்புறுதி பெறாதவர்களாகவும், வாகனம் மற்றும் கடை உள்ளவர்களாக இருக்க கூடாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# பற்றைக்காடுகள் மண்டிக்கிடக்கும் பாடசாலை





வவுனியா மாவட்டத்தின் பின்தங்கிய கிராமங்களாகக்காணப்படுகின்ற கோழியகுளம், மற்றும் வாருடையார இலுப்பைக்குளம், ஆகிய கிராமங்களில்உள்ள பாடசாலைகள் செயலிழந்து பற்றைக்காடுகள் மண்டிக்காணப்படுகின்றன.

வவுனியா மாவட்டத்தின் பின்தங்கிய பிரதேசங்களாக்காணப்படுகின்ற குஞ்சுக்குளம், நவ்வி, பாலமோட்டை, ஆகிய பிரதேசங்களை அண்டிய சிறிய விவசாயக் கிராமங்களில் வாழந்து வருகின்ற மக்கள் அடிப்படை வசதிகளற்ற நிலையில் நீண்ட காலமாக வாழ்ந்துவருகின்றனர்

கடந்த 2010ம் ஆண்டு மீள்குடியேற்றத்தின் பின்னர் இந்தப்பிரதேசங்களில் மக்கள் மீள்குடியேறியநிலையில் கோழியகுளம் பகுதியில் யுத்தத்தினால் சேதமடைந்து காணப்பட்ட கோழியகுளம் அ.த.க பாடசாலை புனர் நிர்மாணம் செய்து திறந்து வைக்கப்பட்டபோதும் குறித்த பாடசாலை குறிப்பிட்ட காலத்தின் பின்னர் மூடப்பட்டுள்ளது.

இதனால இப்பாடசாலை கடந்த இரண்டு வருடங்களிற்கு மேலாக பற்றைக் காடுகள வளர்ந்து காணப்படுகின்றது.

இதேபோல், இதற்கு அடுத்துள்ள கிராமமான வாரியுடையார இலுப்பைக்குளம் பகுதியில் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்ட பாடசாலையும் செயலிழந்து இன்று பற்றைக்காடுகள் மண்டிக்காணப்படுவதுடன், இன்னும் ஓரிரு வருடங்களில் இப்பாடசாலைகள் முழுமையாகவே வனங்களால் மறைந்து போகும் என பல்வேறு தரப்புக்களும் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு இக்கிராமங்களில் உள்ள மாணவர்கள் இப்பிரதேசங்களில் பாடசாலைகள் மூடப்பட்டமையால இங்கிருந்து நீண்ட தூரங்களிற்குச்சென்று கல்வி கற்கின்ற ஒரு நிலமை காணப்படுவதாக தெரிவித்துள்ளனர்.

# வெளிநாடுகளில் இருந்து இங்குள்ள சுமுகமான நிலையை குழப்ப முயற்சி: சிவமோகன் எம்.பி

**வவுனியா நிருபர்**

வெளிநாடுகளில் இருந்து இங்குள்ள சுமுகமான நிலையை குழப்ப முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றது என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்தார்.

வவுனியாவில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல் கைதிகள் தொடர்பில் ஜேவிபியினருக்கு எப்படி ஒரு மன்னிப்பை கொடுத்தார்களோ, அதேபோன்று இந்த அரசியல் கைதிகளுக்கும் ஒரு பொதுமன்னிப்பு வழங்கப்பட வேண்டும். அதனை அரசியல் ரீதியில் தான் அணுக வேண்டும் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்துகிறது. இந்த விடயம் நீதிமன்றத்திற்கு கொண்டு சென்று தீர்வை எட்ட முடியாத விடயம். காணி விடுப்பு தொடர்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பிரேரணைகள் பெருந்தொகையில் இருக்கின்றன. ஆயிரக்கணக்கான காணி சொந்தக்காரர்கள் ஒன்றாக்கப்பட்டு போராடப்பட்டிருக்கிறது. அதனை தமிழ் தேசியக் கூட்டமைப்பு முன்னெடுத்தது.

தமிழ், முஸ்லிம் மக்கள் கொடுத்த ஆதரவினால் தான் மைத்திரி பால சிறிசேன அவர்கள் ஜனாதிபதியாக இருக்கிறார். அதனை நாம் அவருக்கு சுட்டி காட்டியுள்ளோம். அவர் எப்படி வந்தவர் என்பதை சுட்டி காட்டியுள்ளோம். எனவே ஜனாதிபதி இருக்கும் இந்த கால கட்டத்தில் கைதிகளை விடுவிக்க வேண்டும் என தெளிவாக சொல்லியிருக்கிறோம்.

அவருடைய இன்றைய செயற்பாடுகள் மீண்டும் ஒரு தடவை ஜனாதிபதியாக வருவதற்கான நகர்வாகவே பார்க்கப்படுகிறது. அதற்காக தான் இந்த அரசியல் நாடகங்கள் அரங்கேறியிருக்கின்றது. ஆகவே அப்படி ஒரு எண்ணத்தில் இருப்பவர் அரசியல் கைதிகளை விடுப்பதால் தனது வாக்கு வங்கி கூடும் என சிந்தித்தால் அதனை செய்வார் எனக் கருதுகின்றேன்.

அத்துடன், 1948 இன் பின் ஒரு பிரிவு தமிழ் மக்களுக்கான தீர்வை கொண்டு வந்தால் இன்னொரு பிரிவு அதனை தட்டிவிட்டதாகத் தான் வரலாறுகள் சொல்லியிருக்கின்றது. மாறி மாறி அது நடந்துள்ளன. பேரினவாத கட்சிகள் இரண்டு பிரிவினரே. அவர்கள் எந்தக் காலத்திலும் தமிழ் மக்களது தீர்வை ஏற்றுக் கொண்டதாகவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியாக இருந்தாலும் சரி, சிறிலங்கா சுதந்திரக் கட்சியாக இருந்தாலும் சரி இரண்டும் ஒன்றும் தான். எமது போராட்டத்தில் சிலரை பிரித்தெடுத்து குழப்பி விட்டதாக சொல்கின்றோம். அது நாங்களே எங்களை குழப்பி நாங்களே பிரிந்து நின்று கொண்டு இன்னொரு கட்சி தான் பிரித்தார் என்று சொல்வதை விட அது நாங்கள் விட்டதாக தவறாகவே பார்க்க வேண்டும்.

இன்றும் அதேபோல் தமிழர்கள் ஒற்றுமையாக ஒரே கொள்கைகளுடன் நாங்கள் இருக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். தமிழினம் இருக்கும் வரை அவர்களிடம் இருந்து அந்த போராட்ட குணம் இல்லாமல் போகப்போவதில்லை. இன்று அவர்களிடம் இருந்து போராட்ட குணத்தை இல்லாமல் செய்வதற்கான முயற்சிகள் வெளிநாடுகள், உள்நாடுகள், புலனாய்வாளர்கள், இராணுவம் என பல தரப்பாலும் முன்னெடுக்கப்படுகினது. மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்.

வெளிநாடுகளில் இருந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பை உடைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றது. இங்குள்ள புலனாய்வாளர்களிடம் இருந்து அவர்களுக்கு பணம் வழங்கப்படுகிறது. அவர்கள் தங்களது செயற்பாடுகளை மக்கள் மூலம் இங்கு முன்னெடுக்கிறார்கள். தன்னிச்சையாக முன்னெடுக்கின்றார்கள். அரசியல்வாதிகள் வேண்டாம் என முன்னெடுக்கின்றார்கள். தமிழ் தேசியக் கூட்டமைப்பை உள்ளெடுக்க வேண்டாம் என்று சொல்லி முன்னெடுக்கிறார்கள். அவை ஆராயப்பட வேண்டும். தமிழ் மக்கள் மனதில் வைத்து அப்படியானவர்கள் யார் என்பதை அடையாளம் காண வேண்டும். அவர்கள் உள்ளே இருக்கின்ற சுமுகமான நிலையைக் கூட உருக்குலைக்கின்றார்களோ என்று எண்ணத்தோன்றுகிறது எனத் தெரிவித்தார்.

# முதலையில் பதற்றம்



**வவுனியா நிருபர்**

வவுனியா,நெளுக்குளம் பகுதியில் வீதிக்கு வந்த 12 அடி நீளமான முதலையால் பதற்ற நிலை ஏற்பட்டது.

வவுனியா, நெளுக்குளம் பகுதியில் வசிக்கும் மக்கள் காலை வீதியில் பயணித்த போது 12 அடி நீளமான முதலை ஒன்றை அவதானித்துள்ளனர். இதனையடுத்து பதற்றமடைந்த மக்கள் முதலையை விரட்ட அவ்விடத்தில் கூடிய போது முதலை வீதியோரத்தில் இருந்த சிறிய பற்றைக்குள் புகுந்து அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டது.

இதனையடுத்து ஊர்மக்கள் பொலிசாருக்கு கொடுத்த தகவலையடுத்து சம்பவ இடத்திற்கு வருகை வந்த நெளுக்குளம் பொலிசார், வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளை வரவழைத்தனர். அவர்கள் முதலையை மீட்டு பாதுகாப்பான இடத்தில் விடுவதற்காக எடுத்துச் சென்றனர்

# சிறப்பாக நடைபெற்ற வவுனியா பிரதேச செயலக கலாசார விழா



**வவுனியா செய்தியாளர்**

வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வவுனியா பிரதேச செயலகமும் கலாசாரப் பேரவையும் இணைந்து நடாத்திய கலாசார விழாவும், கலைஞர் கௌரவிப்பு நிகழ்வும் பிரதேச செயலாளர் க.உதயராசா தலைமையில் வவுனியா கிடாச்சூரி கருவேப்பங்குளம் அ.த.க.பாடசாலையில் நடைபெற்றது.

நிகழ்வில் விருந்தினர்களாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் ஐ.எம். ஹனீபா, வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார், மூத்த ஊடகவியலாளர் பொ.மாணிக்கவாசகம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

நிகழ்வு நடைபெறும் மண்டபத்திற்கு அதிதிகளும், கலைஞர்களும் மாலை அணிவித்து பவனியாக அழைத்துவரப்பட்டு மங்கள விளக்கேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகியிருந்தன.

கலாசார விழாவில் தமிழ் மொழி வாழ்த்து, மங்கள இசை, வரவேற்பு நடனம், நாட்டார் இசை, சிவதாண்டவம், கிறிஸ்தவ நாடகம், பறை இசை, கிராமிய நடனம், போன்றவற்றில் பங்குபற்றிய கலைஞர்களுக்கு அதிதிகளால் பொன்னாடை போர்த்தி, சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தனர்.

நிகழ்வில் வவுனியா பிரதேச செயலகத்தினால் ‘வவுனியம்’ எனும் நூல் வெளியீடு செய்து வைக்கப்பட்டது.

நூலை வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார் வழங்கி வைக்க பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் பெற்றார். அதனைத் தொடர்ந்து அதிதிகளுக்கு நூல் வழங்கி வைக்கப்பட்டது.

அத்துடன், சிற்பத்துறை, நாடகத்துறை, கலைத்துறை, இசைத்துறை, இலக்கியத்துறை போன்றவற்றிற்கு சிறப்பாக பணியாற்றிய கலைஞர்கள் ஐவருக்கு ‘கலா நேத்திரா’ என்ற விருது அதிதிகளால் வழங்கி வைக்கப்பட்டது.

# வவுனியா நகரசபையின் ‘எழுநீ’ விருது வழங்கும் நிகழ்வு

**வவுனியா செய்தியாளர்**



வவுனியா நகரசபையின் எழுநீ பண்பாட்டு முற்றம் நடத்திய பல் துறை சேவையாளர் விருது வழங்கும் நிகழ்வு நகரசபையின் தவிசாளர் இ.கௌதமன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சார் க.வி.விக்கினேஸ்வரன் கலந்து கொண்டிருந்தார்.

மங்கள வாத்தியங்கள் முழங்க பவனியாக அழைத்து வரப்பட்ட வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் மற்றும் அதிதிகள், பல்துறை சேவையாளர்கள் மாலை போட்டு வரவேற்கப்பட்டதுடன் அகவணக்கம் மற்றும் மங்கள விளக்கேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகியிருந்தன.

பல்துறை சேவையாளர்களை கௌரவிக்கும் இந் நிகழ்வில் விசேட தேவைக்குட்பட்டோர், வைத்தியர்கள், விளையாட்டு வீரர்கள், கலைஞர்கள், இலக்கியவாதிகள், விவசாயிகள், ஆசிரியர்கள், மற்றும் ஊடகவியலாளர்கள் என பலருக்கு விருதுகள் வழங்கி வைக்கப்பட்டது.

நீதியரசரும் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான க.வி.விக்கினேஸ்வரனால் ‘எழுநீ’ஆவண நூல் வெளியீடு செய்து வைக்கப்பட்டதுடன் முதல் பிரதியை வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் மற்றும் நகரபிதா இ.கௌதமன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்வில் தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் பல்துறை சேவையாளர்கள் கௌரவிக்கப்பட்டிருந்தனர்.

மீனவ நடனத்தை வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலயம் மற்றும் சிங்கள நடனத்தை உடரட்ட நட்டும வவுனியா தெற்கு கலாசார குழுவினர் வழங்கியிருந்தனர்.

நிகழ்வில் மாகாணசபை உறுப்பினர்கள், வவுனியா நகரசபை ஊழியர்கள், உத்தியோகத்தவர்கள், கலைஞர்கள் மற்றும் பொது மக்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

## விசேட கூட்டம்

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் விசேடசெயற்குழுக் கூட்டம் 09. 12.2018 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ் வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தலைவர் சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை தலமையில் இடம்பெறவுள்ளது.

இவ் செயற்குழுக்கூட்டத்தில் பட்டமளிப்பு விழா சைவமாநாடு ஒழுங்குமைப்புக்கள் போன்ற விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளமையினால் அனைத்து செயற்குழு உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அகில இலங்கை சைவப்புலவர் சங்க செயலாளர் சைவப்புலவர் எஸ்.ரி.குமரன் அறிவித்துள்ளார்.

# கரைச்சி பிரதேச கலாச்சார விழா கிளிநொச்சியில்

கரைச்சி பிரதேச கலாச்சார விழா கிளிநொச்சியில் இடம்பெற்றது. கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்ற குறித்த நிகழ்வு காலை 10 மணியளவில் ஆரம்பமாகியது.

வடமாகாண கலாச்சார திணைக்களம் மற்றும் கரைச்சி பிரதேச கலாச்சார பேரவை ஆகியன இணைந்து கரைச்சி பிரதேச கலாச்சார நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தனர். குறித்த விழா கரைச்சி பிரதேச கலாச்சார பேரவை தலைவரும், கரைச்சி பிரதேச செயலாளருமான ரி.முகுந்தன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கலந்து கொண்டதுடன், கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சத்தியசீலன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது கரைச்சி பிரதேசத்தில் நீண்டகாலம் கலைத்துறையில் சேவையாற்றிய திருமாதி பார்வதி சிவபாதம் அவர்கள் விழா ஏற்பாட்டாளர்களால் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடதக்கதாகும்.

அரங்கில் தமிழ் கலை கலாச்சார மற்றும் கிராமிய நிகழ்வுகள் அலங்கரித்தமை குறிப்பிடதக்கதாகும்.






## மாங்குளத்தில் புதிய பேருந்து நிலையம்



முல்லைத்தீவு மாங்குளம் பகுதியில் பேருந்து நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

முல்லைத்தீவு மாவட்;டத்தின் உப நகரங்களில் ஒன்றாகக்காணப்படும் மாங்குளம் பகுதியானது போக்குவரத்து சேவைகளின் இணைப்பு மையமாகவும் காணப்படுகின்றது.

இந்நிலையில் மாங்குளம் பகுதியில் பேருந்து நிலையம் ஒன்று இன்மையால் பயணிகளும் பொது மக்களும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்நிலையில் இப்பகுதியில் பேருந்து நிலையம் ஒன்றினை அமைத்துத் தருமாறுபல்வேறு தரப்புக்களும் கோரிக்கை விடுத்திருந்தன

இதனையடுத்து புதுக்குடியிருப்பு பிரதேச சபையினால் தற்போது மாங்குளம் பகுதியில் பேருந்து நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கரியாலை நாகபடுவான் குளத்தின் அணைக்கட்டினை புனரமைத்துத்தருமாறு கமக்கார அமைப்பு கோரிக்கை

கிளிநொச்சி கரியாலை நாகபடுவான் குளத்தின் அணைக்கட்டினை உயர்த்தி அதனைப்புனரமைத்துத்தருமாறு கமக்கார அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

கிளிநொச்சி பூநகரிப்பிரதேசத்தில் உள்ள நீர்ப்பாசனக்குளங்களில ஒன்றாகக்காணப்படுகின்ற கரியாலை நாகபடுவான் குளத்தின் கீழ் தற்போது 502 வரையான விவசாயக்குடும்பங்கள் பயன்பெற்று வருகின்றன.

அதாவது, இக்குளத்தின் கீழ் உள்ள சுமார் 1505 ஏக்கர் நிலப்பரப்பில் மேறபடி விவசாயிகள் காலபோக பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுவருகின்றனர்.

குறித்த குளத்தின் அணைக்கட்டு புனரமைக்கப்படாமை மற்றும் ஏனைய கட்டுமானங்கள்புனரமைக்கப்படாமையினால் காலபோக செய்கை தவிர்ந்த ஏனைய சிறுபோகச்செய்கை மேற்கொள்ளமுடியாத நிலை காணபபடுகின்றது.

இந்தக்குளத்தின் அணைக்கட்டினை இரண்டு அடியால்உயர்த்தி குளத்தினைப்புனரமைப்பதன் மூலம் அதிகளவான நீரைததேக்கி சிறுபோக செய்கையை மேற்கொள்ளக்கூடியதாக இருக்குமென்றும் காலபோகத்தின் கூடுதலான பயிர்செய்கை மேற்கொள்ளலாம் என சுட்டிக்காட்டியுள்ள கமக்கார அமைப்;பினர் குறித்த குளத்தினை புனரமைத்துத்தருமாறு கோரிக்கை விடுத்துள்;ளனர்

இக்குளத்தினைப்புனரமைப்பதற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இதனைப்புனரமைப்பதற்கு 326 மில்லியன் ரூபா நிதி தேவைப்படுவதாகவும் இதற்கான முழுமையான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு ஆளுனருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக நீர்ப்பாசனத்திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வெள்ளத்தில் மூழ்கிய இராணுவ முகாம்

கிளிநொச்சி மாவட்டத்தில் இடையிடையே பலத்த மழை பெய்து வருகின்றது.

இதன் காரணமாக குளங்களின் நீர்மட்டமும் வெகுவாக அதிகரித்து வருகின்றது. இரணைமடு குளத்தின் நீர்மட்டமும் 35.4 அடியாக காணப்படுகின்றது. இரணைமடு குளம் அபிவிருத்தி செய்யப்பட்டதன் காரணமாக நீர் ஏந்து பரப்பு அதிகரித்துள்ளது.



இதன் காரணமாக இரணைமடுவில் அமைந்துள்ள கிளிநொச்சி இராணுவ தலமையகத்தின் சில பகுதிகள் இரணைமடு குளத்தின் கீழ் சென்றுள்ளது. இதனால் குளத்த நீர் முகாம் அமைந்திருந்த சில பகுதிகளை ஆக்கிரமித்துள்ளது. குறித்த குளத்தின் நீர் முகாமிற்குள் வராது படையினர் பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடதக்கதாகும்.

## பின்தங்கிய பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு கல்விசார் உதவிகள்

வவுனியாமாவட்டத்தில் பின்தங்கிய கிராமப்புற பாடசாலையில் கல்வி கற்கும் ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு இராணுவத்தினரால் கல்விசார் உதவிகளவழங்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினரால் முன்னெடுக்கப்பட்டுவரும் சமூக நலன்புரிசேவையின் ஒரு பகுதியாக இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அந்த வகையில் வவுனியா மாவட்டத்தில் மாணவர்களுக்கு ஒரு தொகை புத்தகப் பைகள், காலணிகள் மற்றும் ஏனைய கற்றல் உபகரணங்கள் வன்னி பாதுகாப்பு படை தலைமையக இராணுவத்தினரால்; பாடசாலைகளின் மூன்றாம் தவனை விடுமுறையை அடுத்து வழங்கப்பட்டுள்ளது.

தனியார்துறை நிறுவனத்தின் அனுசரணையுடன் அன்பளிப்பு செய்யப்பட்ட இந்த நன்கொடைமூலம் வறிய மாணவர்கள் 71 பேர் பயனடைந்துள்ளனர்.

கிராமப்புறங்களில் பின்தங்கிய சமூகத்தின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும் வகையில் இராணுவத்தினர் வழமையாக தமது ஒத்துழைப்புக்கள் மற்றும் உதவிகளை தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன், பாடசாலை மாணவர்களுக்கான புத்தகங்கள் மற்றும் ஏனைய கற்றல் உபகரணங்கள் என்பவற்றை நன்கொடைகளாக வழங்கிவருவதுடன், நாட்டின் பல பாகங்களிலும் கட்டடம், பாடசாலைகள் மற்றும் வகுப்பறைகளை புனர்நிர்மாணம் செய்தல், கல்வி புலமைப்பரிசில் வசதிகள் ஆகிய பல சேவைகளையும் இராணுவத்தினர் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் வரட்சி நிவாரணம் வழங்கப்பட்டது



கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேசசெயலக பிரிவிற்கு உட்பட்ட 1897 பேருக்கான வறட்சி நிவாரணம் பளை பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி,கண்டாவளை,பூநகரி,மற்றும் கரைச்சி பிரதேச செயலக பிரிவில் வரட்சியினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான வறட்சி நிவாரணம் வழங்கப்பட்டு வருகின்றன..

அதாவது பாதிக்கப்பட்ட 8000ற்கும் மேற்பட்டோர் தெரிவு செய்யப்பட்டு, அவற்றில் பூநகரி,பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகங்களை சேர்ந்த 2400 பேருக்கான நிவாரண பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

## வன்னேரிக்குளம் குடியேற்றக் கிராமத்தின் அடிப்படை வசதிகளை விரைந்து செய்துதருமாறு மக்கள் கோரிக்கை





கிளிநொச்சி கரைச்சிப்பிரதேசசெயலர் பிரிவின் கீழ் சுமார் 66 ஆண்டுகள் பழமை வாய்ந்த வன்னேரிக்குளம் குடியேற்றக்கிராமத்தில் அடிப்படைத்தேவைகளை பூர்த்திசெய்து தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் வன்னேரிக்குளத்தினை அண்மித்த பகுதிகளில் 1952ம்ஆண்டு மக்கள் குடியேற்றப்பட்டனர்.

இந்தப் பிரதேசத்தில் வன்னேரிக்குளம் மகாவித்தியாலயம், வன்னேரிக்குளம் வைத்தியசாலை வன்னேரிக்குள நீர்ப்பாசனத்திணைக்கள அலுவலகம், வன்னேரிக்குளம் தபாலகம், போன்ற கட்டுமான வசதிகளும் அப்போது ஏற்படுத்தப்பட்டிருந்தன.

இதனால் இந்தப்பிரதேசத்தில் தமது தேவைகளைப்பூர்த்தி செய்யக்ககூடியதாக காணப்பட்டதுடன், அதிகளவான மக்கள் இப்பிரதேசத்தில் வாழந்து வருகின்றனர்.

பின்னர் இந்தப்பிரதேசத்தில் தேவைப்பாடுகள் அதிகரித்த நிலையில் இங்கு வாழ்ந்த ஒரு பகுதி மக்கள் நகரர்புறங்களை நோக்கி நகரத்தொடங்கினர்.

தற்போது இந்தப்பிரதேசத்தில் நூற்றுக்கு மேற்படட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றபோதும் வைத்தியசாலை வசதி, சந்தை வசதி போக்கவரத்து வசதிகள் என்பன இன்றி பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக, கிராமத்திற்கான பிரதான வீதி இன்று வரை புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுவதனால் இங்கு வாழும் மக்கள் போக்குவரத்தில் சொல்லனத்துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

அத்துடன், தொழில் வாய்ப்புக்கள் இன்றியும் வருமானம இன்றியும் மருத்துவ வசதிகள் இன்றியும் ஏராளமான குடும்பங்கள் கஸ்ரங்களை அனுபவித்து வருகின்றனர்.

எனவே நீண்ட பழமையான வரலாற்றைக்கொண்ட வன்னேரிக்குளத்தின் தேவைகளை நிறைவுசெய்து தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

## வெளிச்சவீடுகளை அமைத்துத் தருமாறு கடற்தொழிலாளர்கள் கோரிக்கை

கிளிநொச்சி பூநகரி இலவங்குடா மற்றும் காக்கைத்தீவுப்பகுதிகளில்; வெளிச்சவீடுகளை அமைததுத்தருமாறு கடற்தொழிலாளர்கள கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி பூநகரிப்பிரதேசத்திற்குட்பட்ட இலவங்குடா மற்றும் காக்கைத்தீவு பகுதிகளில் சுமார் 158 வரையான கடற்தொழிலாளர்கள் முழுநேரமாக கடற்தொழிலில் ஈடுபட்டு வருவதுடன் 268வரையான கடற்தொழிலாளர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இந்தப்பிரதேசத்தில் வெளிச்சவீடுகள் இதுவரை அமைக்கப்படாமையினால் கடற்தொழில் காலங்களில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்தப்பிரதேசத்தில் வெளிச்சவீடுகள் இன்மையால் தாம் பெரும்சிரமங்களை எதிர்கொள்வதாகவும் இந்தப் பிரதேசத்;தில் வெளிச்சவீடுகளை அமைத்துத்தருமாறு மேற்படி பிரதேச மக்கள் கோரிக்கைவிடுததுள்ளனர்.

## வவுனியாவில் மழை காரணமாக 610 ஏக்கர் விவசாய நிலங்கள் பாதிப்பு

**வவுனியா நிருபர்**

மழை காரணமாக வவுனியா மாவட்டத்தில் 610 ஏக்கர் விவசாய நிலங்கள் பாதிப்படைந்துள்ளதாக கமநல அபிவிருத்தி திணைக்கள உதவிப் பணிப்பாளர் இ.விஜயகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது,

வவுனியா மாவட்டத்தில் உள்ள 820 இற்கு மேற்பட்ட குளங்களில் 560 குளங்களின் கீழ் நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படுகிறது.

இதில், கடந்த ஒரு மாத காலப்பகுதியில் பெய்த மழை காரணமாக 300 குளங்கள் நீர் நிறைந்து வான் பாய்ந்துள்ளன. மழை மற்றும் வான் பாய்ந்தமை காரணமாக 610 ஏக்கர் விவசாய நிலங்கள் பாதிப்படைந்துள்ளன. அழிவடைந்த நெற்செய்கை நிலங்களில் மக்கள் மீளவும் பயிரிட்டுள்ளனர்.

அழிவு விபரங்கள் பெறப்பட்டு அமைச்சுக்கும், திணைக்களத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் சில குளங்களில் உடைக்கும் வகையில் உமைகள் ஏற்பட்டிருந்த போதும் பத்தாயிரம் வரையிலான உரைப்பைகளை பயன்படுத்தி குளம் உடைக்கப்படாமல் தடுக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் வவுனியா மாவட்டத்தில் குளங்கள் உடைப்பெடுக்காமல் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம் எனத் தெரிவித்தார்.

## வவுனியா பேருந்துகள் பழைய பேருந்து நிலையத்திற்கு சென்றே சேவையில் ஈடுபட வேண்டும்: ஆளுனருடனான சந்திப்பில் தீர்மானம்

**வவுனியா நிருபர்**

வவுனியாவில் நீண்ட காலமாக இழுபறியில் காணப்பட்ட பழைய பேருந்து நிலையத்திற்கு பேருந்துகள் சென்று வருவது தொடர்பான பிரச்சனைக்கு வட மாகாண ஆளுனருடனான சந்திப்பில் தீர்வு காணப்பட்டுள்ளது.

வட மாகாண ஆளுனருடன் அவரது அலுவலகத்தில் வவுனியா வர்த்தகர் சங்கத்தினர் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினர் மற்றும் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் வவுனியா அமைப்பாளர் ஆகியோர் வவுனியா பழைய பேருந்து நிலையத்திற்கு உள்ளூர் சேவையில் ஈடுபடும் பேருந்துகள் வந்து செல்ல வேண்டும் என்பது தொடர்பான கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தனர்.

இக் கலந்துரையாடல் தொடர்பாக வவுனியா தனியார் பேருநது உரிமையாளர் சங்கத்தின் தலைவர் எஸ். ரி. இராஜேஸ்வரனிடம் கேட்டபோது, இவர் தெரிவித்ததாவது,

பழைய பேருந்து நிலையத்தில் உள்ள வர்த்தகர்கள் எதணீர்கொண்டுள்ள பாதிப்புகள் தொடர்பாக வர்த்தகர் சங்கத்தினால் ஆளுனரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தது. இதன் காரணமாக பலர் வேலை வாய்ப்பிழந்தமை தொடர்பாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இதன்போது வட மாகாண ஆளுனர் இணைந்த நேர அட்டவணையின் பிரகாரம் உள்ளூர் சேவையில் ஈடுபடும் பேருந்துள்



பழைய பேருந்தது நிலையத்தின் வெளிப்புறம் அமைக்கப்பட்டுள்ள தரிபித்திற்கு சென்று 3 நிமிடங்கள் தரித்திருந்து செல்ல வேண்டும் என தெரிவித்துள்ளார்.

எனவே அனைத்து உள்ளூர் பேருந்துகளும் புதிய பேருந்து நிலையத்தில் இருந்து பயணித்து பழைய பேருந்து நிலையத்தில் வெளிப்புறமாக அமைக்கப்பட்ட தரிப்பிடத்தில் 3 நிமிடங்கள் தரித்து நின்று மீண்டும் கடைத்தெரு வழியாக இலுப்பையடியை வந்தடைந்து தமது சேவைகளை தொடரும் என தெரிவித்தார்.

## காணாமல்போன மகன் கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு

வவுனியா ஈச்சங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தரணிக்குளம் பகுதியில் கிணற்றிலிருந்து ஆணின் சடலம் ஒன்றினை பொலிசார் மீட்டுள்ளனர்.

வீட்டில் இருந்த தனது மகனை நீண்ட நேரமாக காணவில்லை என்று அவரது தாயார் எல்லா இடமும் தேடியுள்ளார். இதன் போதே கிணற்றினுள் சடலமாக இருந்தமை கண்டு பிடிக்கபட்டது.

பின்னர் தகவல் பொலிசாருக்கு தெரியப்படுத்தப்பட்டது. பொலிசாரால் சடலம் மீட்கப்பட்டு வவுனியா வைத்திய சாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கபட்டுள்ளது. குறித்த சம்பவத்தில் செல்வம் வயது 40 என்ற நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

மேலதிக விசாரணைகளை ஈச்சங்குளம் பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்

# விவாவகரத்து வியாபாரமல்ல!



அன்று கோர்ட்டில் அதிக வேலை இருந்தது. இரண்டு கேஸ் விசயமாக நிறைய மெனக்கெட வேண்டியிருந்தது. திருமதி லலிதாமணி அவர்களுக்கு !. ஆகவே அக்கடாவென தன் அலுவலகத்தில் உட்கார்ந்தவர் தலை சாய்ந்து மெல்லிய குறட்டையுடன் நித்திரையில் மூழ்கி விட்டார். அப்பொழுது பகல் இரண்டு மணி இருக்கும். உள்ளே எட்டி பார்த்த அவரது குமாஸ்தா ரங்காச்சாரியார் அம்மையாரின் தூக்கத்தை கண்டு தொந்தரவு செய்யாமல் சாப்பிட்டு விட்டு சீக்கிரம் வந்து விடுவோம் என்று கிளம்பினார்.

யாரோ செருப்பை கழட்டும் சத்தத்தை கேட்டதும் சுகமான நித்திரையிலிருந்த லலிதாமணி அவர்கள் படக்கென கண் விழித்து யாரென பார்த்தார். உள்ளே வந்த பெண்ணுக்கு சுமார் 25 வயது இருக்கும். நல்ல உடல் வாகு, களையான முகம். ஆனால் முகத்தில் கோபம் கொப்பளிக்க வெயிலின் தாக்கத்தால் முகம் சிறிது கருத்தும் இருந்த்து. வணக்கம் மேடம் நித்திரை கலைந்தாலும் வந்திருப்பது கிளையண்ட் என தெரிந்ததால் லலிதாமணி அவர்கள் முகத்தில் மெல்லிய புன்முறுவலை காட்டி உட்காருங்க என்றார். அந்த பெண் உட்கார்ந்து தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டாள். இதற்குள் அந்த பெண்ணின் தோற்றம் மற்றும் அந்த பெண்ணின் நடவடிக்கைகளை கணிக்க தொடங்கி விட்டார் லலிதா மணி அவர்கள்.

ஐந்து நிமிடங்கள் கழிந்தது. உங்க பேரை தெரிஞ்சுக்கலாமா? ஆரம்பித்தார்.. என் பெயர் சியாமளா, நான் ஆர்.ஏஸ் புரத்துல இருந்து வர்றேன் எங்கப்பா பேர் நரசிம்மன், நாங்க ஒரு டயர் கம்பெனி வச்சிருக்கோம். இந்த பெண்ணின் கழுத்தில் தாலி இருந்தும் முதலில் தன் தகப்பனை அறிமுகம் செய்ததால் பிரச்சினையை ஒரளவு புரிந்து கொண்ட லலிதாம்பிகை மெல்ல உன் கணவர்..என்று இழுத்தார், அந்த பேச்சை எடுத்ததும் வந்திருந்த பெண்ணின் முகத்தில் கோபத்தின் சாயல் படிந்தது. ஆனாலும் வெளி காட்டிக்கொள்ளாமல் அவர் பேர் தனபால், ஒரு கம்பெனியில மேனேஜரா இருக்கறாரு, அந்த பிரச்சினை பத்தித்தான் இப்ப நான் பேசனும்னு வந்திருக்கேன். சொல்லும்மா உன் பிரச்சின என்ன? எனக்கு எப்படியாவது டைவர்ஸ் வாங்கி கொடுங்க, அந்த பெண் படபடப்புடன் சொன்னாள். ஒரளவு ஊகித்திருந்த லலிதாமணி அவர்கள் மெல்லிய புன்முறுவலுடன், ‘சரிம்மா’ உனக்கு எப்ப கல்யாணம் ஆச்சு? உன் கணவன் உனக்கு சொந்தமா? எல்லா விவரத்தையும் எங்கிட்ட சொல்லும்மா என்றார். அவரின் நிதானமான பேச்சு சாந்தமான முகம் வந்திருந்த பெண்ணின் முகத்தில் ஒரு நிம்மதி தென்பட்டது. அவர் என் அப்பாவின் அக்கா பையன் தான், அவங்க குடும்பம் எங்க குடும்பத்தை விட வசதி குறைவு இருந்தாலும் எங்கப்பா சொன்னவுடனே நான் அவரை கல்யாணம் பண்ணிகிட்டேன். ஆனால் நான் வசதியான வீட்டில இருந்து வந்திருக்கறதுனால அவங்க என்னைய எந்த வேலையும் செய்ய விடமாட்டேங்கறாங்க, நானும் எவ்வளவோ சரடை மாடையா சொல்லி பார்த்தேன். எனக்கு ஏதாவது வேலை கொடுங்க அப்படீன்னு, அவங்க ரொம்ப பயப்படறாங்க. என்னால இதுக்கு மேல தாங்க முடியலை, இதுக்கு நீங்க தான் ஒரு முடிவு செய்யணும்.

இந்த பெண்ணின் பிரச்சினை மிக சாதாரணமானது என்றாலும் வளர விடும்போது பெரிதாக ஆகிவிடும். இந்த பெண் அதிகமாக உணர்ச்சிவசப்படுவதால் தற்போது எதுவும் பேச முடியாது, என்று முடிவு செய்து கொண்டு உனக்கு கண்டிப்பா உதவி செய்யறேன். நீ இந்த முடிவை எடுத்திருக்கேன்னு உங்க அப்பாவுக்கு தெரியுமா? அப்பாவுக்கு எதுவும் தெரியாது, என் வருத்தம் துக்கம் எதுவும் தெரியாது. நானா கேட்டேன் அவரா ஒரு மாப்பிள்ளை முடிவு பண்ணாரு,

அதனால தினம் தினம் நரகத்துல இருக்கேன். அந்த பெண் விசும்பினாள். கவலைப்படாதே, இப்ப நீ வீட்டுக்கு போ, உன் புருசன், அப்பா நம்பரும், விலாசமும் எழுதி கொடுத்துட்டு போ. தைரியமாக இரு.நானே உன்னை கூப்பிடுறேன். அந்த பெண் அவளது விலாசம், தந்தை விலாசம், போன் எண் ஆகியவற்றை எழுதி கொடுத்து விட்டு விடை பெற்றாள். அப்பொழுது சாப்பிட்டுவிட்டு வந்த ரங்காச்சாரி இந்த பெண்ணின் முகத்தை பார்த்து அட இது தொழிலதிபர் நரசிம்மன் பொண்ணாச்சே மனதுக்குள் நினைத்து லலிதாமணி அம்மையாரிடம் வந்து நின்றார், என்ன ஆச்சார்யாரே சாப்பிட்டாச்சா? சாப்பிட்டுட்டேன், ஆமா இந்த பொண்ணு இங்க ஏன் வந்துட்டு போகுது என்று கேட்டார். இந்த பொண்ணை உங்களுக்கு தெரியுமா? நல்லா தெரியும். இவங்கப்பாவோட அப்பாவையும் நல்லா தெரியும். நல்ல கெளரவமான குடும்பம் என்றார். லலிதாமணி சிரித்துக்கொண்டே நீங்க இப்படி சொல்றீங்க, இந்த பொண்ணு என்னடான்னா ‘டைவர்ஸ்’ வாங்கி கொடு அப்படீங்குது.

ரங்காச்சாரி அட கடவுளே அந்த பையன் ரொம்ப நல்ல பையன் வசதி குறைச்சல்னாலும் பொண்ணோட அப்பா பையனோட குணத்தை பார்த்துத்தான் பொண்ணை கொடுத்தார். அவங்க கல்யாணத்துக்கு கூட போயிருக்கேன். சரி முதல்ல அவங்கப்பாவையும், அவங்க புருசனையும் கூப்பிடுவோம். ரங்காச்சாரி முதலில் அந்த பெண்ணின் தந்தைக்கு போன் செய்தார். எதிர் முனையில் போன் எடுக்கும் சத்தம் கேட்டவுடன் லலிதாமணியை பார்க்க அவர்கள் நீயே பேசு என்று கண் ஜாடை காட்டினார், வணக்கம் சார் லலிதாமணி வக்கீல் ஆபிசில இருந்து பேசறோம். உங்களோட பேசணும்னு எங்க மேடம் பிரியப்படறாங்க, உங்க அப்பாயிண்ட்மென்ட் கிடைக்குமா? வக்கீல் எதுக்கு என் கூட பேசணும்? எதிரிலிருந்து கேள்வி வரவும் ராங்காச்சாரியார் அவர் மகள் வந்தவிவரத்தை தெரிவித்தார். தானே நேர்ல் வருவதாகவும் நான்கு மணி அளவில் அங்கிருப்பதாக தெரிவித்தார். அடுத்தாக அந்த பெண்ணின் கணவனுக்கு போன் செய்தார். இரு முறை கிடைக்காமல் மூன்றாவது முறை எதிர் முனையில் போனை எடுத்தனர். தன்னை அறிமுகப்படுத்திக்கொண்ட ரங்காச்சரியார் உங்கள் மனைவி இங்கு வந்திருந்தார்கள் எனவும், வந்த விவரத்தையும் தெரிவித்தார். தானே அங்கு வருவதாக சொன்னவரிடம் நான்கு மணி அளவில் வந்தால் சௌகர்யப்படும் எனவும் தெரிவித்தார்.

லலிதாமணியின் முன்னால் நரசிம்மனும், அவரது மருமகன் தனபாலும் உட்கார்ந்திருந்தனர். இருவர் முகமும் குழப்பத்தில் இருந்த்து. நரசிம்மன் தன் மகளின் எண்ணம் ஏன் இப்படி போனது என்றும், தனபால் தன் மனைவியை அதிக கட்டுப்பாடுகள் செய்து கொடுமை படுத்தி விட்டோமோ என்றும் கவலைப்பட்டான். ஆனால் இருவரும் அந்த பெண்ணின் மீது அன்புடன் இருப்பதை உணர்ந்து கொண்ட லலிதா மணி அவர்கள் தான் சொல்லும் யோசனைப்படி நடந்தால் அவள் மனதை மாற்றி விடலாம் என்று தெரிவித்தார். அதன் படி நடப்பதாக தெரிவித்து விட்டு அங்கிருந்து கிளம்பினர்.

ஒரு நாள் நரசிம்மன் தன் மகள் சியாமளா வீட்டுக்கு தயங்கி தய்ங்கி வந்தார். சியாமளாதான் அவரை முதலில் பார்த்தாள். வாங்கப்பா என்று வரவேற்றாள். சத்தம் கேட்டு வெளியே வந்த தனபால் வாங்க மாமா என்று அழைத்தவன் அம்மா மாமா வந்திருக்காரு என்று சத்தம் கொடுத்தான். வெளியே வந்த தனபால் அம்மா வாங்கண்ணே என்று அழைத்தாள். உட்காருங்கண்ணே, அம்மா சியாமளா அப்பாவுக்கு குடிக்கறதுக்கு ஏதாவது கொண்டு வா, சியாமளா உள்ளே சென்றாள்.

அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம்மா, சும்மா மாப்பிள்ளைகிட்டே பேசிட்டு போகலாமுன்னு வந்தேன், தயங்க, தனபால் அம்மா சரிண்ணே நீ பேசிகிட்டு இரு நான் கொஞ்சம் வெளியே போயிட்டு வந்துடறேன், நாசுக்காய் வெளியேறினாள். சியாமளா எதுவும் புரியாமல் தன் கணவன் அருகில் நின்று கொண்டாள்.

ஒண்ணுமில்லை சியாமளா உன் கிட்ட ஒரு உதவி கேட்டு வந்திருக்கேன் பீடிகையுடன் ஆரம்பிக்க சியாமளா கேள்விக்குறியுடன் அவரை பார்த்தாள். அதுதாம்மா உன் பேர்ல சாயிபாபா காலனியில இருக்கற பிளாட்டை விக்கறதுன்னு முடிவு பண்ணியிருக்கேன். கம்பெனிக்கு கொஞ்சம் பணம் தேவைப்படுது., தயங்கி தயங்கி சொன்னார். சியாமளா தன் கணவன் ஏதாவது சொல்வானா என்று அவன் முகத்தை பார்த்தாள்.

மாமா சியாமளா என்னமுடிவு எடுக்கறாளோ அதுதான் என் முடிவும், இன்னும் பணம் தேவைப்பட்டுச்சுன்னா, என் கிட்டே பணமாகவும், நகையாவும் இருபத்தி அஞ்சு லட்சம் தேறும், அதைய வேணா எடுத்துக்குங்க, சரிதானே சியாமளா என்று கேட்டான்.

சியாமளாவுக்கு இந்த நடவடிக்கை புதிதாக இருந்தது.தான் எது செய்தாலும் அறிவுரை சொல்லிக்கொண்டே இருப்பவன் அப்பாவுக்கு கஷ்டம் என்றவுடன் தன் கையிருப்பையும் தர தயாராயிருக்கிறானே.

மாப்பிள்ளை இப்ப என்னால் தனியா பிசினசை பாக்க முடியலை, நீங்களாவது, இல்லை சியாமளாவது பொறுப்பை எடுத்துக்கணும் என்றார். மாமா இப்ப கம்பெனி நிர்வாகத்தை சியாமளா கவனிக்கட்டும், நான் அவளை எங்கேயும் அனுப்பாம வீட்டுல கட்டுப்பெட்டியா வைச்சுட்டேன்னு என் மேல கோபம் இருக்கும், அதனால உங்க கம்பெனியில் அவளுக்கு அப்பாயிண்ட்மெண்ட் கொடுங்க, நான் வழக்கமா போற கம்பெனிக்கே போறேன் எங்க குடும்பத்துக்கும் இரண்டு வருமானம் வரும். அதனால என்னைய விட சியாமளாதான் பெஸ்ட் செலக்சன் என்றான்,


வெரிகுட் நாளையில இருந்து சியாமளா உன்னை எங்க கம்பெனி மேனேஜிங் டைரக்டரா அப்பாயிண்ட்மெண்ட் பண்ணிடறேன். உன்னைய வீட்டுல இருந்து கூட்டிட்டு வர்றதுக்கும், போறதுக்கும் கம்பெனி கார் ஏற்பாடு பண்ணி கொடுத்துடறேன். சியாமளா மகிழ்வுடன் தலையாட்டினாள்,

இரண்டு மூன்று மாதங்கள் ஓடி விட்டன. லலிதா அம்மையாரிடம் ரங்காச்சாரி மேடம் அதுக்கப்புறம் அந்த பெண் வரவேயில்லையே? வரமாட்டாள், என்றவர் அந்த பெண்ணுக்கு தலைக்கு மேல வேலையிருக்கும்.

எந்த பெண்ணையும் முடுக்கி விட்டால் போதும் அவர்கள் ஓடிக்கொண்டே இருப்பார்கள். என்னை பொருத்தவரை இவள் அப்பாவும், கணவனும் புரிந்து கொண்டவர்களாய் இருந்ததால் நம் வேலை சுலபமாக முடிந்தது. ஒரு குடும்பத்தை சேர்த்து வைத்த புன்னகையுடன் சொன்னார் லலிதாமணி M.A,B.L அம்மையார்.

---

**நூல் விமர்சனம் : அட்டாளைச்சேனை மன்சூர்**
**நூலின் பெயர் : யாத்திரையிடை தரிசனங்கள்**
**நூலாசிரியர் : அக்கரைப்பற்று அவ்பர் முஸ்தபா**
**வெளியீடு : பேஜஸ் அக்கரைப்பற்று - எம்.ஏ.அபுதாஹிர்**
**விலை : 500/=**




‘யாத்திரையிடை தரிசனங்கள்’ நூல் மிக அண்மைய நாட்களில் வெளியிடப்பட்ட புத்தம் புதிய கவிதைத் தொகுதி நூலாகும். இக்கவிதை நூல் வித்தியாசமான அனுபவப் பகிர்வுகளை கொண்டிருப்பது இந்நூலிற்கு சிறப்பான வரவேற்பைக் கொடுக்கும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமிருக்காது என நம்புகின்றேன். காரணம் கவிதை என்கிற கவித்துவத்தைப் பற்றிய கருத்துக்களை பலர் கூறியிருந்தாலும் கவிஞனையும், கவிதையை நுகர்கின்ற வாசகனையும் சற்று பிடித்து நிறுத்திவைத்து யோசிக்க வைக்கும் யத்தனத்தின் ஒரு சிறு முயற்சியே கவிதையாகும் என்கிறார் டெர்ரி ஈகிள்டன். புகழ் பெற்ற பிரிட்டிஷ் இலக்கியக் கோட்பாட்டாளர். அந்த வகையில் யாத்திரையிடை தரிசனங்களும் ஒருவகையில் கவித்துவத்தை வித்தியாசமான முறையில் நுகர்கின்ற வாசகனை சற்று தரிசிக்கச் செய்கிறது. அக்கரைப்பற்றின் கவித்துவத்தின் வழியில் நின்று கவியை இரசித்து ருசித்து எழுதியிருக்கின்ற கவிஞர் அவ்பர் முஸ்தபாவின் இக் கவிநூல். இவரைப் பாராட்டத்தான் வேண்டும்.

முப்பத்திரெண்டு கவித்துவங்களை கொட்டியிருக்கும் கவிஞரின் இந்நூல் ஒவ்வொரு கால கட்டங்களிலும் தன்னோடு, தன் உறவோடு, தன் வாழ்வியலின் தரிசத்தோடு ஒத்துழைத்த, நேரில் கண்ணுற்ற, படித்த, சுவைத்தவற்றின் மீது பற்றுக்கொண்டு அதனை அனைவரும் தரிசிக்கவேண்டும் என்பதற்காக சிந்தனையின் ஊற்றாக வடிவமெடுத்து கவித்துளிகளால் வெண்பா கொண்டு புதுக்கவிதையை இல்லை நவீன கவிதையை இல்லை எல்லாக் கவிதைகளையும் இணைத்து புத்தம்புதுக் கவிதையை புதுமையாக படிக்கச்செய்திருக்கிறார் கவிஞர். பெருமகன் உயர்திரு என்கிற முதலாவது தலைப்பிலான கவித்துவத்தில் நாகையா மாஸ்டர் என்கிற தலைமையாசிரியரின் உயர் குணத்தை அவரது உளத்தில் உதித்திருந்த மனிதத்துவத்தை, கல்விக்காய் தன்னை அர்ப்பணித்திருந்த திருமகனை பாராட்டி சீராட்டியிருக்கிறார் கவிஞர்.

சிறந்த தலைமை ஆசிரியர் நீங்கள்தானாம்
தயையும் சத்தியமும் நிறைந்தவரும் நீங்கள் தானாம்
மாணவர் ஒவ்வொருவரையும்
ஒவ்வொரு மகனாகவே பார்ப்பீர்களாம்
பள்ளி நேரம் முடிந்ததும் தள்ளி இருக்கவில்லையாம் நீங்கள்
இரவுகளிலும் இரக்கத்தோடு பாடம் நடத்துவீர்களாம் இவ்வாறு

தனக்குத் தெரியாத ஒரு நல்லவரை கல்விக்காய் தன் ஊர் மாணாக்கருக்கு உதவிய விதத்தை பல்வேறு கோணங்களிலிருந்து ஆய்ந்திருக்கும் கவிஞர் இவ்வாறும் கூறுகின்றார்

பெருந்தகையே, வேட்டியோடு
அறிவூட்டும் வேட்கையோடு
எம் மண்ணுக்கு வந்த சரஸ்வதி நீங்களாம்
நீள்கால் சட்டையில் உலாவிய நிறைகுடமும் நீங்கள்தானாம்.

இவ்வாறு சுமார் 60வருடங்களுக்கு முன்னர் தனது பிரதேசத்தில் இன்றும் பேசப்படுகின்ற ஒருவரைப் பற்றிய கவிதைத்துளிகள் அற்புதமானவையே.

மற்றுமொரு தரினத்தினை தந்திருக்கிறார் மூதறிஞர் கல்விமான் அறிஞர் சித்திலெவ்பை அவர்களைப் பற்றியது. இற் ஸ ப்றொமிஸ் எனும் தலைப்பில் கவியின் ஊடாக தரிசிக்கச் செய்கிறார் கவிஞர்

சமூகமே கல் என்று முதல் கல் வைத்து
ஸாஹிறா கல்விக் கூடம் கொழும்பிலும்
மகளிர் பாடசாலை கண்டியிலும்
கட்டியெழுப்பி எமைத் தட்டியெழுப்பி
சமூகமே விழி என்று முஸ்லிம் நேசன் இருவாரா இதழால் அழைத்தீர்கள்
எங்கள் செவிகளுக்கு எட்டவில்லை அறிஞரே..
ஞானக்கடல் சித்திலெவ்பை அவர்களே இனி உங்களைப் படிப்போம்
இனி நீங்கள் சொன்னதைச் செய்வோம் உங்கள் கனவுகளனைத்தும்
இறை நாட்டமுடன் நனவாகும்.

என்று நீண்ட கவிதையாக வடித்திருக்கிறார் கவிஞர்.

மற்றொரு தரிசனத்தில் முஸ்லிம் சமூகத்தின் வள்ளல், பேருவளை ஜாமியா கல்விக்கூடம் தந்த நழீம் ஹாஜியாரைப் பற்றிய கருத்துரைகளை கவிக்குளத்துக் கண்ணீர் பூக்களாக்கி தருகிறார் ஞானதாசன் எனும் தலைப்பில்.

கடல் போல் சொத்து சேர்த்து வானம் போல் லாபமீட்டும்
புண்ணியங்களுக்குப் பண்டமாற்று செய்த
ஞானமுள்ள வணிகர் நீங்கள்
அந்திம நாட்களில் எஞ்சியசொத்தையும்கூட
ஏகனுடனுள்ள பற்றால் அவன்
கணக்கில்லவா பற்றவைத்தீர்கள்
வெறுங்கை விரித்து
காட்டியல்லவா மண் மறைந்தீர்
மனித மாணிக்கமே உங்கள் வள்ளன்மை
இன்ஷா அல்லா அந்தமின்றி வாழும்
பூலோகத்திலும் பரலோகத்திலும்என்று

கூறும் கவிஞரின் நீண்ட யாத்திரையின் ஒரு துளி கவிவரிகளை நினைவிற்குள் கொண்டு வந்தேன். வாசிக்கின்றபோதுதான் முழுமையான அர்த்தபுஷ்டியும் தெரியும்.

மற்றுமொரு தரிசனத்தில் எம் அன்னை உறங்கட்டும் எனும் தலைப்பில் யாத்திருக்கின்ற கவி வரிகள் தாயின் பாசத்திற்கு ஏதுநிகர்.

என்னைச் சுமந்த கருவறையை தன்
கருவறைக்குள் சுமக்கும் மண்ணறையே
உன்னருகில் உட்கார்ந்து
உன்னில் கண்ணீர் உதிர்த்து
உன் வயிறு தடவிப் பார்க்கிறேன்
என் தாயை நான் தொடுவதாய் ஓர் உணர்வு
அவளும் என்னை மடிசாய்த்து
எனக்குள்ளே ஓர் அதிர்வு

என்கிற வரிகளுடன்ஆரம்பித்து நீண்டு நெடுப்பமாய் செமைக்கிறார் தன் அன்னையின் அன்பிலே கட்டுண்டு

யாத்திரையிடை தரிசனங்களில் 32 தரிசனர்களை தரிசிக்கச் செய்திருக்கிற கவிநயம் வித்தியாசமான கோட்பாட்டுக்குள் கவிதையை நடைபயிலச் செய்திருக்கிறார் கவிஞர் அவ்பர் முஸ்தபா அவர்கள். உண்மையில் இன்று கவிதைகள் என்கிற பேரில் காதலை மாத்திரமே வைத்து என்னன்னவோவெல்லாம் பின்னிக் கொண்டிருக்கின்ற இன்றைய நாளில் இவ்வாறானதொரு தரிசனமிக்கச்செய்திருக்கிற கவிதைகள் சிறப்பானதாகவே தெரிகிறது. புதுமையும், நவீனமும், பழைமையும் புகுந்து விளையாடும் இவரது வரிகளில் வைரமும், வைடூரியமும் தங்குதடையின்றி ஆழமாகவே பார்க்கச் செய்திருக்கிறது. அணிந்துரையை சிறாஜ் மஷூர் வழங்கியிருக்கிறார். துறவு என்று போடும் கோலம் அது பொதுச்சந்தைக்கு வரும் ஏலம் இறை உறவு கொள்ளும் மூலம் அவரவருள் ஞானமும் மனிதமும் முழுமையுற்று வந்தமரும் காலம் என்கிற அடைகுறிப்புடன் இந்நூல் வெளியிடப்பட்டிருக்கிறது. வாசகர்கள் வாசிக்க வேண்டிய தரிசனங்களில் இக்கவிப்பா முதன்மையாக இருக்கும் என்கிற நம்பிக்கையில் முடிக்கிறேன். வாசியுங்கள் புரிவீர்கள்.

---

## சாலைகளே விளக்குகளாக...



நெதர்லாந்தில் சைக்கிள் பாதை ஒன்று ஒளியுமிழும் ஓடுகளின் மூலம் அமைக்கப்பட்டுள்ளது. பகலில் சூரிய ஒளியினை உள்ளே இழுத்து, பிறகு இரவில் உமிழும் இந்த ஓடுகளினால் மின்சார விளக்குகள் இந்த வீதியில் தேவைப்படுவதில்லை.

இப்படி ஒரு நன்மை கிடைக்கும் என்பது தெரிந்தும், இது வரை பெரும்பாலான கட்டுமான நிறுவனங்கள் சிமெண்ட், கான்க்ரீட், செங்கற்கள் போன்றவற்றில் இந்த ஒளியுமிழும் ஓடுகளைக் கலந்து எந்த கட்டிடங்களையும் கட்டாமல் தவிர்த்து வந்தனர். காரணம், நிறைய நடைமுறைச் சிக்கல்கள் இதில் உண்டு என்பதால்தான்.

மெக்சிகோவின் மிச்சோகேன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளரான ஜோஸ் கார்லோஸ் ரூபியோ அவலோஸ், இப்படி ஒளியுமிழும் ஓடுகளைக் கலந்து நெடுஞ்சாலைகள், மோட்டார் சைக்கிள் பாதைகள் மற்றும் கட்டிடங்கள் உள்ளிட்டவற்றைக் கட்ட முடியும் என்று நிரூபணம் செய்துள்ளார். இந்த புதிய டெக்னிக் பயன்படுத்திய சாலைகளில் மின்சார விளக்குகளை அமைக்கத் தேவையில்லை என்றால் மின்சாரம் மிச்சம்தானே!

சிமெண்ட்டில் ஒளி புகாது என்பதால், அதில் மிகச்சிறிய அளவு ஒளியைப் பிரதிபலிக்கும் பொருட்களைச் சேர்க்க அதன் அமைப்பை சிறிது மாற்ற வேண்டியிருந்தது. கண்ணாடியை ஒத்த அமைப்பு கொண்ட கண்ணாடி அல்லாத சேர்மத்தினை சிமெண்ட்டில் கூடுதலாகச் செலுத்தியிருப்பதால் சாலையில் வண்டி ஓட்டுபவர்களுக்கு கண் கூசுவது போன்ற தொல்லைகள் இருக்காது என்கிறார் ரூபியோ அவலோஸ்.

செயற்கையான ஒளியுமிழும் மற்ற பிளாஸ்டிக், பெயின்ட் போன்றவற்றைக் காட்டிலும் அதிக காலம் உழைக்கக் கூடிய தன்மையை சிமெண்ட்டிலுள்ள ஒளியுமிழும் பொருட்கள் பெற்றுள்ளன. சூரிய ஒளியிலிருந்து / விளக்குகளிலிருந்து பெறும் புற ஊதாக்கதிர்களை இந்த ஒளியுமிழும் பொருட்கள் ஈர்த்துக்கொண்டு பின்பு அதன் மூலம் ஒளிர்கின்றன. உலகின் வறுமை சூழ்ந்த குடியிருப்புப் பகுதிகளிலும், மின்சாரம் கிடைக்காத பகுதிகளிலும் இதனை செயல்படுத்த முயற்சிக்கலாம் என உற்சாகமாகப் பேசுகிறார் ஸ்பெயின் நாட்டின் தேசிய ஆராய்ச்சிக் கழகத்தைச் சார்ந்த ஆராய்ச்சியாளரான கார்மன் ஆண்ட்ரேட்.

## ஃபோர்ப்ஸ் 2018 இந்திய பிரபலங்கள் பட்டியல்



ஃபோர்ப்ஸ் இந்தியா இதழ் வெளியிட்டுள்ள 2018 ஆம் ஆண்டுக்கான இந்தியாவின் பிரபலங்கள் பட்டியலில் தமிழ் நடிகர்களான ரஜினி, விஜய், விக்ரம், சூர்யா, விஜய் சேதுபதி ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

சினிமா, விளையாட்டு உள்ளிட்ட துறைகளைச் சேர்ந்த டாப் 100 இந்திய பிரபலங்கள் பட்டியலை, ஃபோர்ப்ஸ் இந்தியா வெளியிட்டுள்ளது.

இதில் பிரபலங்கள் பட்டியலில் இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான் 11-வது இடத்திலும், (வருமானம் ரூ.66 கோடி) தமிழ் நடிகர்களான ரஜினி 14 ஆம் இடத்திலும் (வருமானம் ரூ.50 கோடி) , விஜய் 26 ஆம் இடத்திலும் (வருமானம் ரூ.30 கோடி), விக்ரம் 29 ஆம் இடத்தில் (வருமானம் ரூ.26 கோடி) உள்ளனர்.

சூர்யாவும், விஜய் சேதுபதியும் 34-வது இடத்தில் உள்ளனர். இவர்கள் வருமானம் ரூ.23 கோடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் பட்டியலில் முதல் மூன்று இடங்களில் சல்மான் கான், விராட் கோலி, அக்‌ஷய் குமார் ஆகியோர் உள்ளனர். இவர்களின் ஆண்டு வருமானம் முறையே ரூ.253 கோடி, ரூ.228 கோடி, ரூ.185 கோடி ஆகும்

ஃபோர்ப்ஸின் இந்தப் பட்டியல் ஓராண்டுக்கான வருவாய் மற்றும் மக்கள் மத்தியில் நிலவும் புகழின் அடிப்படையில் வெளியிடப்படுகிறது.



அருண் விஜய் ந
இயக்கிய இந்தப் பட
அதிதி ராவ், டயானா
அதைத் தொடர்ந்
இந்தப் படத்தில் தன்ய
நடித்துள்ளனர். படப்பி
இத்துடன், 'மூடர் கூ
டனும், 'சாஹோ' படத்தில்
என மூன்று மொழிகளில் உ
இந்நிலையில், அருண் வி
உதவி இயக்குநராகப் பணி
துச்சண்டை வீரராக அரு
இந்தப் படத்தில் நடி
அருண் விஜய். சண்டைப்
றார். அடுத்த ஆண்டு (20
எட்செட்ரா என்டெர்
டனைச் சேர்ந்த மார்கஸ்
னாக நடிக்க பாலிவுட் நடி

## மலையாளத்தில் கதாநாயகியான கவுரி கிஷன்

'96' படத்தில் சிறுவயது ஜானு கேரக்டருக்கு கிடைத்த அமோக வரவேற்பால், அதில் நடித்த கவுரி கிஷன் மலையாளத்தில் கதாநாயகியாக ஒப்பந்தம் ஆகியுள்ளார்.

சி.பிரேம் குமார் இயக்கத்தில் வெளியாகி சூப்பர் ஹிட்டான படம் '96'. காதலை மையப்படுத்தி எடுக்கப்பட்ட இந்தப் படத்தில், ராமச்சந்திரன் என்ற கதாபாத்திரத்தில் விஜய் சேதுபதியும், ஜானகி தேவி கதாபாத்திரத்தில் த்ரிஷாவும் நடித்தனர்.



ஜனகராஜ், பகவதி பெருமாள், காளி வெங்கட், ஆடுகளம் முருகதாஸ், தேவதர்ஷினி ஆகியோர் முக்கியக் கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். மெட்ராஸ் எண்டர்பிரைசஸ் சார்பில் நந்தகோபால் தயாரித்த இப்படத்துக்கு, கோவிந்த் வசந்தா இசையமைத்தார்.

விஜய் சேதுபதி - த்ரிஷாவின் பள்ளி வாழ்க்கை தொடங்கி, மூன்று கட்டங்களாக இந்தப் படம் எடுக்கப்பட்டுள்ளது. பள்ளிக்கால காதலைப் பற்றிய இந்தப் படம், பலருக்கும் தங்கள் பள்ளி வாழ்வு பற்றிய நினைவுகளைக் கிளறியது. குறிப்பாக இளவயது ராமச்சந்திரன், ஜானகி தேவியின் கதாபாத்திரம் அனைவரையும் வெகுவாகக் கவர்ந்தது. இதில், பள்ளிப்பருவ ராமச்சந்திரனாக எம்.எஸ்.பாஸ்கர் மகன் ஆதித்யனும் ஜானுவாக கவுரி கிஷனும் நடித்திருந்தனர்.

பள்ளிப்பருவ ஜானுவாக நடித்த கவுரி கிஷன் தற்போது மலையாளப் படத்தில் கதாநாயகியாக நடிக்க ஒப்பந்தமாகி உள்ளார். 'அனுகிரகீதன் ஆண்டனி' என்னும் படத்தில் சன்னி வெய்னுடன் ஜோடி சேர்கிறார் கவுரி கிஷன்.

## பொய்யுரைத்த ராதாரவி; கைவிரித்த மெலாகா



பாடகி சின்மயி சொன்னது உண்மைதான். தமிழ்த் திரைப்பட நடிகர் ராதாரவிக்கு மலேசியாவி
அரசின் சார்பில் டத்தோ பட்டம் வழங்கப்படவில்லை என்று அம்மாநில உயரதிகாரி உறுதிப்படுத்தி
முன்னதாக, பாடகி சின்மயி, நடிகர் ராதாரவி தனது பெயருக்கு முன்னால் போட்டுக்கொள்ளும்
டமே பொய் என்று கூறினார்.

இது குறித்து தான் சம்பந்தப்பட்ட மெலாகா அரசுக்கு இமெயில் அனுப்பியதாகவும். அதற்கு ெ
ரின் பொது விவகாரத் துறைக்கான சிறப்புச் செயலர் பிரசாந்த் குமார் பிரகாசம் பதில் அனுப்பியதா
யிலையும் தனது ட்விட்டரில் பகிர்ந்திருந்தார்.

அந்த பதிலஞ்சலில்,

மதிப்பிற்குரிய சின்மயி ஸ்ரீபதா

நான் ஏற்கெனவே, மெலாகா அரசின் நிர்வாகத் துறையிடம் விளக்கம் கேட்டுவிட்டேன். அதன்
ரவி என்ற நடிகருக்கு அந்த மாநில அரசு எந்த விருதினையும் வழங்கவில்லை. அவரது பெயர் எங்க
ஆவணங்களில் இல்லை.

அதுமட்டுமல்லாமல் இந்தியாவில் உள்ள நடிகர் ஷாருக் கானுக்கு மட்டுமே அந்த விருது வழங்
றது.

இந்தப் பிரச்சினையை நாங்கள் உன்னிப்பாகக் கவனிக்கிறோம். ஏனெனில் ராதாரவி இந்தப் பட்டத்தை தனது பெயருக்கு முன்னால் தவறாகப் பயன்படுத்தியிருக்
மெலாகா அரசின் முதல்வர் யாக் தவுன் ஹாஜி அடி பின்னிடம் இது குறித்து புகார் தெரிவித்து இதன் மீது நடவடிக்கையோ அல்லது தீர்வோ எட்டப்படும்.

இதைப் பற்றி எங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்ததற்கு மிகுந்த நன்றி.

பிரசாந்த் குமார் பிரகாசம்

மெலாகா முதல்வரின் பொது விவகாரத்துறைக்கான சிறப்புச் செயலர்.

என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்நிலையில், மலாய் மெயில் (Malay Mail) என்ற மலேசிய நாட்டு பத்திரிகைக்கு பேட்டியளித்த பிரசாந்த் குமார் பிரகாசம், 'ஆம்.ராதாரவி அந்தப் பட்டத்தைப்
எங்களது அரசு ஆவணங்களில் அவரது பெயர் இல்லை. இதுதொடர்பாக தென்னிந்திய பாடகி சின்மயி ஸ்ரீபதாவின் மின்னஞ்சலுக்கு நான் பதிலும் அனுப்பியுள்ளே
மெலாகா முதல்வர் அலுவலகம் இது சார்ந்த அறிக்கை ஒன்றை வெளியிடும்' எனக் கூறியிருக்கிறார்.

## காய்ச்சலில் காஜல்



உடல்தோற்றத்தை ஸ்லிம்மாக வைத்திருப்பதுடன் எப்போதும் சுறுசுறுப்பாக இருப்பவர் காஜல் அகர்வால். சீனியர் நடிகை என்ற லிஸ்டில் இடம்பிடித்திருந்தாலும் இளம் ஹீரோயின்களுக்கு சவால்விடும் வகையில் இன்னமும் கைநிறைய படங்களை வைத்திருக்கிறார். திருமணம் செய்துகொள் என்று காஜலிடம் அவரது குடும்பத்தினர் கேட்டபோதும் திருமணம் காத்திருக்கும் ஆனால் பட வாய்ப்புகள் காத்திருக்காது என்று திருமணத்தையே தள்ளிப்போட்டு விட்டு நடிப்பில் கவனம் செலுத்தி வருகிறார்.

இந்நிலையில் தான் 3 மாதம் படுத்தபடுக்கையாக இருந்ததாக தற்போது ஷாக்கான தகவல் வெளியிட்டிருக்கிறார். இதுபற்றி அவர் கூறியதாவது:

இந்த ஆண்டின் தொடக்கத்தில் நான் 3 மாதம் படுத்தபடுக்கையாக இருந்தேன். ஒரு நாள் மாலையில் எனக்கு காய்ச்சல் ஏற்பட்டது. அதற்கு சிகிச்சை எடுத்துக்கொண்டேன் ஆனாலும் காய்ச்சல் குணமாகாமல் பல நாட்கள் தொடர்ந்து இருந்தது.

இதனால் சோர்வடைந்தேன். பரிசோதனை செய்து பார்த்தபோது உடலில் எதிர்ப்பு சக்தி குறைவாக இருப்பது தெரியவந்தது. அதன் பிறகு தீவிரமாக தியானத்தில் ஈடுபட்டதுடன் எதிர்ப்பு சக்தி கூடுவதற்கான சத்து மாத்திரைகளும் எடுத்துக்கொண்டேன். பின்னர் குணம் அடைந்தேன். எனது நிலைமை எப்படி இருந்தது, காய்ச்சல் கண்டிருந்த நேரத்தில் நான் என்ன நிலைமையில் இருந்தேன் என்பது யாருக்கும் தெரியாது என்றார்.

## பாடகியான அதிதி ராவ்



வசந்தபாலன் இயக்கத்தில் உருவாகியுள்ள 'ஜெயில்'படத்தின் பாடல் ஒன்றுக்கு அதிதி ராவை பாடகியாக அறிமுகப்படுத்தியுள்ளார் ஜி.வி.பிரகாஷ்

வசந்தபாலன் இயக்கிய 'வெயில்' படத்தின் மூலம் இசையமைப்பாளராக அறிமுகமானவர் ஜி.வி.பிரகாஷ். தற்போது நாயகனாக வசந்தபாலன் இயக்கத்தில் நடித்துள்ளார்.

'ஜெயில்' என்ற பெயரிடப்பட்டுள்ள இப்படத்தின் படப்பிடிப்பு சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளில் நடத்தி முடித்துள்ளனர். தற்போது இறுதிகட்டப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

இப்படத்தில் ஒரு பாடலுக்காக அதிதி ராவை பாட வைத்திருக்கிறார் ஜி.வி.பிரகாஷ். மணிரத்னம் இயக்கத்தில் உருவான 'காற்று வெளியிடை' மற்றும் 'செக்கச் சிவந்த வானம்'படத்தில் நடித்தவர் அதிதி ராவ். மேலும், சில தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கலந்து கொண்ட போது கூட தனது குரல் திறமையை வெளிப்படுத்தினார்.

அதிதி ராவின் திறமையைப் பார்த்து 'ஜெயில்' படத்துக்காக பாடும் வாய்ப்பைக் கொடுத்திருக்கிறார் ஜி.வி.பிரகாஷ். 'காத்தோடு' என்ற டூயட் பாடலை ஜிவி.பிரகாஷோடு பாடியிருக்கிறார் அதிதி ராவ்.

இப்படத்தில் நாயகனாக நடித்துள்ளார் ஜி.வி.பிரகாஷ். அவரோடு ராதிகா, 'பசங்க' பாண்டி, 'எங்க வீட்டு மாப்பிள்ளை' அபர்ணதி, ஜெனிஃபர், மணிமேகலை, 'பாகுபலி' வில்லன் பிரபாகர் உள்ளிட்ட பலர் ஜி.வி.பிரகாஷுடன் நடித்திருக்கிறார்கள். நாயகனாக நடித்ததோடு மட்டுமன்றி இசையமைப்பாளராகவும் பணிபுரிந்துள்ளார் ஜி.வி.பிரகாஷ்.

இப்படத்துக்குக் கணேஷ் சந்திரா ஒளிப்பதிவு செய்திருக்கிறார். ஜி.ராமகிருஷ்ணனும், பாக்கியம் சங்கரும் வசனம் எழுதியுள்ளனர்.

## 'பேட்ட' வெளியீடு; 'சிங்கார் சிங்' நவாசுதீன் சித்திகி



'பேட்ட' படத்தில் நடிக்கும் பிரபல பாலிவுட் நடிகர் நவாசுதின் சித்திகியின் கதாபாத்திர போஸ்டர் வெளியாகியுள்ளது.

'2.0' படத்தைத் தொடர்ந்து கார்த்திக் சுப்பராஜ் இயக்கத்தில் ரஜினி நடித்திருக்கும் படம்'பேட்ட'. இப்படத்தின் பாடல்கள் டிசம்பர் 9-ம் தேதி வெளியாகவுள்ளது. பொங்கல் வெளியீடு என்பதால், விளம்பரப்படுத்தும் பணிகளைத் துரிதப்படுத்தியுள்ளது படக்குழு.

சில நாட்களுக்கு முன் வெளியான பேட்ட படத்தின் மரண மாஸ் பாடல் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ள நிலையில், டிசம்பர் 5 மாலை நவாசுதின் சித்திகி கதாபாத்திரத்தின் பெயர் மற்றும் போஸ்டரை பேட்ட தயாரிப்பு தரப்பு வெளியிட்டுள்ளது.

நவாசுதின், கண்ணாடி போட்டுக் கொண்டு மெலிதாக சிரிப்பது போல இருக்கும் இந்த போஸ்டரில் அவரது கதாபாத்திரத்தின் பெயர் சிங்கார் சிங் என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது.

'பேட்ட' படத்தில் ரஜினிகாந்துடன், சிம்ரன், த்ரிஷா, விஜய் சேதுபதி, சசிகுமார், விஜய் சேதுபதி, சனந்த் ரெட்டி, மேகா ஆகாஷ், குரு சோமசுந்தரம், ராம்தாஸ், ராமச்சந்திரன் உள்ளிட்ட பலர் நடித்திருக்கிறார்கள்.

அனிருத் இசையமைத்துள்ள இப்படத்துக்கு திரு ஒளிப்பதிவு செய்திருக்கிறார்.

## ரசிகர்கள் கிண்



'ஆஹா எத்தனை அழகு', 'காதல் கிசு கி
களில் நடித்த சார்மி தமிழில் எதிர்பார்த்த வ
தால் தெலுங்கு படங்களில் நடிக்கச் சென்றா
யினாக அங்கு தனக்கென ஒரு இடத்தை பி
புதுஹீரோயின்கள் வருகை அவருக்கு பின்
டுத்தியது. இந்நிலையில் இயக்குனர் புரி ஜெ
ருக்கு நட்பு ஏற்பட்டது. அது காதலாக மலர்ந்

இருவரும் லிவிங் டு கெதர் பாணியில்
தகவல் பரவியது. மேலும் புரி ஜெகநாத் பட
தயாரிப்பாளராக பொறுப்பேற்றுள்ளார். இ
பொறுப்பேற்றபிறகு சார்மிக்கு நடிப்புக்காக
வருவதில்லை. கைவசம் ஒரு படம் கூட இ
அவர் இணைய தள இன்ஸ்டாகிராமில் தினமும் தனது புகைப்படங்களை பகிர்ந்து வருகி

அதைக்கண்டு நெட்டீஸன்கள் அவரை கிண்டல் செய்தனர். அதைக்கண்டு கோபம்
எதிர்ப்பு காட்டுபவர்களுக்கு நடுவிரல் காட்டி கோபத்தை வெளிப்படுத்தினார். அவரது கே
ரசிகர்கள்,'விமர்சனங்களை கண்டு வெறுப்படைவதற்கு பதிலாக மீண்டும் நீங்கள் முயற்சி
லகில் விட்ட இடத்தை திரும்ப பிடிக்கலாம்' என அட்வைஸ் செய்துள்ளனர்.

## அஜித்
## புதிய அ



நடிகர் அஜித் ஜெர்ம
டர் நிறுவனத்துடன் ஆலே
புகைப்படங்கள் வெளியா
தளங்களில் வைரலாகி வ
நடித்துவரும் 'விஸ்வாசம்'
பிடிப்பு முடிந்த நிலையில்
அடுத்த ட்ரோன் தொடர்ப
அதிக கவனம் செலுத்தி வ
முன்னதாக அஜித்தின் ஆ
படி எம்.ஐ.டி மாணவர்கள்
ஆளில்லா விமானம் ஆஸ்
பரிசு வென்றது.

இந்நிலையில் தற்போ
குழுவின் அடுத்த திட்டம்
ஜெர்மனி சென்றுள்ளார் அ
வாரியோ ஹெலிகாப்டர் ந
முதல்வர் கிறிஸ்டென் லே
ஆலோசனை நடத்தினார். இந்த சந்திப்பு குறித்து ஃபேஸ்புக் பக்கத்தில் கருத்து ப
வாரியோ நிறுவனம், அஜித்தின் ஆர்வங்களுக்கு எல்லைகளே இல்லை.

கார் ரேஸ் போன்று வாரியோ ஹெலிகாப்டர்கள் மீதும் அவருக்கு ஆர்வம் அதி
கவும், தனக்கே உரிய தனி வழியின் மூலம் அனைவரது கவனத்தையும் ஈர்க்கக் கூ
என்று குறிப்பிட்டுள்ளனர். தான் தங்கியிருந்த ஹோட்டல் அறையில் அவர் உருவா
வாரியோ ஹெலிகாப்டரின் மாதிரிகள் எங்களுக்கு மிகவும் பிடித்திருந்தன. பகல் ெ
பிடிப்பு முடித்துவிட்டு, மாலை நேரங்களில் இதுபோன்ற செயல்களில் அவர் ஈடுப
யளிக்கிறது.

டிப்பில் கடைசியாக வெளியான படம் 'செக்கச்சிவந்த வானம்'. மணிரத்னம்
த்தில் அரவிந்த் சாமி, சிம்பு, விஜய் சேதுபதி, ஜோதிகா, ஐஸ்வர்யா ராஜேஷ்,
எரப்பா, பிரகாஷ் ராஜ் ஆகியோர் நடித்தனர்.
து மகிழ் திருமேனி இயக்கத்தில் 'தடம்' படத்தில் நடித்துள்ளார் அருண் விஜய்.
ா ஹோப், வித்யா ப்ரதீப், சோனியா அகர்வால் என மூன்று ஹீரோயின்கள்
டிப்பு முடிந்து போஸ்ட் புரொடக்ஷன் பணிகள் நடைபெற்று வருகின்றன.
டம்' நவீன் இயக்கிவரும் 'அக்னிச் சிறகுகள்' படத்தில் விஜய் ஆண்டனியு
் பிரபாஸுடனும் நடித்துள்ளார் அருண் விஜய். தமிழ், தெலுங்கு மற்றும் இந்தி
ருவாகி வருகிறது 'சாஹோ'.
ிஜய்யின் அடுத்த படம் பற்றிய அறிவிப்பு வெளியாகியுள்ளது. பாலாவிடம்
ரிபுரிந்த விவேக், இந்தப் படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமாகிறார். குத்
் விஜய் நடிக்கும் இந்தப் படத்துக்கு 'பாக்ஸர்' என்று பெயரிட்டுள்ளனர்.
ப்பதற்காக மலேசியா மற்றும் வியட்நாமில் குத்துச்சண்டை பயிற்சி பெறுகிறார்
் பயிற்சி இயக்குநரான பீட்டர் ஹெய்ன், அருண் விஜய்க்குப் பயிற்சி அளிக்கி
19) மார்ச் மாதம் இதன் படப்பிடிப்பு தொடங்குகிறது.
டெயின்மென்ட் சார்பில் வி.மதியழகன் இந்தப் படத்தைத் தயாரிக்கிறார். லண்
லுஜுங்பெர்ன், ஒளிப்பதிவாளராக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். ஹீரோயி
கையிடம் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது.

## அரசு

ின் மெலாகா
தியுள்ளார்.
டத்தோ பட்
மலாகா முதல்வ
் ஒரு இமெ
படி திரு.ராதா
னது அரசு
கப்பட்டிருக்கி
கிறார்.
பெறவில்லை.
ன். விரைவில்



## டல்

க' போன்ற படங்
வாய்ப்புகள் வராத
ர். கவர்ச்சி ஹீரோ
டித்தார். ஆனால்
ன்னடைவை ஏற்ப
ருகநாத்துடன் அவ
் வாழ்வதாகவும்
ட்களில் இணை
ண தயாரிப்பாளர்
வாய்ப்பு எதுவும்
ல்லாத நிலையில்
றார்.
அடைந்த சார்மி
பாதத்தை உணர்ந்த
செய்தால் திரையு

## தின் தாரம்

ரியில் ஹெலிகாப்
ாசனை நடத்தும்
கி சமூக வலை
ந்து. அஜித்
படத்தின் படப்
தக்ஷா குழுவின்
ான திட்டத்தில்
ருகிறார் அஜித்.
லோசனையின்
ீ தயாரித்த
திரேலியாவில்
து அதே தக்ஷா
தொடர்பாக
ஜித். அங்கு
திறுவனத்தின்
ாட்டனர்வுடன்
திவிட்டிருக்கும்
கம் உள்ளதா
யவர் அஜித்
க்கியிருந்த
பாழுதில் படப்
டுவது மகிழ்ச்சி

# நான் சுதந்திரப் பறவை!



டங்காமாரி ஊதாரி பொண்ணு அமைரா தஸ்தூரை அனேகன் படத்துக்குப் பிறகு காணவே இல்லை. இடையில் சந்தானத்துக்கு ஜோடியாக ஓடி ஓடி உழைக்கணும் படத்தில் நடிப்பதாக சொன்னார்கள். ஜாக்கிசானுடன் குங்ஃபூ யோகா, இந்தி, தெலுங்கு என்று ஒரு பெரிய ரவுண்டு அடித்துவிட்டு இப்போது மீண்டும் ஜி.வி.பிரகாஷின் காதலை தேடி நித்யா நந்தாவில் தமிழில் செகண்ட் இன்னிங்ஸ் ஆட வந்திருக்கிறார்.

**அமைரா என்கிற பேருக்கு என்ன அர்த்தம்?**

அரேபிய மொழியில் இளவரசின்னு அர்த்தம். அம்மா, ஈரானிய பார்ஸி, அப்பா, டாக்டரா இருக்காரு, ஒரே ஒரு அண்ணன்னு அளவான குடும்பம். மும்பையில் பிறந்து வளர்ந்தேன். படிக்கிறப்பவே மாடலிங்கில் இன்ட்ரெஸ்ட். விளம்பரப்படம் ஒன்றில் நடிக்க ஸ்கூலில் லீவு கேட்டப்போ கொடுக்கமாட்டேன்னுட்டாங்க. நான் ஸ்கூலையே உதறிட்டு, எனக்கு லீவு கொடுக்கிற வேற ஸ்கூலில் போய் சேர்ந்தேன்.

**சினிமாவுக்கு எப்படி வந்தீங்க?**

இந்தியில் இஷாக்தான் முதல் படம். இந்த வருஷத்தோட நான் சினிமாவுக்கு வந்து சரியா அஞ்சு வருஷம் ஆகுது. ஆடிஷனுக்குக் கூப்பிட்டதும் போனேன். வீட்டுல பார்சி, இங்கிலீஷ், குஜராத்தி பேசுவோம். இந்தியிலே கொஞ்சம் வீக்தான். டோன்ட் வொர்ரி... ஆக்ட்டிங் ஒர்க் ஷாப்புக்கு ரெகுலரா வந்திடுங்க. அது போதும்னு சொல்லி எனக்கு நம்பிக்கை கொடுத்தாங்க. அப்புறம் அங்கே ரெகுலரா ஒர்க் ஷாப் போனேன். செலக்ட் ஆனேன். அப்ப எனக்கு டான்ஸும் அவ்வளவா தெரியாது.

சின்ஸியரா டான்ஸ் கிளாஸும் போனேன். கதக் கத்துக்கிட்டேன். அறிமுகமான இஷாக்லேயே எனக்கு நல்ல பெயர். அந்தப் படத்தை பார்த்துதான் கே.வி.ஆனந்த் சார் கூப்பிட்டு அனேகன் கொடுத்தார். அப்புறம் ஜாக்கிசான் படம் குங்ஃபூ யோகா கிடைச்சது. டோலிவுட்லேயும் பிசியானேன். இப்ப மூணு இண்டஸ்ட்ரியிலும் படங்கள் கைவசமிருக்கு. எல்லா லாங்குவேஜ் டயலாக்குகளையும் இந்தியில் எழுதி வச்சுதான் பேசிட்டிருக்கேன்.

**அப்படியே உடைஞ்சிடறமாதிரி ஸ்லிம்மா இருக்கீங்களே?**

நான் ஸ்கூல் படிக்கும்போது கொஞ்சம் பப்ளியாகத்தான் இருந்தேன். அப்புறம் மாடலிங் வந்த பிறகுதான் ஃபிட்னஸ் மீது அக்கறை வந்துச்சு. ஃபிட்னஸ்னால நாம அழகாகத் தெரிவோம். நமக்குள் ஒரு தன்னம்பிக்கை இருக்கும். ஸ்கின்னும் பொலிவாகும்னு சொல்வாங்க. அது உண்மைதான். நான் இப்ப ஜிம்னாஸ்டிக், கிக் பாக்ஸிங், வெயிட் ட்ரெயினிங், யோகா, டான்ஸிங் எல்லாம் ஒண்ணு மாத்தி ஒண்ணு ரெகுலரா ஃபாலோ பண்றேன். அப்புறம் தண்ணீர் நிறைய குடிப்பேன். தினமும் ரெண்டு லிட்டர் தண்ணீர் குடிச்சா ரொம்ப ஹெல்தினு சொல்வாங்க. சீக்ரெட்னு ஸ்பெஷலா சொல்றதுக்கு ஒண்ணுமில்ல.

**நிறைய பாய்ஃப்ரெண்டு இருப்பாங்களே?**

லவ், டூயட் எல்லாம் படங்கள்லதான். நிஜத்துல ரொமான்டிக் பொண்ணு இல்ல. ரியல் லைஃப்ல நான் un romantic கேர்ள். திடீர்னு ஒரு பையன் என் முன்னாடி வந்து நின்னு ஒரு ரோஸ் நீட்டினால் கூட, அழகான ரோஸ் அது. அதை ஏன் செடியில் இருந்து பறிச்சே?னு அப்பாவியாகக் கேட்பேன். சாக்லெட் கொடுத்து ப்ரபோஸ் பண்றவங்ககிட்ட, நீங்க என்னை குண்டுப் பொண்ணு ஆக்கப் பாக்குறீங்களா பிரதர்?னு கேட்டுடுவேன். அவ்ளோ ஏன்? லவ் லெட்டர் கொடுத்தால் கூட, படிக்க டைம் இல்ல, வாட்ஸ் அப்ல டெக்ஸ்ட் பண்ணி அனுப்புங்கன்னு சொல்லி எஸ்கேப் ஆகிடுவேன்.

அப்படி ஒரு அன் ரொமான்டிக் ஆளுங்க நான். உங்களைப் பத்தி நீங்களே விமர்சனம் பண்ணுங்களேன்... என்னன்னு பண்றது? ம்... ஐயெம் travel bird, pet lover, fashion qu-e-e-n. அனிமல்ஸ் மேல பிரியம் ஜாஸ்தி. வீட்ல பார்சி ப்ரீட் பூனைக்குட்டி ஒண்ணு வளர்க்குறேன். பெயர் எம்மா. அதுக்குத்தான் என் உம்மா. அப்புறம் நாய்க்குட்டி கிங் லூயி. விலங்குகள் மீது ப்ரியமா இருக்கறதால நான்வெஜ் ஆசை இல்ல.

Life is a beach, enjoy the waves ங்கறது மாதிரி அழகான கடற்கரையைப் பார்த்து ரசிக்கப் பிடிக்கும். அப்புறம் நான் sea food junkie. ஃபிஷ் பிடிக்கும். ஆனா, நான் selfish பொண்ணு இல்ல. தினமும் எழுந்தவுடன் காஃபி. அப்புறம் நியூஸ்பேப்பர வரிவிடாமல் வாசிக்கறது ஹாபி. அப்புறம், சில மணி நேரம் ஃபிட்னஸ் ஒர்க் அவுட். டைம் கிடைச்சா கிரிக்கெட் பார்த்து ரசிப்பேன். பிடிக்காத விஷயம், செல்ஃபி ஹேபிட். அது ஃபேமிலி மெம்பர்ஸா இருந்தால் நோ சொல்லிடுவேன்.

# பிரமதாப்படுத்தும் பிரியங்கா!



'உத்தரவு மகாராஜா' படத்தின் மூலம் கோடம்பாக்கத்தை கலக்க வந்துள்ளார் பிரியங்கா. கன்னடம், தமிழ், தெலுங்கு என்று மூன்று மொழிகளிலும் பிஸியாக இருக்கிறார். ஒல்லி தேக நடிகைகளுக்கு மத்தியில் கொழுக் மொழுக் நடிகையாக களமிறங்கியிருக்கும் பிரியங்கா.

**உங்க சினிமா என்ட்ரி ஆக்சிடென்ட்டா, இன்சிடென்ட்டா...?**

கர்நாடக மாநிலம் ஷிமோகாதான் எனது சொந்த ஊர். ஏழாவது படிக்கும் போதே அப்பா காலமாகிவிட்டார். அம்மா இல்லத்தரசி. ஒரு அண்ணன். என்னுடையது சாதாரண நடுத்தரக் குடும்பம். சினிமாவுக்கும் எங்களுக்கும் எந்தவிதத்திலும் சம்பந்தம் கிடையாது.பத்தாம் வகுப்பு முடித்தபிறகு டிப்ளமோ சேர்ந்தேன். எங்க வீட்டிலிருந்து கல்லூரிக்கு 20 கிலோமீட்டர் தூரம் பஸ்ல டிராவல். அந்த பயணத்தில் நகைக்கடை விளம்பரங்களை உன்னிப்பாக கவனிப்பேன். உடனே தோழிகள் அந்த நகை டிசைன் நல்லா இருக்கா என்று கிண்டல் பண்ணுவார்கள். நகை மீது ஆசை இல்லை. நகையை அணிந்திருக்கும் அந்த மாடலாக வரணும் என்று சொல்வேன். அப்படித்தான் எனக்குள் சினிமா துளிர்விட ஆரம்பித்தது. ஆக்சிடென்டலான இன்சிடென்டுன்னு சொல்லலாம்.

**கன்னடத்தில் சீரியல் எல்லாம் பண்ணியிருக்கீங்களாமே?**

ஒரு முறை காலேஜ் விடுமுறையில் உறவினர் வீட்டுக்கு பெங்களூர் சென்றிருந்தேன். அந்தப் பயணத்தில் ஒரு நண்பர் என்னுடைய காஸ்டியூம், நெயில் பாலிஷ் நன்றாக இருக்கு என்று விஷ் பண்ணினார். நான் தேங்க்ஸ் தெரிவித்ததும் உங்களுக்கு சினிமாவில் நடிக்க விருப்பமா என்று கேட்டார். மனதுக்குள் ஆனந்தக் கூத்தாடினாலும் முன்பின் அறிமுகம் இல்லாதவர் என்பதால் பட்டும் படாமல் பேசி வைத்தேன். அந்த நண்பர் போகும்போது விசிட்டிங் கார்டு கொடுத்தார். தோழிகளிடம் நடந்த விஷயத்தை சொன்னேன்.

அவர்கள் பயமுறுத்தினார்கள். சும்மா ட்ரை பண்ணி பார்ப்போம் என்று விசிட்டிங் கார்டுல உள்ள நெம்பருக்கு டயல் பண்ணினேன். சீரியல் ஷூட் போயிட்டிருக்கு. நடிக்கிறீங்களா என்றார் அந்த நண்பர். என்னதான் நடக்கும் நடக்கட்டுமே என்று நானும் ஷூட்டிங் ஸ்பாட் போனேன். அங்கிருக்கிறவர்களும் மீரா ஜாஸ்மின், நயன்தாரா மாதிரி நீங்க அழகாக இருக்கீங்க என்று இஷ்டத்துக்கு ஏத்திவிட்டார்கள்.

வீட்டுக்கு வந்ததும் அம்மா விடம் நடந்ததைச் சொல்லி அனுமதி கேட்டேன். அம்மாவுக்கு இஷ்டம் இல்லை என்று தெரிந்தது. சீரியல் இயக்குநர் பெண் என்பதால் அவரை பேசச் சொன்னேன். அப்புறம் அம்மா சமாதானம் அடைந்தார்கள். அந்த சீரியலில் என்னுடைய கேரக்டர் பெயர் குலாபி. ஒரு எபிசோடில் நடிக்கப் போய் 300 எபிசோட் நடித்துக் கொடுத்தேன். அதுதான் நான் முதலும் கடைசியுமாக பண்ணிய சீரியல்.

**சினிமாவுக்கு எப்படித்தான் வந்தீங்க?**

அடுத்து என்ன என்று யோசித்தபோது பெங்களூருவுக்கு ஷிஃப்ட்டாகி தீவிரமாக பட வாய்ப்பு தேடினேன். பல கட்ட முயற்சிகளுக்குப் பிறகு கன்னடத்தில் கனப்பா என்ற படத்தில் ஹீரோயின் வாய்ப்பு கிடைத்தது. தொடர்ந்து கன்னடம், மலையாளம் என்று ஐந்தாறு படங்கள் முடித்தேன். சமீபத்தில் மலையாளத்தில் ஹிட்டடித்த காயங்குளம் குச்சுன்னியில் கூட நடிச்சிருக்கேன்.

**தமிழுக்கு எப்படி வந்தீங்க?**

உண்மையை சொல்வதாக இருந்தால் தமிழில் நடிக்கவேண்டும் என்பது என் நீண்ட நாள் கனவு. மாஸ் ஹீரோ படங்களின் ஆடிஷனில் பலமுறை கலந்து கொண்டிருக்கிறேன். ஆனால் சொல்லும்படியான வாய்ப்பு கிடைக்கவில்லை. அந்தச் சூழ்நிலையில் உதயா சார் ஆபீஸிலிருந்து ஆடிஷனுக்கு கூப்பிட்டாங்க. கதைக்குப் பொருத்தமாக இருந்ததால் எனக்கு ஹீரோயின் சான்ஸ் கொடுத்தார். அந்த சமயத்தில் சின்ன படம், பெரிய படம், கேரக்டர் வேல்யூ இருக்குமா என்று எதையும் யோசிக்கவில்லை. எனக்கு தமிழில் நடிக்கவேண்டும். உத்தரவு மகாராஜா அதற்கான ஸ்பேஸ் ஏற்படுத்திக் கொடுத்தது.

**பிரபு, உதயாவுடன் நடித்த அனுபவம்?**

உதயாவுக்கும் எனக்கும் வேவ்லெங்க்த் கரெக்ட்டா இருந்தது. தமிழுக்கு நான் புதுமுகம் என்பதால் உதயா தமிழ் சினிமாவைப் பற்றி சொல்லிக் கொடுத்தார். பிரபு சார் காம்பினேஷன்ல நடித்தது சூப்பர் அனுபவம். பெரிய நடிகருக்கான பந்தா இல்லாமல் எளிமையாக பேசினார். சக நடிகர்களின் திறமையை வெளிக்கொண்டு வரும் விதத்தில் அவருடைய ஆக்டிங் இருந்தது.

கஷ்டம் என்றால் அது மொழி மட்டுமே. பெங்களூருவில் எனக்கு தமிழ் நண்பர்கள், தமிழ்ப் படங்கள் மூலம் தமிழுடன் கனெக்ஷன் இருந்தது. ஸ்கூல் போனாலும் கற்க முடியாததை தமிழ் சினிமா பார்த்து தமிழ் கற்றுக் கொண்டேன். ஆனால் என்ன இருந்தாலும் சாதாரணமாகப் பேசுவது வேறு, டயலாக் பேசுவது வேறு. டயலாக் பேசும்போதுதான் சிறிது தடுமாறினேன். பிறகு பிக்கப் பண்ணிவிட்டேன்.

**அடுத்து?**

ஜி.என்.ஆர் குமரவேலன் இயக்கும் படத்தில் வித்தியாசமான கேரக்டர் பண்றேன். கன்னடத்துல ரவிச்சந்திரன் மகன் மனோரஞ்சன் படம் உட்பட மூன்று படங்கள் ரிலீஸுக்கு வெயிட்டிங்.

**கிளாமர்?**

நான் சப்பி கேர்ள். உடல்வாகு பொறுத்துதான் உடை அமையும். நான் ஒல்லியான தேகம் என்றால் பிகினி அணிந்து நடிக்கவும் தயார். கிளாமர் பண்ணும்போது உடம்பும் கனெக்ட் ஆகணும். குண்டுப் பொண்ணு பிகினி போட்டால் காண சகிக்காது. அதே ஸ்லிம் கேர்ள் ஸ்லிம் சூட் அணிந்தால் வாவ் என்று ரசிப்பார்கள். எனக்கு இன்னும் அது போன்ற வாய்ப்பு வரவில்லை. வரும்போது அதைப் பற்றி யோசிப்பேன்.

# நிவேதாவின் கிறிஸ்மஸ்

'ஜகஜால கில்லாடி', 'பொன் மாணிக்கவேல்' மற்றும் தெலுங்கு படங்கள் என பிஸியாக இருந்துவரும் நிவேதா பெத்துராஜ் துபாயில் உள்ள தன் குடும்பத்தினருடன் கிறிஸ்துமஸ் பண்டிகையைக் கொண்டாட புறப்பட உள்ளார். இதற்காக தற்போது நடித்துக்கொண்டிருக்கும் படங்களுக்குக் கொடுத்துள்ள கால்ஷீட் தேதிகளை மாற்றியுள்ளார். 'எனக்கு பூர்வீகம் மதுரை. இருந்தாலும் என்னோட சின்ன வயதிலேயே குடும்பத்தினர் எல்லோரும் துபாயில் செட்டில் ஆனதால் படப்பிடிப்பு இல்லாத நாட்களில் அங்கே பறந்து விடுவேன். அதுவும் இப்போது கிறிஸ்துமஸ் பண்டிகை வருகிறது விட்டுவிடுவேனா? அடுத்தடுத்து சென்னை, மைசூர் உள்ளிட்ட இடங்களில் படப்பிடிப்புகள் பரபரப்பாக நகர்கின்றன. மனம் கேட்கவே இல்லை. இப்படி ஒரு சூழலுக்கு நடுவே எப்படியாவது உறவினர்களோடு சேர்ந்து கிறிஸ்துமஸ் கொண்டாட வேண்டும் என விரும்பி படக்குழுவினரிடம் அனுமதி பெற்றேன்' என்கிறார் நிவேதா பெத்துராஜ்.

# லண்டனில் பிரபுதேவா

தமிழில் 'சார்லி சாப்லின் 2', 'தேவி 2', 'ஊமை விழிகள்' உள்ளிட்ட பல படங்களில் நடித்து வரும் பிரபுதேவா, தற்போது தமன்னாவுடன் தமிழில் 'பில்லா 2' படத்தை இயக்கிய சக்ரி டொலட்டி இயக்கிவரும் ஹிந்திப் படத்தின் படப்பிடிக்காக லண்டன் பறந்துள்ளனர்.

தமன்னா நாயகியாக நடித்து வரும் இப்படத்தின் படப்பிடிப்பு முடிந்ததும், சல்மான் நடிப்பில் தான் இயக்க உள்ள 'தபாங் 3' படத்தின் வேலைகள் தொடங்கும் என்று பிரபுதேவா தரப்பில் கூறப்படுகிறது.

# காதோடு... காதாக...

ஓவராக வாய் பேசி வந்த இரண்டு நடிகைகளை சீனியர் நடிகை ஒருவர் புலம்பவிட்டுவிட்டார். கோலிவுட்டில் ஹீரோக்களுக்கு நிகராக மார்க்கெட் வைத்துள்ளார் அந்த நடிகை. அதனால் அவர் எத்தனை கோடி ரூபாய் சம்பளம் கேட்டாலும் சிரித்தபடி கொடுக்க தயாரிப்பாளர்கள் தயாராக உள்ளனர். இந்நிலையில் இரண்டு இளம் நடிகைகள் அவரிடம் போய் மோதியுள்ளனர். ஒரு நடிகையோ சீனியர் நடிகையின் இடத்தை பிடித்தே தீர்வேன் என்று பிறரிடம் தெரிவித்துள்ளார். சிரித்து சிரித்து படத்தை ஓட்டும் அம்மணிக்கு சீனியர் நடிகையின் இடம் கேட்குதாக்கும் என்று கோலிவுட்டில் சிரித்தார்கள். இது குறித்து தெரிந்தும் சீனியர் நடிகை அமைதியாக இருந்தார். வடநாட்டில் இருந்து வந்த நடிகை நடிக்கத் துவங்கிய வேகத்தில் அந்த சீனியர் நடிகையை துரத்திக் காட்டுகிறேன் பார் என்று ஓவராக பேசினார். ஓவர் பேச்சாலேயே தனது பெயரை கெடுத்துக் கொண்டார். அதுவும் சீனியர் நடிகையின் காதுகளுக்கு சென்றது. அதற்கும் அவர் பதில் சொல்லாமல் அமைதியாக இருந்தார். இரண்டு நடிகைகள் ஓவராக பேசிக் கொண்டிருக்க இந்த சீனியர் நடிகை என்ன ஒன்றுமே சொல்லாமல் அமைதியாக இருக்கிறாரே என்ற பேச்சு கிளம்பியது. அவர் எதுவும் பேசாமல் காரியத்தில் இறங்கியது தற்போது தெரிய வந்துள்ளது. அவர் செய்த காரியத்தால் சவுடால் பேசிய இரண்டு நடிகைகளும் அதிர்ந்து போயுள்ளனர். ஹீரோயினுக்கு முக்கியத்துவம் உள்ள படங்களில் நடித்து வந்த சீனியர் நடிகை தற்போது ரூட்டை மாற்றி பெரிய ஹீரோக்களின் படங்களிலும் நடிக்க ஒப்புக் கொண்டுள்ளார். இதனால் சவால் விட்ட இரண்டு பேருக்கும் பெரிய ஹீரோக்களுடன் ஜோடி போடும் ஆசையில் மண் விழுந்துவிட்டது. சீனியர் நடிகை இறங்கி வந்துள்ளதை பார்த்த பெரிய ஹீரோக்கள் அவரை தங்களின் படங்களுக்கு பரிந்துரை செய்கிறார்களாம்.

★★★★★

மிகக் குறைந்த வயதிலேயே நாயகியானவர் இந்த நடிகை. ஆஜானுபாகுவான உடற்கட்டால் தமிழ் சினிமாவில் அறிமுகமாக கொஞ்ச காலத்திலேயே முன்னணி நாயகர்களுடன் ஜோடி சேரும் வாய்ப்பு கிடைத்தது. தமிழில் எப்படியும் ஒரு ரவுண்டு வருவார் என பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட இந்த நடிகை, படிப்பை காரணம் காட்டி திடீரென சினிமாவில் இருந்து விலகினார். இந்நிலையில் சிறிய இடைவெளிக்குப் பின் மீண்டும் நடிப்பைத் தொடங்கியுள்ளார் நடிகை. முன்பைவிட உடம்பெல்லாம் குறைத்து சிக்கென ரீ எண்ட்ரி கொடுத்துள்ளார். ஆனால், பழைய புசுபுசு உடம்பிற்கு இருந்த மவுசு இப்போது இல்லை. கைவசம் ஒரே ஒரு படம் மட்டுமே உள்ளது. ஆனால் அதுவும் எந்தளவிற்கு பலனளிக்கும் என்று தெரியவில்லை. இதனால் மீண்டும் பட வாய்ப்புகளைப் பெறுவதற்காக நடிகை புதிய டெக்னிக் ஒன்றைக் கையில் எடுத்துள்ளார் அதாவது தன் பழைய திரையுலக நண்பர்களை மீண்டும் வளையச் சென்று சந்தித்து வாய்ப்பு கேட்டு வருகிறார். அவர்களும் நடிகையின் மனம் கோணாமல் இருக்க, அடுத்த படத்தில் வாய்ப்பு தருகிறேன் என்று கூறி வழியனுப்பி வைக்கின்றனர். அது பொய் என்று தெரிந்தாலும், இந்த ஒரு வார்த்தையை கெட்டியாகப் பிடித்துக் கொள்ளும் நடிகை, அடுத்து சென்று சந்திப்பவர்களிடம் தான் அந்த நடிகரின் படத்தில் நடிக்க இருக்கிறேன் வாய் கூசாமல் சொல்கிறாராம். இதனால் மீண்டும் தன்னை பிசியான நடிகை போல் காட்டிக் கொள்ள அவர் விரும்புகிறாராம். ஆனால், இவரது டெக்னிக் அனைவருக்கும் தெரிந்து விடவே, 'ஓ அப்டியே' என முன்னால் கேட்டு விட்டு பின்னால் சிரித்துக் கொள்கிறார்களாம் இவரது நண்பர்கள். ரீ எண்ட்ரிக்காக இப்படியெல்லாமா பொய் பேசி பப்ளிசிட்டி தேடுவது என நடிகையைப் பார்த்து கேள்வி கேட்கின்றனர் அவரது ரசிகர்கள்.

★★★★★

படவாய்ப்புக்காக சிபாரிசு பண்ணச் சொல்லி துரத்தும் நடிகைகளை நாசுக்காக தவிர்த்து வருகிறார் பிரபல நடிகர் ஒருவர். துணை நடிகராக இருந்து மக்கள் விரும்பும் நாயகனாக உயர்ந்தவர் இந்த நடிகர். ஆரம்ப காலத்தில் தன்னுடன் நடித்த நடிகைகளுக்கு தொடர்ந்து சிபாரிசு செய்வதை வாடிக்கையாக வைத்திருந்தார். இதனால் அதிகம் சர்ச்சைகளில் அவர் சிக்கினார். இந்த காரணத்தினாலேயே அவரது நல்ல பெயருக்கு களங்கம் ஏற்பட்டது. இதனை அவரது நலம் விரும்பிகள் சுட்டிக் காட்ட, விழித்துக் கொண்டார் நடிகர். இனி நடிகைகளுக்கு சிபாரிசு செய்வதில்லை என்ற முடிவுக்கு அவர் வந்தார். இயக்குநர் கையைக் காட்டும் கதை நாயகிகளுடன் மட்டுமே சேர்ந்து நடித்து வருகிறார். இதனால் யாருக்கும் அவர் சிபாரிசு செய்வதில்லை. ஆனால், பழைய ஞாபகத்தில் நடிகரைப் பார்க்கும் போதெல்லாம் சிபாரிசு பண்ணச் சொல்லி சில நடிகைகள் டார்ச்சர் செய்து வருகிறார்கள். இதனால் மீண்டும் கிசுகிசுக்களில் சிக்க விரும்பாத நடிகர், சம்பந்தப்பட்ட நடிகைகளை நாசுக்காக தவிர்த்து வருகிறார்.

# விஜய்சேதுபதியின் பாடல்



சாம் சிஎஸ் இசையில் ஹரீஷ் கல்யாண் நடிக்கும் படத்தில் விஜய் சேதுபதி ஒரு பாடலை பாடியுள்ளார். புரியாத புதிர் படத்தை இயக்கிய ரஞ்சித் ஜெயக்கொடி இயக்கத்தில் ஹரீஷ் கல்யாண் நடிக்கும் படம் இஸ்பேடு ராஜாவும் இதய ராணியும். இப்படத்திற்கு சாம் சிஎஸ் இசையமைத்துள்ளார். ஹரீஷ் கல்யாண் ஜோடியாக ஷில்பா மஞ்சுநாத் அறிமுகமாகிறார். இப்படத்தின் ஃபர்ஸ்ட் லுக்கை நடிகர் விஜய்சேதுபதி தனது ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ளார். இந்நிலையில் இந்த படத்தில் விஜய் சேதுபதி ஒரு பாடலை பாடியுள்ளார்.



ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்தவள் ஓவியா. என்னதான் வறுமை ஆட்கொண்டிருந்தாலும், தன்னுடைய கொள்கைகளில் இருந்து ஒருபோதும் பின்வாங்க மாட்டாள். அதேசமயம் அவளுடைய அன்பான குணத்தால், எல்லோராலும் நேசிக்கப்படும் பெண்ணாகத் திகழ்கிறாள்.

ஓவியாவின் சிநேகிதி காயத்ரி. ஆனால், ஓவியாவுக்கு அப்படியே எதிர்மறையான எண்ணம் கொண்டவள். தனக்குப் பிடித்ததை அடைவதற்காக எந்த எல்லைக்கும் செல்வாள். மற்றவர்களையும் தனக்குச் சாதகமாக நடந்துகொள்ள வைப்பதற்கு முயற்சிப்பாள். இருப்பதை வைத்து திருப்தி கொள்ளும் ஓவியாவும், எப்போதும் சந்தோஷத்தைத் தேடியலையும் காயத்ரியும் நண்பர்கள். இந்த நண்பர்களின் கதையும், காதலால் அவர்களுக்குள் ஏற்படும் பிளவும்தான் 'ஓவியா' சீரியலின் கதைக்களம்.

கலர்ஸ் தமிழ் தொலைக்காட்சியில் கடந்த நவம்பர் 26-ம் தேதி முதல் இந்த சீரியல் ஒளிபரப்பாகி வருகிறது. திங்கள் முதல் வெள்ளி வரை மாலை 6.30 மணிக்கு இந்த சீரியலை கண்டு ரசிக்கலாம்.

# கால்களின் வீக்கம் ஆபத்தானதா?



★ பலருக்கு அதிக நேரம் நின்று கொண்டே பார்க்க வேண்டிய வேலை இருக்கும். கால்களை நகர்த்தாது, அசைக்காது, நடக்காது தொடர்ந்து ஓரிடத்தில் நின்று கொண்டே வேலை பார்க்கும் பொழுது கால்களில் ரத்த ஓட்டத்தின் வேகம் குறைகின்றது. இதனால் பாதம், கணுக்கால் இவற்றில் நீர் தேக்கம் ஏற்படுகின்றது.

அதே போன்று கால்களை வெகு நேரம் தொங்க போட்டவாறு உட்காருபவர்களுக்கும் இதே பாதிப்பு ஏற்படும். இதனை தவிர்க்க வேண்டியது அவரவர் கையில் தான் உள்ளது. 30 நிமிடங்களுக்கொருமுறை 5 நிமிடங்கள் நடக்க வேண்டும். அப்பொழுது தான் ரத்த ஓட்டம் சீராய் இருக்கும். இதனை முறையாக செய்யாவிட்டால் பல பாதிப்புகள் ஏற்படும்.

★ இறுக்கமாக அணிவதால் கால்களில் கொப்பளம் ஆகுவது மட்டுமல்ல கணுக்காலில் வீக்கம் ஏற்படும் வாய்ப்புகள் அதிகம். எனவே இறுக்கமான ஷீக்களை அணிவதனை அடியோடு தவிர்த்து விடுங்கள்.

★ அதிகம் உப்பு உட்கொள்ளும் பழக்கம் உள்ளவர்களுக்கு உடலில் நீர்தேக்கம் இருக்கும். இது பாதம் கணுக்கால் மட்டுமல்ல, உடல் முழுவதுமே வீக்கத்தினை உண்டாக்கும். இதுபோன்று உணர்ந்தால் உடனடியாக மருத்துவ ஆலோசனை பெற வேண்டும்.

★ அதிக எடை உடலில் கூடும் பொழுது உடல் இந்த எடையினைத் தாங்க கூடுதல் உழைப்பினைத் தர வேண்டும். கால், பாதங்களின் மீது அதிக அழுத்தம் ஏற்படுவதால் காலில் வீக்கம் ஏற்படலாம். இத்தகையோர் தகுந்த உணவு முறை அறிவுறுத்தலின் படி முயற்சித்து எடையை குறைக்க வேண்டும். முறையான உடல் பயிற்சியினையும் மேற்கொள்ள வேண்டும். கர்ப்பகாலத்திலும் கால், பாதத்தில் வீக்கம் ஏற்படுவதுண்டு. இவர்கள் மருத்துவ ஆலோசனையை முறையாய் பின்பற்ற வேண்டும்.

★ கணுக்கால், கால் வீக்கம் என்பது இருதய பாதிப்பினாலும், வலுவிழந்த இருதய தசைகள் காரணமாகவும் ஏற்படலாம். சோர்வு, மூச்சிறைப்பு, இருமல், எடை கூடுதல், அடிக்கடி சிறுநீர் செல்லுதல் போன்ற அறிகுறிகளுடன் கணுக்கால், பாத வீக்கமும் இருந்தால் உடனடியாக மருத்துவரை அணுக வேண்டும்.

★ எலும்பு முறிவு, மூட்டு முறிவு போன்றவை ஏற்பட்டால் வீக்கம் இருக்கவே செய்யும். மருத்துவ சிகிச்சையே இதற்குத் தீர்வு.

★ பாக்டீரியா, பூஞ்ஞை பாதிப்புகளும் கணுக்கால், பாதத்தில் இருந்தால் வீக்கம் இருக்கும். மருத்துவ சிகிச்சை அவசியம்.

★ காரில், ரயிலில், விமானத்தில் வெகு நேரம் காலை தொங்க போட்டுக் கொண்டு செல்லும் பொழுது கால் சிறிது வீங்கலாம். இது பின்னர் எழுந்து நடக்கும் பொழுது தானே சரியாகி விடும். அப்படி இல்லையெனில் மருத்துவ ஆலோசனை பெற வேண்டும்.

# மாதவிடாய் காலத்தில் பெண்கள் கடைப்பிடிக்க வேண்டிய சுகாதார முறைகள்



மற்ற நாள்களை விடவும் மாதவிலக்கு நாள்களில் அதிகபட்ச சுத்தம் அவசியம். மாதவிலக்கின்போது குளிக்கக் கூடாது என்றொரு நம்பிக்கை அந்த நாள்களில் இருந்தது. அப்போது குளங்களில் குளிப்பார்கள் என்பதால் சுகாதாரத்தைக் கருத்தில் கொண்டு அப்படிச் சொல்லப்பட்டிருக்கலாம். மாதவிலக்கின்போது இருவேளை குளிப்பது உடலைச் சுத்தமாக்குவதுடன், ரிலாக்ஸும் செய்யும்; வலிகளையும் குறைக்கும்.

சுகாதாரமான நாப்கின்கள் உபயோகிப்பது, சத்துள்ள உணவுகளை உட்கொள்வது, மன அழுத்தமின்றி இருப்பது போன்றவையும் கடைப்பிடிக்கப்பட வேண்டும். தினமும் இருவேளை குளிப்பது, ரத்தப் போக்கு இருக்கிறதோ, இல்லையோ குறிப்பிட்ட இடைவெளிகளில் நாப்கின்களை மாற்றுவது, சிறுநீர், மலம் கழிக்கும் ஒவ்வொரு முறையும் அந்தரங்க உறுப்புகளை (சோப் உபயோகிக்காமல்) சுத்தமான தண்ணீர்கொண்டு கழுவுவது, தொடைப் பகுதியையும் அந்தரங்க உறுப்பையும் ஈரமின்றி வைத்துக்கொள்வது இவை அனைத்தும் மாதவிலக்கு நாள்களில் ஒவ்வொரு பெண்ணும் கடைப்பிடிக்க வேண்டிய சுகாதார முறைகள்.

பிறப்புறுப்புக்குத் தன்னைத் தானே சுத்தப்படுத்திக் கொள்ளும் தன்மை இயல்பிலேயே உண்டு என்பதால், அதற்கெனப் பிரத்யேக சோப் அல்லது திரவம் உபயோகிக்கத் தேவையில்லை. உபயோகித்ததும் தூக்கியெறியக்கூடிய சானிட்டரி நாப்கின்கள், துவைத்து மீண்டும் உபயோகிக்கும் காட்டன் பேடுகள், டாம்பூன்கள், மென்ஸ்ட்ருவல் கப் என எதை வேண்டுமானாலும் அவரவர் வசதிக்கேற்ப உபயோகிக்கலாம். எதை உபயோகிப்பதானாலும், அதிகபட்ச சுகாதாரம் கடைப்பிடிக்கப்பட வேண்டும். குறிப்பாக மீண்டும் மீண்டும் பயன்படுத்தக்கூடிய காட்டன் பேடுகள், கப் போன்றவற்றை முறையாகச் சுத்தப்படுத்தியே உபயோகிக்க வேண்டும்.

ஒவ்வொரு நான்கு மணி நேரத்துக்கொரு முறையும் நாப்கினை மாற்ற வேண்டும். மீண்டும் உபயோகிக்கும் காட்டன் பேடுகளை லேசான உப்பு கலந்த குளிர்ந்த தண்ணீரில் ஊற வைக்க வேண்டும். வெந்நீரில் ஊறவைத்தால் ரத்தக் கறைகள் அப்படியே நாப்கினில் படிந்து நிரந்தரமாகிவிடும். ஊறியதும் நன்கு அலசி வெயிலில் உலர்த்தியே பயன்படுத்த வேண்டும். சூரிய ஒளியானது இயற்கையான கிருமி நாசினியாகச் செயல்பட்டு, பாக்டீரியாவையும் துர்நாற்றத்தையும் நீக்கிவிடும்.

டாம்பூன்களை ஆறு மணி நேரத்துக்கு மேல் அந்தரங்க உறுப்பினுள் வைத்திருக்கக் கூடாது. நீண்ட நேரம் உபயோகிப்பதன் விளைவாக ‘டாக்சிக் ஷாக் சிண்ட்ரோம்’ என்கிற அரிய வகை பிரச்சனை ஏற்படலாம். இது ஒருவகையான பாக்டீரியா தொற்று. காய்ச்சல், சரும அலர்ஜி, குறை ரத்த அழுத்தம் போன்ற பல பிரச்னைகளை ஏற்படுத்தக்கூடியது.

மாதவிலக்கின் பயன்படுத்தும் நாப்கின்கள், டாம்பூன்களை உபயோகிப்பதில் இருக்க வேண்டிய அதிகபட்ச கவனமானது அவற்றை அப்புறப்படுத்துவதிலும் இருக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் எந்த இடத்திலும் அவற்றை டாய்லெட்டினுள் போட்டு ஃப்ளஷ் செய்யக் கூடாது. உபயோகித்ததும் அவற்றை வேஸ்ட் பேப்பரில் சுற்றிக் குப்பைத் தொட்டியில் போடவும். அந்தக் குப்பைத் தொட்டியை உடனுக்குடன் சுத்தப்படுத்த வேண்டும். நீண்ட நேரம் குப்பைத் தொட்டியில் கிடக்கும் உபயோகித்த நாப்கின்கள் கிருமித் தொற்றை ஏற்படுத்தும். அது வேறுவிதமான உடல்நலக் கோளாறுகளை ஏற்படுத்தும். ஈக்களும் கொசுக்களும் அவற்றை மொய்த்தால் தேவையற்ற நோய்கள் பரவும்.

நாப்கின் உபயோகிப்பதால் சிலருக்கு அலர்ஜி வரலாம். கடுமையான அரிப்பு, அதன் காரணமாகச் சருமம் சிவந்து புண்ணாவது போன்றவை ஏற்படலாம். அலர்ஜிக்கான காரணத்தைச் சரும மருத்துவரிடம் கேட்டுத் தெரிந்துகொண்டு அதற்கேற்ற சிகிச்சையின் மூலம் குணப்படுத்திக் கொள்ள வேண்டும்.




# நீரிழிவைக் கட்டுப்படுத்தும் கோவைக்காய்



கோவையிலையை நிழலில் உலர்த்தி பொடி செய்து தேன் கலந்து ஒரு மண்டலம் உண்டுவந்தால் இழந்த தாதுவை மீண்டும் பெறலாம். இவர்கள் மருத்துவரின் ஆலோசனை பெறுவது மிகவும் அவசியமாகும்.

கோவை இலையின் சாறுடன் வெண்ணெய் சேர்த்து பூசி வந்தால் சொறி, சிரங்கு, நாள்பட்ட புண் போன்றவை குணமாகும். கோவைக்காயை மலிவான விலைக்கு கிடைக்கும். கோவைக்காய் வாங்கி சமைத்து உண்டால் அனைத்து நோய்களையும் குணப்படுத்தி விடலாம்.

கோவை சிறுநீர், வியர்வை ஆகியவற்றை மிகுதிப்படுத்தும் குணமுடையது.

வாந்தியை உண்டாக்கும் தன்மையுடையது. மேலும் இரத்த சர்க்கரையை குணப்படுத்த வல்லது.கோவைக் கிழங்குச் சாறு 10 மி.லி. காலை மட்டும் குடித்து வர இரைப் பிருமல் (ஆஸ்துமா) இரைப்பு, கபரோகம், மார்புச்சளி, மதுமேகம், கண்டமாலை, வீக்கம் ஆகியவை தீரும்.

கோவைக்காயை துண்டு துண்டாக வெட்டி, வெயிலில் நன்கு காயவைத்துப் பொடி செய்து ஒரு தேக்கரண்டி வீதம் மூன்று வேளை சாப்பிட்டால் இரத்த சர்க்கரை நோய் குணமாகும்.

ஒரே ஒரு கோவைக்காயை எடுத்து மோருடன் அரவையில் அரைத்து குடித்தாலும் மேற்சொன்ன பலன்களை பெறலாம். முக்கியமாக முற்றின கோவைக்காய் வாங்ககூடாது.

# நோயை தவிர்க்க வீட்டை சுத்தமாக வைத்திருங்கள்!



வீட்டை சுத்தமாக வைத்திருப்பது நோய்களைத் தவிர்க்கும் ஒரு முக்கிய வழி. தினமும் நான் பெருக்கி, துடைத்து, தூசு தட்டி செய்தாலும் சில அழுக்குகள் கறைகள் நீங்கவே இல்லையே என்று அலுத்துக் கொள்பவர்களுக்கான சில குறிப்புகள்.

★ எவர்சில்வர் வாஷ்பேசின் மற்றும் ஷெல்ப் உடையவர்கள் எத்தனை சுத்தம் செய்தாலும் சுத்தமாகத் தெரிவதில்லையே என்று அலுத்துக் கொள்கின்றீர்களா? பேபி எண்ணெய், ஆலிவ் எண்ணெய் என்ற மிக மென்மையான எண்ணெய் சிறிது எடுத்து பேப்பர் டவல் கொண்டு நன்கு துடையுங்கள். பொருட்கள் பளிச்சிடும். இப்படியா குறிப்பு சொல்வது எனக் கூற வேண்டாம். சில துளி எண்ணெயே போதும்.

★ காய்கறி வெட்டும் போர்டை எத்தனை சுத்தம் செய்தாலும் ஒருவித வாடையுடன் இருக்கின்றதா, ஒரு எலுமிச்சையினை பாதியாக நறுக்கி அதில் ஒரு பாதியினை போர்டில் நன்கு தேய்த்து ஒரு அரை மணி நேரம் அப்படியே விட்டு விடுங்கள். பின் அதனை நீரில் நன்கு கழுவி விட்டால் எந்த துர்நாற்றமும் இன்றி கறைகளும் இன்றி இருக்கும்.

★ காய்கறிகளும், பழங்களும் ‘பிரஷ்சாக’ இருக்க வேண்டும். பப்பிரேப் அல்லது இதற்கான பிரத்யேக உறைகளில் பழங்களையும், இதற்கான உறையில் காய்கறிகளையும் போட்டு வையுங்கள்.

★ வாஷ்பேசினில் ஆப்ப சோடா மாவு போட்டு ஒரு மணி நேரம் கழித்து சுடுநீர் ஊற்றுங்கள். வாஷ்பேசின், பாத்திரம் சுத்தம் செய்யும் இடம் இவை துர்நாற்றம் இன்றி இருக்கும்.

★ வெள்ளை வினிகர் கொண்டு பிரிட்ஜ் உள்ளே நன்கு துடைத்து விடுங்கள் ஒரு கல் ஆப்ப சோடாவினை பிரிட்ஜினுள் வையுங்கள். பிரிட்ஜ் வாடை இன்றி இருக்கும்.

★ மிக முக்கியமான, குழந்தைகள் தொடக்கூடாத மருந்துகளை சிகப்பு பேனாவில் ஒரு அட்டை பெட்டியில் போட்டு உயரே வையுங்கள்.

★ ஷர்ட், பேண்டில் சூயிங்கம் ஒட்டிக் கொண்டு விட்டதா? முதலில் துணியினை நன்கு தோய்த்து சுத்தம் செய்து காய வையுங்கள். பின்னர் அத்துணியினை பிரிட்ஜ் மேல் பிரீசரில் சிறிது நேரம் வையுங்கள். பிறகு எடுத்தவுடன் எளிதாய் சூயிங்கம் பிரிந்து வந்து விடும்.

★ ஒரு ஸ்பிரே பாட்டிலில் சிறிது பேக்கிங் சோடா போட்டு தண்ணீர் ஊற்றி கரைத்து வீட்டின் கறை படிந்த மூலைகளில் ஸ்ப்ரே செய்து சிறிது நேரம் சென்று பஞ்சு போட்டு துடைக்க அழுக்கு கறைகள் நீங்கி விடும்.

★ உங்கள் ஷூக்களுக்குள் குறிப்பாக ஸ்போர்ட்ஸ் ஷூக்குள் அவ்வப்போது சிறிது பேக்கிங் சோடா தூவி வையுங்கள். சிறிது நேரம் சென்று நன்கு தட்டி விடுங்கள். ஷீ வாடை இன்றி இருக்கும்.

★ ஜன்னல்கள் பிசுபிசுவென அழுக்கால் இருக்கின்றதா? சிறிது வெள்ளை வினிகரை தண்ணீரில் கலந்து ஜன்னலில் நன்கு தடவி பஞ்சு கொண்டு துடைத்து விடுங்கள்.

★ மைக்ரோவேவ் சுத்தம் செய்ய மைக்ரோவேவ் பாத்திரத்தில் நீர் ஊற்றி எலுமிச்சை துண்டுகளை அதில் வெட்டி போட்டு உள்ளே வைத்து 5 நிமிடம் நன்கு சுட வையுங்கள். பிறகு உள்ளே சுத்தமான துணி கொண்டு துடையுங்கள். சுத்தம் செய்யும்போது தகுந்த கையுறைகளை அணிந்து செய்யுங்கள்.

# வெந்தய தேநீரில் இவ்வளவு நன்மைகளா?



வெந்தயம் உணவின் சுவையை அதிகரிக்க மட்டுமின்றி, உடல் ஆரோக்கியத்தையும் தான் மேம்படுத்த உதவுகிறது. பலருக்கும் வெந்தயம் உடல் சூட்டை தணிக்கும் என்று தான் தெரியும். ஆனால் அதையும் தாண்டி, வெந்தயத்தில் ஏராளமான நன்மைகள் அடங்கியுள்ளன. அதற்கு வெந்தயத்தை சமையலில் சேர்ப்பதோடு மட்டுமின்றி, அதைக் கொண்டு டீ தயாரித்துக் குடிக்கவும் செய்யலாம். வெந்தய டீயைக் குடிப்பதால் என்னென்ன நன்மைகள் கிடைக்கும் என கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**வெந்தய டீ தயாரிப்பது எப்படி?**

ஒரு பாத்திரத்தில் நீரை ஊற்றி, அதில் வெந்தயத்தை சிறிது சேர்த்து மூடி வைத்து 3 நிமிடம் கொதிக்க வைத்து இறக்க வேண்டும். பின் அதை வடிகட்டி, தேன் சேர்த்து கலந்து, சூடாகவோ அல்லது குளிர்ச்சியான நிலையிலோ குடியுங்கள். இப்போது வெந்தய டீ குடிப்பதால் கிடைக்கும் நன்மைகளைக் பார்க்கலாம்.

நன்மைகள்

மாதவிடாய் காலத்தில் பெண்கள் வயிற்று வலி மற்றும் பிடிப்புக்களை சந்திப்பார்கள். இந்த சமயத்தில் வெந்தய டீயைக் குடித்தால், வலியில் இருந்து உடனடி நிவாரணம் கிடைக்கும்.

ஒருவர் தினமும் வெந்தய டீயை குடித்து வந்தால், தற்போது நிறைய பேர் சந்திக்கும் சர்க்கரை நோய் மற்றும் டைப்-2 சர்க்கரை நோயின் தாக்கத்தைத் தடுக்கலாம்.

கொலஸ்ட்ரால் பிரச்சனை உள்ளதா? அதைத் தவிர்க்க தினமும் வெந்தய டீ குடியுங்கள். இதனால் உயர் கொலஸ்ட்ரால் பிரச்சனை குறைவதோடு, இரத்த சர்க்கரை அளவும் குறையும்

வெந்தய டீ மிகச்சிறந்த மலமிளக்கியாக செயல்படும். ஆகவே மலச்சிக்கல் பிரச்சனை ஏற்படாமல் இருக்க நினைப்பவர்கள், தினமும் ஒரு டம்ளர் வெந்தய டீயைக் குடியுங்கள்.

வெந்தய டீ உடலில் தேங்கியுள்ள கொழுப்புக்களை கரைப்பதோடு, அடிக்கடி பசி ஏற்படுவதையும் தடுத்து, உடல் எடையைக் குறைக்க பெரிதும் உதவியாக இருக்கும்.

குடல் மற்றும் சிறுநீரகங்களை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டுமா? அப்படியெனில் தினமும் ஒரு டம்ளர் வெந்தய டீ குடியுங்கள். இது கழிவுகளை உடலில் இருந்து எளிதில் வெளியேற்றும்.

உலகில் இதய நோயால் அவஸ்தைப்படுவோரின் எண்ணிக்கை அதிகம். இத்தகைய இதய நோயின் தாக்கத்தைத் தடுக்க வேண்டுமெனில், தினமும் ஒரு கப் வெந்தய டீ குடியுங்கள்.

வெந்தய டீயில் அழற்சி எதிர்ப்பு பண்புகள் ஏராளமாக அடங்கியுள்ளது. ஆகவே மூட்டு வலி, முழங்கால் வலி உள்ளவர்கள், வெந்தய டீயைக் குடித்து வந்தால், இந்த பிரச்சனையில் இருந்து முழுவதுமாக தடுக்கலாம்.

# பிரசவத்திற்கு பின் ஏற்படும் மனரீதியான பாதிப்புகள் மீள்வது எப்படி?



எல்லா தாய்மார்களுக்கும், குழந்தை பிறந்தவுடனேயே தங்கள் குழந்தையின் மீது பிணைப்பு வந்துவிடும் என்று சொல்ல முடியாது.

பல தாய்மார்களுக்கு இந்தப் பிணைப்பு உடனடியாக வராது. கிட்டத்தட்ட ஆறு முதல் எட்டு மணி நேரம் வரை பிரசவவலியை அனுபவித்த பிறகுதான், ஒரு தாய் தன் குழந்தையைப் பெற்றெடுக்கிறாள்.

இதன் காரணமாக அவள் மிகவும் சோர்வாகயிருப்பாள். சிசேரியன் என்றால் அறுவை சிகிச்சைக்குப் பிறகு தாய்க்கு அது சார்ந்த வலி, சோர்வு இரண்டுமே இருக்கும். அலுத்துக் களைத்திருக்கும் தாயின் மனம் ஓய்வை நாடும். இதற்கிடையே, அந்த நேரத்தில் பிறந்த பிஞ்சுக்குழந்தை அழுதுகொண்டே இருக்கும். நேரம் பார்த்து, தாய் குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுக்க வேண்டும். ஒருபக்கம் உடல் அவஸ்தைகள், மறுபக்கம் குழந்தைப் பராமரிப்பு என்று அழுத்த, அந்தத் தாய்க்கு தூக்கம் சரியாகயிருக்காது.

பல தாய்மார்களுக்கு பிரசவித்த உடனேயே தங்கள் குழந்தை மேல் பிணைப்பு வந்துவிடுவதில்லை. அதற்கு அவர்களுக்குக் குறைந்தது இரண்டு வாரங்களாவது தேவைப்படலாம். இன்னும் சிலருக்கு மூன்று மாதங்கள்கூட பிடிக்கலாம். ஏனென்றால், குழந்தை பிறந்த முதல் மூன்று மாதங்கள்வரை குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுப்பது, சுத்தம் செய்வது, குளிப்பாட்டுவது என்றிருக்கத்தான் தாய்க்கு நேரம் சரியாக இருக்கும்.

மூன்று மாதங்களுக்குப் பிறகுதான் குழந்தை, தாயின் செய்கைகளுக்குப் பதில் கொடுக்க ஆரம்பிக்கும். தாய் சிரித்தால் குழந்தையும் சிரிக்கும். கொஞ்சி அழைத்தால், திரும்பிப் பார்க்கும். தாயுடன் விளையாட ஆரம்பிக்கும். இப்படித்தான் ஒரு தாய்க்குத் தன் குழந்தை மேல் கொஞ்சம் கொஞ்சமாக ஒரு பிணைப்பு வர ஆரம்பிக்கும்.

பாலூட்டுதல் தவிர்த்து, ஒரு தந்தை, தாய்க்கு இணையாகக் குழந்தையை எல்லாவிதத்திலும் பார்த்துக்கொள்ள முடியும். அன்பாக, ஆதரவாக மனைவியிடம் பேசலாம். கணவரின் இது போன்ற சின்னச் சின்ன உதவிகள், மெனக்கெடல்கள் பிரசவித்த பெண் தன்னை உற்சாகத்துடனும் மகிழ்ச்சியுடனும் மீட்டெடுக்கக் கைகொடுக்கும்.

# கம்பியூட்டரும் கிருமிகளும்

நாம் எப்போதெல்லாம் கை கழுவுகிறோம்? சாப்பிடுவதற்கு முன்னும் பின்னும், கழிவறையை பயன்படுத்திய பிறகு, குப்பைகளைச் சுத்தம் செய்த பிறகு எனத் தேர்ந்தெடுத்த சில வேலைகளைச் செய்யும்போது மட்டும் சுத்தமாக இருக்க வேண்டுமென எதிர்பார்த்து இப்படி செய்கிறோம். அதே நேரம் கம்ப்யூட்டரையோ, செல்போனையோ பயன்படுத்திய பிறகு நாம் கைகளை கழுவுகிறோமா? அதற்கும் சுத்தத்துக்கும் என்ன சம்பந்தம்? என்று நினைக்கலாம்.

ஆனால், கழிப்பறையைவிட ஆறு மடங்கு அதிகமான கிருமிகள் நாம் தினசரி பயன்படுத்தும் கம்ப்யூட்டரிலும், செல்போனிலும் இருப்பதாக ஆராய்ச்சிகள் சொல்கின்றன. கம்ப்யூட்டர் கீ போர்டில் பாக்டீரியா இருப்பதே தெரியாமல், நாமும் அதன் மீது விரல்களை நடனமாட விடுவோம். பிறகு அதே கையுடன் செல்போனை எடுத்துப் பேசுவோம். கண்ணை கசக்குவோம். சில சமயம் கம்ப்யூட்டரில் தானே வேலை பார்க்கிறோம் என்று அசட்டையாகக் கை கழுவாமல் சாப்பிட்டும் விடுவோம். கீ போர்டில் இருந்த கிருமிகள் அப்போது நம் உடலுக்குள் புகுந்து, தங்கள் வேலையைக் காட்டத் தொடங்கிவிடும்.

பலர் கழிப்பறையை பயன்படுத்திய பிறகு கைகளைச் சரியாகச் சுத்தம் செய்வதே இல்லை. இன்னும் சிலர் கம்ப்யூட்டரின் முன்னால் அமர்ந்துகொண்டு கைக்குட்டையால் முகத்தை மூடாமல் இருமுவதும், தும்முவதும் சகஜம். இதுபோன்ற பழக்கங்களாலும் கீ போர்டில் கிருமிகள் பெருகும். அலுவலகத்தில் யாருக்காவது சளியோ, இரைப்பை குடல் அழற்சியோ இருந்தால், அவர் பயன்படுத்திய கீ போர்டையோ மவுஸையோ நாமும் பயன்படுத்தினால் போதும். அவருடைய நோய்கள் நமக்கும் எளிதாக தொற்ற வாய்ப்பாகிவிடும்.

குறிப்பிட்ட கால இடைவெளியில் கீ போர்டு, மவுஸ், செல்போன் ஆகியவற்றை சுத்தப்படுத்த வேண்டும். கீ போர்டைத் தலைகீழாகக் கவிழ்த்து மெதுவாகத் தட்டுவதன் மூலம் அதனுள்ளே சிக்கியிருக்கும் உணவுத் துணுக்குகளையோ, சிறிய குப்பையையோ அகற்றலாம்.

# ‘ஹைப்பர்லிங்க்’ வரலாறு தெரியுமா?




இணையத்தின் ஆற்றலே இணைப்புகளில்தான் இருக்கிறது. அதாவது, அடையாளம் காட்டப்படும் இடத்தில் ‘கிளிக்’ செய்தால் அதன் பின்னணியில் உள்ள மூல இடத்துக்கு அழைத்துச் செல்லப்படும் வசதி.


‘ஹைபர்லிங்க்’ எனக் குறிப்பிடப்படும் இந்த வசதி மூலம் இணையத்தில் இருந்த இடத்திலிருந்து தகவல்களை நாடி விரும்பிய இடங்களுக்கு எல்லாம் தாவ முடிகிறது. எல்லாம் சரி, இந்த ‘ஹைபர்லிங்க்’ வசதியின் வரலாறு தெரியுமா?

வடிவமைப்பாளரான மார்கரெட் ஸ்டூவர்ட், 4 நிமிடங்களுக்கும் குறைவான வீடியோவில் இந்த வரலாற்றைச் சுவைபட விவரித்துள்ளார்.

இணைய முன்னோடிகளில் ஒருவராகக் கருதப்படும் வானேவர் புஷ் 1945-ல் இணையத்துக்கான மூல கருத்தாக்கத்தை முன்வைத்த கட்டுரையில் ‘ஹைபர்லிங்க்’ போன்ற வசதியைக் குறிப்பிட்டதிலிருந்து, 1965-ல் டெட் நெல்சன் எனும் வல்லுனர் முதலில் ஹைபர்லிங் எனும் சொல்லைப் பயன்படுத்தியதுவரை இந்த வீடியோ விவரிக்கிறது.

இணையத்தில் சர்வ சாதாரணமாக நாம் பயன்படுத்தும் மிக முக்கிய வசதியின் பூர்வ கதையை இந்த வீடியோ மூலம் அறியலாம், வியக்கலாம்!

# ரெஸ்யூம் உருவாக்க உதவும் தளம்




வேலைவாய்ப்புக்கு விண்ணப்பிக்கும்போது ரெஸ்யூம் தொடர்பாகப் பல விதக் கேள்விகளும் சந்தேகங்களும் இருக்கலாம். ரெஸ்யூமைத் தயாரிக்கும்போது அது சிறந்ததாக இருக்கிறதா, திறமைகளை எல்லாம் வெளிப்படுத்தும் வகையில் இருக்கிறதா போன்ற கேள்விகள் எழலாம். இந்தக் கேள்விகளுக்குப் பதில் அளிக்கும் வகையில் நேர்த்தியான முறையில் தொழில்முறை ரெஸ்யூம்களை உருவாக்கிக் கொள்ள ‘மைரெஸ்யூம்பார்மெட்’ தளம் கைகொடுக்கிறது. இந்தத் தளத்தில் ஐந்தே நிமிடங்களில் நேர்த்தியான ரெஸ்யூமைத் தயார் செய்துவிடலாம். இதிலிருந்து மாதிரி ரெஸ்யூம்களைத் தேர்வு செய்து, அதிலுள்ள அம்சங்களுக்கு ஏற்ப, தனிப்பட்ட தகவல்களை இடம்பெறச்செய்து நமக்கான ரெஸ்யூமை உருவாக்கலாம். முன்னணி நிறுவனங்களில் வேலைவாய்ப்பைப் பெற்றுத்தந்த ரெஸ்யூம்களின் அடிப்படையில் செயற்கை நுண்ணறிவின் ஆற்றலோடு இந்தத் தளம் ரெஸ்யூம்களை உருவாக்கித் தருகிறது. இணைய முகவரி:https://www.myresumeformat.com/

# யாஹூவின் செயலி

யாஹூ நிறுவனம் அண்மைக் காலமாகப் புதிய சேவைகளை அறிமுகம் செய்துவருகிறது. இந்த வரிசையில் இப்போது ‘வேக்கிங் நியூஸ்’ எனும் புதிய செயலியை அறிமுகம் செய்துள்ளது.


இந்தச் செயலி காலையில் கண் விழிக்க உதவும் அலாரம் வகையைச் சேர்ந்தது. இதில் ஒரு வித்தியாசமான அம்சமும் இருக்கிறது. இது அலாரம் ஒலி எழுப்புவதற்குப் பதில், அன்றைய தினச் செய்திச் சுருக்கங்களை ஒலிக்கச் செய்கிறது.

பல்வேறு செய்தித் தளங்களிலிருந்து செய்தி சேவையைத் தேர்வு செய்துகொள்ளலாம். ஆண்ட்ராய்டு போன்களுக்கு அறிமுகம் ஆகியுள்ளது.

அமெரிக்காவில் முதல் கட்டமாக அறிமுகம் ஆகியுள்ளது.

**மேலும் விவரங்களுக்கு:**
https://in.yahoo.com/?p=us

# மீண்டும் ப்ரொஃபைல் பக்கத்தை மாற்றும் இன்ஸ்டாகிராம்





பயனர்களின் ப்ரொஃபைல் தோற்றத்தை இன்ஸ்டாகிராம் மீண்டும் மாற்றியமைக்க உள்ளது. ப்ரொஃபைல் பக்கத்தில் இருக்கும் விஷயங்களை இடம் மாற்றவும் உள்ளது.

இந்த வருடம் டிசம்பர் மாதம் வரை புதிய மாற்றங்களை பரிசோதிக்க உள்ளதாக அந்நிறுவனம் தனது வலைப்பக்கத்தில் தெரிவித்துள்ளது. இதில் ப்ரொஃபைலுக்கு மேலே இருக்கும் அம்சங்கள் எப்படி தெரியும், ஐகான் மற்றும் பட்டன்களில் இருக்கும் மாற்றங்கள், ஒரு பக்கத்திலிருந்து இன்னொரு பக்கத்துக்குச் செல்லும் முறை என மாதிரிப் புகைப்படங்களைக் காட்டியுள்ளது.

இதில் முக்கிய மாற்றமாக, ப்ரொஃபைல் புகைப்படம் வலது பக்கம் மாறும், அதன் விவரணை இடது பக்கம் இருக்கும். லைக்ஸ் பக்கத்தில் மேலே ஒரு கட்டம் இருக்கும். அது பொதுவான நண்பர்கள் மூலம் எவ்வளவு லைக்குகள், தொடர்பவர்களிடமிருந்து எவ்வளவு, நீங்கள் தொடர்பவர்களிடமிருந்து எவ்வளவு லைக்குகள் போன்ற விவரங்களைக் காட்டும். வியாபாரத்துக்கான பக்கத்தில், ‘Start Order' என்ற தேர்வும் இடம்பெறவுள்ளது.

# முகநூலில் செலவிடும் நேரத்தை கணக்கிட வசதி




ஃபேஸ்புக்கில் தாங்கள் எவ்வளவு நேரத்தைச் செலவிடுகிறோம் என்பதைத் தெரிந்துகொள்ள, பயனர்களுக்கு புதிய வசதியை ஃபேஸ்புக் அறிமுகம் செய்யவுள்ளது. இதே வசதி இன்ஸ்டாகிராமிலும் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

தொழில்நுட்ப உலகத்தில் தற்போது "time well-spent" என்பது பரவலாகப் பேசப்பட்டு வருகிறது. தொழில்நுட்பங்களுடன் நாம் செலவிடும் உபயோகமான நேரம் பற்றிய கருத்தே இது. இதையொட்டியே இந்த புதிய வசதியை ஃபேஸ்புக் அறிமுகம் செய்கிறது.

ஃபேஸ்புக் டாஷ்போர்டில் இருக்கும் இது ஹாம்பர்கர் மெனுவுக்குக் கீழ் (3 கோடுகள் இருக்கும் மெனு) கொடுக்கப்படும். இன்ஸ்டாகிராமில் செட்டிங்ஸ் மெனுவில் இருக்கும்.

கடந்த 7 நாட்களில் பயனர்கள் எவ்வளவு நேரம் செலவிட்டுள்ளார்கள் என்பதை இது காட்டும். மேலும் நீங்கள் எவ்வளவு நேரம் இதில் செலவிட விரும்புகிறீர்கள் என்பதையும் செட் செய்து கொள்ளலாம்.

நீங்கள் குறிப்பிட்ட வரம்பு வந்தவுடன் உங்களுக்கு அது நினைவூட்டப்படும். தற்காலிகமாக புஷ் நோட்டிஃபிகேஷன்களை முடக்கவும் இந்தப் புதிய அம்சம் வசதி செய்துள்ளது.

சமூக ஊடகத்தின் தாக்கம் அதிகரித்து வரும் வேளையில் ஃபேஸ்புக் மோகம் இளைஞர்களிடையே தீவிரமாகியுள்ளது பல நாட்களாகவே விவாதத்துக்குரியதாகியுள்ளது. தற்போது இந்தப் புது வசதி, பயனர்கள் சமூக ஊடகத்தில் செலவிடும் நேரத்தைக் கட்டுக்குள் வைக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

# எளிதில் உடையும் மெல்லிய ஐபேட் புரோ

மெல்லிய ஐபேட் என்று விளம்பரப்படுத்தப்பட்டுள்ள ஆப்பிள் நிறுவனத்தின் புதிய ஐபேட் ப்ரோ, மெலிதாக இருந்தாலும் மிக எளிதில் உடையக்கூடிய தன்மை இருப்பது தெரிய வந்துள்ளது.

பார்க்க கவர்ச்சியாக இருக்கும் கருவியை உருவாக்கிய ஆப்பிள் நிறுவனம், அதன் வலிமையைக் கவனிக்காமல் விட்டுவிட்டது ஏன் என்பது புரியவில்லை. பிரபல யூடியூப் பதிவர் ஜெர்ரிரிக் எவ்ரிதிங் என்பவர், புதிய ஐபேட் ப்ரோ எவ்வளவு எளிதில் உடைகிறது, சிராய்ப்புகள் ஏற்படுகிறது என்பதை அலசி ஆராய்ந்துள்ளார். அவர் வளைத்த முதல் முறையே ஐபேட் ப்ரோ உடைந்து போனதில் ஆச்சரியம் எதுவுமில்லை.

எனவே, நீங்கள் ஐபேட் ப்ரோ வாங்கும் எண்ணம் கொண்டவர் என்றால் அதை மிக மிக ஜாக்கிரதையாக பார்த்துக் கொள்ளவும் மறக்காதீர்கள். நீங்கள் அதைக் கவனிக்காமல் வைத்துவிட்டுப் போகும்போது யாராவது தெரியாமல் அதன் மேல் உட்கார்ந்தால் அவ்வளவு தான். ஐபேட் ப்ரோ இரண்டு பாகங்களாக உங்களுக்குக் கிடைக்கும்.

ஐபோன் எக்ஸ்ஆர் விலையிலேயே கிடைக்கும். ஐபேட் ப்ரோ 11 இன்ச் அகல திரை கொண்டது. 12.9 இன்ச் அகல திரை இருக்கும் பாடல்களில் லிகிவிட் ரெடினா டிஸ்ப்ளேவும், மேம்படுத்தப்பட்ட ஆப்பிள் பென்சிலும், டைப்சி USB தேர்வும், 10 மணிநேரங்களுக்கு மேல் தாக்குப்பிடிக்கும் பேட்டரியும் உள்ளது.

# மடிக்கும் திரை கொண்ட தொலைபேசி எப்போது அறிமுகம்?



சாம்சங் உள்ளிட்ட நிறுவனங்கள் மடங்கும் தன்மை கொண்ட ஃபோல்டபிள் போன் உருவாக்கத்தில் ஈடுபட்டிருப்பதாகக் கூறப்படும் நிலையில், அண்மையில் சாம்சங் நிறுவனம் தனது ஃபோல்டபிள் போனுக்கான கருத்தாக்கத்தை அறிமுகம் செய்தது. கண்ணாடித் திரைக்குப் பதிலாகப் பிரத்யேகமான இன்ஃபினிட்டி பிளக்சி டிஸ்பிளே கொண்டதாக இந்த போன் இருக்கும் என சாம்சங் கூறியது.

மடங்கும் நிலையில் ஸ்மார்ட்போனாகவும், பிரித்த நிலையில் டேப்லெட்டாகவும் இருக்கக்கூடிய இந்த போன் பற்றி வேறு அதிக விவரங்கள் வெளியிடப்பவில்லை. ‘காலெக்ஸி எப்’ என அழைக்கப்படக்கூடிய இந்த போன் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் அறிமுகமாகும் எனத் தகவல் வெளியாகி உள்ளது. இதன் விலை 1,770 டாலர் (ரூ. 1.27 லட்சம்) என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# மறு அவதாரம் எடுக்கும் ‘வைன்’



இப்போது டிக்டாக்காக மாறியிருக்கும் ‘மியூசிகலி’ செயலி அறிமுகமாவதற்கு முன்பே இணையத்தில் கலக்கிக் கொண்டிருந்தது ‘வைன்’ (Vine). அமெரிக்காவின் டோம் ஹாப்மன், அவருடைய நண்பர்களால் அறிமுகம் செய்யப்பட்ட வைன், ஆறு நொடி வீடியோக்களை உருவாக்கி பகிர்ந்துகொள்ள வாய்ப்பளித்தது.

இந்தச் செயலியிலேயே படம் பிடிக்கும் கேமரா இருந்தது. படம் பிடித்து அதிலேயே ‘எடிட்’ செய்யலாம். இந்த அம்சங்களைச் சாதகமாகப் பயன்படுத்தி, அசத்தலான ஆறு நொடி வீடியோக்களை உருவாக்கி மகிழ்ந்தனர் அதன் பயனாளிகள். குறிப்பாக புதுமையான காமெடி வீடியோக்கள் வைனில் மிகப் பிரபலம்.

இதற்குக் கிடைத்த வரவேற்பு காரணமாக ‘யாஹூ’ நிறுவனம், முதலில் இதைக் கையகப்படுத்தி பின்னர் இதை மூடியது. வைனுக்குப் பிறகு ஸ்னேப்சாட், இன்ஸ்டாகிராம் எனப் பல செயலிகள் வந்துவிட்டாலும், இந்தச் சேவை மூடப்பட்டது வைன் அபிமானிகளை வருத்தத்தில் ஆழ்த்தியது. அதைப் போக்கும் வகையில் வைன் நிறுவனர் ஹாப்மேன், இதன் அடுத்த வடிவமான பைட் (Byte) செயலியை அடுத்த ஆண்டு அறிமுகம் செய்ய இருப்பதாக அறிவித்துள்ளார். வைன் மாயத்தை இதனால் மீட்டெடுக்க முடிகிறதா எனப் பார்க்கலாம்.

# இன்ஸ்டாகிராமில் இப்படியும் வசதி



இன்ஸ்டாகிராம் செயலியில் பயனர்கள் தங்களது ஸ்டோரிக்களை அவர்கள் விரும்பும் நெருங்கிய நட்பு வட்டாரங்களுடன் மட்டும் பகிர்ந்து கொள்ளும் வசதி வழங்கப்படுகிறது. இன்ஸ்டாகிராம் செயலியில் ஸ்டோரிக்களை நெருங்கிய நட்பு வட்டாரங்களுடன் மட்டும் பகிர்ந்து கொள்ள க்ளோஸ் ஃபிரெண்ட் லிஸ்ட் (close friend list) வசதி அறிமுகம் செய்யப்பட்டது.

இந்த வசதியின் மூலம் பயனர்கள் உருவாக்கும் ஸ்டோரியை அவர்கள் தனிப்பட்ட முறையில் தேர்வு செய்யும் சிலருடன் மட்டும் பகிர்ந்து கொள்ள முடியும். இதனால் பயனர்கள் தங்களது தனிப்பட்ட உணர்வுகளை அவர்கள் விரும்பும் சிறு குழுவுடன் மட்டும் பகிர்ந்து கொள்ளலாம்.

ஸ்டோரியில் நண்பர்களை சேர்க்க ப்ரோஃபைல் ஆப்ஷனின் பக்கவாட்டில் காணப்படும் க்ளோஸ் ஃபிரெண்ட்ஸ் (Close Friends) ஆப்ஷனை கிளிக் செய்ய வேண்டும். இங்கு உங்களுக்கு நெருங்கிய நட்பு வட்டாரங்களை உங்களால் மட்டுமே பார்க்க முடியும். இங்கு தங்களை சேர்த்துக் கொள்ள யாரும் கேட்க முடியாது.

மேலும் இங்கு நீங்கள் விரும்பும் அனைத்தையும் பகிர்ந்து கொள்ளலாம். ஸ்டோரிக்களை பதிவிடும் போது, அதனை யாருடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என, அனைவரிடம் மற்றும் நெருங்கிய நட்பு வட்டாரங்களில் மட்டும் என இரண்டு ஆப்ஷன்கள் தெரியும்.

இன்ஸ்டாவில் யாரேனும் உங்களை தங்களது நெருங்கிய நண்பராக சேர்த்திருக்கும் பட்சத்தில், அவர்களது ஸ்டோரிக்களை பார்க்கும் போது பச்சை நிற பட்டை தெரியும். இத்துடன் அவர்களது ப்ரோஃபைல் புகைப்படத்தை சுற்றி பச்சை நிற வளையம் தெரியும்.

இன்ஸ்டாகிராமில் புதிதாக சேர்க்கப்பட்டு இருக்கும் க்ளோஸ் ஃபிரென்ட்ஸ் அம்சம் ஆன்ட்ராய்டு மற்றும் ஐ.ஓ.எஸ். தளங்களில் வழங்கப்படுகிறது.

# சார்ட்களை உருவாக்கும் இணையம்

தகவல்களைக் காட்சி வடிவில் எளிதாகப் புரிந்து கொள்ள வழி செய்யும் ‘இன்போகிராப்’ எனப்படும் தகவல் வரைபடங்களை உருவாக்கிக்கொள்ளும் சேவையை ‘கேன்வா’ உள்ளிட்ட இணையதளங்கள் அளிக்கின்றன. இவற்றின் மூலம் விதவிதமான இன்போகிராப்களை நீங்களே உருவாக்கலாம்.

இதேபோல, ‘சார்ட்’ எனக் குறிப்பிடப்படும் வரைபடங்களை உருவாக்கிக்கொள்ள ‘சார்டிபை’ (https://chartify.io/) இணையதளம் வழிசெய்கிறது.

நாளிதழ்கள், பத்திரிகைகளில் கட்டுரைகளுடன் அல்லது தனியே பார்க்கக்கூடிய பை சார்ட், பார் சார்ட், காலம் சார்ட் போன்ற சார்ட்களை இதன் மூலம் எளிதாக உருவாக்கிக்கொள்ளலாம்.

எல்லா சார்ட்களுமே டெம்பிளேட் வடிவில் இருக்கின்றன. அவற்றைத் தேர்வு செய்து, அதில் தகவல்களை இடம்பெற வைத்து, தேவையான தலைப்பு கொடுத்தால் போதும் சார்ட் தயாராகி விடும். கட்டுரைகள், வலைப் பதிவுகளை மெருகேற்றவும் இந்த வசதி கைகொடுக்கும்.

# அலெக்சா சேவையில் ஸ்கைப் வசதி

அமேசான் நிறுவனத்தின் குரல் வழி உதவியாளர் சேவையான அலெக்சாவுடன் மைக்ரோசாப்டின் ஸ்கைப் சேவை ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அமேசானின் எக்கோ ஸ்மார்ட் ஸ்பீக்கர் சாதனங்கள் வாயிலாக ஸ்கைப் அழைப்புகளை மேற்கொள்ளலாம். ஸ்கைப் ஆடியோ, வீடியோ அழைப்புகள் தவிர மொபைல், லேண்ட்லைன் போன்களுக்கும் பேச முடியும்.

அலெக்ஸா பயனாளிகள் செட்டிங்ஸ் பகுதியில் சென்று இந்த வசதியை ஒருங்கிணைத்து இயக்கிக் கொள்ளலாம். இந்தியா உள்ளிட்ட நாடுகளில் இந்த வசதி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

அலெக்ஸா குரல் வழி உதவியாளர் சேவையில் பிரத்யேக வசதிகளை உருவாக்கிக்கொள்வதற்காக ஸ்கில் புளூபிரிண்ட் வசதியையும் அமேசான் இந்தியாவில் அறிமுகம் செய்துள்ளது.

# அப்பிள் ஐபோன் XR விலையைக் குறைக்க அப்பிள் முடிவு?

அப்பிள் நிறுவனம் சமீபத்தில் அறிமுகம் செய்த ஐபோன் XR மாடல்களின் விலையை குறைக்க முடிவு செய்திருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

அப்பிள் நிறுவனம் இந்த ஆண்டு செப்டம்பர் மாதம் அறிமுகம் செய்த ஐபோன் XR மாடலின் விலையை ஜப்பானில் குறைக்க இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. புது ஐபோன் வெளியான ஒரே மாதத்திற்குள் விலையை குறைக்க பரிசீலனை செய்வது அப்பிள் நிறுவன வரலாற்றில் இதுவே முதல் முறையாக இருக்கும்.

வால் ஸ்ட்ரீட் ஜர்னல் வெளியிட்டு இருக்கும் தகவல்களின் படி ஜப்பானில் இயங்கி வரும் டெலிகாம் நிறுவனங்கள் ஐபோன் XR விலையை குறைக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜப்பானில் ஐபோன் 8 தொடர்ந்து பிரபலமான ஐபோன்களில் ஒன்றாக இருக்கிறது. அந்த வகையில் ஐபோன் XR ஜப்பானியர்களிடம் எதிர்பார்த்த வரவேற்பை பெறவில்லை என கூறப்படுகிறது. ஜப்பானில் ஐபோன் XR விலை குறைப்பு பற்றி இதுவரை எவ்வித அதிகாரப்பூர்வ தகவல்களும் இல்லை. எனினும் ராய்ட்டர்ஸ் வெளியிட்டுள்ள தகவல்களில் ஃபாக்ஸ்கான் மற்றும் பெகட்ரான் நிறுவனங்களிடம் ஐபோன் XR மாடலை கூடுதலாக உற்பத்தி செய்யும் பணிகளை தற்காலிகமாக நிறுத்தி வைக்க அப்பிள் நிறுவனம் கேட்டுக் கொண்டு இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் மோசமான விற்பனை காரணமாக மூன்றில் ஒரு பங்கு யூனிட்களின் தயாரிப்பை நிறுத்த அப்பிள் முடிவு செய்திருப்பதாக தகவல் வெளியாகி இருக்கிறது.



# வறண்ட சருமத்திற்கு உருளைக்கிழங்கு

முகத்தை அழகாக வைக்க பல்வேறு முறைகளிருந்தாலும், இயற்கை ரீதியான முறைகளே அதிக பலனை தரும். முகம் அழகாகவும் மென்மையாகவும், பளிச்சென்றும் இருக்க யார்தான் விரும்ப மாட்டார்கள். உருளை கிழங்கில் ஏராளமான நன்மைகள் உள்ளன. இது முகத்தை பட்டு போல மாற்றும். வறண்ட சருமத்தை பொலிவு பெற வைக்க எவ்வாறு உருளைக்கிழங்கை பயன்படுத்த வேண்டும் என்பதை பார்ப்போம்.

முகம் மிகவும் வறண்டு இருந்தால் கீறல்கள், சொரசொரப்புகள் ஏற்படும். இதனால் முக அழகே கெட்டு விடும். முகத்தை கீறல்கள் இல்லாமல் வைத்து கொள்ள இந்த குறிப்பு போதும். மேலும், இது முகத்தின் வறட்சியை முழுமையாக போக்கி விடும்.

**தேவையான பொருட்கள் :**

உருளைக்கிழங்கு

தயிர் 1 டீஸ்பூன்

செய்முறை :

முதலில், தயிரை நன்கு அடித்து கொள்ளவும். அடுத்து அவற்றுடன் உருளைக்கிழங்கை சாறாக்கி கலந்து கொள்ளவும். இந்த கலவையை முகத்தில் பூசி 10 நிமிடங்கள் மசாஜ் செய்யவும். பிறகு 20 நிமிடம் கழித்து முகத்தை வெது வெதுப்பான நீரில் கழுவவும். இந்த ஃபேசியல் முறையை வாரத்திற்கு 2 முறை செய்து வந்தால் முக வறட்சி நீங்கி விடும்.

# பொடுகால் தொல்லையா?

கற்றாழைச் சாற்றைத் தலையின் மேல் பகுதியில் நன்கு படும்படி தேய்த்து ஊறவைத்து, சிறிது நேரம் கழித்துக் குளித்தால் பொடுகு தொல்லை நீங்கும்.

தலையில் சிறிதளவு தயிர் தேய்த்துச் சில நிமிடங்கள் கழித்துச் சீயக்காய் தேய்த்துக் குளிக்கலாம். வேப்பிலைக் கொழுந்து, துளசி ஆகியவற்றை மையாக அரைத்துத் தலையில் தேய்த்து சிறிது நேரம் கழித்துக் குளிக்க வேண்டும். துளசி, கறிவேப்பிலையை அரைத்து எலுமிச்சை பழச்சாற்றுடன் கலந்து தலையில் சிறிது நேரம் ஊற வைத்துப் பிறகு குளிப்பது நல்லது.



வாரம் ஒரு முறை மருதாணி இலையை அரைத்து, சிறிதளவு தயிர், எலுமிச்சைச் சாறு கலந்து தலையில் தேய்க்க வேண்டும்.

காய்ந்த வேப்பம்பூ 50 கிராம் எடுத்து, 100 மி.லி. தேங்காய் எண்ணெயில் போட்டு நன்கு காய்ச்ச வேண்டும். இளஞ்சூடு பதத்துக்கு ஆறியதும், வேப்பம்பூவுடன் சேர்த்து எண்ணெயைத் தலையில் தேய்த்து 1/2 மணி நேரத்துக்குப் பிறகு குளிக்க வேண்டும். சின்ன வெங்காயத்தைத் தோலுரித்துச் சுத்தம் செய்து அம்மியில் வைத்து மைபோல அரைத்து, அதை எடுத்துத் தலைக்குத் தேய்த்துக் குளித்து வந்தால், தலைச் சூடு குறைந்து குளிர்ச்சியடையும். வெந்தயத்தைத் தலைக்குத் தேய்த்துக் குளித்தால், உஷ்ணம் குறைந்து பொடுகுத் தொல்லை தீரும். வால் மிளகுத் தூளுடன் பால் சேர்த்துத் தலையில் தேய்த்துச் சில நிமிடங்கள் ஊறிய பின் குளிக்க வேண்டும்.

தேங்காய் எண்ணெயில் வெந்தயத்தைச் சேர்த்துக் காய்ச்சித் தலையில் தேய்த்துக் குளிக்கலாம். பாசிப்பயறு மாவு, தயிர் கலந்து தலையில் ஊற வைத்துப் பின்னர்க் குளிக்க வேண்டும்.

நெல்லிக்காய் தூள், வெந்தயப் பொடி, தயிர், கடலைமாவு கலந்து தலையில் தேய்த்து, சிறிதுநேரம் கழித்துக் குளிக்க வேண்டும். வாரம் ஒரு முறை இவ்வாறு செய்வது நல்லது.

பசலை கீரையை அரைத்துத் தலையில் தேய்த்துக் குளிக்கலாம். அருகம்புல் சாறு எடுத்துத் தேங்காய் எண்ணெயுடன் சேர்த்து நன்றாகக் காய்ச்சிப் பின்பு ஆறவைத்துத் தலையில் தேய்க்கலாம்.



# அழகை எடுத்துக்காட்டும் புருவம்

பெண்களின் முகத்திற்கு அழகு தருவதில் புருவங்களுக்கும் முக்கிய பங்குண்டு. சில பெண்களின் புருவங்கள் மிக அடர்த்தியாக இருக்கும். சிலருக்கு அடர்த்தி குறைவாக இருக்கும். இவ்வாறு இரண்டு அமைப்பு கொண்ட புருவத்தினரும் அதனை சீர் செய்து அழகாக்கிக் கொள்வது அவசியம்.

அடர்த்தியான புருவங்கள் உள்ளவர்கள் அழகு நிலையங்களில் செய்யப்படும் திரெட்டிங்கை செய்துகொள்ளவும். அடர்த்தி குறைவாக உள்ளவர்கள் தினமும் சிறிதளவு விளக்கெண்ணெயை புருவத்தில் தடவி வந்தால் புருவ ரோமங்கள் அடர்த்தியாக வளரும். வட்டமான முகமுடையவர்கள் வளைவாக திரெட்டிங் செய்யக்கூடாது. புருவத்தின் நுனியில் வளைக்க வேண்டும். இதனால் மேலும் முகம் வட்டமாகத் தெரியாமல் அழகாகக் காட்சி அளிக்கும்.

சதுரமான முகம் உள்ளவர்கள் புருவத்தின் நடுவில் வளைவாக திரெட்டிங் செய்துகொண்டால் முகம் வட்டமாகக் காட்சி தரும். நீளமான முகம் கொண்டவர்கள் திரெட்டிங் செய்துகொள்ளும்போது, புருவத்தின் கடைசியில் சிறிது வளைத்து செய்ய வேண்டும். இப்படி செய்தால் முகம் பார்ப்பதற்கு வட்டமாக, அழகாகத் தெரியும்.

நீளவட்ட முகமுடையோர் கவனமாக திரெட்டிங் செய்தல் வேண்டும். புருவத்தின் கடைசியிலும் இல்லாமல், முதலிலும் இல்லாமல் சற்றே நகர்த்தி, லேசாக வளைத்து திரெட்டிங் செய்ய வேண்டும். இதனால் முகம் நீளவட்டமாகத் தெரியாமல் அழகாகக் காட்சியளிக்கும்.முக அமைப்பிற்கு ஏற்ப புருவங்களை திரெட்டிங் செய்யுங்கள். அழகாகத் திகழுங்கள்.




# படுக்கும் முன் செய்யக்கூடாத விடயங்கள்

சில பெண்கள் இரவில் படுக்கும் போது முடியை விரித்துப் போட்டு, அதன் மேல் தூங்குவார்கள். இப்படி முடியின் மீது நாம் தூங்கினால், உராய்வின் காரணமாக மயிர்கால்கள் வலிமையிழந்து, அதனால் பல்வேறு முடி சம்பந்தமான பிரச்சனைகளை சந்திக்க வேண்டி வரும்.

★ இரவில் படுக்கும் முன் ஆல்கஹால் அருந்துவதை கட்டாயம் தவிர்க்க வேண்டும். ஒருவேளை அப்படி ஆல்கஹால் அருந்தி படுத்தால், இரவில் தன்னைத் தானே பழுது பார்த்துக் கொள்ளும் சரும செல்களின் செயல்பாட்டில் இடையூறு ஏற்படும். எனவே அழகாகத் திகழ வேண்டுமெனில் இப்பழக்கத்தைக் கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்.

★சிலர் தூங்கும் போது குப்புற படுப்பார்கள். அப்படி குப்புறப் படுத்தால், சருமம் பாதிக்கப்பட்டு, அதிகப்படியான அழுத்தத்தின் காரணமாக மார்பகங்கள் வடிவிழந்து தொங்க ஆரம்பித்து, சுருக்கங்களைப் பெறும். எனவே நேராகவோ அல்லது இடது பக்கம் திரும்பியோ படுக்க பழகுங்கள்.

★சிலருக்கு எப்போதும் ஏசியிலேயே இருக்க வேண்டும். இப்படி எந்நேரமும் ஏசியிலேயே இருந்தால், சரும செல்கள் தான் அதிகமாக பாதிக்கப்படும். அதுமட்டுமின்றி, எப்போதும் ஏசியில் இருப்போருக்கு சருமத்தில் உள்ள எண்ணெய் பசை முற்றிலும் வெளியேற்றப்பட்டு, சரும வறட்சி அதிகரித்து, சருமமானது முதுமைத் தோற்றத்தைப் பெறக்கூடும்.

★ எந்நேரமும் மொபைலைப் பார்த்தவாறு இருந்தால் அதனால் கண்கள் பொலிவிழந்து, கருவளையங்களுடன் தான் காணப்படும். மேலும் இரவில் போனில் மொக்கைப் போட நன்றாகத் தான் இருக்கும். ஆனால் போனின் திரை தான் பாக்டீரியாக்கள் அதிகம் இருப்பதால், அதனை முகத்தின் அருகே வைக்கும் போது, பருக்கள் அதிகம் வரும். இவ்வளவு பிரச்சனைகளை தவிர்க்க வேண்டுமெனில், நள்ளிரவு சாட்டிங்கை முதலில் நிறுத்துங்கள்.

★ அழகாக இருக்க வேண்டுமென்று விரும்பினால், வாரம் ஒரு முறையாவது தலையணை உறையை மாற்ற வேண்டும். இல்லாவிட்டால், அதில் சேர்ந்துள்ள அழுக்குகளின் மூலமே முகத்தில் பருக்கள் மற்றும் தலையில் பொடுகு வர ஆரம்பித்து விடும்.



# ஃபேஸ் மாஸ்க் போடும் முன் கவனிக்க வேண்டியவை...



முகம், துளியும் இளமை மாறாமல் இருப்பதற்காகத்தான் என்பதை உணர்ந்து உங்கள் சருமத்திற்கு ஏற்ற ஃபேஸ் மாஸ்க்குகளை தேர்ந்தெடுப்பது அவசியம். அதனால் இந்த பேஸ்மாஸ்க் போடும்போது மிகுந்த கவனம் தேவை.

★ மாஸ்க்குகளை உபயோகிக்கும்முன் முகத்தை நன்கு கழுவி கொள்ள வேண்டும்.

★ மாஸ்க்கை முகத்தில் சரியாக ஒரேமாதிரி தடவி கொள்ளவேண்டும். உதடுகள், கண்கள் இவற்றை விட்டுவிடவேண்டும்

★ மாஸ்க்கை குறைந்தபட்சம் அரை மணி நேரம் வைத்திருக்க வேண்டும். மாஸ்க்கை எடுக்க நிறைய தண்ணீரை உபயோகிக்கவும். கடைகளில் கிடைக்கும் மாஸ்க்குகள் உரித்து எடுக்கும் வகையை சேர்ந்தவை.

★ களிமண் ஒரு சிறந்த மாஸ்க் ஆகும். ஏனென்றால் அது சருமத்தின் உள் இருக்கும் அழுக்கையும், மாசுகளையும் உறிஞ்சி விடும். தவிர களிமண்ணில் சருமத்திற்கு தேவையான தாது பொருட்கள் உள்ளன.

★ மாஸ்க்குகள் சருமத்திலிருந்து அழுக்குகளை நீக்குகின்றன.

★ மாஸ்க்குகள் உபயோகிக்கும் முன் நீராவியால் முகத்தை சுத்தம் செய்து கொள்வது நல்லது. இதனால் சரும துவாரங்கள் விரிந்து அழுக்குகள் வெளியேறும். நீராவிக்கு வெறும் தண்ணீர் மட்டும் உபயோகிக்காமல் மூலிகை கஷாயங்களை சேர்த்து கொண்டால் இன்னும் நல்லது.

★ மாஸ்க் போட்டவர்கள் பேசக்கூடாது.

★ சரும நோய் உள்ளவர்கள் மாஸ்க் உபயோகிக்க கூடாது.

சம்மணமிட்டு அமர்ந்து சாப்பிடுங்கள். 'இரந்து உண்டாலும் இருந்து உண்' என்றார்கள் நம் முன்னோர். அதாவது, பிச்சை எடுத்துச் சாப்பிட்டாலும் அமர்ந்து சாப்பிட வேண்டும் என்பது இதன் பொருள். சிலர், நாற்காலியில் அமர்ந்து சாப்பிடக் கூடாதா என்று கேட்பார்கள். அது தவறான விஷயம் இல்லை. ஆனால், சம்மணமிட்டு அமர்ந்து சாப்பிடும்போது நம் அடிவயிற்றின் செரிமான உறுப்புகள் செயலூக்கம் பெறுவதால் உண்ணும் உணவு சிறப்பாக செரிக்கும். மேசையில் அமரும் போது நாம் அதிகமாக வளைய மாட்டோம் என்பதால் அதைவிடவும் சம்மணமிட்டு அமர்ந்து சாப்பிடுவதே சிறந்தது. இன்று நிறைய பேர் ஃபாஸ்ட் ஃபுட் என்று நின்றுகொண்டே சாப்பிடுகிறார்கள். ஆனால், நிச்சயம் இவற்றால் பலன்கள் ஏதும் இல்லை என்பதைச் சொல்ல முடியும்.



# பற்களை வெண்மையாக்கும் புதினா

பற்களை ஒரு நாளைக்கு இரண்டு முறை துலக்குவது ஈறுகளுக்கு நல்லது. மேலும் பற்களும் சொத்தையாகாமல் பாதுகாக்கப்படும். பற்களை பாதுகாக்க சில டிப்ஸ்...

★ பல் துலக்கி வாயை கொப்பளித்ததும், புதினா பேஸ்ட்டை பற்களில் தடவி 2 நிமிடம் பிரஷ் செய்து, பின் நீரால் வாயைக் கொப்பளிக்கவும், பின் மீண்டும் சிறிது புதினா பேஸ்ட்டை விரலில் எடுத்து, பற்களில் தேய்ப்பதோடு, 3 நிமிடம் ஈறுகளை மசாஜ் செய்து, வாயை நீரில் கொப்பளிக்கவும். இதனால் வாய் துர்நாற்றம் நீங்குவதோடு, ஈறுகளில் இரத்த கசிவு ஏற்படுவதும் தடுக்கப்படும்.

★ சுத்தமான மற்றும் கெட்டியான தேங்காய் எண்ணெயை பற்களில் தடவி பிரஷ் செய்து, 2 நிமிடம் கழித்து, உப்பு கலந்த நீரில் வாயைக் கொப்பளிக்கவும். இப்படி செய்வதன் மூலம், பற்களில் உள்ள கறைகள் நீங்குவதோடு, பற்களில் உள்ள சொத்தையும் நீங்கும்.

★ வேப்பிலை பொடி 1 டேபிள் ஸ்பூன் வேப்பிலை பொடியில், சிறிது தண்ணீர் சேர்த்து பேஸ்ட் செய்து, பற்களில் தடவி பிரஷ் செய்து வர, வாய் துர்நாற்றம், பல் வலி போன்றவை நீங்கும். குறிப்பாக இந்த முறையை கைவிரலால் பிரஷ் செய்வது நல்லது.

★ ஹைட்ரஜன் பெராக்ஸைடு ஹைட்ரஜன் பெராக்ஸைடில், பேக்கிங் சோடா மற்றும் கல் உப்பு சேர்த்து கலந்து, மாதம் ஒருமுறை பற்களைத் துலக்கி வந்தால், பற்களில் படிந்துள்ள மஞ்சள் கறைகள் வேகமாக அகலும்.

# சந்தேகங்களும் தீர்வுகளும்

**★ ஹோட்டலில் சுடுவதுபோல் கல்தோசை சுடுவது எப்படி?**

பச்சரிசியையும், உளுந்தையும் மூன்றுக்கு ஒன்று என்கிற விகிதத்தில் போட்டு ஒன்றாகவே 2 மணி நேரம் ஊற வைத்து நைஸாக அரைத்துக் கொள்ளவும். தோசைக்கல்லில் மாவை ஊற்றிய பிறகு எண்ணெயை விட்டு தோசையைத் திருப்பிப் போட்டதும் லேசாக தோசையின் மீது தண்ணீர் தெளித்து, உடனே மறுபடியும் திருப்பிப் போட்டு கல்லிலிருந்து எடுத்துவிடவும்.

**★ இட்லி 'புஸ்புஸ் என்று, அதேசமயம் சாஃப்ட்டாக வர என்ன செய்ய வேண்டும்?**

உளுந்து அரைக்கும்போது அவ்வப்போது கொஞ்சம் கொஞ்சமாக நீர் ஊற்றி பொங்க பொங்க அரைக்க வேண்டும். ஒரு டேபிள்ஸ்பூன் ஊற வைத்த வெந்தயம், 2 டீஸ்பூன் பெருங்காயத்தூள் சேர்த்து அரைத்தஃல்... இட்லி சூப்பராக வரும்.

**★ அப்பம் மிருதுவாக வர, என்ன வழி?**

புழுங்கல் அரிசி மற்றும் பச்சரிசி தலா ஒரு ஆழாக்கு, ஒரு கைப்பிடி உளுந்து, ஒரு டீஸ்பூன் வெந்தயம் சேர்த்து ஊற வைத்து... அரைக்கும்போது தேங்காய் துருவல் ஒரு கப், வெந்த சாதம் ஒரு கரண்டி சேர்த்து அரைத்து சுட்டால்... அப்பம் சூப்பரப்பு!

**★ சப்பாத்தி சுடுவதற்கும், தோசை சுடுவதற்கும் தனித்தனி தோசைக்கல்லை பயன்படுத்த வேண்டுமா?**

ஆம்... அவ்வாறு செய்வது நல்லது. அதிக கனமுள்ள கல்லை தோசைக்கும், கனமில்லாத மெலிதான கல்லை சப்பாத்திக்கும் உபயோகிக்க வேண்டும்..

**★ பூரி உப்பி வர... ...**

மாவு பிசையும்போது கோதுமை மாவுடன் ஒரு டேபிள்ஸ்பூன் மக்காச்சோள மாவும், அரை டேபிள்ஸ்பூன் ரவையும், அரை டீஸ்பூன் சர்க்கரையும் சேர்த்துக் கலக்கி, அந்த மாவை பூரியாக செய்தால்... உப்பலான பூரி சமர்த்தாக உங்கள் தட்டில் 'ஹாய் சொல்லும்

**★ பிள்ளைகளை பசலைக் கீரை சாப்பிட வைப்பது எப்படி?**

வதக்கிய பசலைக் கீரையுடன் சிறிது பச்சை மிளகாய் சேர்த்து அரைத்து சப்பாத்தி மாவோடு சேர்த்துப் பிசைந்து சப்பாத்தியாக சுட்டு, சாஸ் உடன் பரிமாறினால்.. தட்டு 'சட்டென்று காலியாகிவிடும்.

**★ வடை மாவு சரியான பதத்தில் இருக்கிறதா என்பதை எப்படித் தெரிந்து கொள்வது?**

அரைத்த மாவை கொஞ்சம் கிள்ளி, ஒரு கிண்ணத்திலுள்ள தண்ணீரில் போடவும். மாவு தண்ணீரில் மிதந்தால்... சரியான பதம். மிகவும் தண்ணீராக அரைத் திருந்தால் மாவு பிரிந்து தண்ணீரில் கலந்துவிடும். கெட்டியாக அரைத் திருந்தால்... தண்ணீரில் மூழ்கி விடும்!

**★ தயிர் கெட்டியாக கிடைக்க, வழி என்ன?**

பாலை சுண்டக் காய்ச்சுங்கள். ஆறவிடும் போது... வெதுவெதுப்பான சூட்டுக்கு வந்ததும், ஒரு துளி மோர்விட்டு, 4, 5 முறை நன்கு ஆற்றி (காபிக்கு ஆற்றுவதுபோல) மண் சட்டியில் தோய்க்க... நல்ல கெட்டித் தயிர் கிடைக்கும்.




**சுண்டைக்காய்-மரவள்ளிகிழங்கு குழம்பு**

## என்னென்ன தேவை?

வேகவைத்து தோலுரித்த மரவள்ளிக்கிழங்கு - 1 கப்,
பச்சை சுண்டைக்காய் - 100 கிராம்,
புளி - எலுமிச்சை அளவு,
நல்லெண்ணெய் - 2 டீஸ்பூன்,
கடுகு, வெந்தயம், கறிவேப்பிலை- தாளிக்க,
பூண்டு - 10 பல்,
வெங்காயம் - 2,
தக்காளி -1,
உப்பு - தேவைக்கேற்ப,
குழம்பு மிளகாய்தூள்- 2 டீஸ்பூன்.

## எப்படிச் செய்வது?

மரவள்ளிக்கிழங்கை சிறு துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும். கடாயில் எண்ணெய் விட்டு, கடுகு, வெந்தயம், கறிவேப்பிலை தாளிக்கவும். நறுக்கிய பூண்டு, வெங்காயம், தக்காளி சேர்த்து வதக்கவும். பிறகு சுண்டைக்காயை சேர்த்து வதக்கி, மரவள்ளிக்கிழங்கு துண்டுகளையும் சேர்த்து வதக்கவும். குழம்பு மிளகாய் தூள் சேர்த்து, புளிக்கரைசல் விட்டு, உப்பு சேர்த்துக் கொதிக்க விடவும். கடைசியாக சிறிது நல்லெண்ணெய் விட்டு இறக்கவும்.

## கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்

கீழே உள்ள குறிப்புகளின் உதவியுடன் அவை உணர்த்தும் நாடு எது என்பதைக் கண்டுபிடியுங்கள்.

1. ஹவாய்க்கும் ஆஸ்திரேலியாவுக்கும் நடுவில் அமைந்துள்ள தீவு நாடு.
2. வாட்டிகனுக்கு அடுத்து மிகக் குறைந்த மக்கள் தொகை கொண்ட இரண்டாவது நாடு. உலகிலேயே மிகச் சிறிய நான்காவது நாடு.
3. எலீஸ் தீவுகள் என்று முன்னர் அழைக்கப்பட்ட நாடு.
4. 1979-ம் ஆண்டு அக்டோபர் முதல் தேதி, பிரிட்டனிடமிருந்து விடுதலைப் பெற்றது.
5. மீன் பிடித்தல், சுற்றுலா, கொப்பரைத் தேங்காய் முக்கியத் தொழில்களாக இருக்கின்றன.
6. இதன் கரன்சி ஆஸ்திரேலிய டாலர்.
7. தீவுகளில் ஆங்காங்கே துருப்பிடித்த, புதையுண்ட கப்பல்களைக் காணலாம். இரண்டாம் உலகப்போரின்போது அமெரிக்க ராணுவத்தினர் இந்த நாட்டைத் தங்கள் ராணுவத் தளமாகப் பயன்படுத்தினர்.
8. 26 சதுர கி.மீ. அளவுள்ள இந்த நாட்டில் சுமார் 10 ஆயிரம் பேர் வசிக்கிறார்கள்.
9. இதன் தலைநகர் ஃபுனஃபூட்டி.
10. கிரிக்கெட்டைப் போன்ற கில்லிகிட்டி இந்த நாட்டின் பாரம்பரிய விளையாட்டு.

விடை: துவாளு

# பொக்கிஷமான பீகிங் மண்டைஓடு!

மண்டை ஓடுகளைப் போய் யாராவது பொக்கிஷம் என்பார்களா என்று தோன்றலாம். ஆனால், அந்த மண்டை ஓடுகள் சுமார் இரண்டரை லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மனிதனின் மண்டை ஓடுகள் என்றால்? அட! அது மிக மிக அரிய பொக்கிஷம்தானே!

நீங்கள் பாதுகாப்பாக வைத்திருந்த அந்த மண்டை ஓட்டுப் பெட்டி திடீரென தொலைந்து போய்விட்டால்? மீண்டும் கிடைக்கவே இல்லை என்றால்? அது மிகப் பெரிய சோகம்தான். அந்தச் சோகக் கதையைப் பார்ப்போம்.

சீனாவின் தலைநகரம் பெய்ஜிங். அதன் பழைய பெயர் பீகிங். 1921-ல் பீகிங்கின் அருகிலுள்ள சொவ்கொவ்தியான் என்ற பள்ளத்தாக்கில் ஸ்வீடனைச் சேர்ந்த ஆய்வாளர் ஆண்டர்சன் அகழ்வாராய்ச்சி நடத்தினார். 1923-ல் ஆண்டர்சனின் உதவியாளரான ஒட்டோ ஸ்டேன்ஸ்கி, பண்டைய மனிதனின் கடைவாய்ப்பற்கள் சிலவற்றைக் கண்டெடுத்தார். 1926-ல் அதுகுறித்த செய்திகளை, ஆய்வு அறிக்கைகளை ஒட்டோ வெளியிட்டார்.

1928-ல் பீகிங்கின் யூனியன் மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த உடற்கூறியல் நிபுணர் டேவிட்சன் பிளாக், ஒட்டோவின் கண்டுபிடிப்புகளின் மேல் ஆர்வம்கொண்டார். அதற்குப் பிறகு அதே பகுதியில் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சியில், கீழ்தாடையுடன் கூடிய சில பற்கள், மண்டை ஓட்டின் சில துண்டுகள் கண்டெடுக்கப்பட்டன.

பிறகு சீனத் தொல்பொருள் ஆய்வாளர்கள் சிலரது தலைமையிலும், சார்டின் என்ற பிரெஞ்சு ஆய்வாளரது முயற்சியிலும் அங்கே தொடர்ந்து தேடுதல் பணி நடைபெற்றது.

அடுத்த சில வருடங்களில் ஆதிமனிதனின் ஆறு முழுமையான மண்டை ஓடுகள் கிடைத்தன. தவிர, மண்டை ஓட்டின் பகுதிகள், பற்கள், தாடை எலும்புகள் என மொத்தம் 200 படிமங்கள் கிடைத்தன.

அந்த மண்டை ஓடுகளுக்குச் சொந்தமான மனிதர்களுக்கு 'பீகிங் மனிதன்' என்று பெயரிடப்பட்டது. டேவிட்சன் பிளாக் அவை குறித்த தீவிரமான ஆராய்ச்சியில் ஈடுபட்டார். பிளாக் 1934-ல் இறந்துபோன பிறகு, சார்டின் என்ற பிரெஞ்சு ஆய்வாளர் அந்த ஆராய்ச்சிப் பணிகளைத் தொடர்ந்தார். பீகிங் மனிதனுக்கு முன்பாகவே கண்டெடுக்கப்பட்டவன் ஜாவா மனிதன். நீளமான கைகளையுடைய ஜாவா மனிதனை முழுமையான வளர்ச்சியடைந்த மனிதர்களாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

ஆனால், ஆய்வுகளின்படி பீகிங் மனிதன் ஜாவா மனிதனைவிட வளர்ச்சியடைந்தவனாகக் கருதப்படுகிறான். அவன் நான்கு கால்களால் நடக்கவில்லை. இரண்டு கால்களால் நிமிர்ந்து நடந்திருக்கிறான். கல்லால் ஆன ஆயுதங்களைப் பயன்படுத்தியிருக்கிறான். நெருப்பின் உபயோகத்தை அறிந்திருக்கிறான். எனவே, அவனிடம் மனித குலத்தின் பண்பாடு இருந்திருக்கிறது. இன்றைய நாகரிக மனிதனின் மூதாதையன் பீகிங் மனிதனே என்று சார்டின் தனது ஆய்வுகள் மூலம் விளக்கினார்.

பீகிங் மனிதன், சுமார் 2,50,000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்திருக்கலாம் என்று சார்டினின் ஆய்வுகள் தெரிவித்தன. மனித இனத்தின் வரலாற்றை விளக்குவதில் பீகிங் மனிதனின் கண்டுபிடிப்பு மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

இரண்டாம் உலகப்போர் ஆரம்பமானது. 1941-ல் சார்டின் சீனாவில் இருந்து கிளம்பினார். பீகிங், ஜப்பானியப் படைகளின் ஆக்கிரமிப்புக்கு உள்ளானது. பீகிங்கின் யூனியன் மருத்துவக் கல்லூரியில்தான் பீகிங் மனிதனின் மண்டை ஓட்டுப் படிமங்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தன.

ஜப்பானியர்கள் வசம் அவை சிக்கிவிடக் கூடாது என்பதற்காக, சீன அதிகாரிகள் பீகிங் மனிதனின் படிமங்களை அமெரிக்காவின் நியூயார்க் நகர அருங்காட்சியத்துக்கு அனுப்பி வைக்கத் திட்டமிட்டார்கள். இரண்டு பெரிய மரப் பெட்டிகளில் பீகிங் மண்டை ஓடுகளும், பிற படிமங்களும் பத்திரமாக வைக்கப்பட்டன. அந்த மரப்பெட்டிகளை வட சீனாவிலுள்ள குவின்ஹுவாங்டோ துறைமுகத்துக்கு ரயிலில் எடுத்துச் செல்ல வேண்டும்.

அங்கே காத்திருக்கும் அமெரிக்கக் கப்பல் ஒன்றில் ஏற்றி அனுப்பிவிட வேண்டும் என்பது திட்டம். யூனியன் மருத்துவக் கல்லூரியில் இருந்து மரப்பெட்டிகள் கிளம்பின. அதற்குப் பிறகு என்னவாயின என்பது இன்றைக்குவரை மர்மமே.

அமெரிக்க வீரர்கள், அந்த மரப்பெட்டிகளைத் துறைமுகத்துக்கு ரயிலில் எடுத்துச் சென்றனர். அப்போது ஜப்பானிய வீரர்கள் ரயிலைச் சூறையாடினர். அதில் அந்த மரப்பெட்டிகளும் சூறையாடப்பட்டன. இதென்ன வெறும் மண்டை ஓடுகள்? இவற்றை வைத்து என்ன செய்யப் போகிறோம் என்று அதன் அருமை தெரியாமல் ஜப்பானிய வீரர்கள் எங்கோ குப்பையில் எறிந்துவிட்டார்கள் என்று ஓர் அனுமானம் உண்டு.

இல்லை, சீனா அந்தப் பெட்டிகளை அமெரிக்காவுக்கு அனுப்பவே இல்லை. ரகசியமாக இன்றைக்கும் பதுக்கி வைத்திருக்கிறது என்று சிலர் சொல்கிறார்கள். அமெரிக்காவுக்கு அந்த மரப் பெட்டிகள் பத்திரமாக அனுப்பி வைக்கப்பட்டன. அவை அமெரிக்காவில்தான் இருக்கின்றன. ஆனால், தன்னிடம் இல்லையென அமெரிக்கா பொய் சொல்வதாகச் சிலர் வாதிடுகிறார்கள்.

சீனாவின் செல்வங்கள் பலவற்றுடன், இந்த பீகிங் மண்டை ஓட்டுப் படிமங்கள் அடங்கிய மரப்பெட்டியையும் ஜப்பானிய வீரர்கள் கொள்ளையடித்தார்கள். அவற்றை எல்லாம் ஜப்பானியக் கப்பல் ஒன்றில் ஏற்றி அனுப்பி வைத்தார்கள். அந்தக் கப்பல் நடுக்கடலில் மூழ்கிப் போனது. பீகிங் மண்டை ஓடுகளும் கடலுக்குள் காணாமல் போய்விட்டன என்றும் சிலரால் சொல்லப்படுவது உண்டு.

ஆனால், சீனாவும் அமெரிக்காவும் ஜப்பானும் பீகிங் மனிதப் படிமங்கள் தங்கள் வசம் இல்லை என்றுதான் இன்றைக்குவரை சொல்லி வருகின்றன. 1972-ல் அமெரிக்காவின் செல்வந்தரான கிறிஸ்டோபர் ஜானஸ், பீகிங் மண்டை ஓடுகளைக் கண்டுபிடித்துத் தருபவர்களுக்கு 5 ஆயிரம் டாலர் பரிசு என்று அறிவித்தார். என்னிடம் இருக்கிறது. ஆனால், எனக்கு 5 லட்சம் டாலர் வேண்டும் என்று ஒரு பெண், அவரைத் தொடர்புகொண்டார். அதற்குப் பிறகு அந்தப் பெண் காணாமல் போய்விட்டார்.

2005-ல் சீன அரசு பீகிங் மனிதப் படிமங்களைத் தேட குழு ஒன்றை அமைத்தது. தவிர, உலகம் எங்கிலும் பலரும் அதைத் தேடிக்கொண்டே இருக்கிறார்கள். அந்தப் படிமங்களைக் கொண்டு போதுமான அளவுக்கு ஆராய்ச்சிகள் நடந்துவிட்டாலும், அவை காணாமல் போனது என்பது, மனித குல வரலாற்றின் பேரிழப்பே!

# குளத்தில் இருந்த நட்சத்திரங்கள்

மருதாபுரியில் மூன்று சகோதரர்கள் வாழ்ந்துவந்தார்கள். அதில் மூத்தவரின் பெயர் தன்யன், இரண்டாவது சோசு, கடைசியில் பிறந்தவர் பென்கன். தன்யன் நல்லவர். கடின உழைப்பாளி. மற்ற இருவரும் சோம்பேறிகள். அவர்கள் எந்த வேலையும் செய்யாமல் எப்பொழுதும் உறங்கிக்கொண்டும், விளையாடிக்கொண்டும் பொழுதைப் போக்கினார்கள்.



ஒரு நாள் தன்யன் தன் தம்பிகளிடம், பிரியமுள்ள தம்பிகளே, நாம் இப்படிக் கஷ்டப்பட்டு வாழ்ந்து கொண்டிருப்பது சரியில்லை. நம் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும். அதனால் நான் ஒரு பயணம் செல்லப் போகிறேன். நல்வாய்ப்பு கிடைத்தால் உழைத்து, சம்பாதித்துக்கொண்டு வருவேன் என்றார். ஆனால் அது தம்பிகளுக்குப் பிடிக்கவில்லை.

ஏன் நீங்கள் மட்டும் செல்வந்தனாக வேண்டும்? நாங்களும் பணம் சம்பாதிக்க வேண்டாமா? அதனால் நாங்களும் பயணம் போகிறோம் என்று சொன்னார்கள். தன்யன் பதில் எதுவும் சொல்லவில்லை.

சோசு பயணம் சென்றார். ஒரு கிராமத்தில் மெதுவாக நடந்துகொண்டிருந்தார். ஒரு வயல் காட்டை அடைந்தார். அப்போது பசியும் தாகமும் ஏற்பட்டது. அருகில் இருந்த ஒரு குடிசையின் வாசல் கதவைத் தட்டினார். உள்ளேயிருந்து ஒரு வயதான குரல், வெளியில யாரு? என்று கேட்டது.

நான் ஒரு பயணி. இன்னிக்கு ராத்திரி இங்கே தங்கிக்கலாமா? என்று கேட்டார் சோசு.

இருந்துட்டுப் போகலாம். ஆனால் என் குடிசையின் பின்புறம் ஒரு குளம் இருக்கிறது. அந்தக் குளத்திலுள்ள நட்சத்திரங்களை எல்லாம் சுத்தப்படுத்தித் தர வேண்டும். முடியுமா?

அது எப்படி முடியும்? சோசு யோசித்தார். குளத்தில் தெரிவது வானத்தில் தெரிகிற நடத்திரங்களின் பிம்பம்தானே! அவற்றை எப்படிக் குளத்திலிருந்து சுத்தப்படுத்த முடியும்? தோல்வியை ஒப்புக்கொண்டு, ஊருக்குத் திரும்பி வந்துவிட்டார். தன்னுடைய சகோதரர்களிடம் வருத்தத்துடன், எனக்கு எங்கேயும் நல்வாய்ப்பு கிடைக்கவில்லை. அதனால் திரும்பி வந்துட்டேன் என்றார்.

அப்போது தன்யனும் பென்கனும் வீட்டில் இருந்தார்கள். அடுத்த முறை பென்கனுடையதாக இருந்தது. பல இடங்களுக்கும் அலைந்து திரிந்து கடைசியில் அவர் அந்தப் பழைய குடிசைக்குப் போனார். சோசு கேட்டதைப்போல அவரும் அதே கேள்வியைக் கேட்டார். சோசுவிடம் சொன்ன காரியத்தையே கிழவி பென்கனிடமும் சொன்னார். சோசுவைப்போல எதுவும் செய்யாமல் பென்கனும் வீட்டுக்குத் திரும்பினார்.

எனக்கு எந்த இடத்திலும் நல்வாய்ப்பு கிடைக்கவில்லை என்று வேதனையோடு சொன்னார்.

கடைசியில் நல்வாய்ப்பைத் தேடி தன்யன் புறப்பட்டார். பல மைல் தூரம் கடந்து அவரும் அந்தக் கிழவியின் குடிசைக்குப் போய்ச் சேர்ந்தார். அப்போதும் கிழவி அந்தப் பழைய வேலையைச் செய்யச் சொன்னார்.

ஒரு நிமிடம் யோசித்த தன்யன், கிழவியிடம் ஒரு வாளியைக் கேட்டு வாங்கினார். வாளி கையில் கிடைத்த உடனே குளத்தில் இறங்கி தண்ணீரை வெளியில் எடுத்து ஊற்ற ஆரம்பித்தார். குளத்தில் இருந்த தண்ணீர் முழுவதையும் வெளியில் எடுத்து ஊற்ற கடுமையாக உழைத்தார். வேலை முழுவதும் முடிந்த பிறகே ஓய்வெடுத்தார்.

பொழுது விடிவதற்கு முன்பு குடிசையிலிருந்து வெளியே வந்தார் கிழவி. தன்யன் மகிழ்ச்சியோடு குளத்தைக் காட்டினார். தண்ணீர் இல்லாததால் ஒரு நட்சத்திரம் கூட குளத்தில் இல்லை.

நான் குளத்தில் இருந்த நட்சத்திரங்களை எல்லாம் வெளியே எடுத்துவிட்டேன். இனி ஒரு நட்சத்திரம் கூட குளத்தில் இருக்காது.

கிழவிக்கு மகிழ்ச்சி. தன்யனைப் பாராட்டினார். உனக்கு முன்னால் பலரும் இங்கே வந்திருக்கிறார்கள். இந்தப் போட்டியில் கலந்துகொள்ள முயற்சி கூடச் செய்யாமல் திரும்பிப் போயிருக்கிறார்கள். உழைப்பதற்கான உறுதியோ, சிந்திப்பதற்கான புத்தியோ இல்லாதவர்கள். நீதான் சிறந்த உழைப்பாளி என்று புகழ்ந்த கிழவி, தன்யனை உற்று நோக்கினார்.

இனிமேல் இந்த நிலம் முழுவதும் உனக்குதான். இங்கே நீ உன் விருப்பம்போல் விவசாயம் செய்து சம்பாதிக்கலாம்!

அந்த மகிழ்ச்சியான செய்தியைத் தம்பிகளிடம் சொல்வதற்காக வீட்டுக்கு ஓடினார் தன்யன். நான் என்னுடைய நல்வாய்ப்பைக் கண்டுபிடித்துவிட்டேன். அவர்கள் திகைத்து நின்றனர்.

தம்பிகளிடம் நடந்ததை எல்லாம் சொன்னார். அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். அன்று முதல் சோம்பலை மறந்து உழைத்துப் பிழைக்க வேண்டும் என்று முடிவு எடுத்தார்கள்.




# மங்கோலிய நாதம்!

ஆசியாவில் உள்ள மங்கோலிய தலைநகர் உலான் பாடர் நகரில், ஆண்டு தோறும், ஜூலை மாதம் நாதம் விளையாட்டு விழா நடக்கிறது. இதை, கிழக்கு நாடுகளின் ஒலிம்பிக் என்பர்.



விழாவில், முதல் நாள், அலங்கார அணிவகுப்பு நடக்கும். நடன கலைஞர்கள், பாடகர்கள், விளையாட்டு வீரர்கள் பவனி வருவர்! இரண்டு நாட்கள் நடக்கும் போட்டியில், மல்யுத்தமும், குதிரை பந்தயமும், வில் வித்தையும் சிறப்பிடம் பெறும். இந்த மூன்று போட்டிகளையும், 'டான்ஸ்சிங்' என்பர்! கடைசி, இரண்டு போட்டிகளில், பெண்கள் பங்கேற்கலாம்!

மல்யுத்த போட்டிகள், 10 ரவுண்டு நடக்கும். பிரபல மல்யுத்த வீரர் மட்டும், எதிராளியை தேர்ந்தெடுத்து, யுத்தம் செய்ய அனுமதி உண்டு.

விளையாட்டு, 10 ரவுண்டுகள் நடக்கும்; எட்டாவது ரவுண்டு வரை ஜெயித்தவருக்கு, 'எலிபென்ட்' என, பட்டம் கொடுப்பர்; ஒன்பதாவது ரவுண்டில் ஜெயித்தால், சிங்கம் பட்டம்; பத்தாவது ரவுண்டில், இறுதியாக ஜெயிப்பவரை, 'ஜெயன்ட்' அதாவது, பிரமாண்டன் என பட்டம் சூட்டி, பரிசு வழங்குவர்!

குதிரை பந்தயத்தில், 1,000 குதிரைகள் வரை பங்கேற்கலாம்! கடைசியாக வரும் குதிரையை, 'வயிறு முட்ட சாப்பிட்டதால், சரியாக ஓடவில்லை...' என, கிண்டலடிப்பர்! அதே சமயம், அடுத்த ஆண்டு வெற்றி பெற வாழ்த்துவர்!

### வில் வித்தை!

இதில், ஒரு போட்டிக்கு, 10 பேர் தேர்வு செய்யப்படுவர். மொத்தம் 40 வாய்ப்புகள். இதில், 33 இலக்குகளை வீழ்த்தினால், பரிசு கிடைக்கும். ஒரு வில் நிபுணருக்கு, நான்கு அம்புகள் வழங்கப்படும். இதில், இலக்கில் அதிகமாக எய்தவருக்கு, வில் வித்தை நிபுணர் பட்டம் வழங்கப்படும்.

போட்டிகள் நடக்கும், மூன்று நாட்களும் அரசு விடுமுறை! மங்கோலியர்கள், மிகவும் ரசித்து மகிழும் விழா! மங்கோலிய புரட்சியைக் கொண்டாட தான், நாதம் விழா உருவாக்கப்பட்டுள்ளது.

# கடல் நீர் உப்புக் கரிப்பது ஏன்?

உலகில் உள்ள தண்ணீரின் பெரும்பகுதி கடலில் உப்பு நீராகத்தான் இருக்கிறது. இந்தக் கடலுக்கு மழை நீர் மூலம் தண்ணீர் வந்துசேர்கிறது. மழைநீர் பாறைகள், மணல்களைக் கரைத்துக்கொண்டு ஆறுகளில் சேர்கிறது.

இப்படி வரும்போது பாறைகள், மணல்களில் உள்ள தாதுக்களையும் உப்புகளையும் எடுத்துக்கொண்டு செல்கிறது. ஆறுகள் இந்த நீரைக் கடலில் சேர்த்துவிடுகின்றன. கடலில் சேரும் நீர் வெப்பத்தால் ஆவியாகிறது. தண்ணீரில் உள்ள உப்பு மட்டும் கடலிலேயே தங்கிவிடுகிறது.



ஆவி, மேகமாகக் குளிர்ந்து மீண்டும் மழையாகப் பொழிகிறது. அந்த நீர் தாதுக்களையும் உப்புகளையும் எடுத்துக்கொண்டு ஆறு மூலம் கடலில் சேர்த்துவிடுகிறது. இப்படித்தான் கடல் நீர், உப்பு நீராக இருக்கிறது.

# கூகுளுக்கு குட்பை

அமெரிக்காவுக்கும், சீனாவுக்கும் டிஜிட்டல் காலனியாக ஆவதைத் தடுக்க பிரான்ஸ் கடுமையாக முயற்சி செய்து வருகிறது. பிரஞ்சு நாடாளுமன்றமும், பிரஞ்சு ராணுவ அமைச்சகமும் இனி கூகுளை தங்கள் வழக்கமான தேடு பொறியாகப் பயன்படுத்தப்போவதில்லை என அறிவித்துள்ளன.

கூகுளுக்கு மாற்றாக, பிரெஞ்சு-ஜெர்மானிய கூட்டு முயற்சியில் உருவான குவான்ட் (Quant) என்ற தேடல் பொறியை இனிமேல் பயன்படுத்தப் போகின்றன.

பிரெஞ்சு கம்பெனிகளை சைபர் தாக்குதல்களிலிருந்து காப்பாற்றுவதற்காக, ஏப்ரல், 2018 லிருந்து இயங்கத் துவங்கியது குவான்ட்.

'நாங்கள்தான் மக்களுக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டும்' என்கிறார் பிரெஞ்சு நாடாளுமன்ற சைபர் பாதுகாப்பு மற்றும் டிஜிட்டல் இறையாண்மைக்குப் பொறுப்பாக உள்ள எம்.பியான புளோரியன் பேசெலியர்.

சீனாவில் முழுமையாக அனுமதிக்கப்படாத கூகுளுக்கு மாற்றாக சில தேடுபொறிகள் ஏற்கனவே உள்ளன.

# சிரிக்கும் புத்தர் சிலையை வீட்டில் வைக்கலாமா?

சிரிக்கும் புத்தர் சிலையை வீட்டில் வைத்தால் பணம் பெருகும் என்று சொல்கிறார்களே, உண்மையா?



அப்படி நம்பி நிறைய பேர் வீட்டில் சிரிக்கும் புத்தர் சிலையை வாங்கி வைத்திருக்கிறார்கள்! அது உண்மையாக இருந்தால், கை நிறைய சிரிக்கும் புத்தர் பொம்மைகளை வைத்துக்கொண்டு, சாலையோரங்களிலும் ரயில்களிலும் விற்பவர்களிடம் எவ்வளவு பணம் சேர்ந்திருக்க வேண்டும்? ஆனால், ஒவ்வொரு சிரிக்கும் புத்தரை விற்பதற்கும் அவர்கள் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்று பார்த்திருக்கிறீர்களா? கடின உழைப்பால் மட்டுமே செல்வத்தைப் பெருக்க முடியும்.

# 2400 ஆண்டுகளுக்கு முந்தைய கிரேக்கக் கப்பல் கண்டுபிடிப்பு

உலகின் மிகப் பழமையான வணிகக் கப்பலை கருங்கடல் பகுதியில் தொல்லியலாளர்கள் கண்டு பிடித்துள்ளனர். பல்கேரியாவை ஒட்டியுள்ள கருங்கடல் பகுதியில், 2,000 அடி ஆழத்தில் மூழ்கியிருந்த அந்தக் கப்பல் 2,400 ஆண்டுகளுக்கும் முந்தையது என, 'கார்பன் டேட்டிங்' சோதனையில் தெரிய வந்துள்ளது.

கி.மு., 400ம் நூற்றாண்டைச் சேர்ந்த அந்தக் கப்பல், கிரேக்க நாட்டு வாணிபக் கப்பல் என, தொல்லியலாளர்கள் உறுதி செய்துள்ளனர். கடலுக்கடியில் அத்தனை ஆழத்தில் ஆக்சிஜன் இருக்காது என்பதால், 23 மீ., நீளமுள்ள அந்தக் கப்பல், விபத்தில் உடைந்து மூழ்கியிருந்தாலும், அதன் பகுதிகளும் அதிலுள்ள பல பொருட்களும் சிதையாமல் அப்படியே உள்ளன.

தொலைவியக்க முறையில் நீர்மூழ்கி கருவிகளை அனுப்பி, கப்பலை முப்பரிமாண முறையில் படமெடுத்து ஆராய்ந்து வருகின்றனர் தொல்லியலாளர்கள்.

# இவ்வார இராசி பலன்கள்

**ஜோதிடர் த.சத்தியதாசன்**




இவ்வாரம் தனலாபம், வெளிநாட்டு நிதிவரவுண்டு. மனை, வாகன குடும்பம் அபிவிருத்தியடையும். செய்யும் தொழிலால் மேன்மை, இலாபம், வங்கி வசதிகள் உண்டாகும். ஜென்மராசி அதிபதி தனுசு இராசியில் பலமாக இருப்பதால் தேக சுகம், மனோதைரியம் மிகும். உத்தியோகத்தர் தம் பணிகளில் ஏற்றம் காண்பர.; வியாபாரிகள், விவசாயிகள், தத்தம் தொழிலால் இலாப முன்னேற்றமடைவர். பெண்கள், மாணவர் இவ்வாரம் சௌபாக்கிய யோகமடைவர்




இவ்வாரம் ஈடுபடும் கரும காரியங்கள் நிறைவுபெறும். உத்தியோகத்தர் பதவிச்சிறப்பு, அதிகாரம் கொள்வர். வியாபாரிகள் இவ்வாரம் கூட்டு வாணிபத்தையும் புதிய முதலீடுகளையும் தொடங்கலாம். விவசாயிகள் நவீன முறைகளைக் கையாண்டு பூச்சி புழுக்களின் தொல்லைகளிலிருந்து பயிர் பாதுகாப்புக்களை மேற்கொள்ளலாம்.




இவ்வாரம் பஞ்சம பாவத்தில் குரு, சத்துரு ஸ்தானத்தில் குரு சஞ்சரிப்பதால் சத்துரு ஜெயம், ரோகநிவர்த்தி, சிவில் வழக்கு விடயங்களில் சாதகத்தன்மை ஏற்படும். உத்தியோகத்தர்க்கு வேலைப்பழு குறைவடையும். சக உத்தியோகத்தர்களை அனுசரித்து நடந்தால் நன்மை பயக்கும். வியாபாரிகளுக்கு இவ்வாரம் வாடிக்கையாளர்களின் வருகை அதிகரிக்கும். புதிய கொள்முதல் தொடங்கலாம். பழைய நிலுவைகள் வந்துசேரும்.




இவ்வாரம் மாதுரு பாவத்தில் குரு சஞ்சரிக்க சுபர் நோக்குவதால் மாதா நலம், கல்வி விருத்தி, வாகன சுகம், மனை நலம், குடும்ப விருத்தி, உண்டாகும். உத்தியோகத்தர் அதிகாரிகளின் பாராட்டையும் ஊக்குவிப்பையும் பெறுவர். வியாபாரிகளுக்கு கூட்டுவாணிபம் நல்ல இலாபத்தை தரும். விவசாயிகளுக்கு அரசமானியம் உரிய வேளையில் வந்து சேரும். பண்ணைளில் கூலியாட்களின் மேலதிக உதவி ஒத்துழைப்புக்களை பெறமுடியும்.




இவ்வாரம் விவேக, வீரிய பாவத்தில் குரு, சப்தம களத்திர ஸ்தானத்தில் சுபர் சஞ்சரிப்பதால் இல்லறம் நல்லறமாகும். களத்திர சுகம் உண்டு. பிள்ளைகளுடன் அன்பு, பாசம், நிலவும். மாதுரு ஸ்தானத்தில் சனி இருப்பதால் இடையிடையே மாதா நலம் பாதிக்கப்படும். உத்தியோகத்தர்க்கு வேலைச்சுமையும் மேலதிக வேலையும் கிடைக்கும். வியாபாரிகளுக்கு வாடிக்கையாளர்களின் வருகை திருப்தி தரும்.




இவ்வாரம் சப்தம களத்திர பாவத்தில் சுபர் சஞ்சரிப்பதாலும் குரு 2இல் இருப்பதாலும் களத்திர சுகம் கிட்டும். இல்லற நலம் உண்டாகும். புத்திரர் புத்திரிகளுடன் அன்பு பாசம் நிலவும். செய்தொழில் விருத்தி., இலாபம், சேமிப்புக் கிட்டும். உத்தியோகத்தர் பதவிச்சிறப்பு உத்தியோக அதிகாரமும் கொள்வர். உத்தியோகப் பெண்களும் தம் பணிகளில் ஏற்றம் காண்பர்.




இவ்வாரம் ஏழரை நடுக்கூறு , ஜென்மத்து வியாழ தோமிருப்பதால் கிரக தோ நிவர்த்தி செய்தால் நன்மை பக்கும். உத்தியோக பெண்களும் தம்பணிகளில் ஏற்றமும் முன்னேற்றமும் கொள்வர். வியாபாரிகள் புதிய கொள்முதல்களை தொடங்கலாம். பழைய நிலுவைகள் வந்து சேரும். குடும்ப பெண்களுக்கு இலலத்தில் குடும்ப நிர்வாகம் செவ்வனே புத்திரர் அனுகூலமுடன் நடைபெறும்.




ஜென்ம சனி(ஏழரை நடுக்கூறு) வியாழதோம், கண்டக ராகு, கேது தோம் இருப்பதால் இவ்வாரம் கிரக சாந்தி செய்தால் நன்மை கிட்டும். உத்தியோகத்தர்க்கு கணிசமான அளவு வேலைச்சுமையும் மேலதிக வேலையும் கிட்டும். வியாபாரிகளுக்கு புதிய முதலீடுகளை மட்டுப்படுத்தல் வேண்டும். விவசாயிகள் விவசாயப் பண்ணைகளில் மேலதிக உதவி ஒத்துழைப்புக்களை கூலியாட்களால் பெற முடியாது.




இவ்வாரம் மாதுரு பாவத்தில் சுபர் சஞ்சாரம் செய்வதால் மாதா நலம், கல்வி விருத்தி, வாகன சுகம், மனை நலம், குடும்ப சேமம், முதலியன ஏற்படும். இலாப பாவத்தில் இவ்வாரம் குரு சஞ்சரிப்பதால் செய்யும் தொழிலால் இலாபம், சேமிப்பு, நிதிவரவு, வங்கி வசதிகள் மன நிறைவைத்தரும். கர்ம பாவத்தில் சுபர் நோக்குவதால் உத்தியோகத்தர்க்கு பதவிச்சிறப்பு, உத்தியோக அதிகாரம் மிகும். உத்தியோகப் பெண்களும் ஏற்றம் காண்பர்.




இவ்வாரம் கர்ம ஜீவன பாவத்தில் குரு சஞ்சரிப்பதாலும் அ;டமத்து ராகு கேது தோம் இருப்பதாலும் நன்மை தீமைகள் கலந்த பலன்களே ஏற்படும். விவேக வீரிய தைரிய பாவத்தில் சுபர் சஞ்சரிப்பதால் மனோதைரியம் மிகும். நோய் அகலும். தேகம் புதுப்பொலிவு பெறும். உத்தியோகத்;தர்க்கு பதவி உயர்வு, சம்பள அதிகரிப்புக்குரிய சிபார்சு அதிகாரிகளால் ஏற்படும். ஆசிரியர்-மாணவர் -பெற்றோர் உறவு வளரும்.




இவ்வாரம் தர்ம, புண்ணிய பாவத்தில்; குரு சஞ்சரிப்பதால் தான தர்மங்களில் ஈடுபாடு ஆர்வம் ஏற்படும். பிதாவழிச் சொத்து சேர்க்கையுண்டு. வியாபாரிகள் கூட்டுவாணிபத்தால் நல்ல இலாப முன்னேற்றம் காண்பர். விவசாயிகள் நவீன முறைகளைக் கையாண்டு பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ள முடியும். பெணகள் மாணவர்கள் சௌபாக்கிய யோகம் பெறுவர். ஆசிரியர் -மாணவர் உறவு வளரும்




இவ்வாரம் அடமத்து வியாழ தோமுண்டு. ஜென்ம பாவத்தில் சுபர் சஞ்சரிப்பதால் நோய், பிணி அகன்று தேகம் புதுப்பொலிவு பெறும். செய்தொழில் விருத்தி, இலாபம், சேமிப்பு, வங்கி வசதிகள், உண்டாகும். உத்தியோகத்தர்க்கு மேலதிகாரிகளின் வேலை அழுத்தமும், வேலைச்சுமையும் குறையும். வியாபாரிகளுக்கு வாடிக்கையாளர்களின் வருகை அதிகரிக்கும். குடும்பப் பெண்களின் குடும்ப நிர்வாகம் புத்திரர் உதவியுடன் நன்கு இடம்பெறும். ஆசிரியர்-மாணவர் உறவு வளரும்.

# ஐயப்பன் விரதம் ஏன்?

ஒவ்வொரு இறை அவதாரமும் வடிவமும் அவற்றின் பின்னணியும் கூர்ந்து கவனிக்கபட வேண்டியவை. எல்லாவற்றிற்கும் காரண காரியம் உண்டு. சிலசமயங்களில் நமக்கு புரியாமல் போவதால் அவற்றின் மகிமை தெரியாமல் போவது ஒரு பக்கம் இருந்தாலும் அவற்றின் காரணங்களும் அந்த வழிபாட்டு முறையின் சிறப்புகளும், அவற்றின் அவசியமும் நாம் அறியாமல் வாழ்வது நமக்கு தான் இழப்பு.

நம் இறந்த கால வாழ்க்கையில் (முன் பிறப்பும், இந்த பிறப்பும் உட்பட) நாம் செய்த அனைத்து செயல்களுக்கும் ஏற்றவாறு நமது நிகழ்காலம் அமைகிறது. சுருக்கமாக சொன்னால், இன்று நாம் அனுபவிக்கும் துன்பத்திற்கும் இன்பத்திற்கும் அதுவே காரணம். தீதும் நன்றும் பிறர் தர வாரா! இதை நம் முன்னோர்கள் அழகாக ஒரே வார்த்தையில் கர்மா என்று குறிப்பிடுகின்றனர்.

நம் கர்மவினையின் சுழற்சியில் மாட்டிக்கொண்டு அல்லல் படும்போது சில சமயங்களில் இந்த வலியும் வேதனையும் துரிதமாக முடிந்து விட்டால் நிம்மதி என்று நமக்கு தோன்றும். தண்டனையை நாமே தேடி அனுபவித்து, மனதார நம் கர்மங்களுக்கான எதிர் வினையை நாமே அனுபவித்து, விடுதலையும், ஞானமும், ஒழுக்கமாக வாழ வழிகாட்டலும் பெற்று வாழ சிறந்த மார்க்கமே ஐயப்பன் வழிபாடு.

இந்த பின்னணியில் தான் ஐயப்பன் வழிபாட்டு முறைகள் அமைந்துள்ளன. இந்த பாதையை தேர்ந்தெடுத்ததற்கு அடையாளமாக, குருவின் கருணையோடும், வழிகாட்டுதலுடனும் மாலை அனிந்து, உணவை குறைத்து, புலால் உணவு நீக்கி, கள்ளுண்ணாமை பின்பற்றி, விரதம் முடியும் வரை பிரம்மச்சர்யம் கடைபிடித்து, போதை வஸ்துக்களை தவிர்த்து - எல்லாம் நம் கண் முன்னே இருந்தும் ஒழுக்கமாக வாழும் கலை. அவ்வளவு ஏன்? காலில் செருப்பு அணியாமல், சிகை அல்லங்காரம் கூட இல்லாமல், கருப்பு உடை அணிந்து, வயது வித்யாசம் பாராமல் அனைவரையும் மரியாதையுடன் 'சாமி' என அழைத்து, அரை பட்டினியில் ஒரு பிச்சைக்காரனை போல் வாழ்ந்து நம் கர்ம வினையை தீர்க்கும் ஒரே அற்புத மார்க்கம். விரதம் முடிக்க காடு மலை தாண்டி நடந்து சபரி மலை சென்று ஐயனை தரிசித்து வாழ்க்கையில் மீள்வதே நோக்கம்.

முத்தாய்ப்பாக - நெய் தேங்காய் என்ற ஒரு விஷயம். தேங்காயில் உள்ள ஓடே நம் எலும்புகள், நார் நமது நரம்புகள், வெள்ளை தேங்காய் நம் தசை, நீர் நமது குருதி. நாம் திருந்தி தெளிந்ததற்கு அடையாளமாக நெய். பாலிலிருந்து, தயிராகி பின் நெய்யாக மாறுவது நம் ஆத்ம தரிசனம். பாலில் நேரடியாக நெய் தெரியாது. பல கட்டங்களுக்கு பிறகு திரிந்து மாறி நெய்யாகிறது என்பதே தத்துவம். அந்த நெய்யும் இறுதியாக இறைவன் மீது அபிஷேகமாகிறது. நம் ஜீவாத்மா இறைவனை அடைவதே இந்த தத்துவம். அனால் சுமந்து சென்ற தேங்காய் கோவில் வாசலில் ஓமகுண்டத்தில் தீக்கிரையாகிறது. அது நம் உடலின் நிலையாமையை உணர்த்துவது.

இறுதியாக, இந்த வழிபாட்டு முறை கர்ம வினையை கழுவுவதற்கு மட்டும் அல்ல. வருங்காலத்தில் ஒழுக்கமாக வாழவும் ஒரு பயிற்சியே. கர்ம வினை தீர தீர, ஒழுக்கம் மேலோங்க சுபீட்சமான வாழ்க்கை கிட்டும். இதுவே சிறந்த தவமாகும்.

# பைரவர் வழிபாடு

அஷ்டமி திதியில் பைரவரை வணங்கினால் ஐஸ்வர்யம், சுகம், பொன், பொருளையும் தருவார். காரணம் அஷ்டமி திதியில் அஷ்டலட்சுமிகளும் பைரவரை வணங்கி பைரவரின் அருளால் தன்னை வணங்கும் பக்தர்களுக்கு அஷ்டலட்சுமிகள் அருள் புரிவதால் நாமும் அஷ்டமி திதியில் உள்ளம் உருகி பைரவரை நினைத்து காலையில் இருந்து விரதமிருந்து ஒருவேளை உணவு உண்டு பைரவருக்கு நம்மால் முடிந்தவரை பூஜை செய்தால் நினைத்தது எல்லாம் நடக்கும்.




ஸ்ரீ பைரவருக்கு பவுர்ணமிக்குப் பின்வரும் தேய்பிறை அஷ்டமியில் பஞ்சதீபம் ஏற்றி வழிபட்டால் காலத்தினால் தீர்க்க முடியாத தொல்லைகள் நீங்கும். கால பைரவர் உடலில் பூமியைத் தாங்கும் எட்டு நாகங்களும் மாலையாக இருந்து அலங்கரிப்பதால் இவரை வழிபட்டால் சர்ப்ப தோஷங்கள் நீங்கும்.

ஆறு தேய்பிறை அஷ்டமிகளில் பைரவரை சிவப்பு நிற அரளியால் வழிபட்டால் நல்ல மக்கள் செல்வங்களைப் பெறலாம்.

அஷ்டமி திதியில் மற்றும் பிரதி தமிழ் மாதம் எல்லாத் தேதியிலும் ஆயில்யம், சுவாதி, மிருகசீரிஷம் நட்சத்திர தினங்களிலும் பைரவரை வழிபட்டால் உத்தியோகத்தில் மதிப்பும், பதவி உயர்வும் கிட்டும். தொழிலில் லாபம் கிட்டும்.



# ஆசீர்வாதங்களைத் தரும் குடும்ப ஜெபம்

'உன் தேவனாகிய கர்த்தர் உன் நடுவில் இருக்கிறார், அவர் வல்லமையுள்ளவர், அவர் இரட்சிப்பார், அவர் உன்பேரில் சந்தோஷமாய் மகிழ்ந்து, தம்முடைய அன்பினிமித்தம் அமர்ந்திருப்பார், அவர் உன்பேரில் கம்பீரமாய்க் களிகூருவார்'. (செப்பனியா 3:17)

பிரியமானவர்களே, உங்கள் வாழ்க்கையின் மையத்தில் அருமை ஆண்டவரை நீங்கள் வைக்க வேண்டும். அப்போது அவருடைய அளவற்ற ஆசீர்வாதங்களை நீங்கள் காண முடியும். நம்மில் அநேகர் குடும்பம், பிள்ளைகள், வேலை, தொழில், படிப்பு, நண்பர்கள், கடைசியில் ஆண்டவர் என தங்கள் வாழ்வில் ஏதோ ஒரு இடத்தை ஆண்டவருக்கு ஒதுக்கி விடுகிறார்கள்.

உங்களை உருவாக்கின சர்வ வல்லவருக்கு ஒரு மூலையை அல்ல, உங்கள் வாழ்வின் மையத்தில் அவரை வைக்க வேண்டும். அப்போது தான் அளவுகடந்த ஆசீர்வாதங்களை அவரிடத்திலிருந்து பெறமுடியும்.

### துதித்துப் பாடும்போது...

'சீயோன் குமாரத்தியே, கெம்பீரித்துப்பாடு, இதோ, நான் வந்து உன் நடுவில் வாசம்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்'. (சகரியா 2:10)

நம்முடைய கர்த்தர் துதிகளின் மத்தியில் தங்கியிருக்கிறார். எங்கு துதி ஆராதனை இருக்கிறதோ அங்கு அவர் நடுவில் வருவார். அது மட்டுமல்ல, 'என் நாமத்தைப் பிரஸ்தாபப்படுத்தும் எந்த ஸ்தானத்திலும் உன்னிடத்தில் வந்து, உன்னை ஆசீர்வதிப்பேன்'. (யாத்திராகமம் 20:24)

நாம் கெம்பீரித்துப் பாடி தேவனைத் துதிக்கும்போது அவர் நம் நடுவில் தங்கியிருப்பது எத்தனை ஆசீர்வாதம்.

பவுலும் சீலாவும் நடு இரவில் கைகளும், கால்களும் கட்டப்பட்ட நிலையிலும் தேவனைப் பாடி துதித்தபடியால் அங்கு தம்முடைய வல்லமையோடு இறங்கி வந்தார். கட்டுகள் கழன்றது. சிறைச்சாலைக் கதவுகளும் திறந்தது. துதி ஆராதனைக்கு அவ்வளவு வல்லமையுண்டு.

மேலும், பாடித் துதிக்கும்போது நம் நடுவில் அவர் இறங்கி வருவாரென்றால் நமக்கு விரோதமாய் வருகிற சகல எதிரிகளையும் அசுத்த ஆவிகளையும் அவர் விரட்டி நமக்காக யுத்தம் செய்யவும் சத்துருவை மடங்கடிக்கவும் வல்லவராயிருக்கிறார். ஆகவே அவரை ஒவ்வொரு நாளும் துதிக்க மறவாதீர்கள். அப்போது அவர் உங்கள் நடுவில் வருவார். அதிசயங்களைக் காண்பீர்கள்.

'பாடித் துதிசெய்யத் தொடங்கினபோது, யூதாவுக்கு விரோதமாய் வந்து பதிவிருந்த அம்மோன் புத்திரரையும், மோவாபியரையும், சேயீர் மலைத்தேசத்தாரையும், ஒருவருக்கு விரோதமாய் ஒருவரைக் கர்த்தர் எழும்பப் பண்ணினதினால் அவர்கள் வெட்டுண்டு விழுந்தார்கள்'. நாளாகமம் 20:22)

### ஜெபம் பண்ணும்போது...

'இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்'. (மத்தேயு 18:20)

நம் அருமை ஆண்டவரை நம்முடைய வாழ்வின் மையத்திற்குக் கொண்டுவர மற்றொரு முக்கியமான வழி, கூடி ஜெபிப்பது ஆகும். அதாவது குடும்ப ஜெபத்தைக் குறித்து குறிப்பிட விரும்புகிறேன். இயேசுவின் நாமத்தில் ஒருமனப்பட்டு இரண்டு அல்லது மூன்று பேர் கூடி வந்தால் நிச்சயம் அவர்கள் நடுவில் அருமை ஆண்டவர் வருவார். ஏறெடுக்கும் ஜெபத்தை நிச்சயம் கேட்பார்.

குடும்ப ஜெபம் ஒரு கர்த்தருடைய பிள்ளைகளுக்கு மிகவும் அவசியமாகும். குடும்ப ஜெபம் இல்லாத வீடு, நான்கு சுவரும் இல்லாத வீடு என பேட்ரிக் ஜோஷ்வா என்ற தேவ மனிதன் கூறுகிறார்.

குடும்ப ஜெபம் செய்ய முடியாதபடி சத்துரு பல தந்திரங்களைக் கொண்டு வருவான். ஆனால் அதை மேற்கொண்டு அனுதினமும் கூடி ஜெபிக்க அர்ப்பணிக்க வேண்டும்.

அன்றைக்கு சாத்ராக், மேஜிக், ஆபேத்நேகோ என்ற தேவ மனிதர்கள் அக்கினிச் சூளையில் போடப்பட்டாலும் அவர்கள் நடுவிலே நம் ஆண்டவர் உலாவினார். காரணம் அவர்களுடைய ஒருமனப்பாடு.

உங்கள் குடும்பத்தில் ஜெப வாழ்க்கையை கட்டி எழுப்புவீர்களென்றால் ஆண்டவர் உங்கள் நடுவில் வந்து வாசம் பண்ணுவார். நிச்சயம் நீங்கள் வேண்டிக் கொள்ளுவதற்கும், நினைப்பதற்கும் மிகவும் அதிகமாய் உங்களை ஆசீர்வதிப்பார். எனவே உங்கள் தனிப்பட்ட வாழ்வில், குடும்பத்தில், தொழிலில், படிப்பு, வேலை எல்லாவற்றிலும் கிறிஸ்துவுக்கு மைய இடத்தை ஒதுக்கிவிடுங்கள். ஆச்சரியமான ஆசீர்வாதங்களை நிச்சயம் பெறுவீர்கள்.

# இறைவன் அனுமதித்ததை விலக்குவதற்கு உரிமையில்லை

ஆதிபிதா ஆதம் (அலை) அவர்களைப் படைத்து அதன்மூலம் உலகில் மனித இனத்தைப் பல்கி பெருகச் செய்தான், அல்லாஹ். ஒவ்வொரு காலகட்டத்திலும் அல்லாஹ் பற்றிய அறிவை அந்த மக்களுக்கு எடுத்துச் சொல்வதற்காக அவ்வப்போது அவனுடைய அதிகாரம் பெற்ற தூதுவர்களை அனுப்பி வைத்தான். கிட்டதட்ட ஒரு லட்சத்து 24 ஆயிரம் தூதுவர்களை இறைவன் அனுப்பி வைத்துள்ளான் என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

உலகின் ஒவ்வொரு பகுதிக்கும், ஒவ்வொரு கூட்டத்தாருக்குமாக ஒரு தூதரை இறைவன் அனுப்பி வைத்தான். ஒவ்வொரு தூதரை அனுப்பும் போதும், அம்மக்களுக்கு அக்கால கட்டத்தில் பொருந்தக்கூடிய நல்வாழ்வியல் தத்துவத்தைப் போதித்து வந்தான். எந்த கட்டளையை எடுத்து செயல்படுத்த வேண்டும், எதனை தடுத்து, விடுத்து வாழ வேண்டும் என்றெல்லாம் கூட ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு வந்தன. அத்தனை நபிமார்களும் ஏதோ ஒரு கூட்டத்திற்காகவோ, ஏதோ ஒரு ஊருக்காகவோ அனுப்பப்பட்டவர்கள்.

ஆது, சமூது, மத்யன் வாசிகள், எகிப்தில் வாழ்ந்த இஸ்ரவேலர்கள் என்று பல கூட்டத்திற்கான நபிமார்கள் வந்தனர். ஆனால் இறுதி நபி முகம்மது (ஸல்) அவர்களை, உலகில் வாழும் அத்தனை மக்களுக்கும் நல்வழியை எடுத்துச் சொல்லும் நபியாக இறைவன் அனுப்பி வைத்தான். 'முகம்மது நபியை படைக்கவில்லை என்றால், இந்த உலகத்தையே படைத்திருக்க மாட்டேன்' என்று திருக்குர்ஆனில் ஓர் இடத்தில் இறைவன் குறிப்பிடுகின்றான்.



அப்படிப்பட்ட பூரணத்துவம் வாய்ந்த நபிகள் நாயகத்திற்கு திருக்குர்ஆனை இறுதி வேதமாகவும் அருளினான். அதில் சொல்லப்பட்ட அத்தனை கட்டளைகளும் மறுமைநாள் ஏற்படும் வரை எல்லோராலும் பின்பற்றப்பட வேண்டும்.

அதே சமயம் நபி பெருமானார் (ஸல்) அவர்கள், தன் சுய விருப்பத்தின் பேரில் சிலவற்றை வேண்டுமென்றோ, சிலவற்றை வேண்டாம் என்றோ ஒதுக்குவதற்கு கூட அவர்களுக்கு உரிமைத் தரப்படவில்லை.

ஷரிஅத் சட்டதிட்டங்கள் மிக நுட்பமாக அல்லாஹ்வால் அருள்மறையில் அருளப்பட்டது. அதன் நுணுக்கங்களை ஆழமாக அறிந்து அதன்படி செயலாற்றும் போது வாழ்க்கையில் வெற்றி நிச்சயம் உண்டு. மாறு செய்யும் போது மறுமையில் நிச்சயம் தண்டனையுண்டு. இதனை முழுமையாய் உணர்ந்து வாழும் போது தான் ஒருவன் உண்மை முஸ்லிமாக முடியும். அப்படிப்பட்ட நற்பாக்கியத்தை நம் எல்லோருக்கும் அல்லாஹ் அருளி கிருபை செய்வானாக, ஆமின்.

# சர்வதேச மனித உரிமைகள் தினம்

ஜனநாயகத்தை நிலைநாட்டப் போவதாகவும், தீவிரவாதத்தை ஒழிக்கப் போவதாகவும் கிளம்பியவர்கள் மனித குலத்திற்கு எதிரியாக நிகழ்ந்துவரும் அவல நிலையும் தொடர்கிறது.

மனிதன் ஒரு சமூகப்பிராணி என்பது சில சமூகவியலாளர்களின் கருத்து. ஆனால் தனது இனத்தைச் சார்ந்தவர்களையே காட்டுமிராண்டித்தனமாக கொடுமைப்படுத்தி அல்லலுக்கு ஆளாக்கும் விநோதம் மனிதர்களிடையே மட்டுமே நாம் காண இயலும்.

சர்வதேச மனித உரிமைகள் தினம் ஆண்டுதோறும் டிசம்பர் 10ம் திகதி அனுசரிக்கப்படுகிறது. இரண்டாம் உலகமகா யுத்தம் நடைபெற்ற போது நடந்த சொத்து இழப்பு, படுகொலைகள், அட்டுழியங்கள் மற்றும் மனிதப் பேரழிவுகளின் பின்னர் தோன்றிய ஐக்கிய நாடுகள் சபையால் அறிவிக்கப்பட்டதே இந்த மனித உரிமைப் பிரகடனம்.

மனிதர்கள், மனிதர்களாகப் பிறந்த காரணத்தினால் அவர்களுக்குக் கிடைத்த அடிப்படையான, விட்டுக் கொடுக்க முடியாத, மறுக்க முடியாத உரிமைகளை மனித உரிமைகள் என்று அழைக்கிறோம்.

மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதை அனைவருக்கும் வலியுறுத்தும் நோக்கில் 1948, டிசம்பர் 10ஆம் திகதி ஐக்கிய நாடுகளின் பொது சபையால் உலக மனித உரிமைகள் தினம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, 1950ஆம் ஆண்டிலிருந்து இத்தினம் கொண்டாட ஆரம்பிக்கப்பட்டது.

விஞ்ஞானத்திலும், தொழில் நுட்பத்திலும் அதி உச்சத்திலிருக்கும் காலக்கட்டத்தில் நாம் வசித்து வருகிறோம். மனித உரிமைகள் பற்றியும், ஊடக சுதந்திரம் பற்றியும் மிக அதிகமாகவே பேசி வருகிறோம். ஆனால் நாகரீகமடைந்த சில மனித மனங்கள் மிருகங்களை விட மோசமான நிலையிலேயே இருந்து வருகிறது என்பதற்கு நாம் வாழும் உலகிலேயே பல நிதர்சனங்களை சந்தித்து வருகிறோம்.

நாகரீகமும், விஞ்ஞானமும் வளர வளர மனிதர்களை வதை செய்யும் உத்திகளும் நவீனமடைந்து வரும் அவலநிலையும் தொடர்கிறது.

மனித உரிமைகள் என்பது யாராலும் உருவாக்கப்பட்டதல்ல, அதுபோல் மனித உரிமைகள் எவராலும் வழங்கப்பட்டதும் அல்ல. எனவே ஒருவரின் உரிமையை பறிக்க எவருக்கும் உரிமையில்லை.

1945ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை உருவான அடுத்தாண்டு, பிப்ரவரி மாதம் 16ம் தேதி ஐக்கிய நாடுகள் 'மனித உரிமை ஆணைக் குழு' உதயமானது. ஐம்பத்து மூன்று நாடுகளை அங்கமாகக் கொண்ட இக்குழு, முதல் வேலையாக 'ர்வதேச மனித உரிமைப் பிரகடனத்தை உருவாக்குவதற்கு அமெரிக்க ஜனாதிபதியின் மனைவி எலினா ரூஸ்வெல்ட் தலைமையில் ஒரு குழுவை அமைத்தது.

இக்குழுவின் சிபாரிசின் படி 30 பிரிவுகளின் கீழ் மனித உரிமைகள் இனங்காணப்பட்டு அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம் ஐக்கிய நாடுகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

டிசம்பர் 10, 1948ம் ஆண்டு பாரிஸில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் பொதுச்சபையினால் இந்தப் பிரகடனத்திற்கு 58 நாடுகள் அங்கீகாரம் வழங்கியது. டிசம்பர் 10 என்ற இதே நாளை 1950ம் ஆண்டிலிருந்து 'சர்வதேச மனித உரிமைகள் தினமாக' அறிவித்து கொண்டாடப்பட்டு வருகிறது.

உலகத்தில் பிறக்கும் எல்லா மனிதர்களும் சமமான உரிமைகளும், அடிப்படைச் சுதந்திரங்களும் கொண்டிக்கின்றனர் என்ற உண்மையை தான் இந்த நாளில் உலகம் உரத்து கூற வேண்டியது. மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதை அனைத்து தரப்பினருக்கும் வலியுறுத்தும் வகையிலும், மனித உரிமைகள் தொடர்பான விஷயங்களை மக்களுக்கு தெளிவுபடுத்தும் நோக்கத்துடனும் இந்த தினம் உலகளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்படுகிறது.

1948ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 'சர்வதேச மனித உரிமைகள் சாசனம்' 30 உறுப்புரைகளைக் கொண்டது.

1. சமத்துவ உரிமை - சகல மனிதர்களும் சுதந்திரமாக பிறக்கின்றனர். அவர்கள் பெருமானத்திலும், உரிமைகளிலும் சமமானவர்கள், அவர்கள் நியாயத்தையும், மனச்சாட்சியையும் இயற்பண்பாகப் பெற்றவர்கள்.

2. ஏற்றத்தாழ்வுகள் காட்டப்படாமல் இருப்பதற்கான உரிமை - இனம், நிறம், பால், மொழி, மதம், அரசியல் மற்றும் தேசிய அல்லது சமூகம், பிறப்பு அல்லது பிற அந்தஸ்துகளால் வேறுபடுத்த முடியாமல் உலகில் உள்ள மனிதர்கள் எல்லோரும் சம உரிமை பெற்றவர்கள்.

3. சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் வாழும் உரிமை அனைவருக்கும் உண்டு.

4. யாரையும் அடிமையாக நடத்த எவருக்கும் உரிமை இல்லை.

5. சித்திரவதைக்கு, மனிதத் தன்மையற்ற தாக்குதல்களுக்கும் உள்ளாகாமல் இருப்பதற்கான சுதந்திரம்.

6. சட்டத்தின் முன் அனைவருக்கும் சம உரிமை

7. பாரபட்சம் எதுவுமின்றி சட்டத்தின் பாதுகாப்புக்கும் எல்லோரும் உரித்தானவர்கள்.

8. ஒருவரின் உரிமை மதிக்கப்படாத போது சட்ட உதவியை நாடும் உரிமை.

9. சட்டத்துக்கு புறம்பாக ஒருவரை காவலில் வைக்கவோ, நாடு கடத்தவோ யாருக்கும் உரிமை இல்லை.

10. நீதியான, பகிரங்கமான விசாரணைக்கான உரிமை

11. குற்றஞ்சாட்டப்படுவோர், குற்றம் நிரூபிக்கப்படும் வரை நிரபராதி என நிரூபிக்க வாய்ப்பு வழங்கும் உரிமை.

12. தனிப்பட்ட அல்லது அந்தரங்க விஷயத்தில் எவரும் தலையிடாமல் இருப்பதற்கான சுதந்திரம்.

13. ஒவ்வொரு நாட்டிற்குள்ளும் சுதந்திரமாக நடமாடுவதற்கும், நாட்டை விட்டு வெளியேறவும், திரும்பி வரவும் உரிமை.

14. ஆபத்து காலத்தில் பிற நாட்டில் தஞ்சம் கேட்க உரிமை உண்டு.

15. ஒவ்வொரு பிரஜைக்கும் தங்கள் விருப்பத்திற்கு ஏற்ற தேசிய இனத்தை மாற்றிக் கொள்ள உரிமை.

16. எந்த ஆணும், பெண்ணும் விரும்பினால், திருமணம் செய்துகொண்டு பாதுகாப்புடன் குடும்பம் நடத்துவதற்கான உரிமை. சமுதாயத்தாலும், அரசாலும் இது பாதுகாக்கப்பட வேண்டும்.

17. சொத்து வைத்துக்கொள்ளும் உரிமை. தனியாகவும், கூட்டாகவும் ஆதனத்தைச் சொந்தமாக வைத்திருப்பதற்கு ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

18. சிந்தனைச் சுதந்திரம், மனச்சாட்சிச் சுதந்திரம், மதச் சுதந்திரம் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

19. கருத்துச் சுதந்திரம், பேச்சு சுதந்திரம் எவருக்கும் உண்டு. எவ்வழிவகைகள் மூலமும், எல்லைகள் இன்றி தகவலையும் கருத்துக்களையும் நாடுவதற்கும், பெறுவதற்கும் பரப்புவதற்குமான சுதந்திரம்.

20. எந்த ஒரு கூட்டத்திலும் கலந்துகொள்ள, சங்கத்தில் உறுப்பினராக யாருக்கும் உரிமை உண்டு

21. அரசியல் உரிமை - அரசாங்கத்தில், சுதந்திரமான தேர்தலில் பங்குபெறவும், பொதுச்சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்குமான உரிமை. ஒவ்வொருவருக்கும் தத்தம் நாட்டிலுள்ள அரசாங்க சேவையில் சமமான முறையில் அமர்த்தப்படுவதற்கு உரிமையுண்டு.

22. சமூகப் பாதுகாப்பிற்கும், தன் திறன்களை வளர்த்துக்கொள்ளவும் உரிமை

23. ஒவ்வொருவரும் விரும்பிய தொழில் செய்யவும், வேறுபாடு எதுவுமின்றி, சமமான தொழிலுக்குச் சமமான சம்பளம் பெறுவதற்கு உரிமை கொண்டவர்கள். ஒவ்வொருவருக்கும் தொழிற்சங்கம் அமைக்க உரிமை. அவற்றில் சேர்வதற்கும் உரிமையுண்டு.

24. இளைப்பாறுவதற்கும், ஓய்வெடுக்கவும் உரிமை.

25. ஒவ்வொருவரும் உணவு, உடை, இருப்பிடம், மருத்துவக் காப்பு, அவசியமான சமூக சேவைகள் உட்பட தமது குடும்பத்தினாலும், உடல் நலத்துக்கும் நல்வாழ்வுக்கும் போதுமான வாழ்க்கைத்தரத்துக்கு உரிமை உடையவர். அத்துடன் வேலையின்மை, இயலாமை, கைம்மை, முதுமை காரணமாகவும் அவை போன்ற அவரது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட பிற சூழ்நிலை காரணமாகவும் வாழ்க்கை வழியில்லாமை ஏற்படும் சந்தர்ப்பங்களில் பாதுகாப்பு பெறவும் உரிமை உண்டு. தாய்மை நிலையும் குழந்தைப் பருவமும் விசேஷ கவனிப்பு மற்றும் உதவியை பெற உரிமை கொண்டவை.

26. ஒவ்வொருவருக்கும் கல்வி கற்பதற்கான உரிமையுண்டு. குறைந்தது ஆரம்ப அடிப்படைக் கட்டங்களிலாவது கல்வி இலவசமாக இருத்தல் வேண்டும்.

27. சமுதாயத்தின் பண்பாட்டு வாழ்க்கையில் சுதந்திரமாகப் பங்குகொள்வதற்கும், கலை மற்றும் அறிவியல் முன்னேற்றத்திலும், அதன் நன்மைகளிலும் பங்கெடு'ப்பதற்கும் எவருக்கும் உரிமையுண்டு.

28. மனித உரிமைகளை உறுதிசெய்யும் சமூக அமைப்புகளில் பங்குபற்றும் உரிமை.

29. ஒவ்வொருவரும் பிறரது உரிமையை மதிக்க வேண்டும்.

30. இந்த பிரகடனத்தில் குறிபிட்டுள்ள எந்த ஒரு உரிமையையும் ஒருவர் பெறுவதற்கு தடையாக இருக்க உரிமை கிடையாது.

1979லிருந்து பல நாடுகள் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக கண்காணிக்க தொடங்கின. 1995 இல் எல் சல்வடோர், கம்பொடியா, ஹெயிட்டி, ருவண்டா, புரூண்டி ஆகிய நாடுகளில் ஐ. நா தன் கவனத்தைச் செலுத்தியது. 1993 ஜூன் 14 இல் வியட்னாமில் நடந்த 2வது மனித உரிமைகள் மகாநாடு பெண்கள் உரிமைகள் பற்றி கவனம் செலுத்தியது.

இலங்கையில் யுத்த நிலையின் போது உரிமை மீறல்கள் தொடர்பாக கவனத்தில் எடுத்தது. இப்பிரகடனம் ஐக்கிய நாடுகள் சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்ட வேளையில் இலங்கை ஐ.நா.வில் அங்கம் பெற்றிருக்கவில்லை.

ஆனால் ஆங்கிலேய காலனித்துவத்திடமிருந்து இலங்கை அதே ஆண்டில் தான் சுதந்திரத்தை பெற்றுக் கொண்டது. நாம் ஏற்கெனவே பார்த்த சர்வதேச மனித உரிமை பிரகடனத்தின் சரத்தில் எவற்றை இலங்கைத் தீவில் வாழும் மக்களுக்கு சாதகமாக இலங்கை ஆட்சியாளர் பாவித்துள்ளார்கள்? உண்மையை கூறுவதானால் சர்வதேச மனித உரிமை பிரகடனத்தில் குறிப்பிட்டுள்ள அத்தனை சரத்துக்களையும் இலங்கை மீறியுள்ளதற்கான ஆதாரங்கள் பலதை உதாரணப்படுத்தலாம்.

இலங்கை சுதந்திரம் பெற்ற வேளையிலே குடியுரிமை, வாக்குரிமை பற்றி எடுத்துக் கூறும்

**என்.ஹரன்**

இருபத்தியோராம் உறுப்புரையை மீறியது. அதாவது மலையகத் தோட்டத் தொழிளாலர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டது.

இதை தொடர்ந்து 1956 ஆம் ஆண்டு சிங்களச்சட்டம் மூலம் சரத்து 2, 3 மீறப்பட்டன. 1956 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட இனக் கலவரங்கள் மூலம் சாரம் 3, 5, 12, 17 ஆகியவை மீறப்பட்டுள்ளன. நூறு ஆண்டுகளுக்கு மேலாக பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த மக்களை 1964 ஆம் ஆண்டு சிறிமா சாஸ்திரி ஒப்பந்தம் நாடு கடத்தியதன் மூலம் சாரம் 4, 15, 23 ஆகியவை மீறப்பட்டுள்ளன.

தமிழ் மாணவர்கள் சம கல்வி மறுக்கப்பட்டு தரப்படுத்தல் அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் சாரம் 26 மீறப்பட்டுள்ளது. தொடர்ச்சியான அவசரகால நிலையுடன் கூடிய பயங்கரவாதச் சட்டம் மூலம் சரத்துக்கள் 2, 3, 5, 6, 7, 8, 9, 10, 11, 12 மீறப்பட்டுள்ளன. இவ்வாறு அடிக்கிக் கொண்டு போகலாம். இந்நிலை யுத்தகாலத்தில் அதிகமாக இருந்தது. இலங்கை போன்ற நாடுகளில் இனப்படுகொலை, சிறுபான்மையினர் ஒதுக்கப்படல், கல்வி, வேலை வாய்ப்புக்களில் சமத்துவமற்ற நிலை, வழக்கு ஆதாரம் இல்லாமல் கைது செய்தல், காணாமல் போதல், தடுப்புக்காவல் தண்டனைகள், சிறைக்குள் படுகொலை, ஆகிய மனித உரிமை மீறல்கள் இனி மேலும் நடைபெறாதவாறு ஐ.நா சட்டரீதியான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். மனித உரிமைகள் ஜனநாயகத்தின் ஆணிவேர், உயிர் நாடி, அது அனைவராலும் மதிக்கப்பட வேண்டும். முழு உரிமைகளும் அது பற்றிய விழிப்புணர்வு தேவை.

அனைத்துலக மனித உரிமைப் பிரகடனத்தின் உறுப்புரை 13இல் கூறப்பட்டுள்ளது போன்று ஒவ்வொரு நாட்டினதும் எல்லைக்குள் சுதந்திரமாக பிரயாணஞ் செய்வதற்கும் வதிவதற்கும் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

ஆனால், நம் நாட்டில் நடப்பதென்ன?

அண்மைக் காலமாக நாட்டில் மீண்டும் உருவெடுத்துள்ள , பாலியல் துஷ்பிரயோகங்கள், கொலை கொள்ளை போன்ற சம்பவங்கள் மேற்கூறப்பட்ட மனித உரிமைப் பிரகடனத்தையே கேலிக்குரிய தாக்குகின்றனவே?

இதற்கு உதாரணமாக வித்தியா,சேயா ,போன்றோர் உதாரணமானார்கள்

மனிதப் படுகொலைகள், பாலியல் பலாத்காரம், மனித உரிமை மீறல்கள் முதலானவற்றுக்கு எதிராகவே மனித உரிமைகள் பிரகடனம் ஐ.நா.வினால் கொண்டுவரப்பட்டது.

மனித உரிமைகள் தினத்தைக் கொண்டாடுவதை விட மனித உரிமைகள் பாதுகாப்புக்கான ஏற்பாடுகளையும் நடவடிக்கைகளையும் அனைவரும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

உனது சுதந்திரம் அடுத்தவரின் மூக்கின் நுனி வரை என வின்சன் சேர்சில் தெரிவித்தார் அதுவே உரிமை யின் விதைவிடமும் உண்மையுமாகும்.எனவே நம்மை நாம் திருத்தி பிறரது உரிமையில் தலையிடாமல் இருப்போம் என இன்று உறுதி பூணுவோமாக.

# ஊழல் இன்றி இயங்காதா இவ் உலகு?

**நடராஜன்**

இன்று நம் நாட்டில் நிலவும் நிலை என்ன? ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு வகையில் ஊழலுக்கு துணை போபவர்கள், ஊழலை அனுசரித்து வாழப்பழகிப் போனவர்களாக இருக்கிறார்கள்.

ஓட்டுனர் உரிமம் பெறுதல், புதுப்பித்தல், பிறப்பு சான்றிதழ் பெறுதல், குடிநீர், மின் இணைப்பு பெறுதல், வீடு கட்ட அனுமதி பெறுதல், குழந்தைகளை பள்ளியில் சேர்த்தல், பாஸ்போர்ட் வழங்குவது தொடர்பான போலீஸ் விசாரணை அறிக்கை அளித்தல் போன்றவற்றிக்கு ஒரு தொகையை லஞ்சமாகவோ அல்லது 'அன்பளிப்பு' என்ற பெயரிலோ கொடுத்து, காலதாமதமின்றி தங்கள் காரியங்களை முடித்துக் கொள்வதில் தவறில்லை என்ற மனநிலைக்கு பொதுமக்கள் மாறிவிட்டனர்.

இத்தகைய மனப்போக்கானது, தங்களது கடமையை செய்வதற்கு பெறப்படும் லஞ்சத்தை, பொதுமக்கள் அங்கீகரித்து விட்டனர் என்ற உணர்வை லஞ்சம் வாங்குபவர்களுக்கு ஏற்படுத்தியுள்ளது.

ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு வகையில் லஞ்சம் கொடுப்பவராகவோ அல்லது லஞ்சம் பெறுபவராகவோ இருக்கிறார்கள் என்பதுதான் இன்றைய நிலை. விதிமுறைகளுக்குட்பட்ட காரியங்களை செய்து கொடுக்க, லஞ்சம் கொடுப்பவர்களுக்கு உடனடியாக செய்து கொடுப்பதும், கொடுக்காதவர்களுக்கு ஏதாவது ஒரு காரணத்தை கூறி இழுத்தடிப்பதும் இன்று வாடிக்கையாகிவிட்டது.

இன்றைய சூழலில், ஒரு நியாயமான, சட்டவிதிமுறைகளுக்குட்பட்ட காரியத்தை செய்து கொள்வதற்கு லஞ்சம் கொடுக்க மாட்டேன் என்ற நிலைப்பாட்டை ஒருவர் மேற்கொண்டால், அவர் சமுதாயத்தில் சந்திக்க வேண்டிய இடையூறுகளும், அதன் விளைவாக ஏற்படும் மனவேதனையும் அளவிட முடியாதது. இதுபோன்ற நிலைப்பாட்டை எடுத்தவரை காட்டிலும், அவரது குடும்பத்தினரின் நிலை மிகவும் பரிதாபத்திற்குரியதாக இருக்கும்.

நேர்மைக்கு சோதனை

தனது பணியில், லஞ்சம் வாங்கமாட்டேன் என்று கடமையாற்றும் சில அரசு அலுவலர்களும் உள்ளனர். அவர்களது நேர்மையான செயல்பாட்டால், உடன் பணியாற்றும் ஊழியர்கள், உயர் அதிகாரிகளின் விரோதம், அதிருப்தியை எதிர்க்கொள்ள வேண்டியுள்ளது. அதுபோன்ற அலுவலர்களின் வாழ்க்கை நிலையை, அரசு பணியேற்கும் இளைய தலைமுறையினருக்கு உதாரணமாக காட்டப்படும் சூழலும் இன்று நிலவி வருவதை காணமுடிகிறது.நேர்மையான செயல்பாடு என்பது அரசு பணியில் இருப்பவர்களுக்கு மட்டுமின்றி, பொதுமக்களும் தங்கள் வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய நெறிமுறையாகும்.

மாறாக, எந்தெந்த சந்தர்ப்பங்களில் நேர்மையையும், சட்டவிதிமுறைகளையும் விட்டு விலகிச் செல்ல முடியும் என்பதை ஆராய்ந்து, ஊழல் புரிவதற்காக மாற்றுப்பாதையை தேடுவதில் பொதுமக்கள் பலர் முனைகின்றனர்.

அரசுக்கு செலுத்த வேண்டிய வரியை, பல்வேறு காரணங்களை கூறி, செலுத்தாமல் இருப்பதும் ஒரு வகை ஊழல்தானே!கடந்த அரை நூற்றாண்டில் கல்வி, விஞ்ஞானம் மற்றும் பொருளாதாரத்தில் கணிசமாக வளர்ச்சி அடைந்துள்ள நம் நாட்டில் ஊழலும், அதுதொடர்பான செயல்பாடுகளும் அளவுக்கு அதிகமாக தலைதூக்கியுள்ளன. பணம் ஈட்டுவது குறித்து சமுதாய பார்வையும் மாறத் தொடங்கியுள்ளது. நேர்மையாக வாழ்வதுதான் உன்னதமான வாழ்க்கை முறை என்ற நிலை, மாறி வருவதை காண முடிகிறது.

நிறுவனங்களுக்கு சலுகை ஊழல்: அரசு ஊழியர்களுக்கு கொடுக்கப்படும் லஞ்சம் பற்றி பேசும் சமுதாயம், உள்நாடு, வெளிநாடு கம்பெனிகளுக்கும், நிதிநிறுவனங்களுக்கும் வழங்கப்படும் வரம்புமீறிய சலுகைகள் அதிகமாக பேசப்படுவதில்லை. காலப்போக்கில், அந்த நிறுவனங்கள் செயல்இழக்கும்போது, ஊழல் செயல்பாடுகளும் காலம் கடந்து வெளியாகின்றன. சில சமயம் சம்பந்தப்பட்டவர்கள் நீதிமன்ற நடவடிக்கைக்கு ஆளாகின்றனர். அத்தகைய ஊழல் செயல்பாட்டால் நாட்டின் பொருளாதார வீழ்ச்சியும், சேதமும் பொதுமக்களின் சுமையாகத்தான் அமைகின்றன.

உலக நாடுகள் பலவற்றிலும் ஊழல் மிக அதிகமாக வியாபித்துள்ளதை காணமுடிகிறது. ஒரு நாட்டின் வளர்ச்சி திட்டங்களை ஊழல் சீரழிப்பதோடு, அந்நாட்டின் நிலையான ஆட்சிக்கும், உள்ளநாட்டு பாதுகாப்புக்கும் அது அச்சுறுத்தலாக விளங்குகின்ற நிலையை காண முடிகிறது. சர்வதேச அளவில் ஊழலை தடுக்க, ஐ.நா., அமைப்பு, 2003 அக்.,31ல், ஊழலுக்கு எதிரான போரை தீவிரமாக நடத்தி, அதை உலக நாடுகளில் இருந்து விரட்டியடிக்க வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றியது.

ஒவ்வொரு ஆண்டும் டிச.,9 ஐ சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினமாக கடைப்பிடித்து, ஊழலின் நச்சுத்தன்மையை மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டுமென தெரிவித்தது. ஒவ்வொரு நாட்டிலும் ஊழல் எந்த அளவில் உள்ளது என்பது குறித்து ஆண்டுதோறும் ஆய்வு செய்யும் 'டிரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல்' என்ற நிறுவனம், 2014ல் வெளியிட்ட அறிக்கைபடி, ஊழல் மிகுந்த நாடுகளில் ஒன்றாக இந்தியா திகழ்கிறது. 175 உலகநாடுகளில் ஊழல் தரவரிசையில் 86ம் இடத்தில் உள்ளது.

ஆண்டுக்கு ஒருமுறை ஊழல் எதிர்ப்பு தினம் அனுசரித்துவிட்டு, மற்ற நாட்களில் வாழ்க்கையை தொடர்வதால் ஊழல் ஒழிப்பில் எந்த முன்னேற்றமும் அடைய முடியாது. சட்டவிதிமுறைக்குப்பட்ட காரியத்திற்கு லஞ்சம் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தை விடவேண்டும்.

லஞ்சம் கேட்பவரிடம்,'லஞ்சம் ஏன் கொடுக்கணும்' என கேட்க வேண்டும். ஊழலுக்கு எதிரான செயல்பாடுகளில் பங்கேற்க வேண்டும். லஞ்சப் பேர்வழிகள் மீது நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு, லஞ்சஒழிப்புத்துறை, புலனாய்வு துறைக்குரியது என எண்ணி, தங்களது பங்களிப்பை புறக்கணிக்கக்கூடாது.

ஆசிரியர்களின் பொறுப்பு:

ஊழலுக்கு எதிரான உணர்வை, இளைய தலைமுறையினருக்கு ஊட்ட வேண்டிய பொறுப்பில் பெரும்பங்கு வகிப்பவர்கள் ஆசிரியர்களே.

தேர்வுக்குரிய பாடங்களை மட்டும் கற்றுக்கொடுக்காமல், ஊழலின் கறைபடியாமல் களங்கமற்ற மனிதர்களாக வாழ்வில் திகழும் வழிமுறைகளையும் ஆசிரியர்கள் கற்றுக் கொடுக்க வேண்டும்.

ஊழலுக்கு அடிப்பணியாமல் பணியாற்றுபவர்களை ஊக்கப்படுத்த வேண்டும்.

ஊழல் எதிர்ப்பு உணர்வை வளர்ப்பதில் வெளியில் இருந்து விதிக்கப்படும் கட்டுப்பாடுகள் தமக்குத்தாமே விதித்துக்கொண்டவையாக இருப்பின், அது நிச்சயமாக நல்ல பலனை தருகின்றன என்று காந்திஜியின் வாக்கு, இன்றைய யதார்த்த நிலையை உணர்த்துகிறது.

# அறிஞரும் அரக்கனும்

ஒரு அறிஞர் ஆராய்ச்சி நூல் ஒன்று எழுதுவதற்காக அமைதியான இடத்தைத் தேடிக் கொண்டிருந்தார். அவர் அறியாமல், அரக்கர்கள் இருந்த பள்ளத்தாக்கை தன் இடமாகத் தேர்ந்தெடுத்தார். கோபமடைந்த ஒரு அரக்கன் அவரைப் பார்த்துக் கேட்டான்.

யார் நீ? இந்த அமைதியான பள்ளத்தாக்கை கெடுக்க வந்தாயா? என்றான்.

தயவு செய்து என்னை மன்னித்து விடு. நான் ஒரு அறிஞன். அமைதியான இடத்தைத் தேடிக் கொண்டிருந்தேன். அதனால், இங்கு வந்தேன்! என்றார்.

இதற்கு ஒரு விலை நீ கொடுக்க வேண்டும். நான் உன்னைக் குரங்காக மாற்றி விடுவேன். அதுதான் உனக்குத் தண்டனை! என்று அந்த அரக்கன் கூறினான்.

அடுத்த கணம், அந்தக் அறிஞர் குரங்காக மாறிவிட்டார். அவர் விம்மி விம்மி அழுதார். ஒரு மரத்திலிருந்து மற்றொரு மரத்திற்குத் தாவிக் கொண்டிருந்தார். குரங்குகளைப் போல் பழங்களைத் தின்று வந்தார்.

அவர் நகரத்தை அடைந்தார். அங்கு ஒரு கப்பல் பாக்தாத் பட்டணத்திற்குப் புறப்பட இருந்தது. அவர் அதில் தாவி ஏறினார். அதிலிருந்த பயணிகள் கூச்சலிட ஆரம்பித்தனர்.

குரங்கை வெளியே அனுப்புங்கள்; கொன்றுவிடுங்கள்! என்று கத்தினர்.

கப்பலின் தலைவன் அந்த விலங்கிற்காக வருத்தப்பட்டுச் சொன்னார்.

வேண்டாம். அதுவும் நம்முடன் வரட்டும். யாருக்கும் அது தொந்தரவு தராதவாறு நான் பார்த்துக் கொள்கிறேன்!

அந்தக் குரங்கு கப்பல் தலைவனுக்கு நன்றி உடையவனாய் இருந்தது. பாக்தாத்தில் ஒரு செய்தி பரவி இருந்தது. அரசருக்கு ஆலோசனை கூறுபவர் இறந்துவிட்டதாகவும், அரசர் அந்த இடத்திற்குத் தகுந்த ஆளைத் தேர்ந்தெடுக்க விரும்புவதாகவும் அறிவித்திருந்தார். இப்பதவியை விரும்புவோர் ஏதேனும் ஒரு செய்தியைத் தகுந்த முறையில் எழுதி அனுப்பலாம். அவற்றுள் எது மிகவும் நன்றாக உள்ளதோ, அதை எழுதியவர் ஆலோசகராகத் தேர்ந்தெடுக்கப்படுவார் என்றும் அறிவிக்கப்பட்டது.

அந்தக் குரங்கு அறிஞரும் செய்தியை எழுதினார். அரசருடைய சேவகர்களும், மற்றவர்களும் நகைத்தனர். இங்கே வேடிக்கையைப் பார். இந்தக் குரங்கு அரசருக்கு ஆலோசகராகப் போகிறதாம்! என்று கேலி செய்தனர். ஆனால், எல்லாச் செய்திகளும் அரசரிடம் எடுத்துச் செல்லப்பட்டன. அரசர் எல்லாவற்றையும் படித்தார். அந்தக் குரங்கின் செய்தி மிகவும் நன்றாக இருந்தது.

அந்தக் குரங்கை நேர்முகத் தேர்விற்காக அரசர் வரச் சொன்னார். அக்குரங்கு நல்ல கம்பீரமாக உடையணிந்து குதிரைமேல் ஏறி, பாக்தாத் தெருக்களில் ஊர்வலமாக வந்து அரசரைச் சந்தித்தது. அரசவையில் அதனிடம் நிறைய கேள்விகள் கேட்கப்பட்டன. அது எல்லாக் கேள்விகளுக்கும் அறிவுப்பூர்வமான சரியான விடைகளைக் கூறியது. அரசருக்கு அதை மிகவும் பிடித்து விட்டது. ஆனால், மந்திரிகள் தடுத்தனர்.

எப்போதும் அதனால் பேச முடியாது. எப்படி ஒரு குரங்கு தலைமை ஆலோசகர் ஆகமுடியும்? என்றனர்.

அரசர் தீர்மானமாக இருந்ததால் அவர் குரங்கையே தலைமை ஆலோசகராக நியமித்தார். அவருடைய புதல்வி, இளவரசி இந்தக் குரங்கு உண்மையில் குரங்கு அன்று. ஏதோ அரக்கர்களின் மாயத்தால் இவ்வாறு மாற்றப்பட்டுள்ளது என்பதை அறிந்தாள். அரக்கர்கள், அவர்களின் மந்திர வித்தைகள் போன்றவற்றை அவள் படித்துள்ளாள். அந்த மந்திரத்தால் குரங்குத்தன்மை மாறும்படி செய்தாள். அறிஞர் தன் பழைய நிலையை அடைந்தார்.

அவர் இளவரசிக்கு நன்றி கூறினார். பல ஆண்டுகள் அங்குத் தங்கி நன்றியறிதலோடு அரசருக்குத் தகுந்த ஆலோசனைகளை வழங்கினார்.






கொள்ளுப்பிட்டி ஸ்ரீ கருமாரியம்மன் திருக்கோவில் தேர்த் திருவிழாவின் போது எடுக்கப்பட்ட படங்கள்.






கிண்ணியா பைசல் நகர் அல் இர்பான் ஆரம்ப பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா அதிபர் றிகானா தலைமையில் நடைபெற்ற போது பிரதம அதிதியான அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் சட்டத்தரணி ஹில்மி மஹ்ரூப், விசேட அதியான பைசல் நகர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் வீ.எம்.அஸ்முர்,சிறப்பு அதிதியான அல்இர்பான் வித்தியாலயத்தின் அபிவிருத்திச் சங்க செயலாளர் எம்.பைறூஸ்ஆகியோர் அமர்ந்திருப்பதையும்,அதிதிகளினால் பரிசு வழங்குவதையும்,சிறுவர்களின் குழு நிகழ்சிகளையும் படங்களில் காணலாம்.

படம்: கந்தளாய் நிருபர்





வவுனியர் சரஸ்வதி முன்பள்ளியின் வருடாந்த கலைவிழாவும், மாணவர் கௌரவிப்பும் பெற்றோர் சங்கத்தலைவர் ரஜனிகாந்தன் தலைமையில் நடைபெற்றது. மகாறம்பைக்குளம் சரஸ்வதி முன்பள்ளியில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முன்பள்ளி சிறார்களின் கலை நிகழ்வுகள் பல இடம்பெற்றிருந்ததுடன் முன்பள்ளி சிறார்களினை கௌரவிக்கும் முகமாக வெற்றிக்கிண்ணங்களும் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டிருந்தது.

படம்: வவுனியா நிருபர்








திருகோணமலை பாலையூற்று வைரவர் கோயிலடி முன்பள்ளியின் 2018ம் ஆண்டுக்கான வருடாந்த கலைவிழா நிகழ்வு இடம் பெற்றது.இந்நிகழ்வில் அதிதிகளாக திருகோணமலை பட்டனமும் சூழலும் பிரதேசசபை தலைவர் வைத்திய கலாநிதி ஞானகுணாளன் மற்றும் முன்பள்ளிக் கல்விப் பணியகத்தின் செயற்பாட்டு பணிப்பாளர் ஆதம்பாவா தௌபிக் மற்றும் பாலையூற்று லூர்த்துமாதா திருத்தள உதவிப் பங்குத் தந்தை பிரேமானந்த் மற்றும் திருக்குடும்ப கன்னியர் சபை அருட்சகோதாரி ஜெசிந்தா ஆகியோர் கலந்து கொண்டி ருப்பதையும் மாணவர்களின் கலை நிகழ்வுகள் ஆசிரியர்கள் பெற்றோர்கள் கலந்து கொண்டிருப்பதையும் படங்களில் காணலாம்.

படம்: சேனையூர் நிருபர்






புதிய காத்தான்குடி ஹிஸ்புழ்ழாஹ் கிட்ஸ் பாலர் பாடசாலையின் 2018 பாலர் கலை விழா பாடசாலை தலைவர் எம்.எஸ்.எம்.மொஹிதீன் சாலி தலைமையில் காத்தான்குடி ஹிஸ்புழ்ழாஹ் மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் காத்தான்குடி நகர சபை உறுப்பினர்கள், கல்வியாளர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

படம்: காத்தான்குடி நிருபர்

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் (தனியார்) நிறுவனத்தின் ஜாஎல, மினுவான்கொட வீதி, 302/1/A இலக்கத்தில் அமைந்துள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டு 09.12.2018 ஞாயிற்றுக்கிழமை அன்று வெளியிடப்பட்டது.